**அர்ப்பணம்...**



வானொலி மற்றும் தொலைக்காட்சியில் அளித்த தேவச்செய்திகளை புத்தகமாக வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். முதல் செய்தியை பிரசங்கிக்கும்போதே இதைப் புத்தக வடிவில் கொண்டு வரவேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இருந்தது. அந்தப்படியே இதனைக் கர்த்தர் வெளியிட உதவி செய்தார்.

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற சகோதரர்களுக்கும், சத்தியத்தைக் கற்று கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய விரும்பும் தேவஜனங்களுக்கும் பயன்படும்விதமாக இப்புத்தகத்தை வடிவமைத்து வெளியிடுகிறோம். இப்புத்தகம், பல மாவட்டங்களில் எங்களோடு இணைந்து பணியாற்றுகிற கர்த்தருடைய ஊழியர்களுக்கும் மற்றும் சபை விசுவாசிகளுக்கும் பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறோம்.

ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய சபையைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் ஜனங்களுக்குச் சொல்வதில் எங்களுக்கு இருக்கும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதிலும் குறிப்பாக கர்த்தருடைய சபை இல்லாத பகுதியில் அவருடைய சபையை ஏற்படுத்த தனிக்கவனம் செலுத்துகிறோம். அப்படிப்பட்ட இடங்களுக்கு இச்செய்தி மிகவும் பயனுள்ளதாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதற்காக நானும் என் துணைவியாரும் எடுத்த முயற்சியில் கர்த்தருடைய கரம் எங்களோடு இருந்தமைக்காக அவரை ஒவ்வொரு நாளும் நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கிறோம். "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" என்ற லூக்கா 17:10ன்படி அப்பிரயோஜனமான ஊழியர்களாகிய நாங்கள் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்து, இப்புத்தகத்தை உங்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.



ஆண்டவரின் பணியில்,
***B.Arjunan & Glory***


**Order From**

World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278 Mobile :9443558041



Sharon Print System, Madurai -2 & 99439-33377


ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2005 - 2006

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

## 2005 - 2006



செய்தியாளர்
B.அர்ஜுனன்

Vol. 1

THE WORD OF CHRIST


Published by
***The Word of Christ***

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ

**2005 - 2006**

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

**First Printing: 2007 - 1000 Copies**

**Second Printing: 2019 - 1000 Copies**

World Literature Publications
P.O.Box.5,
Batlagundu -624 202,
South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278
Mobile : 9443558041, 6379350509

Printed by : Sharon Print System, Madurai



# செய்தியாளரைப் பற்றி...!

இவரை நான் 20ம் நூற்றாண்டின் கடைசியில் சென்னை பட்டிணத்தில் சந்திக்க கர்த்தர் எனக்கு ஓர் வாய்ப்பு அளித்தார். 1983–ல் விக்கிரகாராதனை செய்து கொண்டிருந்த இவரை தேவன் தம்முடைய திருப்பணிக்காக அழைத்து, தெரிந்துகொண்டார். நான் சந்தித்தது முதல் இன்றுவரை நாங்கள் கிறிஸ்துவின் ஊழியர்களாக உபதேசத்திலும், விசுவாச குடும்பத்தார்களை நேசிப்பதிலும் ஒத்த கருத்துடையவர்களாக இருப்பதில் சந்தோஷமடைகிறேன்.

பலவருடங்களாக கிறிஸ்துவின் சபையையும், கிறிஸ்துவின் தூய உபதேசத்தையும் தமிழகமெங்கும் அறிவிப்பதில் எல்லையில்லா உறுதிகொண்ட சகோதரனை கர்த்தர் ஏற்ற வேளையில் உயர்த்தி அவருக்கு "கிறிஸ்துவின் வசனம்" என்ற மாதஇதழை 1992–ல் துவக்கி நடக்கக்கூடிய பொறுப்பையும் மேலும் 2005–ல் ரேடியோ மற்றும் தொலைக்காட்சியில் கர்த்தருடைய செய்தியை பிரசங்கிக்கும் பொறுப்பையும் அதற்கு வேண்டிய உதவிகளையும் கொடுத்து பயன்படுத்தி வருகிறார்.

அவருடைய பணிக்கு உறுதியாக இருப்பவர் அவருடைய துணைவி என் அன்பு சகோதரி குளோரி அர்ஜூனன் அவர்கள். கஷ்டத்திலும், சந்தோஷத்திலும், போராட்டத்திலும் பக்கபலமாக இருந்துகொண்டு ஆண்டவருடைய பணி சிறக்க, அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றிக்கொண்டு, தன்னையும் தன்னுடைய முழு சம்பாத்தியத்தையும் கர்த்தருக்காக அர்ப்பணித்து, சகோதரருக்கு ஏற்ற துணைவியாகவும் கர்த்தருடைய பணிக்கு உதவியாகவும் இருந்து வருகிறார்கள். இந்தியாவில் இத்தம்பதியரைக் கண்டுகொண்ட J.C. Choate & Betty தம்பதியர் மிகவும் பாராட்டுக்குரியவர்கள்.

சகோதரருடைய கிறிஸ்தவ இலக்கிய பணி, வேதாகம கல்லூரி, ரேடியோ மற்றும் தொலைக்காட்சி பணி தொடரவும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், அதன் மூலம் உலக ஜனங்களுக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் சத்தியம் சென்றடையவும், இன்னும் மேன்மேலும் தேவன் இவரை தமக்கு உகந்த பாத்திரமாக பயன்படுத்திட நான் ஜெபிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிறபிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரி. 15:58).

கர்த்தருடைய பணியில் கடையேன்,

**John S. Nathan**
Christian City, Minjur.

# பொருளடக்கம்


1. நித்திய ஜீவன் 1
2. ஆவியின் சிந்தை 7
3. விசுவாசம் 12
4. இச்சையடக்கம் 17
5. சத்தியம் 22
6. நல்ல மேய்ப்பன் 27
7. தேவன் ஆவியாயிருக்கிறார் 33
8. ஒரு கிறிஸ்தவனாக இருப்பது எப்படி? 38
9. இது இந்த வருஷமும் இருக்கட்டும் 44
10. யாரோடு ஐக்கியம்? 49
11. தேவனுடைய குடும்பம் 54
12. கர்த்தருக்குக் காத்திரு 59
13. துதித்தலும் சபித்தலும் 65
14. சிலுவையைப்பற்றிய உபதேசம் 70
15. கர்த்தர் உன்னிடத்தில் என்னத்தைக் கேட்கிறார்? 76
16. கர்த்தருக்குப் பயப்படு 81
17. கர்த்தர் கொடுத்த தாலந்து 87
18. வாருங்கள், கேளுங்கள், செயல்படுங்கள் 93
19. எழுந்து கட்டுவோம் வாருங்கள் 98
20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் 104
21. சகல அதிகாரம் 109
22. புதிய வஸ்திரம் 115
23. விக்கிரகாராதனை 120
24. ஜெயம் 126
25. பரலோகப் பாதை 131
26. பொய் நாவு 137
27. ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கை 142
28. புறப்படு 148
29. அழைக்கப்பட்டவர்கள் 154
30. கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் 159
31. கன்மலையின்மேல் அஸ்திபாரம் 165
32. கர்த்தருக்குள் மகிழ்ச்சி 170
33. கிறிஸ்துவின் உபதேசம் 176
34. கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? 181
35. நீ எங்கே இருக்கிறாய்? 187
36. ஒரு கலசம் தண்ணீர் 193
37. செம்மறியாடுகள், வெள்ளாடுகள் 198
38. கிறிஸ்துவின் சபை 204
39. ஐசுவரியவான் 209
40. எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் 215
41. அடைக்கலம் 220
42. புதிதும் ஜீவனுமான மார்க்கம் 226
43. கல்லறை 231
44. கடினமான உபதேசம் 236
45. அக்கினி கடல் 242
46. நாம் எதற்கு கடனாளிகளாயிருக்கிறோம்? 248
47. வாழ்த்து 253
48. காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள் 259
49. தேவ ஆட்டுக்குட்டி 264
50. தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள் 270
51. கிறிஸ்தவ ஜீவியம் 276




# 1. நித்திய ஜீவன்
# The Eternal Life

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர்களே, சகோதரிகளே, இந்த புத்தகத்தின் வாயிலாக நாங்கள் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இந்த நாளிலே நித்திய ஜீவனைக் குறித்து உங்களோடு நான் பேச விரும்புகிறேன்.

The Eternal Life நித்திய ஜீவன் மனிதனுக்கு அவசியமான ஒன்று பிரியமானவர்களே. ஆண்டவருடைய சீஷர்களில் ஒருவனாகிய பேதுரு இயேசுவைப் பார்த்து யோவான் எழுதின சுவிசேஷம் 6:68 வசனத்திலே ஆண்டவரே யாரிடத்தில் போவோம். நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான். ஆம், பிரியமானவர்களே இயேசுவினிடத்திலே நித்திய ஜீவ வசனங்கள் உண்டு. அவர் மூலமாகவே நாம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும். இயேசுவை அல்லாமல் வேறு நாமம் இந்த உலகத்தில் கட்டளையிடப் படவில்லை.

நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் இயேசுவின் நாமத்தை பற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. மத்தேயு எழுதின சுவிசேஷம் 19:16–17ஐ வாசிப்போம் என்றால் அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி: நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளை கைக்கொள் என்றார். ஆம், இங்கே கவனித்துப் பாருங்கள் இயேசுவை நல்ல போதகரே என்று அழைக்கிறான். கர்த்தர் சொல்லுகிறார் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவரைத் தவிர நல்லவர் ஒருவரும் இல்லையே.

ஆம் பிரியமானவர்களே! இந்த உலகத்தில் நல்ல மனிதர்கள் என்று நாம் பார்க்கும் பொழுது ஒருவரையுமே நாம் பார்க்க முடியாது.

இயேசு ஒருவரே நல்லவராக இருக்கிறார். ஆனால் அவர் நல்லவராக இருந்த போதிலும் தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவரும் இல்லையே என்று சொல்லுகிறார். நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். ஆம், பிரியமான சகோதரனே, சகோதரியே நாம் ஜீவனில் பிரவேசிக்க வேண்டுமென்றால், கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

ஆம், பிரியமான சகோதரனே சகோதரியே, நித்திய ஜீவனில் பிரவேசிக்க கற்பனைகள் அவசியமானது. நாம் கற்பனைளைக் கைக்கொள்ளாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது என்ற ஒரு சத்தியத்தை இந்த வசனத்தின் மூலமாக தெரிந்து கொள்கிறோம். நாம் ஒரு கிறிஸ்தவ சகோதரனாக, ஒரு கிறிஸ்தவ சகோதரியாக இருப்போமென்றால் நாம் இந்த ஜீவனுள்ள பிரமாணம் நிறைந்த இந்த கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

யோவான் 3:16 வசனம் இவ்விதமாக சொல்கிறது “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமால் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” என்று நாம் வாசிக்கிறோம். தேவன் எவ்வளவாய் இந்த பூமியிலே அன்பு செலுத்தியிருக்கிறார் என்று பாருங்கள் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்துக்கு கொடுத்து ஒருவரும் கெட்டுப்போகாமல் அவர் மூலமாக இரட்சிக்கும்படி நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை இந்த உலகத்திற்கு தந்து அன்பு கூர்ந்திருக்கிறார் என்பதை இந்த செய்தியின் மூலமாக தெரிந்து கொள்கிறோம். ஆக, தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார், என்று 1 தெச 4:7–லே நாம் வாசிக்கிறோம். நீங்கள் நித்திய ஜீவனை பெற விரும்பினால் தேவன் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் மாற வேண்டுமென்று இந்தவசனமானது போதிக்கிறது.

நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தமாயிருக்கிறது. 1 யோவா. 2:25 இந்த வசனத்தை நாம் வாசிக்கிறோம். தேவன் நமக்கு நித்திய ஜீவ Promise–ஆக



கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இந்த வாக்குதத்தத்தை நாம் பெற வேண்டுமென்றால் நாம் நம்முடைய வாழ்க்கையிலே பரிசுத்தமாக வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனென்றால், எபிரேயர் ஆசிரியர் 12:14 வசனத்திலே பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்க முடியாது என்று அங்கே உறுதிபடக் கூறுகிறார். Holiness, without which no man shall see the Lord.

ஆக எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்று பேதுரு தன்னுடைய பிரசங்கத்திலே குறிப்பிடுகிறதை அப்போஸ்தலர் நடபடிகள் 10:35 வசனத்திலே நாம் பார்க்கிறோம். ஆக, இந்த உலகத்திலே அவன் எந்த ஜனத்திலாயினும் இருக்கலாம், எந்த பாஷை பேசக்கூடியவனாகவும் இருக்கலாம், எந்த மொழி பேசக்கூடியவனாக இருக்கலாம். எந்த நிறத்தை உடையவனாகவும் இருக்கலாம் அவன் முதலாவது தேவனுக்கு பயப்படுகிற ஒரு மனிதனாக வேண்டுமென்று பேதுரு அங்கே குறிப்பிடுகிறதை நாம் அங்கே காண்கிறோம்.

பிரியமானவர்களே, நித்திய ஜீவனை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவன் தேவனுக்கு பயப்படுகிறவனாக இருக்க வேண்டும். பயம் என்று சொல்லும் போது அது உலகப்பிரகாரமான ஒரு பயம் அல்ல. அது ஆவிக்குரிய ஒரு பயமாக இருக்க வேண்டும். ஆவியிலே நாம் தேவனை ஆராத்திக்கிறோம் தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். நாம் இந்த ஆவிகுரிய தேவனை, ஆவிக்குரிய விதத்தில் நாம் எப்படி தொழுது கொள்ளுகிறோமோ, அதைப்போல ஆவியினாலே சத்திய வசனங்களுக்கு கீழ்படியவேண்டியது அவசியமானதாயிருக்கிறது. ஆவிக்குரிய பயம் நிச்சயமாக கர்த்தருக்கு சந்தோஷத்தை கொண்டு வருகிறது. இப்படி நாம் இருக்கும்போது நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும் என்று நாம் வேத வசனங்கள் துணை கொண்டு தெரிந்துகொள்ளுகிறோம்.

## கேள்வி

✪ **நித்திய ஜீவனை எவர்கள் பெற்றுக்கொள்வார்கள் ?**

1. நல்ல கேள்வியை இப்போது கொண்டுவந்திருக்கிறார்கள் மிகவும் அருமையான கேள்வி. இந்த நித்திய ஜீவனை எவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று கேட்டீர்கள். தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்த சாட்சியம். குமாரனையுடையவன் ஜீவனையுடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாய் இருக்கவும் தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாய் இருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். அப்போஸ்தலனாகிய யோவான் 1 யோவான். 5:11–13–லே இந்த காரியத்தைக் குறித்து சொல்லுகிறார்.

இரண்டாவது காரியமாக நாம் பார்க்கும் போது குமாரனை கண்டு அவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனை கடைசி நாளிலே எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாய் இருக்கிறது என்றார் இதை யோவன் எழுதின சுவிசேஷம் 6–ம் அதிகாரத்திலே 40ம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இயேசுவைக் கண்டு கொண்டு அவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவர்களை அவர் எழுப்புவது அவருடைய திருசித்தமாய் இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடுகிறார். ஆம், பிரியமான சகோதரனே, சகோதரிகளே நாம் நித்திய ஜீவனை நிச்சயமாக பெற்றுக்கொள்வோம் என்பதற்கு இந்த வசனங்கள் ஆதாரமான வசனங்களாக இருக்கிறது.

அவரிடத்திலே நாம் விசுவாசம் வைக்கும் போது நாம் நித்திய ஜீவனை அடைவதும் அவர் நம்மைக் கடைசி நாளிலே எழுப்புவதும் அவரை அனுப்பினவருடைய சித்தமாய் இருக்கிறது என்று தெளிவாக இயேசு கிறிஸ்து குறிபிடுகிறதை நாம் இங்கே பார்க்கிறோம். மேலும் யோவான் 3–ம் அதிகாரம் 36வது வசனத்தை நாம் பார்க்கும் போது



குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. நீங்கள் குமாரனிடத்தில் விசுவாசமாய் இருப்பீர்கள் என்றால் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறீர்கள் இந்த பூமியிலே இப்படியொரு சிலக்கியத்தை பெற்றுக் கொள்ளுகிறீர்கள். குமாரனை விசுவாசியதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும் என்று அங்கே சொல்லுகிறார் நீங்கள் தேவனுடைய குமாரன்மேல் விசுவாசமாய் இல்லை என்றால் தேவனுடைய கோபம் உங்கள்மேல் நிலை நிற்கும் ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கு சபைக்கு எழுதும் போது தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு இயேசு வருகிறார் என்று அவர் நினைப்பூட்டுகிறார்.

ஆக, அப்படிப்பட்டவர்கள் மேலே தேவ கோபாக்கினையானது நிலை நிற்கும் என்று பார்க்கிறோம். ஏனென்றால் அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களாக இருக்கிறார்கள். இதோ இப்பொழுது சுவிசேஷத்திற்கு கீழ்படியதக்கதான நேரமாக இருக்கிறது. இப்படி நீங்கள் சுவிசேஷத்திற்கு கீழ்படிவீர்கள் என்றால் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நீங்கள் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுவீர்கள். இதோ அருமையான சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த நித்திய ஜீவனை பெறுவதற்கான வழிமுறைகளை குறித்து இந்த நாளில் செய்தியின் மூலமாக நாம் கேள்விப்பட்டோம்.

அங்கே பேதுரு முதலாவது சொன்னார் யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றார். ஆம் பிரியமானவர்களே அவரிடத்தில் தான் நித்திய ஜீவ வசனங்கள் இருக்கிறது. அதே போல நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு தான் எந்த தன்மையை செய்ய வேண்டும் என்று கேட்ட அந்த மனிதனைக் கூட இந்த இடத்தில் நினைத்துப்பாருங்கள். அவனிடத்தில் கர்த்தர் சொன்ன காரியம் நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளை கைக்கொள் என்றார். ஆம் தேவன்

தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்த உலகத்திற்குத் தந்திருக்கிறார் என்று இன்னும் ஒரு வசனத்தில் கூட நாம் தியானித்தோம் அதைப்போல தேவன் நம்மை அசுத்ததிற்கு அல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் என்று கூட நாம் தியானித்தோம். ஆக தேவன் நமக்கு நித்திய ஜீவனை அளிப்பதாக வாக்குப்பண்ணி யிருக்கிறார் என்று அப்போஸ்தலனாகிய யோவான் அங்கே குறிப்பிடுகிறார். ஆக இந்த நித்திய ஜீவனை எவர்கள் பெறுவார்கள் என்றால் இந்த வசனத்தின்படியாக யாரெல்லாம் கீழ்படிவார்களோ அவர்கள் தான் நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆக இந்த பூமியிலே ஜீவிக்கிறதான நமக்கு ஒரு அருமையான தருணமானது கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த தருணத்தை நீங்கள் பயன்படுத்தி கொள்வீர்கள் என்றால் நித்திய வாழ்வை நீங்கள் பெற்றுக் கொள்ளுவீர்கள்.

நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று கேட்ட அந்த மணிதன் பின்பு ஆண்டவரிடத்தில் இப்படி சொல்கிறான். நான் இவைகளையெல்லாம் நான் சிறுவயது முதலே கைக்கொள்ளுகிறேன் என்றான். அதற்கு கர்த்தர்: உன்னிடத்தில் உள்ளதை விற்று தரித்திறருக்குக் கொடு என்றார். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே அவன் மிகுந்த துக்க மடைந்தவனாக பின்னிட்டு போய்விட்டான் என்று பார்க்கிறோம். இன்றைக்கு அநேகர் கற்பனைகளை சொன்னவுடனே அவர்களாலே சகிக்கமுடியவில்லை. ஏனென்றால் கற்பனை மிகவும் கருக்குள்ள பட்டயமாக இருக்கிறது. அது இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக இருப்பதினாலே அந்த பட்டயத்தின் வசன தாக்குதலை அவர்களால் சகிக்க முடியவில்லை. ஆகையினால் பின்னிட்டு போகிறார்கள்.

நாம் கற்பனைக்கு கீழ்படியும்போது நித்திய ஜீவனை அறுவடை செய்வோம் இந்த நித்திய ஜீவனை நமக்கு தேவன் வாக்குதத்தமாக கொடுத்திருக்கிறார். வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறார். மனிதனை போல அல்ல இன்று ஒன்று சொல்லுவான் நாளை ஒன்று சொல்லுவான் தேவன் மாறாதவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார் என்று



எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆக மாறாத இயேசு கிறிஸ்துவை நீங்கள் பற்றிக் கொள்வீர்கள் என்றால் அந்த நித்திய ஜீவனை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும் படியான வாய்ப்பை பெற்றுக் கொள்ளுவீர்கள். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

## 2. ஆவியின் சிந்தை
## Spiritual mind

இன்றைய நாளில் நாம் ஆவியின் சிந்தையைப் பற்றி தியானிப்போம். வேதம் சொல்கிறது ‘‘மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்’’ **(ரோம.8:6).** To be carnally minded is death: but to be spiritually minded is life and peace.

ஆம், மாம்சசிந்தை நம்முடைய வாழ்வில் மரணத்தை கொண்டுவரும். இந்நாட்களிலே பெரும்பாளான ஜனங்கள் மாம்சசிந்தைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அதாவது, என்னத்தைக் உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று மாம்சத்துக்குரியவைகளையே சிந்திக்கிறார்கள். இவைகள் எல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என்று ஆண்டவர் இயேசு குறிப்பிடுகிறார். நம்மை உண்டாக்கின தேவன் மனிதனுக்கு இன்னது தேவை என்பதை அறிந்து அநேக ஆசீர்வாதங்களை இந்தப் பூமியில் வைத்திருக்கிறார். உலகம் உண்டான காலத்திலிருந்து இன்றுவரை தின்று தீர்க்கமுடியாத பொருட்களை இப்பூமி கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

ரோமர் **8:13–**ல் பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: ‘‘மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்’’ ஆம், நாம் முதலாவது சரீரத்தின் செய்கைகளை ஆவியினாலே அழிக்கமுற்பட வேண்டும். நம்மில் எழுப்புகிறதான மாம்ச சிந்தைகளை கிறிஸ்து இயேசுவுக்குள் சிறைப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். வேத வசனத்தின் துணைகொண்டு அவைகளை அழிக்கவேண்டும். நம்முடைய சுய ஞானத்தினாலோ அல்லது சுய பெலத்தினாலோ அவைகளை

அழிக்கமுடியாது. தேவ பெலத்தோடும், கர்த்தருடைய வசனத்தோடும், அவைகளை மேற்கொள்ளமுடியும். நம்முடைய ஆண்டவரும் 40 நாட்களுக்குப் பின்பு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது பிசாசானவன் அவரை சோதிக்கும்படி, இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார். பசி நேரத்தில் பிசாசு அவரை சோதித்தான். இன்றைக்கும் ஒரு மனிதனை பிசாசு சோதிக்கும்போது மாம்ச இச்சைக்கு கீழ்ப்படியப்பண்ணும்படி அவனை சரியான நேரத்தில் சோதிப்பான். அப்படிப்பட்ட நேரத்தில் சோதனையை சகிக்க வேண்டும். இதையே யாக்கோபு "சோதனையை சகிக்கிறவன் பாக்கியவான்" என்று கூறுகிறார். பிசாசு நமக்குக் கொண்டுவருகிறதான மாம்சசிந்தைகளை வெற்றி கொள்ள வேத வசனத்தைக் கையாளவேண்டும். அப்படிச்செய்யும் போதே மாம்ச இச்சைகளுக்கு அடிபணியாதிருப்போம்.

நம்முடைய முற்பிதாக்களில் அநேகர் இச்சித்து வானாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள் என்று 1கொரி.10:5,6 வசனங்களில் வாசிக்கிறோம். ஆதலால் “அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. அவர்கள் எகிப்திலே விட்டுவந்த வெள்ளரிக்காய்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைவுகூர்ந்தார்கள். தேவன், பாலூம் தேவனும் ஓடுகிற தேசத்திற்கு அவர்களை அழைத்துக்கொண்டு வந்தார், வானத்தின் மன்னாவினால் அவர்களை போஷித்துக்கொண்டும் வந்தார்.

அதையெல்லாம் மறந்து எகிப்திலே சாப்பிட்டவைகளை நினைத்து இச்சித்து முறையிட்டார்கள். ஆதலால் தேவன் அவர்கள் மேல் கோபங்கொண்டு அவர்களை அழித்துப்போட்டார். இவர்களைப்போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்கு மாதிரியாயிருக்கிறது. குடும்பத்தில் உள்ள பிள்ளைகளைக்



கவனித்துப்பாருங்கள். அவர்களுக்கு பெற்றோர்கள் விதவிதமான பதார்த்தங்களை செய்து கொடுத்தாலும் அவர்கள் அதையெல்லாம் விரும்பாமல் ரோட்டோரங்களில் ஈ மொய்த்துக் கொண்டிருக்கும் பதார்த்தங்களையே விரும்பி வாங்கி சாப்பிடுவார்கள். அதைப்போல நம்முடைய முற்பிதாக்கள் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை நினைக்காமல் எகிப்திலே சாப்பிட்டவைகளையே நினைவுகூர்ந்தார்கள். நாமும் அழியாத பரலோக வாழ்வை நோக்கி பார்ப்போமானால் இவ்வுலக வாழ்வு குப்பையாகிவிடும்.

அன்பானவர்களே! “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தின்று விடுதலையாக்கிற்றே (ரோம.8:1,2). இங்கே பவுல் ரோமசபையாருக்கு எழுதும்போது ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தின்று விடுதலையாக்கிற்றே என்று எழுதுகிறார். ஆம், இந்த பிரமாணத்திற்கு நீங்கள் செவிகொடுத்திருப்பீர்கள் என்றால் அது உங்களைவிடுதலை செய்யக்கூடியதாக இருக்கிறது.

ஏனென்றால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை என்று காண்கிறோம். இதுவே ஆவிக்குரிய ஜீவியம். ஆவிக்குட்பட்டவர்கள் ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறார்கள் மாம்சத்திற்குட்பட்டவர்கள் மாம்சத்திற்குரியவைகளையே சிந்திக்கிறார்கள். இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் ஆவிக்குரியவர் களாயிருந்து ஆவிக்குரியவைகளையே சிந்திப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆவிக்குரியவைகளை சிந்திப்பீர்கள் என்றால் உங்களுடைய வாழ்வில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வீர்கள்.

மேலும் பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது, 1கொரி.2:13–ல் “அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே

பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்'' என்கிறார். இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது. ஆகையால் அந்த ஞானத்தை குறித்துப் பேசாமலும், அந்த ஞானத்தினால் மனுஷர்களை வசப்படுத்த விரும்பாமலும், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறார்.

இன்றைக்கு ஆவிக்குரியவர்கள் என்று சொல்லி ஆவிக்குரிய வாசனையே இல்லாமல் இருந்தால் எப்படி? ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்ககடவன் என்கிறார் பேதுரு. ஒரு பிரசங்கியானவன் பேச ஆரம்பித்தாலே அவன் வாயிலிருந்து வேத வசனங்களே வெளிப்பட வேண்டும். வேச வசனத்தை உலகப்பிரகாரமான காரியங்களோடு ஒப்பிட்டு பேசலாகாது. அவைகள் உலகத்துக்குரியவைகள். வேத வசனமோ என்றென்றும் அழியாதவைகள். அது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவன் கால்களுக்கு தீபமாகவும், பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது. இதை நன்கு அறிந்த அனனியாவும் சப்பீராளும் மாம்ச சிந்தைக்கு கீழ்ப்படிந்து மரித்துப்போனார்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த இவர்களைக் குறித்து அப்.5:1–10 வசனங்களில் வாசிக்கின்றோம். பேதுரு அனனியாவைப்பார்த்து: நிலத்தின் கிரையத்தில் ஒரு பங்குகளை வஞ்சித்துவைத்து பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன என்று கேட்டான். பின்பு நீ மனுஷனிடத்தில் அல்ல; தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். அனனியா இந்தவார்த்தைகளைக்கேட்கவே விழுந்து ஜீவனை விட்டான். அவனை அடக்கம் பண்ணினார்கள். ஏறக்குறைய முன்றுமணி நேரத்துக்குப்பின்பு அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் என்றான். அவளாவது உண்மையை சொல்லியிருக்க வேண்டும். இருவரும் இந்தவிஷயத்தில் ஒருமனப்பட்டதினால், ஆம்



இவ்வளவுக்குத் தான் என்றாள். நீங்கள் இருவரும் கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே நிற்கிறது உன்னையும் கொண்டுபோவார்கள் என்றான் பேதுரு. உடனே அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். இவர்கள் மாம்சசிந்தையில் இருந்தபடியால் இருவரும் மரித்தார்கள். ஆவியினாலே சரீரத்தின் இச்சைகளை அழிக்காமற்போனார்கள். இன்றைக்கு இவ்விதமாக எத்தனையோ குடும்பங்கள் மாம்சசிந்தையில் மரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இச்செய்தியை வாசிக்கிற எனதருமை சகோதரனே சகோதரியே! நீ எப்படிப்பட்ட சிந்தையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? **ஆவியின் சிந்தை ஜீவனையும் சமாதானத்தையும் கொண்டு வரும்.** இன்றே ஆவிக்குரிய சிந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னைக் காத்துக்கொள்.

### கேள்வி

✪ ஆவியின் சிந்தை என்றால் என்ன?

1. ஆவியின் சிந்தை என்றால் ஆவிக்குரிய காரியங்களில் அதிக நாட்டமாக இருப்பது. சதா உலகப்பிரகாரமான காரியங்களையே நினைக்காமல் கர்த்தருக்குப் பிரியமான காரியங்களை செய்வது. உலகப்பிரகாரமான காரியங்களில் இருந்து கொண்டு ஆவிக்குரிய காரியங்களைச் செய்ய இயலாது. "கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை''என்று **(ரோம.8:1)** வாசிக்கின்றோம்.

2. தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர் களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல **(ரோம.8:9).** ஒருவனுக்குள் தேவனுடைய ஆவி வாசமாயிருக்க வேண்டும். அதற்கு ஒரு மனிதன் என்ன செய்யவேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். தேவனையும் அவர் அனுப்பினவராகிய

இயேசுவையும் முழுஇருயத்தோடும் முழுபெலத்தோடும் முழுமனதோடும் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளும்போது அவன் தேவனுடைய ஆலயமாக மாறுகிறான் அப்பொழுது தேவன் அவனில் வாசம்செய்வார். இப்படிப்பட்டவன் ஆவிக்குட்பட்டவனாயிருக்கிறான். அவனிடத்தில் மாம்சசிந்தைக்கு இடமில்லை.

3. ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான் **(1கொரி.2:14,15). நீங்கள் கேட்ட கேள்விக்கு சரியான விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.**

## 3. விசுவாசம்
## Faith

**வி**சுவாசத்தைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன். எல்லா இடங்களிலும் விசுவாசத்தைப் பற்றி பேசக் கேட்டிருப்பீர்கள். விசுவாசம் என்றால் என்ன? என்று நாம் பார்க்கும்போது " விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று **எபி.11:1–**ல் எபிரெய எழுத்தாளன் குறிப்பிடுகிறார். அது நம்பப் படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது அதுவே விசுவாசம். ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? காணாததை நம்புவோமானால் அதுவே விசுவாசம்.

நாம் தேவனை ஒருபோதும் கண்டதில்லை ஆனாலும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிக்கின்றோம். புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் உள்ள நான்கு சுவிசேஷத்தில் இயேசுவை விசுவாசித்த குருடர்கள் பார்வையடைந்தார்கள் என்று வாசிக்கின்றோம். அவர்கள் இயேசுவை ஒருநாளும் கண்டதில்லை ஏனென்றால் அவர்களால் பார்க்கஇயலாது அவர்கள் பிறவிக்குருடர்கள். ஆனால் இயேசுவை



உலக இரட்சகர் என்று தங்கள் இருதயத்தில் விசுவாசித்து அவரால் சுகமாக்க முடியும் என்று நம்பினார்கள் அந்தப்படியே இயேசுவால் பார்வையடைந்தார்கள்.

"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் **2கொரி.5:6–**ல் வாசிக்கின்றோம். We walk by faith not by sight. இன்றைக்கு இயேசுவை தரிசித்தோம் என்று பலர் பகிரங்கமாக சொல்லுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலோ, நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் என்கிறார். மேலும் நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம் என்று திட்டவட்டமாக கொரிந்து சபைக்கு எழுகிறார். ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நாம் இயேசுவை விசுவாசிறோம் எப்படியென்றால், நமது பாவங்களுக்காக அவர் மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இச்சம்பவம் உலகத்திலே ஒரு சிறு பகுதியில் நடந்தாலும் இது உலக முழுவதிலும் இன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது.

இவருடைய மரணம் வரலாற்றை மையமாக கொண்டுள்ளது. கி.மு., கி.பி. என்றும் இதனுடைய நாயகனாக இயேசு விளங்குகிறார். ஒரு முறை நான் ஒரு வாலிபனிடம் ஒரு கேள்வி கேட்டேன். இயேசுவை நீ விசுவாசிக்கின்றாயா என்று கேட்டேன் அவன் நான் அவரை பார்த்ததில்லை பின்பு எப்படி விசுவாசிப்பது என்று கேட்டான். பின்பு நான், நம் நாடு சுதந்திரம் அடைவதற்காக பாடுபட்ட காந்தியடிகளை உனக்கு தெரியுமா? என்று கேட்டேன் அதற்கு அவன் ஓ.. தெரியுமே! என்றான். எப்படி என்றேன்? வரலாற்றில் படித்திருக்கிறேன் என்றான். காந்தியடிகள் நாடு சுதந்திரம் அடைவதற்காக பாடுபட்டதை எப்படி நீ வரலாற்றில் படித்து தெரிந்து அவரை நம்புகிறாயோ அப்படியே இயேசுவும் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது. இப்போது இயேசுவை விசுவாசிக்கிறாயா? என்று கேட்டேன் விசுவாசிக்கிறேன் என்றான். காணாதவர்கள் காணும்படியாக வேதாகமம் நம்மை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.

இந்த விசுவாசம் எப்படி ஒருவனுக்குள் வரும் ‘‘விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் **(ரோம.10:17).** திருவசனத்தை கேள்விப்படுகிறதினாலே ஒரு மனிதனுக்குள் விசுவாசம் வரும். அநேகர் கேள்விப்படாமலும் கேள்விப்பட விரும்பாமலும் தங்கள் காதுகளை அடைத்துக் கொள்வார்கள். இவர்களுடைய என்னமெல்லாம் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதே. வசனத்தை கேள்வி படவில்லை என்றால் விசுவாசிக்க முடியாது, விசுவாசம் வரவில்லை என்றால் இரட்சிக்கப்பட முடியாது.

ஆக, ஒரு மனிதன் இரட்சிக்கப்பட அவன் இயேசுவையும் அவருடைய திருவசனத்தையும் முதலாவது கேள்விப்பட வேண்டும். இரட்சிப்பு என்பது பாவத்திலிருந்து விடுதலையடைவது அல்லது காக்கப்படுவது என்றுபொருள். இன்றைக்கு நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று கனவு காண்கிறவர்களும் இருக்கிறார்கள். மெல்லிய சத்தத்தில் நான் உன்னை இரட்சித்தேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஞானஸ்நானத்திற்கு முன்பு இரட்சிக்கப்பட வேண்டும் என்று போதிப்பவர்களும் உண்டு.

அநேகருடைய கூற்று விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருக்கலாம் என்பதே. வசனம் கூறுகிறது ‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என **எபி.11:6–**ல் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் இருந்துகொண்டு, எவ்வளவு பக்திவைராக்கியமாக இருந்தாலும் சரி அல்லது தன் சம்பத்து முழுவதையும் அன்னதானம் பண்ணினாலும் சரி பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஏனென்றால் அவன் முதலாவது தேவன் ஒருவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். இது இல்லாமல் அவன் ஆகாயத்திலே சிலம்பம்பண்ணி பிரயோஜனமென்ன?

பவுல் ஒரு முறை தேசங்களின் வழியாக வரும்போது அத்தேனே பட்டணத்தார்கள் அறியப்படாத தேவனுக்கு என்று ஒரு



பலிபீடத்தைக்கட்டியிருக்கக் கண்டு நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றான். இப்படி அறியாமல் தொழுதுகொண்டாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

‘‘ கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும் **(ரோம.10:9,10).** இரட்சிப்பு வேண்டுமானால் வாயினால் இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட வேண்டும். தேவனுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நினைக்கலாம். இயேசு தம்முடைய சீஷர்களோடு இருக்கும்போது ‘வானத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாகி **இவர் என் நேச குமாரன் இவருக்குச் செவிகொடுப்பீர்களாக** என்று விளம்பினது. நாம் ஒவ்வொருவரும் இவரில் விசுவாசம் கொள்ள வேண்டியது மிக அவசியம். நீங்கள் வேதாகமத்தை படித்தவராக இருக்கலாம். அதனுடைய காரியங்களை பகுத்துப்படிக்கவில்லை என்றால் புரியாமல் போய்விடும். எத்தியோப்பிய மந்திரியும்கூட அப்படித்தான் ஏசாயா புத்தகத்தை ரதத்தில் படித்துக்கொண்டு சென்றான்.

அப்பொழுது ஆவியானவர் பிலிப்புவை நோக்கி: நீ ரதத்துடனே சேர்ந்துகொள் என்றார். அப்படியே சேர்ந்து கொண்டு மந்திரியை பார்த்து நீ படிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று கேட்டான் அதற்கு அவன் ஒருவன் எனக்கு அறிவிக்காவிட்டால் எனக்கு எப்படித்தெரியும் என்றான். அந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து பிரசங்கித்தான். அவர்கள் போகிற வழியிலே தண்ணீரைக் கண்டு பின்பு நான் ஞானஸ்நானம் பெற தடை என்ன என்றான்? அதற்கு நீ விசுவாசித்தால் தடை இல்லை என்றான். உடனே மந்திரி இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கிறேன் என்று ரதத்தை நிறுத்த சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு பின்பு சந்தோஷத்தோடே தன்வழியே போனான் என்று அப்.**8:32–38**ல் வாசிக்கின்றோம். பின்னும் எபி.**11**ம் அதிகாரத்தில்

விசுவாசத்தின் அட்டவணையை நான் சொன்னால் நேரம் போதாது, இயேசுவையும் அவருடைய திருவார்த்தைகளையும் விசுவாசித்து இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள்.

**கேள்வி**

✪ **ஒரு மனிதனுக்கு விசுவாசம் மட்டும் இருந்தால் போதுமா? அவன் இரட்சிக்கப்பட்டுவிடுவானா?**

1. இரட்சிப்பு என்பது சாதாரன ஒன்றல்ல. இதற்கு விசுவாசம் மட்டும் போதாது.ஏனென்றால் "ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பியோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" **யாக்.2:14–17** என்று வாசிக்கிறோம். நல்ல உதாரணத்தை இங்கு யாக்கோபு கூறுகிறார். தேவையிலிருக்கிற ஒருவனைப்பார்த்து நீங்கள் சமாதானத்தோடே போங்கள் குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவில்லால் உங்களுக்கு விசுவாசம் இருந்தும் பிரயோஜனமென்ன?

2. " தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன **(யாக்.2:19).** ஒரு முறை அசுத்தஆவி பிடித்தவனில் இருந்த, பிசாசுகளை இயேசு துரத்தும்போது அவைகள் எங்களை பன்றிகளுக்குள்ளே போகும்படி உத்தரவாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டன. ஆக, இந்த பிசாசுகள் பாதாளத்திற்கு ஆண்டவர் அனுப்பி விடுவார் என்று பயந்தன. விசுவாசத்துடன் நின்றுவிட்டால் இந்த பிசாசுகளைப்போல தான் நாமும் இருப்போம். எப்படியென்றால் அவைகளும் விசுவாசிக்கின்ற நாமும் விசுவாசக்கின்றோம். அதற்கும் நமக்கும்



வித்தியாசம் இல்லாமல் போய்விடும். ஒரு மனிதன் அவரில் அன்புகூர்ந்து அருடைய கட்டளைகளை கைக்கொள்ளும்போது கிரியை நடப்பிக்கின்றான். கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. செத்த சரீரம் எப்படி செயல் இழந்துபோகிறதோ அதைப்போல கிரியை இல்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. அப்படியானால் ஒருவன் விசுவாசத்தை கிரியை மூலம் காண்பிக்கவேண்டும். அதற்கு என்ன வழி என்று கேட்கிறீர்களா?

3. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று **மாற்.16:16–ல்** குறிப்பிடுகிறார். அவன் வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற வேண்டும். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், இயேசுவை சிலுவையில் விசுவாசித்த கள்ளன் ஞானஸ்நானம் எடுக்கவில்லை அப்படியிருக்க அவன் இயேசுவை நோக்கி: இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தரும் என்றான் அவனை இயேசு இரட்சித்தாரே! அது எப்படி என்று. இயேசு சிலுவையில் பாடுகளை நிறைவேற்றிய பின்பே புது உடன்படிக்கை ஏற்படுத்தப்படுகிறது. மற்றும் சிலுவையில் தொங்கிய கள்ளன் நியாயப்பிரமாணத்திற்கு கீழானவனாக இருந்திருக்கலாம் அல்லது யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கலாம் அதைக்குறித்து நாம் வேதாகமத்தில் வாசிக்கமுடியவில்லை. ஆனால் நாம் செய்ய வேண்டுவதென்ன? நமக்கு சொல்லப்பட்ட காரியத்தை நிறைவேற்ற வேண்டும். அப்படி என்றால் வசனத்தின் படி விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் அவனே இரட்சிக்கப்படுவான்.

## 4. இச்சையடக்கம்
## Self Control

"**எ**ல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்கிறான் சாலொமோன் ஞானி **(நீதி.4:23).** Keep thy heart with all deligence for out of it are

the issue of life இச்சையானது இருதயத்திலிருந்து புறப்படுகிறதாக இருக்கிறது. ஆகையால் எல்லாக்காவலோடும் இருதயத்தைக் காக்கவேண்டியது மிக அவசியம். அப்படிக் காக்கும்போது இருதயத்திலிருந்து ஜீவஊற்று வெளிப்படும். பிறனுக்குண்டான யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்பது பத்து கட்டளைகளில் ஒன்று. இதை இஸ்ரவேலர்களுக்கு நம்முடைய தேவனாகிய கர்த்தர் கட்டளையாக கொடுத்தார். அவர் இவைகளை கொடுத்தபோதிலும் மனிதன் இச்சிக்காது இருந்தானா? என்றால் இல்லை. பாவம் நாளுக்கு நாள் பொருகிக்கொண்டே போனது. இச்சித்து அநேகர் வீழ்ந்து போனார்கள். சரீரத்தில் ஏற்படும் இந்த இச்சையை மேற்கொள்ள எல்லாக்காவலோடும் இருதயத்தைக் காக்கவேண்டும். தோட்டத்தில் பயிறிடப்பட்ட விவசாயத்தை காக்க வேலி அடைக்கலாம், வீட்டை பாது காக்க காம்பவுண்டு கட்டலாம், உடைமைகளை பாதுகாக்க லாக்கரில் வைத்து பூட்டிவிடலாம். இருதயத்தை காப்பது எப்படி? என்ற கேள்வி உங்களுக்கு ஏழலாம். வசனத்தாலே வேலி அடைக்கவேண்டும் அப்பொழுது பிசாசு களைகளை, ஆதாவது இச்சைகளை உங்கள் இருதயங்களில் விதைக்க வழியில்லாமற்போகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு ஒரு நல்ல உதாரணத்தின் மூலம் விளக்குவதை 1கொரி.9:25–ல் வாசிக்கின்றோம். ‘‘பந்தையத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். உலகப்பிரகாரமான பந்தையத்திற்கு போராடுகிறவர்களுக்கே அவ்வளவு இச்சையடக்கம் இருக்குமானால் அழிவில்லாத ஜீவ கிரீடத்தை பெற வேண்டிய நமக்கு எவ்வளவு இச்சையடக்கம் இருக்கவேண்டும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். இச்சையடக்கமில்லாதவர்கள் பந்தைய சாலையில் தோற்றுப்போவார்கள். ஒரு முறை ஓட்டப்பந்தையத்தில் தொடந்து வெற்றிபெற்றுவந்த ஒரு வீராங்கனையை எப்படியாது தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்த பார்வையாளர்கள். அவள் ஓடிவரும்போது தங்கமுழாம் பூசப்பட்ட ஆப்பிள் உருண்டைகளை உருட்டி விட்டார்களாம். அவளோ தனக்கு பார்வையாளர்கள் கொடுக்கும்



வெகுமதியை இச்சித்து எடுக்க ஆரம்பித்தாளாம் என்ன நடந்திருக்கும். மற்றவர்கள் பரிசை தட்டிசென்றுஇருப்பார்கள். இச்சை இவளை தோள்வியடையச் செய்திருக்கும்.

நம்முடைய ஆதித்தாய் ஏவாளும்கூட ‘‘அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்’’ என்று **ஆதி.3:6**–ல் வாசிக்கிறோம். விலக்கப்பட்ட கனியை இச்சித்து புசித்தாள். இன்றைக்கும் அதே தவரை செய்து கொண்டே இருக்கிறார்கள். தேவன் எதைச் செய்யக்கூடாது என்று சொல்கிறாரோ அதையே மனிதன் செய்கிறான். அது அவனுடைய சுபாவமாய் போயிற்று. ஆதாமும் ஏவாளும் இச்சித்து புசித்தபடியினால் சரீரமரணமும் ஆவிக்குரிய மரணமும் அவர்களுக்கு நேரிட்டது. தேவசாயலை இழந்தார்கள். இன்றைக்கு இச்சித்தால் என்ன, அது என்ன பெரிய பாவமா? என் பிள்ளை என்ன செய்யக்கூடாததை செய்துவிட்டான் என்று பெற்றோர்களோ அதற்கு சப்போட்டாக இருக்கிறார்கள். வேதாகமம் இச்சையானது பாவத்தை தூண்டும் என்றும், பாவம் பூரணமாகும்போது மரணத்தை கொண்டுவரும் என்று எச்சரிக்கிறது. அன்பான சகோதரனே சகோதரியே இச்சைக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

சிலருக்கு இச்சையடக்கத்தைக் குறித்துப் பேசினாலே பிடிக்காது. ஏனென்றால் அவர்களால் Self control–லாக இருக்க முடியாது. தங்களுடைய முழுகவனத்தையுமே சரீர இச்சைக்கே செலவிடுவார்கள். ஒரு முறை பவுல் பேலிக்ஸை சந்திக்கும்போது ‘‘அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் **(அப்.24:25)**. ஆசீர்வாதமான வார்த்தைகளையே கேட்டவர்களுக்கு நீதியையும், இச்சையடக்கத்தையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து போதித்தால் போதிக்கிறவர்களை ஒரு மாதிரி பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இங்கே பேலிக்ஸ் பயந்துபோய் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான். இன்றைக்கு அநேகருக்கு சத்தியத்திற்குச் செவி கொடுக்க பயம் ஏனென்றால்? ஒருவேளை அது நம்மை மாற்றிவிடும், நாம் பாவம் செய்யமுடியாமல் போய்விடும் என நினைத்து ஊறுகாயைப் போல தொட்டுக்கொள்ள விரும்பி, அவ்வப்போது சத்தியத்தை கேட்கவே விரும்புகின்றனர். இச்சை நம்முடைய வாழ்வில் பூரணமாகும்போது மரணத்தை பிரப்பித்து விடும். இச்சையானது புற்றுநோயைக் காட்டிலும் கொடுரமானது. படர் தாமரையைக் காட்டிலும் விரைவாக படறக்கூடியது. அதை நம்முடைய சரீரத்திலிருந்து நீக்கி நம்முடைய இருதயத்தை சுத்தப்படுத்த வேண்டும். இவைகளை சுய முயற்சியினால் செய்ய இயலாது. இயேசுவின் இரத்தம் கொண்டும், அவருடைய வசனத்தைக் கொண்டும் சுத்திகரிக்க வேண்டும்.

இயேசு சொல்கிறார்: ‘‘விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று **(மத்.5:27,28).** பார்ப்பது பாவமல்ல, அதே வேளையில் இச்சையோடு பார்ப்பது பாவம். இன்றைக்கு வாலிபர்கள் முதல் வயதானோர் வரை இதற்கு அடிமைப்பட்டு இருதயத்தில் விபசாரம் செய்கிறார்கள். பூர்வத்தில் விபசாரம் செய்தால்தான் பாவம். இங்கே இருயத்தில் இச்சித்தாலே பாவம் என்கிறார். ஆனபடியால் நம்முடைய இருதயத்தை எந்த அளவுக்கு காக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என்று பாருங்கள். இதைச் சொன்ன ஆண்டவர் இச்சையை மனிதனுக்குள் வராமல் ஆதியிலே பண்ணியிக்கக்கூடாத என்று நினைக்கலாம். இவைகள் எல்லாம் உலகத்தில் உண்டானவைகள் என்று 1யோவா.2:16–ல் வாசிக்கின்றோம். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கவே இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு இச்சையை தூண்டினான். இன்றுவரை



மனிதனுக்குள் மாம்சத்தின் இச்சையையும், கண்களின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையையும், கொடுத்துக் கொண்டுவருகிறான். இதற்கு கர்த்தருடைய பிள்ளைகளும் அடிபணிந்துவிடுகிறார்கள் என்பதுதான் வேதனைக்குறிய ஒரு விஷயமாக இருக்கிறது. அன்பானவர்களே, இச்சையிலிருந்து விடுபட வேதாகம மாதிரிகளை நோக்குங்கள். ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சரட்டை கூட இச்சித்து எடுத்துக்கொள்ளவில்லை, இச்சைக்கு பயந்து யோசேப்பு தன்வஸ்திரத்தை விட்டு ஓடினான். யோபு என் கண்களோடே உடன் படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்ப தெப்படி? என்றான்.

இப்படி எத்தனையோ வேதாகம சாட்சிகள் உண்டு. இவர்களெல்லாம் இச்சையை வெறுத்து தள்ளவில்லையா? நீங்களும் கடுகளவும் இச்சிக்காமல் கர்த்தருக்கு பிரியமாய் வாழபிரயாசப்படுங்கள். கர்த்தர் உங்களை காத்து வழிநடத்துவாராக!

## கேள்வி நேரம்

✪ **இச்சை மரணத்தை கொண்டுவருமா?**

1. இச்சை கண்டிப்பாக மரணத்தைக் கொண்டுவரும் அதில் எந்தவித சந்தேகமும் தேவையில்லை. ‘‘அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்’’ என்று **யாக்.1:14,15–**ல் வாசிக்கின்றோம். ஆசை யாரை விட்டது என்பார்கள் உண்மைதான் ஆசைக்கு அடிபணியாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். கணவனுக்கு சொந்த வீடு வாங்க ஆசை, மனைவிக்கு கழுத்துநிறைய நகைபோட ஆசை, பிள்ளைகளுக்கு புதிய புதிய இடங்களுக்கு போக ஆசை இப்படிப்பட்ட ஆசை இச்சைகளுக்கு அடிமையாகி நாளடைவில் கடனாளிகளாக மாறி சிக்குண்டு தவித்து தங்களையே மாய்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட செய்திகளை தினசரி பத்திரிக்கைகளில் வாசிக்கின்றோம்.

2. ‘‘பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர்

அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேகவேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்'' என்று **1 தீமோ.6:10**–ல் வாசிக்கின்றோம். தேவன் மனிதனுக்கு ஆதியிலே சரீரத்திற்கு வேண்டியவைகளைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார் என்று பரிசுத்தவேதாகமத்தில் காண்கிறோம். ஆனால் பணத்தைக்கொடுத்தார் என்று நீங்கள் வாசிக்கமுடியாது. தேவன் கொடுக்காத ஒன்றை இன்றைய மாணிடவர்க்கம் தேடி அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். இது தேவையா? மனிதன் என்னத்தை கொண்டு வந்தான், என்னத்தை கொண்டு போகப்போகிறான் ஒருவரும் இதைக்குறித்து சிந்திப்பதில்லை.

3. இயேசுவின் சீஷர்களில் ஒருவனின் நிலை என்ன? அவனைக்குறித்து நாம் வாசிக்கின்றோம், ''நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள் **(மத்.26:15)**. இயேசு நிலையான காரியங்களை குறித்து பேசிவந்தார் அதையெல்லாம் கேட்ட யூதாஸே பணப்பேய் பிடித்தவனாகவே அவரோடு இருந்து வந்தான். இறுதியில் அவனுடைய நிலைதான் என்னவாயிற்று? நான்றுகொண்டு செத்தான். இன்றைக்கு ஜனங்கள் பணத்தையே குறியாக வைத்திருக்கிறார்கள். என்னவேலை பார்த்தாலும் பரவாயில்லை, எப்படியோ பணம் கிடைக்க வேண்டும். அதனால் யார் செத்தால் என்ன? யார் பிழைத்தால் என்ன? அதைக்குறித்து அவர்களுக்கு கவலையில்லை. எப்படியோ பணம் வேண்டும். இந்த பணஆசை தான் யூதாசுக்கு மரணத்தைக் கொண்டுவந்தது.

## 5. சத்தியம்
## Truth

**இ**யேசு தம்மை விசுவாசித்த யூதர்களைப் பார்த்து சொல்லுகிறார்: ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவா.8:31,32). You



shall know the truth, and the truth shall made you free. ஒருவன் இயேசுவை அறிந்து அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் அவனே மெய்யான சீஷன். அவன் சத்தியத்தையும் அறிவான் அந்த சத்தியம் அவனை பாவத்திலிருந்து விடுதலையாக்கும். ஆனபடியால் ஒருவன் முதலாவது சத்தியத்தை அறிந்து கொள்ள இயேசுவினுடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. உலகிற்கு சத்தியத்தை கொண்டுவந்தவரே இயேசு கிறிஸ்துதான் அவரில்லாமல் சத்தியம் இல்லை. ஏசாயா இவரைக் குறித்து தீர்க்கதரிசனமாக... கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும் என்று குறிப்பிடுகிறான்.

இயேசு சத்தியபரராக இவ்வுலகத்தில் அவதரித்தார். சத்தியம் நிறைந்த தேவனுடைய வார்த்தைகளை எடுத்துரைக்கிறவராக இருந்தார். அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். மேலும் ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' யோவா.17:17 என்ற வசனத்தின்படி ஜெபிக்கிறவராகவும் இருந்தார். ஒருவன் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமானால் அவன் தன்னைத்தான் பரிசுத்தமாக்கிக் கொள்ளமுடியாது. மாறாக அவன் கர்த்தருடைய வசனத்திலே போதிக்கப்பட்டு அதன்மூலமாக அவன் பரிசுத்தமாக்கப்படவேண்டும். கர்த்தருடைய வசனம் ஒருவனை பாவமற கழுவி சுத்திகரிக்கிறதாயிருக்கிறது. சத்தியம் எல்லோரையும் நேசிக்கிறது. ஒருவரும் சத்தியத்திற்கு வேண்டாதவர்கள் அல்ல.

இன்றைக்கு யார் இந்த சத்தியத்தை நேசிக்கிறார்கள் என்று பார்க்கும்போது, தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள், உண்மையின்படி நடக்க முயற்சிக்கிறவர்கள், பாவத்தை வெறுக்கிறவர்கள்,

சத்தியவான்கள். மற்றவர்களோ, இதைக்குறித்து அலட்சியம் செய்வார்கள். ஒரு முறை பிலாத்து இயேசுவை நோக்கி: “நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான்” (யோவா.18:37,38). இந்த பிலாத்துவைப்போல சத்தியத்தை அலட்சியம் செய்கிறவர்கள் உண்டு. ஆதலால் சத்தியம் சத்தியமாக இல்லாமற்போகுமா? முதல் நூற்றாண்டில் பிரசங்கிக்கப்பட்ட சத்தியத்திற்கு விரோதமாக தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்: அவன் மடிந்துபோனான்: அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்.

அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னை பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்: அவனும் அழிந்துபோனான்: அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்படி எத்தனையோ மார்க்கங்கள் தோன்றி அழிந்து விட்டன. அதை ஏற்படுத்தியவர்களும் இல்லாமற்போய்விட்டார்கள். ஆனால் கிறிஸ்துவின் மார்க்கம் இன்றுவரை அழியாமல் நிலைத்திருப்பதற்கு என்ன காரணம்? அது சத்திய மார்க்கம். தேவனால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கம்.

இந்த மேலான சத்தியத்தை நாம் விலைக்கு வாங்கவேண்டும். நீதிமொழிகள் 23:23 சொல்கிறது “சத்தியத்தை வாங்கு அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு” Buy the truth, and sell it not. ஆண்டவர் ஒரு உவமையில் சொல்லும்போது பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான். அதைப்போல சத்தியத்தை நாம் விலைகொடுத்து வாங்கவேண்டும் அது ஒரு சதாரண பொருள் அல்ல விலையேறப்பற்ற பொக்கிஷம். அது உன்னைக் காப்பாற்றும். ஆனால்



ஐசுவரியவானைப்பற்றி உவமையிலே, அவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது அந்த ஐசுவரியவான் நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன்; என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே; உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். எதை வாங்க வேண்டுமோ அதை வாங்காமல் தனக்காகவே சேர்த்துவைத்தவனுடைய நிலைமை இப்படித்தான் இருக்கிறது. அன்பான நண்பரே நீங்கள் சத்தியத்தை வாங்குங்கள் அதை முதலாவது சம்பாதியுங்கள்.

கடைசியாக இயேசுவின் எச்சரிப்பைக் கவனியுங்கள்: “என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்” (யோவா.12:48). இப்பூமியிலே ஜீவிக்கிறதான அனேகர் உபத்திரவத்தின் மத்தியில் ஆண்டவருடைய வார்த்தைகளை தள்ளிவிடுகின்றனர். சுபிட்சமாக இருந்தால் ஏற்றுக்கொண்டு சந்தோஷமாக வாழுகின்றனர். பாடுகள் பிரச்சனைகள் வந்தவுடன் பேதுருவைப்போல மறுதலிக்கின்றனர்.

எந்நிலைமையிலும் பவுலைப்போல மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்வுலகத்துப்பாடுகள் இனி வெளிப்படப்போகும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. ஆதலால் அவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆண்டவருடைய சத்தியங்கள் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கக்கூடியதாக இருக்கிறது. பிரசங்கி சொல்லும்போது ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும்

தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். இதற்கு எவரும் தப்பஇயலாது. ஆனபடியால் அவருடைய சத்திய வசனத்திற்கு பயந்து நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கிற வேளைகளை செய்யவும், நம்மால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்கு செய்யவும் நாடவேண்டும். தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.

இன்றைய நாளிலே நீங்கள் கேட்ட இந்த சத்தியத்தைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? இது உலகெங்கிலும் உள்ள எல்லா மனுமக்களுக்கும் அறிவிக்கப்படும்படியாக கொடுக்கப்பட்ட தேவ வார்த்தை. நீங்கள் அதைக் கேட்டு, என்றைக்கு தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்டீர்களோ, அன்று முதல், அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது. இச்சத்தியத்தை நீங்கள் நாடும்போது, அது உங்களை காப்பாற்றும். அதை நீங்கள் வஸ்திரத்தைப்போல அணிந்து கொண்டால் பிசாசு கொண்டுவருகிறதான சகல தந்திரங்களினின்றும் உங்களை இரட்சிக்கும்.

### கேள்வி

**✪ 1. இந்த உலகத்திலே வேறொரு சத்தியம் உண்டா?**

வேதாகமத்தைத் தவிர வேறொரு சத்தியம் இல்லை. ஆனால் உண்மை என்று ஒன்று இருந்தால் அதற்கு நேர் எதிராக ஒன்று இருக்கவேண்டும் அது என்னவென்றால் பொய். பொய்க்கு பிதாவாக பிசாசு இருக்கிறான். சத்தியத்திற்கு பிதாவாக தேவன் இருக்கிறார். ஆக பொய் பொய்தான், சத்தியம் சத்தியம் தான்.

இதில் எந்தவிதமாற்றமும் இல்லை. பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது: "உங்களை கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்டமனதாயிருக்கிறார் களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த



சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறோரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா.1:6–8). சுவிசேஷம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல். இது சத்தியமாயிருக்கிறது. இதையல்லாது வேறே இரட்சிப்பு இல்லை. அப்படி வேறொரு இரட்சிப்பு இருக்குமானால் அது பொய்யாயிருக்கும். அதை நம்பினோர் ஒரு நாள் ஏமாற்றப்படுவர்.

**✪ 2. சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

சத்தியம் என்ற வார்த்தைக்கு பொருத்தமானவர் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தான். அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவர் அல்பாவும் ஒமேகாவுமாக இருக்கிறார். அப்படியென்றால் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் என்கிறார்.

மேலும் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று திருவுளம்பற்றுகிறார் (யோவா.14:6). மனிதனுக்கு அவர்தான் வழி அவர்தான் சத்தியம் அவர்தான் ஜீவன். கிறிஸ்து இல்லாதவன் சத்தியமில்லாதவன். சத்தியம் என்றுமே அழியாதது,

அசத்தியம் என்பது கொஞ்சக்காலம் இருக்கக்கூடிய ஒன்று அது நிலையில்லாதது. சர்வ வியாபியாகிய தேவனுக்கு விரோதமானது. அதற்கு ஒரு நாள் அழிவு உண்டு. அப்பொழுது அது அழிந்துபோய்விடும். அத்தோடுகூட அசத்தியத்தை நம்பினவர்களும் அழிந்துபோவார்கள். இப்போது இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறிந்து இருப்பீர்கள் என நம்புகிறேன்.

## 6. நல்ல மேய்ப்பன்
## Good Shepherd

**மே**ய்ப்பர்களைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் தங்களுடைய மந்தைமீது அதிக கவனமுள்ளவர் களாயிருப்பார்கள். ஆடுகளை பெயர்சொல்லி அழைப்பார்கள். ஆடுகள் அவர்களுடைய கூப்பிடுதலைகேட்டு அவர்கள் பின்னே செல்லுகிறது.

சரியான மேய்ச்சலில் அவைகளை கொண்டுபோய்விடுகிறார்கள். அவைகள் புஷ்டியும் கொழுமையுமாக வளர்கின்றன. நமது ஆண்டவரும் ‘‘நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்’’ என்றார் (யோவா.10:11). இவ்வசனத்தின்படி அவர் நமக்காகச் சிலுவையிலே ஜீவனைக் கொடுத்தார். நம்மைப் பாவத்திலிருந்து மீட்கும்படியாக அப்படியானார்.

ஆதியிலே மனிதனுடைய பாவத்தைப் போக்க ஆடு பலியிடப்பட்டு வந்தது. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. ஆகவே நல்ல மேய்ப்பராகிய இயேசு நம்மை மீட்கும்படியாக தம் ஜீவனையே கொடுத்தார். ஜீவனைக்கொடுக்கும் போது அவர் பாவத்திற்கு அதிபதியாகிய பிசாசானவனோடு எவ்வளவு போராடியிருப்பார் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்!

மேய்ப்பனாக இருந்த தாவீது, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது ஒருமுறை ஒரு சிங்கமும், ஒருமுறை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்ட போது அவன் பயப்படாமல் அதைத் தொடந்துபோய், அதை அடித்து, அந்த ஆட்டை அதின் வாய்க்குத் தப்புவித்தான். அது அவன்மேல் பாய்ந்தபோது, அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக் கொன்றுபோட்டான். ஆடுகளின் மேய்ப்பனாக இருந்த இந்த தாவீது, தன் மந்தையில் உள்ள ஆடுகளின் மேல் எவ்வளவு கவனம் வைத்திருந்திருக்கிறான் என்பதைப் பாருங்கள். தன் உயிரைப் பணையம் வைத்து தன்ஆடுகளை மீட்டுள்ளான். கர்த்தரோ தமது ஜீவனையே கொடுத்து நம்மை மீட்டுள்ளார்.

**இயேசு சொல்கிறார்:** ‘‘நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்’’ (யோவா.10:9). I am the door: by me if any man enter in, he shall be saved, and shall go in and out, and find pasture. இன்று வாசல் வழியாக பிரவேசியாமல் வேறு வழியாய் பிரவேசிக்க முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசமெல்லாம் வீணும் விருதாவுமாய் போய்விடும். இன்றைய



நாட்களில் மனிதன் குறுக்கு வழியையே விரும்புகிறான். படிக்காமல் பாஸ் பண்ணவேண்டும், உழைக்காமல் சாப்பிடவேண்டும், எப்படியாவது பணம் கொடுத்து ஒரு வேலையை வாங்கிவிடவேண்டும், ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தை நல்ல இடத்தில் முடித்திடவேண்டும் என நினைக்கிறான். இதையே மனிதன் ஆவிக்குரிய காரியங்களிலும் செய்ய நினைக்கிறான். மனிதன் கைக்கூலி வாங்குவான் தேவன் கைக்கூலி வாங்குகிறவர் அல்ல. அவரிடத்தில் அவைகள் செல்லாது. நோவா, மோசே, தாவீது போன்ற முற்பிதாக்களை தேர்ந்தெடுத்த தேவன் இக்கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றியிருக்கிறார். அவரை தேவன் முன்குறித்திருக்கிறார்.

சீஷர்களுக்கு அவரை வெளிப்படுத்துகையில் ‘இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்றார்’. தேவன் ஏற்படுத்திய அந்த வாசல் வழியாய் ஒருவன் பிரவேசித்தால் அவன் காக்கப்படுவான். அது மாத்திரமல்ல அவன் சரியான மேய்ச்சலை கண்டு உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலை கண்டடைவான். சரியான வழியில் செல்லாதவர்கள் சரியான மேய்ச்சலைக்கண்டடைய முடியாது. அவர்களுடைய வாழ்க்கையில் பிரச்சனைகளும் போராட்டங்களும் கடன் தொல்லைகளும் அவர்களை வாட்டி வதைக்கும். அப்படிப்பட்ட சமயத்தில் அவர்கள் சற்று சிந்திக்கவேண்டும். நாம் மனிதர்கள் ஏற்படுத்திய வழிகளில் செல்கின்றோமா? அல்லது தேவன் ஏற்படுத்திய வழியில் செல்கின்றோமா? மனிதர்கள் ஏற்படுத்திய மார்க்கங்களுக்கு மனித மேய்ப்பர்கள் இருப்பார்கள். தேவன் ஏற்படுத்திய மெய்யான மார்க்கத்தில் ஒரே ஒரு மேய்ப்பரே உண்டு அவரே பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்து. நமக்காக ஜீவனைக் கொடுத்தவரும் அவரே.

‘‘நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவை களையல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும்

நான் கொண்டுவரவேண்டும். அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்'' (யோவா.10:14–16). ஆண்டவர் இயேசு, இவ் வசனத்தில் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோல நானும் என் பிதாவை அறிந்திருக்கிறேன். அதைப்போல நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன் என்கிறார். ஆம், அவர் நம்மை அறிந்தவராக இருக்கிறார்.

இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் இயேசுவை அறிந்தவராகவும் இருக்கலாம் அல்லது அவரை அறியாதவராகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர் உங்களை அறிவார். நீங்கள் அவரால் உண்டாக்கப்பட்டவர்கள், நீங்கள் மெய்யான மேய்ப்பராகிய அவரிடம் திரும்பவேண்டும். அவர் ஒருவரே உங்ளுடைய காரியங்களை அறிந்து கொள்ளமுடியும். மந்தையைக் குறித்து மந்தை மேய்ப்பர்களுக்குத்தான் தெரியும். அதைப்போல உங்களைக்குறித்து அவர் ஒருவருக்குத் தான் தெரியும்.

அவருக்கு முன்பாக மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. அவருடைய நோக்கமெல்லாம் மந்தையை ஒன்று சேர்க்க வேண்டுமென்பதே. நீங்கள் அவருடைய மந்தையில் இருக்கிற ஆடுகளாக இருப்பீர்கள் என்றால் அவருடைய சத்தத்திற்கு செவி கொடுங்கள். நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் எனக்குப் பின்செல்கிறது என்கிறார். நீங்கள் அவருடைய மந்தையின் ஆடாகயிருந்தால் மந்தையில் நிலைத்திருக்க முயற்சியுங்கள். விலங்குகளையும், ஆகாயத்துப் பட்சிகளையும் கவனித்துப்பாருங்கள் இனம் இனத்தோடு சேர்ந்து கூட்டம் கூட்டமாக வாழ்கின்றது. மனிதன் ஒருவனே பிரிவினையை உண்டாக்குகின்றான்.

நான் அவனைச்சேர்ந்தவன் நான் இவனைச்சேர்ந்தவன் என்கிறார்கள். அவன் யார்? நீங்கள் யார்? எல்லோரும் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள்தான். இந்த எண்ணமுடையவர்களாக மாறுங்கள். பரிசுத்த சமுதாயத்தை உருவாக்குவோம். எனக்கு அன்பான சகோதரா! நீங்கள் எந்த மேய்ப்பரை பின்தொடருகிறீர்கள்? பிரதான



மேய்ப்பராகிய இயேசுவைத் தொடருவீர்களானால் நீங்கள் அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து அவர் ஏற்படுத்திய மந்தையில் இருக்கவேண்டும். அப்பொழுது மெய்யான மேய்ச்சலைக் கண்டு அனுபவிக்க முடியும்.

கூலிக்கு வேலை செய்கிற மேய்ப்பனிடம் நீங்கள் சிக்கிக்கொள்வீர்கள் என்றால் ஆபத்து வரும்போது அவன் உங்களை விட்டு தன் ஜீவன் தப்ப ஓடிவிடுவான். இதைக் குறித்து யோவான்10:12,13 வசனங்களில் ''மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்'' இன்றைக்கு இந்த விதமான மேய்ப்பர்களை நாம் காணமுடிகிறது. விசுவாசிகளுடைய பிரச்சனைகளைக் கேட்டவுடன் எங்கே நம்மிடத்தில் உதவிக்கு வந்துவிடுவார்களோ என்று கருதி ஓட்டம்பிடிக்கின்றனர்.

அல்லது வீட்டில் இருந்தாலும் இல்லையென்று சொல்லுகிற ஒரு கூட்டத்தைப் பார்க்கிறோம். ஏன் இந்த அவலநிலை? அவர்கள் கூலிக்காக உபதேசிக்கிறார்கள். வேதாகமத்தை சரியாக பகுத்துப் படித்து புரிந்து கொண்ட எந்த ஒரு மனிதனும் மனிதனை நாடமாட்டான். தனக்காக சிலுவையில் மரித்த இயேசுவிடம் செல்லுவான். அவனுக்கு அவர்மூலமாய் நித்தியமான விடுதலை கிடைக்கும்.

நீங்களும் நல்ல மேய்ப்பராகிய இயேசுவை பற்றிக்கொண்டு அவர் மூலமாய் வருகிறதான நன்மைகளை பெற்று சபையிலும், சமூதாயத்திலும், சந்தோஷமாக வாழுங்கள். இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் மெய்யான மேய்ப்பரை கண்டு கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்பூமியில் ஒருமுறை கொடுக்கப்பட்ட இந்த அற்புதமான வாழ்வை பிரதானமேய்ப்பராகிய இயேசுவின் சத்தம் கேட்டு, அவருக்கு கீழ்ப்படிந்து அவருக்குச் செவிகொடுத்து உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையுங்கள். கர்த்தர் உங்களை தம்முடைய மந்தையில் சேர்த்து போஷிக்க உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

## கேள்வி

✪ **1. இன்று சபைக்கு மேய்ப்பர்கள் தேவையா?**



நம்மை நேசிக்கிறவரும், போஷிக்கிறவரும் அவரே. நமக்கு தூரமானவரும் அல்ல, எங்கும் அவருடைய பிரசன்னம் வியாபித்து இருக்கிறது. இந்த பூமியிலே மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் அவரையும், அவருடைய விருப்பத்தையும் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ள பெற்றோர்களுக்கு பிள்ளைகள் பிறக்கிறது பிறந்த அந்த குழந்தைகளுக்கு உடனே பெற்றோர்களைப்பற்றி தெரிகிறதா இல்லை. இன்னும் முகம் பார்க்கவில்லை என்பார்கள். சரி நாளடைவில் அக்குழந்தை பெற்றோர்களை இழந்துவிடுவாதாக வைத்துக்கொள்ளுங்கள்.

அவர்கள் பெரியவர்களாக வருகின்ற காலத்திலே பெற்றோர்கள் யார் என்பதையும், பெற்றோர்களுடைய விருப்பத்தையும், யாரோ ஒருவர் அதுவும் அவர்களுடைய பெற்றோர்களுக்கு மிகவும் நெருங்கினவர்கள் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதே அவர்கள் தங்களுடைய உண்மையான பெற்றோரைப் பற்றியும், அவர்களுடைய விருப்பத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ளமுடியும். அதைப்போல நம்முடைய பரம பிதாவாகிய தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்ற செய்தியை அவரோடு என்றென்றும் இருக்கிறவரும், அவரால் இப்பூமிக்கு அனுப்பப்பட்ட வரும், ஆண்டவரும், உலக இரட்சகருமாகிய இயேசு நம்முடைய பரம பிதாவாகிய தேவனைப் பற்றி இவ்வுலகத்தில் உள்ள நமக்கு எடுத்துரைத்தார்.

தேவனுடைய விருப்பம் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் என்பதே. ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களோ அவரால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகளுக்கு ஒப்பாக அவரை மாற்றி தொழுதுகொண்டார்கள். ஆகையால் தேவனாகிய கர்த்தர் மோசே மூலம் கட்டளையை கொடுத்தார். ‘‘மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்’’ என்றார் (யாத்.20:4). இந்த வசனத்திலே யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவே வேண்டாம் என எச்சரிக்கிறார். இன்று வரை அவருடைய ஜனங்கள் என்று

சொல்லிக்கொள்ளுகிற அநேகர் அவருக்கு ஒப்பாக ஒரு சொருபத்தையோ அல்லது ஒரு விக்கிரகத்தையோ வைத்து அவரை ஆராதித்து வருகிறார்கள். அந்த தேவனுக்குத்தான் எவ்வளவு வேதனையாயிருக்கும். தான் கொடுத்த கட்டளைகளை தள்ளி இப்படி நம்மை ஆராதிக்கிறார்களே என்று ஜனங்களை குறித்து மனஸ்தாபப்படுவார்.

எனக்கு அன்பான சகோதரர்களே, சகோதரிகளே, நீங்கள் அவரைத் எப்படித் தொழுதுகொண்டு வருகிறீர்கள்? இயேசு குறிப்பிடும்போது; உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்று சொல்லுகிறார். பெற்றோரின் விருப்பத்தை ஒரு மகன் நிறைவேற்றுவதுபோல தேவனுடைய விருப்பத்தை ஒருவர் நிறைவேற்றவேண்டும்.

அப்படிச் செய்யாமல் தன் மனதில் உள்ள விருப்பத்தை நிறைவேற்றி அதை தேவனுக்காக செய்தேன் என்று சொல்வது அறியாமை. நமக்கு ஜீவனையும் சுகவாழ்வையும் அளித்த தேவன், மனிதருடைய கைகளால் பணிவிடை கொள்ளுகிறவர் அல்ல. நாம் காண்கிற வானத்தையும் பூமியையும் அண்டசராசரங்களையும் படைத்த தேவன் ஒளியாய் இருக்கிறார். அவருடைய விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றி வருகிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்று முதல் நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். கர்த்தர் உங்களை வேதாகமத்தின் துணைகொண்டு வழி நடத்த சித்தமுள்ளவராயிருக்கிறார். வேதத்திற்கு விரோதமான எந்த ஒரு காரியமும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகவும், அநேக தேவ ஜனங்களை வஞ்சிக்கக்கூடிய ஒன்றாகவுமிருக்கிறது.

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று யோவா.1:18–ல் வாசிக்கின்றோம். இன்றைக்கு அநேகர் தேவனைக் கணடதாகவும் அவர் தமக்கு தரிசனமானதாகவும்



சொல்லிவருகின்றனர். ஆனால் வேதவசனம் நமக்கு இங்கே மிகதெளிவாக சொல்கிறது **தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை,** இயேசுவே தேவனை வெளிப்படுத்தினார் என்று நமக்கு வெளிப்படுத்துகிறது. பவுலுங்கூட இதைக்குறித்து தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக" என்று எழுதுகிறார் (1 தீமோ.6:15,16).

மேற்கண்ட வசனத்தில் குறிப்பாக மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் என்று எழுதுகிறார். ஆக, இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அப்படி ஒருவன் கண்டேன் என்று சொல்வானானால் இவ்வசனத்தை அவன் பொய்யாக்குகிறான். அவன் சொன்னதை மெய் என்று நிருபிக்கின்றான். நாம் நேற்று உண்டானவர்கள், இவ்வசனங்கள் உலகம் உண்டாகும் முன்பே, தேவனுடைய அனந்த ஞானத்தில் இருந்தது.

அப்போஸ்தலனாகிய யோவான் சொல்வதைப்போல நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும் என்று நம்புகிறோம். இதைச் செய்ய நாம் முன்வரவேண்டும். பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.

இச்செய்தியின் மூலமாக தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதையும், அவரையும், அவருடைய விருப்பத்தையும், நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு, அறிந்து கொள்ளமுடியும் என்பதையும், வேதவசன ஆதாரங்களோடு பார்த்தோம். நீங்கள் தேவனை எப்படித் தொழுதுகொண்டு வருகிறீர்கள்? முன்னே நீங்கள்

வேறுவிதமாய் தேவனை ஆராதித்து வந்தால் தயவுசெய்து உங்களுடைய விருப்பத்தை மாற்றி, தேவனை ஆராதிக்க முயற்சி செய்யுங்கள். தேவன் உங்களுக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த திட்டம் அதாவது (உயில் சாசனம்) பரிசுத்த வேதாகமமே! அந்த வேதாகமம் உங்களிடம் இல்லை என்றால் இன்றே ஒரு வேதாகமத்தை வாங்குங்கள். பரிசுத்த வேதாகமம் உங்களை தேவனுக்கு நேராக வழிநடத்தும். நீங்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

**கேள்வி**

✪ **1. தேவனுக்கு பிறப்பு என்று ஒன்று உண்டா?**

தேவனுக்கு பிறப்பு என்று ஒன்று உண்டா என்றால் இல்லை. எப்படியென்றால், மோசே தேவனை நோக்கி: ஜனங்கள் உம்முடைய நாமம் என்னவென்று கேட்டால் நான் என்ன சொல்வேன் என்று கேட்டான். **"அதற்கு தேவன்; இருக்கிறவராக இருக்கிறேன்** என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று சொல்வாயாக என்றார்" (யாத். 3:13,14).

அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். மனிதனைப்போல அவருக்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை, மனிதனைப்போல அவருக்கு உருவமில்லை, மனைவி பிள்ளைகளுமில்லை. அவர் பரிசுத்தராகவும், நித்தியமானவராகவும், நிகரில்லாதவராகவும், சாவாமையுள்ளவராகவும் இருக்கிறார்.

இயேசு மரித்தார் என்றால் மனிதனை மீட்பதற்காக அவர் மரிக்க வேண்டியதாயிருந்தது. பின்பு அவர் உயிர்த்தெழுந்தார். நிகரில்லாதவர் என்றால் அவருக்கு ஒப்பாக ஒருவரும் இருக்கமுடியாது. அதைத்தான் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும் என்று செய்தியில் தியானித்தோம். ஆகையால் தேவனுக்கு பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் இருக்கிறவராகவே இருக்கிறார்.

✪ **2. தேவனை நாம் என்று காண்போம்?**



தேவனை நாம்முடைய சரீர மரணத்திற்கு பின்பு நித்தியமான ராஜ்யத்தில் காண்போம் என பரிசுத்தவேதாகமத்தில் வாசிக்கின்றோம். "இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிக்கிறோமென்று அறிந்து, எப்பொழும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்ற (2கொரி.5:7,8) வசனத்தின்படி கர்த்தரோடு பரமவாசஸ்தலத்தில் குடியிருக்கும்போது அவரை முகமுகமாய் தரிசிப்போம். இந்த மாமிச கண்களால் அவரை பார்க்க இயலாது. பூமிக்குரிய அநேக நன்மைகளை பெற்றுக்கொள்ளவிட்டாலும்கூட ஒரு நாள் தேவனோடு வாழ்வோம் என்ற அசையாத நம்பிக்கையோடு அவருடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். நிச்சயமாக பரிசுத்தமில்லாமல் ஒருவரும் அவரை தரிசிக்க முடியாது. இப்பூமியிலே அவரை சந்திக்க ஒவ்வொருவரும் ஆயத்தப்படவேண்டும்.

## 8. ஒரு கிறிஸ்தவனாக இருப்பது எப்படி?
## How to be a Christian?

**இ**ன்றைய நாளிலே ஒரு கிறிஸ்தவனாக இருப்பது எப்படி? என்ற தலைப்பின் கீழ் தியானிக்க உள்ளோம். உலகத்திலே பலவிதமான மார்க்கங்களுக்கு மத்தியில் ஒரு கிறிஸ்தவன் வாழ்ந்துவருகிறான். இதிலே கிறிஸ்தவனாக வாழ்வது என்பது ஒரு சவால் ஆன ஜீவியமே. ஏனென்றால் உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. எங்குபார்த்தாலும் "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்க மாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்" கலா.5:19–21–ல் சொல்லப்பட்ட பாவங்கள் நிறைந்து காணப்படுகின்றன. உலகத்திலே பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோவென்று வகைதேடி சுற்றித்திரிகிறான் என வேதத்திலே வாசிக்கின்றோம். இதன் மத்தியில்

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் படம்பிடித்து காண்பிக்கிறவனாக இருக்கவேண்டும். அப்படியென்றால் அவனுடைய நடை, உடை, பேச்சு, சிந்தை, எல்லாவற்றிலும் கிறிஸ்து வெளிப்பட வேண்டும். சொல் ஒன்று செயல் ஒன்றாக இருக்கக் கூடாது. எதைச் சொல்லுகிறோமோ அதை செயலில் காண்பிக்கவேண்டும். ஆண்டவரும் அப்படியே தம்மிடத்தில் வேண்டிக்கொண்டவர்களுக்கு சுகமளித்தார். இயேசுகிறிஸ்து இப்பூமிக்கு வந்து 2000 வருடங்கள் முடிந்தும் இன்னும் இயேசுவின் அன்பையும் அவருடைய இரட்சிப்பையும், அறியாது வாழ்கிறவர்கள் கோடா கோடி மக்கள் இருக்கிறார்கள்.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு சொல்வதை கவனியுங்கள்: "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி" என்று (தீத்து2:12)—ல் வாசிக்கின்றோம். இவ்வுலகத்தில் ஜீவிக்கிறதான நீங்கள் ஒரு நாளாவது நாம் எப்படி வாழவேண்டும் என்று சிந்தித்ததுண்டா? கிறிஸ்தவன் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் அதாவது உலகப்பிரகாரமான இச்சைகளை வெறுக்கவேண்டும். தெளிவான என்ன முடையவர்களாக இருக்கவேண்டும். உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இதை நீங்கள் செய்து வருகின்றீர்களா? நான் என்னத்தைச் சொல்ல என்று சொல்லாதிருங்கள்.

கர்த்தர் உங்களுக்கு எவ்வளவோ நன்மைகளை செய்திருக்கிறார். நீங்கள் இம்மட்டும் இருப்பதே அவருடைய சுத்தகிருபை. உங்களிலே இருக்கிற நம்பிக்கையை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் ஜீவிக்க முயற்சியுங்கள். என்னாள் முடியாது என்று சொல்லாதிருங்கள். கர்த்தர் நம் யாவருக்கும் மாதிரியை வைத்துப்போய்யிருக்கிறார். அவருடைய மாதிரியை பின்தொடருங்கள்.

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,



தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று ரோம.12:2—ல் வாசிக்கின்றோம். ஒரு கிறிஸ்தவன் உலகத்திற்கேற்ற ஒத்த வேஷம் தரிக்கலாகாது. இன்றைக்கு மக்கள் தன்னை மதிக்கவேண்டும் என்று நினைத்து தங்களை வித்தியாசப்படுத்திக் காண்பிப்பதற்காக உடைகளிலும் நடைகளிலும் வித்தியாசமாக இருக்கவிரும்புகிறார்கள்.

இயேசு வேதபாரகர் பரிசேயர்களைக் குறித்து; தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் வரும்புகிறார்கள்.

இயேசுவோ, அப்படி இவ்வுலகத்திற்கு கடந்து வரவில்லை. அப்படி வந்திருப்பாரானால், அவர் இவ்விதமாக போதித்திருக்க மாட்டார். அவர் எவ்வகையிலும் தன்னை வேறுபடுத்திக் காண்பிக்கவிரும்பவில்லை. மாறாக தான் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படியாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின என்ற வசனத்திற்கேற்ப அவன் மறுரூபப்படவேண்டும். மறுரூபமென்பது பழையவாழ்க்கையை விட்டு புதிய வாழ்க்கைக்கு திரும்புவது அல்லது புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருப்பது. உங்களுடைய மனம் புதிதாகுமானால் இவைகள் நடைபெறும்.

ஒரு கிறிஸ்தவன் "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்று யாக்.1:27—ல் வாசிக்கின்றோம். நம்முடைய ஆண்டவரும் இவர்களுக்கு

எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்லுகிறார். கிறிஸ்தவன் எந்த ஒரு உதவி செய்தாலும் அதை நான் கர்த்தருக்காக செய்தேன் என்ற என்னம் முதலாவது வரவேண்டும். அப்பொழுதே பிரதிபலனை எதிர்பாராதிருப்பான். யாக்கோபு சொல்வதைப்போல திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் விசாரிக்க வேண்டும். அவர்கள் படுகிற உபத்திரவத்திலே உதவி செய்யவேண்டும். அத்தோடு தன்னையும் கறைபடாதபடி பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

ஏனென்றால் மற்றவர்கள் செய்யும் பாவத்துக்கு உடன்படாதே என்ற கர்த்தருடைய வார்த்தையை இங்கே நினைகூருங்கள். இதுவே தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது என்கிறார். தேவையிலிருப்போரை கண்டுகொள்ளாமல் பக்தியின் வேஷம்போடுவதால் ஒரு பிரயோஜனமுமில்லை. உதவி செய்கிறேன் என்று சொல்லி அவர்களையும் கறைபடுத்தி தன்னையும் கறைபடுத்திக்கொண்டு தேவனுக்கு முன்பாக குற்றமில்லாமல் யாரும் தப்பமுடியாது.

ஒரு கிறிஸ்தவன் பல வகையில் சோதனைகளை சந்திக்கவேண்டியவனாக இருக்கிறான். பச்சமரமாகிய எனக்கே இப்படி என்றால் பட்டமரமாகிய உங்களுக்கு எப்படியோ என்றார் நம் ஆண்டவர் இயேசு. ''லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல'' (கொலோ.2:8).

உலகப்பிரகாரமான காரியங்களை ஒரு கிறிஸ்தவனை மேற்றக்கொள்ள அவன் என்னசெய்யவேண்டும்? எப்பொழுதும் எச்சரிக்கையுள்ளவனாக இருக்கவேண்டும். விலங்குகளை கன்னிவைத்தும், மீன்களை வலைவீசியும் தந்திரமாக பிடிக்கிறார்கள். அதைப்போல ஒருசில உலகமனிதர்கள் நல்ல ஆத்துமாக்களை உலகப்பிரகாரமான ஞானத்தினாலும், மாயமான தங்களுடைய தந்திரத்தினாலும் பிடிக்கிறார்கள். இவைகள் மனுஷர்களின்



பாரம்பரியத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினது. உலகத்தைக் காட்டி மயக்குவார்கள் உலகமும் அதிலுள்ளவைகளும் ஒரு நாள் அழிந்துபோம். கர்த்ருடைய வசனமோ என்றென்றைக்கும் அழியாதவைகள்.

இச்செய்தியை வாசிக்கிற அன்பானவர்களே, முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இவர்கள் ஒரு வருஷ காலமாய் சபையோடே கூடியிருந்து தேவனை ஆராதித்தார்கள். இவர்கள் ஆதி கிறிஸ்தவர்கள் அதாவது முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள். இவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று அழைக்கப்படுவீர்கள் என்றால் இந்த ஆதிகிறிஸ்தவர்கள் போல இவைகளிலே நிலைத்திருக்கிறீர்களா? இவைகளில் நிலைத்திருக்கிறவர்களே கிறிஸ்தவர்கள் என வேதம் அழைக்கிறது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்கள் என்றால் நாம் பார்த்தபடி லௌகீக இச்சைகளை வெறுத்து, இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்தரியாமல், திக்கற்றவர்களை விசாரித்து, உலகத்தால் கறைபடாதபடி பாதுகாத்து, தேவபக்தியுள்ளவர்களாய் ஜீவித்து, அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தில் நிலைத்திருங்கள்.

## கேள்வி

**✪ 1. கிறிஸ்தவனாக மாறிய ஒருவனின் பெயர் மாற்ற வேண்டுமா?**

பெயர் மாற்றப் பட வேண்டும் என்று வேதத்தில் நாம் எங்கும் வாசிக்கமுடியாது. சிலருக்கு பெயரை தேவன் மாற்றினார் எல்லாருக்குமல்ல. மோசே என்பது பார்வோனின் குமாரத்தி வைத்த பெயர் அதை தேவன் மாற்றவில்லை அந்தப் பெயரிலே அவனை அழைத்தார். சவுலை பவுலாக அழைத்தார். கிறிஸ்தவனாக மாறிய ஒருவனிடம் அவனுடைய ஜீவியம் மாற்றப்படவேண்டும். பெயர் மாற்றப்படுவதால் ஒன்றுமில்லை.

ஆண்டவர் எதிர்பார்ப்பது: ''ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை

எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்கிறார் (மத்.16:24). இப்படியாக ஒரு கிறிஸ்தவன் இயேசுவைப் பின்தொடரவேண்டும். கிறிஸ்தவர்கள் வைத்திருக்கிற எல்லா பெயரும் வேதாகமத்தில் இல்லை அது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பம். வேதாகமத்தின்படி தான் பெயர் வைக்கவேண்டும் என்பதும் கட்டாயமல்ல.

தேவன் நம்மை சுயாதீனத்திற்கே அழைத்திருக்கிறார். ஆனால் பெயரை மாற்றி சொல்லி வாழுவது மிகப்பெரிய குற்றம். நம்முடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படுகின்றன. இரட்டை வேடம் போடாது இருக்கவேண்டும். எழுதின பெயரை தேவன் கிறுக்கிப்போட அதிகாரமுள்ளவராய் இருக்கிறார்.

**✪ 2. கிறிஸ்தவனாக மாறிய ஒருவன் சமூதாயத்தில் தன்னை எப்படி காண்பிக்க வேண்டும்?**

ஒரு கிறிஸ்தவனாகவே காண்பிக்கவேண்டும். இவ்விஷயத்தில் அநேகர் சலுகைகளையும், சமூதாய உறவுகளையும் இழக்க பயப்படுகின்றனர். பாவத்திலிருந்து தூக்கியெடுத்த இரட்சகரை இங்கே மறுதிலிக்கின்றனர். பேதுரு அதே காரியத்தைத்தான் செய்தான். ''ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக்கண்டு, அவனை உற்றுப்பார்த்து; இவனும் அவனோடிருந்தான் என்றாள். அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான்'' (லூக்.22:56,57). இப்படியே மூன்று முறையும் மறுதலித்தான்.

தன்னை ஒரு கிறிஸ்தவனாக காண்பிக்க வெட்கப்படுகிறவர்கள் ஆண்டவர் சொன்ன ஒரு வசனத்தையும் நினைவுகூறவேண்டும். என்னை மறுதலிக்கிறவர்களை நானும் என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் என்கிறார். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதிலிப்பார். எனவே ஆண்டவருடைய அன்பைக் காண்பிக்க வேண்டும். அன்பு திரளான பாவங்களை மூடும். அன்பில்லாதவன் தேவனை அறியான். இயேசு எல்லோரையும் நேசிக்கிறவராக வந்தார். அதே அன்பு ஒரு கிறிஸ்தவனிடமிருக்கவேண்டும். அந்த அன்பு உங்களிலும் காணப்பட வேண்டும்.



## 9. இந்த ஒரு வருஷமும் இருக்கட்டும்
## Let it alone this year also?

இயேசு ஒரு உவமையின் மூலமாக சொல்லும்போது: ''ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங்காணப்படவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத்தேடிவருகிறேன்; ஒன்றையுங்காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்: நான் இதைச் சுற்றிலுங்கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்'' (லூக்.13:6–9).

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே! அந்த அத்திமரம் நீயாக இருக்கலாம். இந்த வருடமாவது கனிகொடுக்கும்படியாக உன் ஜீவியத்தை மாற்று. ஆண்டவருடைய திருவார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, உன் ஆன்மாவிலும் உன் சரீரத்திலும் புத்துணர்வை கொடுக்கக்கூடிய திரு வசனத்தை ஏற்று, கனிகொடுக்கும்படியாக முயற்சிசெய். அத்திமரம் தானாய் கனிகொடுக்கமாட்டாது அதற்கு உரமிடும்போது கனிகொடுக்கும். நீ கனி கொடுக்கும்படி கர்த்தர் உரமிடுகிறவராக இருக்கிறார்.

எங்கள் வீட்டு தோட்டத்தில் ஒரு தென்னைமரம் வெகு நாட்களாக பலன் கொடாதிருந்தது. அப்பொழுது ஒருவர் வந்து இதை சுற்றிலுங் கொத்தி உரமிட்டு, உப்புவையுங்கள், பின்பு கனிகொடுக்கும் என்றார். அந்தப்படியே நாங்கள் செய்தபோது மிகவும் அழகான தேங்காய்களைக் கொடுக்க ஆரம்பித்தது. ஆம், பிரியமானவர்களே நீங்கள் இவ்வருடத்திலாவது கனிகொடுக்கும்படியாக ஆண்டவர் இயேசு உங்களுக்காக பிதாவிடம் பரிந்து பேசி கொத்தி எருப்போடுகிறார். அவர் கொடுக்கிறதான சத்தான உரமாகிய வசனத்தை கேட்டு பலன் கொடுக்க பிரயாசப்படுங்கள். இல்லையேல் வெட்டுண்டுபோவீர்கள்.

இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல என்றார் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்கவந்தார். கெட்டுப்போனதை கீழே கொட்டிவிடுவார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து கெட்டுப்போன நம்மை புதுப்பித்து இரட்சிக்கிறார் என்று பார்க்கிறோம். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபி.7:25).

தேவ சமூகத்திலே நமக்காக வேண்டுதல் செய்யக் கூடியவராகவும் இருக்கிறார். ஆகையால்தான் இது இந்த வருஷமும் இருக்கட்டும்: நான் இதைச் சுற்றிலுங்கொத்தி எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று பிதாவிடம் நமக்காக பரிந்துபேசுகிறவராக, பிரதான ஆசாரியராக, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அன்பான சகோதரா உன் ஜீவியவாழ்வு இயேசுகிறிஸ்துவால் உனக்கு கூட்டி வழங்கப்பட்டுள்ளது. இதை நீ பயன்படுத்தி ஆவிக்குரிய கனிகளை கொடுக்க பிரயாசப்படு அப்பொழுது பிதாவாகிய தேவன் உன்மேல் பிரியமாயிருப்பார்.

ஒரு முறை யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். இவன் யூதாவை ஆண்ட இருபது இராஜாக்களில் 13–வது ராஜாவாக 29 வருஷம் மிகச் செம்மையாக ஆட்சிசெய்தான். வியாதி கண்ட இவனை ஏசாயா தீர்க்கதரிசி பார்த்து: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திரும்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று அழுது கொண்டு விண்ணப்பம் பண்ணினான்.

ஏசாயா பாதி முற்றத்தைவிட்டு அப்புறம் போகிறதற்குமுன்னே, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர் சொன்னது: ''நீ



திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக்கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப்போவாய், உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்போன் என்று சொல் என்றார்'' (2இராஜா.20:5,6).

எசேக்கியா ராஜாவின் அழுகையின் கண்ணீரைக் கண்ட தேவன் உடனே அவனுக்கு இரங்கி மரணக்கட்டுகளிலிருந்து அவனை விடுவித்து அவனுடைய ஜீவியநாட்களிலே பதினைந்து வருடத்தை கூட்டி வழங்கினார். இன்றைக்கு உங்களுடைய கண்ணீர் ஜெபம் கர்த்தர் சமூகத்தை எட்டியதால் உங்களுக்கு இரங்கி இவ்வருடத்தை கூட்டி வழங்கியிருக்கிறார். நாம் இன்று உயிரோடு இருப்பதே அவருடைய சுத்த கிருபை என்பதை ஒருநாளும் மறந்துபோக வேண்டாம்.

''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'' என்கிறார் இயேசு (யோவா.15:7,8). நாம் அவரிலும், அவருடைய வார்த்தைகள் நம்மிலும் நிலைத்திருக்க வேண்டும். அப்படி நிலைத்திருந்தால் நாம் கேட்டுக்கொள்வதெதுவோ அது அவர்களுக்குச் செய்யப்படும் என்கிறார்.

நீங்கள் அவரில் நிலைத்திருக்கிறீர்களா? அவரில்லாமல் உங்களால் ஒன்றும் செய்யஇயலாது. நீங்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் இருந்துகொண்டு கனி கொடுக்க வேண்டும். இயேசு சொல்கிறார் நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்.

நீங்கள் ஆவிக்குரிய கனிகளை கொடுக்கிறீர்களா? இந்த ஆவிக்குரிய கனிகளைப் பற்றி கலாத்தியர் 5:22,23 வசனங்களில் வாசிக்கின்றோம். ''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை''. The fruit of the spirit is love, joy, peace, longsuffering, gentleness, goodness, faith, meekness, temperance: against such there is no law. இக் கனிகளையே உங்களில் கர்த்தர் தேடுகிறார். நீங்கள் சபையைத் தாங்குகிறவராக இருக்கலாம்.

சபைக்கு நேரத்தோடு செல்கிறவராக இருக்கலாம் அல்லது அந்நியரை உபசரிக்கிறவராக இருக்கலாம் மேற்கண்ட ஒன்பது கனிகளிலே ஒன்று உங்களுடைய ஜீவியத்தில் இல்லை என்றால் பிரயோஜனம் ஒன்றுமில்லை என்று வேதம் சொல்லுகிறது. உங்களுக்கு உண்டான யாவற்றையும் நீங்கள் அன்னதானம் பண்ணினாலும், உங்கள் சரீரத்தைச் சுட்டெரிக்கப் படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு உங்களுக்கிராவிட்டால் உங்களுக்குப் பிரயோஜனமில்லை. ஆகையால் இவ் வருடத்திலிருந்து இவ்விதமான கனிகளைக் கொடுக்க முயற்சியுங்கள்.

இந்த உவமையிலே கர்த்தர் அத்திமரத்தை சொல்வதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆதியிலே தன் மானம் காக்க நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமும் ஏவாளும் அத்தியிலைகளைத்தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். அன்று அவர்களுடைய மானத்தைக் காப்பாற்றியது இந்த அத்திமரத்தின் இலைகள். எசேக்கியா ராஜா வியாதிகொண்டிருக்கும்போது அவனுடைய கண்ணீர் ஜெபத்தைக் கேட்டு அவனுடைய நாட்களிலே பதினைந்து வருடங்களைக் கூட்டி வழங்கியபோது ஏசாயா அத்திப்பழத்து அடையைக் கொண்டு வரச்சொல்லி பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது எசேக்கியா பிழைத்தான். இந்த அத்திப்பழங்கள் எசேக்கியாவை வியாதியிலிருந்து காப்பாற்றியது. ஆக, அத்திமரத்தின் மேன்மையை அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்த அத்திமரத்தைப்போல நாம் மற்றவர்களுக்கு பயன்படவேண்டும் என்பதற்காக அத்திமர உவமையை கர்த்தர் நமக்கு நினைப்பூட்டுகிறார்.



இப்புத்தாண்டில் பூத்துக்குளுங்கும் மரமாக நீங்கள் மாற கர்த்தர் உங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளையும் அருளிச் செய்வாராக! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## கேள்வி

**✪ 1. ஆவிக்குரிய கனிகளை கொடுக்க தடையாக இருப்பது எது?**

களைகள்தான். மரம், செடி, கொடிகள் வளர்ச்சிடைய களைகள் எப்படி தடையாக இருந்து கொண்டு, இருக்கிற சத்தான பொருட்களை உறிஞ்சி அக்களைகள் நன்கு வளர்ச்சியடையுமோ அதைப்போல, ஆவிக்குரிய வளர்ச்சியடைய விடாமல் பிசாசினுடைய களைகளான (அதாவது) அவனுடைய உபதேசங்கள், வளர்ந்து பெருகி தடையாக இருக்கிறது. அவைகளை நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்காது களைகளை களை எடுக்கவேண்டும். உங்கள் இருதயத்தில் விதைக்கப்பட்டுள்ள களைகளைப் பிடுங்கிபோட ஆண்டவருக்கு இடம் கொடுங்கள். ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'' என்கிறார் (வெளி.3:20). ஆண்டவர் உங்கள் இருதயத்தில் தங்க இடம் கொடுங்கள் அப்பொழுது பிசாசுக்கு, களைகளை விதைக்க வழியில்லாமறபோகும். நீங்கள் ஆவிக்குரிய கனிகளைக் கொடுத்து, கர்த்தருக்கு ஏற்ற நல்ல கனி கொடுக்கும் அத்திமரமாவீர்கள்.

**✪ 2. ஆவிக்குரிய கனி கொடுக்கிறவர்கள் தீமையான கனிகளையும் கொடுப்பார்களா?**

நிச்சயமாக கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால் ''அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை'' என்கிறார் ஆண்டவர் இயேசுகிறிஸ்து (லூக்.6:44). அதைப்போல ஆவிக்குரியவன் ஆவிக்குரிய கனிகளையே கொடுப்பான். எப்படி ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்காதோ அப்படியே ஆவிக்குரியவன் இருக்கிறான். ஒருவேளை

ஆவிக்குரியவன் என்று சொல்லப்படுகிறவன் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்காமல் வேறே கனிகளை அதாவது கர்த்தருக்குப் பிரியமில்லாத கனிகளைக் கொடுப்பானே என்றால் அவன் ஆவிக்குரியவன் அல்ல. எப்படியென்றால், நம்முடைய ஆண்டவர் அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறியலாம் என்கிறார்.

## 10. யாரோடு ஐக்கியம்?
## Fellowship with whom?

இன்றைய உலகத்தில் நாம் யாரோடு ஐக்கியம் கொள்வது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனென்றால் யாரையும் நம்பமுடியாததே இதற்கு காரணம். நம்பினவர்கள் மோசம்செய்து விடுகின்றனர். பின்பு யாரைத்தான் நம்புவது, யாரோடுதான் ஐக்கியம் கொள்வது என்று நினைக்கிறீர்கள்.

ஒரு தேவமனிதன் தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். பரிசுத்த வேதாகமமும் இப்படியே போதிக்கிறது. "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" என்று 2 கொரி.6:14–16–ல் வாசிக்கிறோம்.

தேவனுடைய வசனங்கள் சரியாகவே நமக்கு போதிக்கிறது. ஆனால் வசனத்தை சிலர் பற்றிக்கொள்ளாமல் தங்களுடைய சொந்தக் கருத்துக்களுக்கு இடம்கொடுத்து, விசுவாசிகள் இல்லாத இடத்தில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். பின்பு நாங்கள் யாரோடு ஐக்கியம் கொள்வது, அவர்களுக்கு எங்களைவிட்டால் வேறு வழிஇல்லை, எங்களுக்கு அவர்களைவிட்டால்வேறு வழிஇல்லை, ஆகையால் நாங்கள் சம்பந்தம் செய்து கொண்டோம். அதனால் என்ன? என் மகன்



ஏசு சாமி கும்பிடுகிறாரு என் மருமகள் எல்லாச்சாமியையும் கும்பிடுகிறாள். எங்களுக்கு எல்லாத்தெய்வமும் வேண்டும் நாங்கள் எல்லாரோடும் ஐக்கியமாக இருப்போம் என்பார்கள். இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களை அவர்கள் மெத்தனமாக எடுத்துக்கொள்கின்றனர். தேவனுடைய ஆலயம் என்றால் அது தேவனுடைய ஆலயம்தான். அதை நாம் மாற்றலாகாது, அதைப்போல ஒரு விசுவாசி, ஒரு விசுவாசியோடுதான் ஐக்கியம் கொள்ளவேண்டும். மாட்டு வண்டி பார்த்து இருப்பீர்கள் அதிலே பூட்டப்பட்ட மாடுகள் இரண்டும் ஒரே விதமான மாடுகளாகவும் நன்கு பழக்கப்பட்ட மாடுகளாகவும் இருக்கும். அப்படி இருக்கும்போது ஒரே சீராக வண்டியை இழுத்துச்செல்லும். வாழ்க்கை என்ற வண்டியை இழுத்துச்செல்ல ஒருமனப்பட்ட இருவர் அதாவது ஒரே கருத்தை உடைய இருவர் இணையவேண்டும். அப்படிப்பட்ட ஐக்கியம் நிலைப்படும்.

கிறிஸ்துவின் சரீரமான சபையானது ஒரே கருத்தை உடையதாக இருக்கிறது. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமா யிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரி.10:16,17).

ஆண்டவர் இயேசு நாம் ஒரே ஐக்கிய முள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவும், அவரை நினைவு கூரும்படியாகவும், அப்பத்தையும், இரசத்தையும் மாதிரியாக வைத்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்து தேவனை தொழுதுகொள்ளும் போது, இயேசு கிறிஸ்து மாதிரியாக விட்டுச்சென்ற அப்பத்தையும் இரசத்தையும் நினைவுகூருகிறார்கள். இது எதை வெளிப்படுத்துகிறது, ஒன்று அவரோடு ஐக்கியமாக இருக்கிறார்கள், மற்றொன்று எல்லோரும் ஐக்கியப்பட்டவர்களாக ஒரே அப்பத்தில் பங்கு கொள்கிறார்கள். இதை பற்றி அறியாத ஒருநபர் இதிலே பங்குகொள்ள முடியுமா? அப்படி பங்கு கொண்டாலும் அதினால் அவன் பிரயோஜனமடைய முடியுமா? முடியாது. நானும் என் நண்பனும் ஒரே

தட்டில் சாப்பிட்டோம் என்பார்கள் இது எதைக் குறிக்கிறது, அவர்களுடைய ஒற்றுமையையும் அவர்களுடைய ஐக்கியத்தையும், ஒத்த கருத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆண்டவரை நினைவுகூரும்படியாக கூடிவருகிறவர்களும் ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறபடியால் ஒரே ஐக்கியத்தை காண்பிக்கிறார்கள்.

மேலும், “நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது” (1கொரி.10:21–23). கர்த்தரால் பாவத்திலிருந்து மீட்கப்பட்ட ஒருவன் பரிசுத்த மாக்கப்பட்டவனாயிருக்கிறான். அவனை கர்த்தர் தமது பரிசுத்த இரத்தம் கொண்டு கழுவி பாவத்திலிருந்து மீட்டு எடுத்துள்ளார்.

அவன் கர்த்தருடைய பந்தியிலும், பேய்களுக்கு படைக்கப்பட்ட பந்திகளிலும் சென்று பங்குகொள்ளகூடாது. ராஜாவீட்டு பிள்ளை ராஜாவீட்டு பிள்ளையாகவே இருக்கவேண்டும். ராஜாவீட்டு பிள்ளை கீழ்த்தரமாக நடந்துகொண்டால் பார்க்கிறவர்கள் என்னசொல்வார்கள்? ராஜ மாளிகைக்கே கலங்கத்தை உண்டாக்க வந்து பிறந்து இருக்கிறது பாருங்கள் என்பார்கள். கர்த்தருடைய பிள்ளையானவன் கர்த்தருடைய பந்தியை சிறப்பான ஐக்கியத்தோடு பங்குகொள்ளவேண்டியவனாக இருக்கிறான். அவன் தவறான ஐக்கியம் உள்ள எந்தவொரு ஐக்கியத்தோடும் கலந்துகொள்ளக்கூடாது. அப்படி மீறி அவன் ஐக்கியம் கொள்வானே என்றால் அவன் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுகிறவனாக இருப்பான். நாம் இந்த விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைகளின்படி நடக்க பிரயாசப்பட வேண்டும். இவ்வசனத்திலே பவுல் எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது மற்றும் பக்திவிருத்தியை உண்டாக்காது என்கிறார். ஆம், கர்த்தருடைய



பிள்ளையானவன் கர்த்தருக்கேற்ற சிந்தையில் வளரவேண்டும். அவனுக்கென்று சில தகுதிகள் இருக்கிறது அவைகளில் அவன் சிறந்து விளங்கவேண்டும். இயேசுவை கவனித்துப் பாருங்கள் நாம் பார்க்கிற வானமும் பூமியும் அவரால் உண்டாக்கப்பட்டன. ஆனால் இயேசு இப்பூமிக்கு வந்தபோது எளிமையாக அவதரித்தார். அவர் ஒரு தங்கக் குதிரையில் வந்திருக்கலாம், ராஜஅரண்மையில் பிறந்திருக்கலாம், ஏன்? உலகமே பார்க்கக்கூடிய அளவிற்கு ஆகாய மாளிகை கட்டி அங்கு சிங்காசனமிட்டு உட்கார்ந்திருக்கலாம். அப்படிப்பட்ட தகுதி அவருக்கு இருந்தும் அப்படிவராமல் மனிதனில் மனிதனாக நம்மில் ஒருவராக அவதரித்தார்.

ஐக்கியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் இவ்விதமாக சொல்லுகிறார்: “நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது” That which we have seen and heard declare we unto you, that ye also may have fellowship with us: and truly our fellowship is with the father, and with his son Jesus Christ (1 யோவா.1:3). முதல் நூற்றாண்டு காலத்தில் இயேசுவோடு உண்டு உறங்கிய சீடர்களில் அப்போஸ்தலனாகிய யோவானும் ஒருவர். அவர் நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்கிறார்.

அவர்கள் இயேசுவை முகமுகமாக தரிசித்தார்கள். அவருடைய அற்புதங்களையும், வல்லமைகளையும் கண்ணாரக் கண்டார்கள். அவர்கள் உலகப்பிரகாரமான ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தவிரும்பாமல் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். உங்களுடைய ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நீங்கள் அவரில் நிலைத்திருந்தால் அவர் உங்களில் நிலைத்திருப்பார். உங்களுடைய ஐக்கியம் பூமிக்குரியவைகளோடு இருந்தால் வானமும் பூமியும் ஒருநாள் அழியும் அப்பொழுது உங்களுடைய ஐக்கியமும் ஒருநாள் அழிந்துபோய்விடும். உங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனோடும்

கர்த்தருடைய ஜனங்களோடும் இருக்குமானால் அவை என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்கும். அவைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

“நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்” (1யோவா.1:6,7). இன்றைக்கு அநேகர் நல்ல ஐக்கியத்திலே இருக்கிறோம் என்று சொல்லி இருளிலே நடக்கிறார்கள். எல்லாவிதமான தவறுகளையும் செய்துகொண்டு நாங்கள் திருச்சபையைச் சார்ந்தவர்கள் என்றால் அது மெய்யாகிவிடுமா? அக்கினியானது ஒருநாள் பரிசோதிக்கும் அப்பொழுது தெரியும் உண்மை என்னவென்று.

பிரியமான சகோதரனே, இருளில் நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். தேவன் சத்தியபரர், அப்படியே நாமும் இருந்தால் அவரோடு ஐக்கியப்பட்டவர்களாயிருப்போம், இல்லையேல் உங்களுடைய ஐக்கியம் வீணாய்இருக்கும். இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் வேதாகமம் சொல்லுகிறதான ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சியுங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய உதவிகளை செய்வார்.

**கேள்வி**

**✪ 1. ஐக்கியம் என்பது எதைக் குறிக்கிறது?**

ஒருமனப்பாட்டைக் குறிக்கிறது ஆங்கிலத்திலே இதை Fellowship என்றும் கிரேக்கு பாஷையிலே Hoinonia என்றும் அழைக்கிறோம். இந்த ஐக்கியத்தை முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கொண்டிருந்தார்கள் என்று அப்.2:42–ல் வாசிக்கிறோம். “அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்”. பலிகளைப் புசிக்கிறவர்கள் எப்படி பலிபீடத்தோடே



ஐக்கியமாயிருக்கிறார்களோ அதைப்போல வேதாக உபதேசத்திலே ஐக்கியமாயிருக்கிறவர்கள் வேதாகமத்தோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவனுடைய ஐக்கியமானது இப்படிப்பட்டதாக இருக்கவேண்டும். வேதாகமம் அதையே போதிக்கிறது.

**✪ 2. ஐக்கியத்திற்கு ஏதாவது ஒரு அடையாளம் உண்டா?**

திருமண ஒப்பந்தத்தில் அடையாளமாக ஒரு மோதிரமோ, ஒரு தாலியோ இருக்கிறதுபோல ஐக்கியத்திற்கும் அடையாளம் உண்டு. சுவிசேஷத்தை பிரசங்கித்துவந்த அப்போஸ்தலர்கள் மத்தியில் நாம் இதை பார்க்கிறோம். இது குறித்து பவுல் குறிப்பிடும்போது, “தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்தார்கள்” என்கிறான் (கலா.2:9). வலதுகை கொடுத்தார்கள் என்றால் சுவிசேஷவிஷயத்தில் அவர்கள் ஒருமனப்பட்டவர்களாக இருந்து, ஊழியம் விருத்தியடைய உதவி செய்தார்கள். இது ஐக்கியத்திற்குரிய அடையாளத்தை நமக்குக் காட்டுகிறது.

## 11. தேவனுடைய குடும்பம்
## The family of God

**தே**வனுடைய குடும்பம் The family of God என்ற தலைப்பின் கீழ் தியானிக்க உள்ளோம். இன்றைய நாளில் நாம் அநேக குடும்பங்களைக் காண்கிறோம். ஒவ்வொரு குடும்பமும் பல போராட்டங்களுக்கு மத்தியில் இருக்கிறது. இதிலே தேவனுடைய குடும்பத்தை நீங்கள் அடையாளம் கண்டுகொள்வீர்கள் என்றால் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவீர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; “இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள்

அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்று எழுதுகிறார் (எபே.3:14–19).

பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்குமே நாமகாரணராக தேவன் இருக்கிறார். அவருடைய ஆளுகையின் கீழாக இருக்கும் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும். விசுவாசத்தினாலே கிறிஸ்துவானவர் உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்க நீங்கள் இடங்கொடுத்து, அன்பிலே வேரூன்றுங்கள். ஏனென்றால் அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். குடும்ப அங்கத்தினர்கள் எப்படி சேர்ந்து குடும்பத்திற்காக பாடுபடுவார்களோ அப்படியே சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இன்னதென்று உணரவேண்டும். அதற்காகத்தான் சபையாகக்கூடி தேவனை ஆராதித்து அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைகிறோம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்று தாவீது அரசன் தமது பாட்டினால் பாடி கர்த்தரை துதிக்கிறான். இவன் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பார்த்தான்.

இன்றைக்கு நாமும் அவரை ரூசித்துப்பார்ப்போமானால் அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். வெறுமனே அவரை ஏற்றுக்கொண்டால் மட்டும்போதாது, அவரோடு இணைந்த ஒரு ஜீவியம் செய்யவேண்டும். கஷ்டங்கள், நஷ்டங்கள், பாடுகள்,



பிரச்சனைகள், இவைகளுக்கு மத்தியில் கர்த்தர் நம்மை வழிநடுத்தும் விதத்தை அவரோடு சேர்ந்து இருக்கும்போது நாம் அவைகளை அநுபவிக்கமுடியும். இதுவே ஆண்டவருடைய அன்பின் அகலம் நீளம் ஆழம் உயரம் என்பவைகளை அறிவதற்கான வழியாகும்.

மேலும், எபிரெய ஆசிரியர் ''இப்படியிருக்க பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்'' (எபி.3:1–4).

தேவனுடைய வீட்டிலே மோசேயைப் பார்க்கிலும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். எப்படியென்றால் நமக்காக ஜீவனையே கொடுத்தினால் மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். மேலும் தம்மை ஏற்படுத்தின பிதாவானவருக்கு உண்மையுள்ளவராகவுமிருக்கிறார். அநேக குடும்பங்கள் உடைவதற்கு என்ன காரணம்? அங்கு உண்மையில்லாமை. சத்தியத்தை அறிந்தவர்கள்கூட சிலவேளைகளில் உண்மையில்லாதவர்களாக போய்விடுகிறார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோ பிதாவின் திருச்சித்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றுகிறவராக இப் பூமிக்குக் கடந்துவந்தார்.

கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்'' (எபி.3:6). நீங்கள் தேவனுடைய வீடாயிருப்பீர்கள் என்றால், நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை

பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருங்கள். நம்பிக்கை தைரியத்தை கொண்டுவரும். தைரியம் உங்களில் இருக்கும்போது பிசாசு கொண்டுவருகிறதான சகல சோதனைகளையும் நீங்கள் மேற்கொள்ளமுடியும். மேன்மைபாராட்டுதல் என்பது தன்னைக் குறித்தல்ல, கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டவேண்டும். சிலர் தங்களைக் குறித்தே மேன்மை பாராட்டுவார்கள்.

நான் அதைச் செய்தேன், நான் இதைச்செய்தேன் என்று சொல்லி நான், நான் என்று அடுக்கிக்கொண்டே போவார்கள். கர்த்தர் இதைச் செய்தார் என்று சொல்லவேண்டும். அப்பொழுது கர்த்தருக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்துகிறவர்களாக இருப்போம். இப்படியே கர்த்தரைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டிக்கொண்டு அவைகளில் உறுதியாயிருக்க பிரயாசப்படுவீர்களானால் நீங்களே தேவனுடைய வீடாயிருப்பீர்கள்.

தேவனுடைய வீடு என்று சொல்லும்போது அது சபையைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. "அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" The house of God, which is the church of the living God, the pillar and ground of the truth என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.3:15). தேவனுடைய வீடாகிய சபை சத்தியத்தை பரைசாற்றுகிறதாக இருக்கவேண்டும். அநேகர் அதன் மூலம் சத்தியத்தை அறிந்து அந்த வீட்டில் அங்கமாக வேண்டும்.

சமூதாயத்தின் மத்தியில் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறதாகவும், தேவனுடைய அன்பையும், ஆவிக்குரிய சகல காரியங்களையும் எடுத்துசொல்லுகிறதாகவும், எல்லோரையும் நேசிக்கிறதாகவும் இருந்துகொண்டு செயல்படவேண்டும். அப்படிப்பட்ட சபை தேவனுடைய வீடாக ஜீவனுள்ள (அதாவது செயல்படுகிற) தேவனுடைய சபையாக சத்தியத்துக்குத்தூணும் ஆதாரமுமாக இருக்கிறது. நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் நீங்கள் முதலாவது தேவனுடைய வீட்டில் ஒரு அங்கமாக முயற்சிசெய்யுங்கள்.

நான் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினன்



என்பீர்களாகில்; "நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது, அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று எபே.2:19–22ல் நாம் வாசிக்கிறபடி, நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட விலையேறப்பெற்ற மூலைக்கல்லாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரமாகிய உபதேசத்தின் மேலும் கட்டப்பட்டவர் களாயிருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் தயவு செய்து மேற்கண்ட வசனத்தோடு உங்களை இணைத்துக் கொள்ள முயற்சி எடுங்கள்.

நாங்கள் உங்களுக்கு இவ்விஷயத்தில் உதவி செய்ய காத்திருக்கிறோம். இச்செய்தியை வாசிக்கிற அன்பின் சகோதரனே, சகோதரியே, பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய தேவனைப் பற்றி தெரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். அவர் ஏற்படுத்தின மெய்யான குடும்பமாகிய அவருடைய சபையிலே **அதாவது கிறிஸ்துவின் சபையிலே** நீ அங்கமாக இருப்பாயானல் மேலான ஆசீர்வாதங்களை கிறிஸ்து இயேசுவில் பெற்று உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவாய். உன் சமாதானம் வற்றாத ஜீவ நீர் ஊற்றைப்போல இருக்கும். இன்றே தேவனுடைய குடும்பத்தில் அங்கமாக பிரயாசமெடுங்கள். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

## கேள்வி

**1. தேவனுடைய குடும்பத்துக்கும் உலக குடும்பத்துக்கும் வேறுபாடு உண்டா?**

நிச்சயம் உண்டு. உலகம், உலகத்தை சிநேகிக்கும். ஆனால்

“தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்” (1யோவா.5:4). தேவனுடைய குடும்பத்தில் இருக்கிறவன் அவருடைய சபையில் இருக்கிறான். அவன் உலகத்தையும், அதில் பிசாசு கொண்டுவருகிறதான ஆசைகளையும், ஜெயித்தவனாக இருக்கிறான். ஆனால் உலக குடும்பத்தில் இருக்கிறவன் உலகப்பிரகாரமான இச்சைகள் நிறைந்த குடும்பத்தில் இருக்கிறான். அவன் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குடும்பத்தை அறியான் ஏனென்றால் இவ்வுலகத்தின் அதிபதி அவர்களை குருடாக்கிவைத்திருக்கிறான். ஆகையால் அவர்கள் தேவனுடைய குடும்பத்தை அறியார்கள்.

**2. ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் பிறக்க அவன் என்ன செய்யவேண்டும்?**

அவன் மறுபடியும் பிறக்க வேண்டும். அப்படியென்றால் மறுபிறவி எடுக்க வேண்டும் என்பதல்ல. அது அவசியமுமில்லை. அப்படி யாரும் மறுபிறவி எடுக்கவும் முடியாது. பின்பு என்ன செய்யவேண்டும்? தேவன் ஏற்படுத்திய குடும்பமாகிய சபையை அடையாளம் கண்டு அவருடைய உபதேசத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை அறிக்கையிட்டு, கீழ்ப்படிந்து, தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கிறான். இதையே ஆண்டவர் இயேசு “ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்று நிக்கொதேமுவிடம் சொன்னார் (யோவா.3:5).

## 12. கர்த்தருக்கு காத்திரு
## Wait on the Lord

**க**ர்த்தருக்குக் காத்திரு என்ற தலைப்பின்கீழ் இன்று தியானிக்க உள்ளோம். நாம் அநுதின ஜீவியத்தில் தேவையில்லாத எத்தனையோ காரியங்களுக்காக காத்திருக்கிறோம். அதனுடைய முடிவு ஒன்றுமில்லாமல்போகிறது அல்லது ஏமாற்றத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. பரிசுத்த வேதம் போதிக்கிறது; “கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து,



கர்த்தருக்கே காத்திரு” (சங்.27:14). கர்த்தருக்கு காத்திருக்கும்படி அவர் யார் என்று நீங்கள் கேட்கிறீர்களா? அவர் உங்களையும் என்னையும் சிருஷ்டித்த தேவன், அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவருடைய வசனத்துக்கும், அவருடைய ஆலோசனைக்கும் நீங்கள் காத்திருக்கும்போது அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். சிமியோன் என்னும்பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமிலே வாசம்பண்ணினான். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாய் இருந்து இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தான். அவன்மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். அவர் கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று அறிவித்திருந்தார். அவன் ஒரு முறை எருசலேம் தேவாலயத்திற்கு வந்தபோது இயேசுவை கண்டு அவரை அவர்களுடைய கைகளினின்று வாங்கி தம் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்தரித்து ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.

அன்பானவர்களே, இந்த சிமியோனின் காத்திருப்பு வீண்போகவில்லை. தன் கண்களால் கர்த்தரை கண்டு கையில் ஏந்து அவரை ஸ்தோத்தரித்தான். இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருந்தான். இன்றைக்கும் சிலர் நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிறார்கள். அவையெல்லாம் கிறிஸ்துவைப் பற்றியது. நிஜம் வந்தபின்பு நிழழுக்கு வேலையில்லை.

இதைக் குறித்து பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது; “நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே

உதவும்'' (கலா.5:4–6). இன்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடைய இரக்கத்தினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். அநேகர் தங்கள் பாவங்களை தாங்களே தங்களுடைய நற்கிரியைகளினாலும் பழைய பிரமாணகட்டளைகளினாலும் கழுவும்படியாக முயற்சிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இயேசுவைவிட்டு பிரிந்து தேவன் வைத்திருக்கிற மாபெரும் கிருபையினின்று விழுந்துபோகிறார்கள்.

ஆனால் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டின் பிரமாணங்களையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையையும் ஏற்றுக்கொண்டு, நீதி கிடைக்குமென்று, அவருடைய ஆவியினாலே, விசுவாசதைக் கொண்டு நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். நீங்கள் இப்படிக் காத்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள். இயேசு கிறிஸ்துவினிடத்தில் பழைய பிரமாணத்தினுடைய விருத்தசேதனமும், விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே நம்மை இரட்சிக்கும்.

''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்'' என்று ஏசா.40:31ல் வாசிக்கிறோம். ஆம், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலனடைவார்கள். ஒருவேளை கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களைப் பார்த்து இவ்வுலகம் ஏளனம் செய்யும். அவ்வளவுதான் விழுந்தான் இனி எழுந்திருக்கமாட்டான், அவனுடைய ஆட்டம் பாட்டம் எல்லாம் முடிந்தது என்று சொல்லி பலரும் பலவிதமாக பேசுவார்கள்.

பிரியமானவர்களே, கழுகை கவனித்துப் பாருங்கள். தன் சிறகுகள் எல்லாம் உதிர்ந்தவுடன் பறக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படும் அதேவேளையில் அதற்கு மீண்டும் சிறகுகள்முளைக்க ஆரம்பிக்கும். அப்பொழுது கழுகு புதுப்பெலனடைந்து செட்டைகளை அடித்துக்கொண்டு பறக்க ஆரம்பிக்கும். அதைப்போல உனக்கும் ஒரு நாள் உண்டு அந்நாளிலே நீ கர்த்தரால் பெலனடைவாய் அதுவரை கர்த்தருக்குக் காத்திரு. முப்பத்தெட்டு வருஷமாய் வியாதி



கொண்டிருந்த ஒரு மனுஷன் பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளத்தண்டையிலே படுத்திருந்தான். எதற்காகவென்றால் சுகமடையும்படியாக, சில சமயங்களில் தேவதூதன் அக்குளத்திலே இறங்கி, தண்ணீரைக் கலக்குவானாம். தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்பட்ட வியாதிஸ்தனா யிருந்தாலும் சொஸ்தமாவான்.

இதை நம்பி, தான் எப்படியாவது இதில் இறங்கி சுகமாக வேண்டும் என்ற எண்ணத்தோடு காத்திருந்தான். இவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. அங்கே வந்த இயேசு ஆண்டவர் வெகுகாலமாய் அவன் வியாதிஸ்தனென்று அறிந்து அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு அவன் ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய்விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறேருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.

பாவம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறான் என்று பாருங்கள்! இயேசு அவனை நோக்கி எழுந்திரு உன்படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். பிரியமான நண்பா நீ வியாதியோடு காத்திருக்கிறாயா உன் நம்பிக்கை வீண்போகாது. கர்த்தர் உன்னை சுகமாக்குவார். நம்பிக்கையோடே காத்திரு.

''உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்: கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்'' (ஏசா.30:18). எவ்வளவு நாள் நான் காத்திருப்பது என்று கடுகளவும் நினைத்துவிடாதே! கர்த்தர் இரக்கமுள்ளதேவன் அவர் உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்தருள்வார். தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்முடைய பாவங்களுக்காக அவரையே நமக்காக ஒப்புக்கொடுத்ததேவன் மற்ற எல்லாவற்றையும் கொடுக்க அறிந்திருக்கிறார். கலங்காதே! கர்த்தருக்குக் காத்திரு உன் வேண்டுதலை கேட்பார்.

காத்திருந்து காத்திருந்து கண்கள் பூத்துப்போனது என்கிறீர்களா? தாவீது ராஜாவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்; ''எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜமாக்காரரைப்பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது'' My soul waiteth for the Lord more than they that watch for the morning என்கிறார் (சங்.130:6). ஜாமக்காரர்கள் இரவெல்லாம் விழித்திருந்து காத்திருப்பார்கள். மந்தை மேய்க்கிறவர்களும், வயல்வெளியைக் காக்கிறவர்களும், ஊர்காலவர்களும், எப்பொழுது விடியும் என்று காத்திருப்பார்கள். அதைப்பார்க்கிலும் தாவீது கர்த்தருக்கு காத்திருந்தான். அப்படி என்றால் அவனுடைய ஆவல் எவ்வளவு அதிகம்! இன்றைக்கு கர்த்தருடைய வருகைக்கு நாம் காத்திருக்கிறோம். அவரோடு நித்தியமான பரலோக வாசஸ்தலத்தில் பிவேசிக்கும்படியாக காத்திருக்கிறோம்.

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! பிரியமானவர்களே, தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். நீங்கள் அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆயத்தம் என்று சொன்னால் வெளியூர் செல்ல ரயில்வே ஸ்டேஷனுக்கு ரயில் வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னே எல்லா பொருட்களையும் எடுத்துக்கொண்டு செல்கிறோம். இதுவே சரியான ஆயத்தம். ரயில் வர இன்னும் 10 நிமிடமே இருக்கும்வேளையில் நாம் ஆயத்தமில்லாமலும், நான் என்னுடைய பணத்தை எங்கே வைத்தேன், ரயில் டிக்கெட்டை எங்கே வைத்தேன் என்று தேடிக்கொண்டிருப்பது ஆயத்தமில்லாததைக் குறிக்கிறது.

கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தம் என்றால் நீங்கள் முதலாவது அவரை ஏற்று, அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பு பெற்று, அதாவது ஞானஸ்நானம் பெற்று, சபையில் ஐக்கியமாக இருந்து,



கர்த்தருடைய கட்டளைகளை பூரணமாகக் கைக்கொண்டு சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவனாக வாழவேண்டும். இதுவே கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக காத்திருப்பது ஆகும். இந்த ஆயத்தம் இல்லை என்றால் இன்றே ஆயத்தப்படுங்கள்.

**கேள்வி**

**1. காத்திருப்பது இருதயத்தை இளைக்கப்பண்ணுமா?**

ஆம், இருதயத்தை இளைக்கப்பண்ணும். அதேவேளையில் சாலொமோன் நீதிமொழிகளில் சொல்லியதுபோல ''விரும்பினது வரும்போதோ, ஜீவவிருட்சம்போல் இருக்கும்'' (நீதி.13:12). ஜீவ விருட்சம் என்பது சாதாரண ஒன்றல்ல. நம்முடைய முற்பிதாக்களாகிய ஆதாமும் ஏவாளும் இழந்த ஆசீர்வாதம் இது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால், அதை நமக்கு கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்து உள்ளார். நாம் கர்த்தருக்கு காத்திருப்போமானால் கேட்டது கிடைக்கும் போது அது நமக்கு ஜீவவிருட்சம்போல் இருக்கும்.

**2. கர்த்தருக்குக் காத்திருக்காதவர்களுடைய நிலைமை என்னவாகும்?**

பத்துக் கன்னிகைகளைப்பற்றிய உவமையிலே கர்த்தர் அவர்களைப்பார்த்து, ''உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' மத்தேயு25:12. கர்த்தருக்குக் காத்திராமல் தங்களைப் பற்றியும் தங்களுடைய காரியங்களைப் பற்றியுமே யோசித்துக் கொண்டிருப்பவர்களுடைய நிலைமையும் இப்படித்தானிருக்கும். வேதாகமத்தில் கர்த்தருக்குக் காத்திருந்தவர்களைப் பற்றி படித்தோம். அவர்கள் வெட்கப்பட்டுப் போகாமல் கர்த்தர் அவர்களை உயர்த்தினார். காத்திராதவர்களையோ உங்களை அறியேன் என்கிறார். அவர் உங்களை அறியேன் என்றால் உங்களுடைய நிலைமை என்னவாகும்? தேவனுடைய கோபாக்கினையில் பங்கடைவார்கள். சிந்தித்து செயல்படுங்கள்.

## 13. துதித்தலும், சபித்தலும்

# Blessing, and Cursing

**தே**வன் மனிதனை மிக நேர்த்தியாக சிருஷ்டித்து ஒரே சரீரமாக உண்டாக்கியிருக்கிறார். இந்த சரீரம் ஒன்றையொன்று சார்ந்து இருக்கிறது. அதாவது கை, காலுக்கு விரோதமாகவோ அல்லது கால், கைக்கு விரோதமாகவோ செயல்படாது. இதிலே நாவானது மிக முக்கியனான பங்கு வகிக்கிறது. அதாவது போஜனபதார்த்தங்களை ருசிபார்க்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ‘‘நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது’’ என்று யாக்.3:8–ல் பரிசுத்த வேதாகமம் அதாவது திருமறை நமக்குப் போதிக்கிறது.

மனுஷன் எதைவேண்டுமானாலும் அடக்கிவிடலாம். ஆனால் நாவை அடக்க முடியாது. எடுத்துக்காட்டாக பாருங்கள்: குதிரையை கடிவாளம் போட்டு அடக்குகிறோம். அதைப்போல பெரிய கப்பலை சிறிய சுக்கானாலே திருப்பிவிடுகிறோம். ஆனால் நாவை அடக்கமுடியாமல் தடுமாறுகிறோம். அது தன்னை உடையவர்களுக்கே அடங்காத ஒன்றாகவும், பொல்லாங்குள்ளதாகவும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததாகவுமிருக்கிறது. பாம்பிற்கு பல்லிலே விஷம் என்பார்கள். மனுஷனுக்கோ நாவிலே விஷம். அப்படியென்றால் அவனுடைய சொல்லிலே விஷம் இருக்கிறது. அந்த சொல் ஒருவனைப் பாதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அதனால்தான் சிலர் சொல்வார்கள் கருநாக்குகாரன் சொன்னால் அது பழித்துவிடும் என்று. கருநாக்குக்காரன் மட்டுமல்ல, யார் சொன்னாலும் சொல் ஒன்றுதான். அது சாபத்திற்குரிய சொல்லாக இருந்தால், விஷம் நிறைந்த நாவாலே சொல்லும்போது அது மற்றவர்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது என்று யாக்.3:10–ல் வாசிக்கிறாம். எப்படியென்றால் அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷனை அதினாலேயே



சபிக்கிறோம். இப்படி செய்வது சரியல்ல. ஒரு முறை இயேசு எருசலேமுக்குப்போக நோக்கமாயிருந்தார். அவ்வூராரோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது; ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப் பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். மனிதன் ஒரு மனிதனை சபிப்பான்.

இயேசுவோ, அவர்களை இரட்சிக்க வந்தார். தேவனால் அனுப்பப்பட்ட மீகாவேல் தூதன் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்து பிசாசுடனே தர்க்கித்துப்பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்றான். இன்றைக்கு வாயின் வார்த்தைகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். கைகளிலிருந்து தவறிவிழும் குண்டுமணிகளை நாம் பொறுக்கி எடுத்துவிடலாம். ஆனால் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளை நாம் சேர்த்துவிடமுடியாது. ஆகையால் பேசும்போது மிகுந்த கவனத்தோடு பேசவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும், யாக்கோபு ஒரு சிலகேள்விகளை எழுப்புகிறார். அவை என்னவென்றால் ‘‘ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது என்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்போமானால் அவருக்கேற்ற கனிகளைக் கொடுப்போம். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும்

சீஷராயிருப்பீர்கள் என்று நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு குறிப்பிடுகிறார். முற்பிதாவாகிய யாக்கோபு தன்னுடைய பிள்ளைகளில் பன்னிரெண்டுபேரிலே ஒருவனாகிய யோசேப்பைப் பற்றி சொல்லும்போது 'யோசேப்பு கனிதரும்செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும்செடி; அதின் செடிகள் சுவரின்மேல் படரும்' என்றான். அதைப்போலவே யோசேப்பு அநேகருக்கு ஆசீர்வாதமான பாத்திரமாக இருந்தான். அவன் கனிகொடுக்கிற வனாகவும் நீர் ஊற்றண்டையிலே தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருந்தான். கர்த்தர் அவனோடிருந்தார்.

இன்றைக்கு ஜனங்கள் எதை எதையோ பத்திரமாக காத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் காக்கவேண்டியதை காக்காமல் போய்விடுகிறார்கள். தாவீது அரசன் கூறும்போது: "கர்த்தாவே, என் வாய்க்குக் காவல்வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்கிறான் (சங்.141:3). ஆம், நாம் நம்முடைய நாவை அடக்க தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டும். அவர் மூலமாகவே அதற்கு காவல்வைக்கமுடியும், அவராலேயல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யஇயலாது. ஐம்புலன்களையும் அடக்கினால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்து சரீரமுயற்சிக்கு அநேகர் தள்ளப்படுகின்றனர். வேதம் சொல்கிறது: சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. For bodily exercise profiteth little என்று வாசிக்கிறோம். அதில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லை.

வேதாகமம் போதிக்கிறபடி தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து வாய்க்கு காவல்வைக்கும்போது வாயின்பலனால் திருப்தியாவோம். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். Death and life are in the power of the tongue: and they that love it shall eat the fruit thereof (நீதி.18:21). நீங்கள் வாழ்வதும் வீழ்வதும் உங்களுடைய நாவிலே தான் இருக்கிறது. வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத்



தீட்டுப்படுத்தும். தொட்டால் தீட்டு, உட்கார்ந்தால் தீட்டு, அங்கே சாப்பிட்டால் தீட்டு, என்று சரீர சுத்திகரிப்பு செய்கிறார்கள். இவைகள் எல்லாம் சுட்டெரிக்கப்படவேண்டிய ஒன்று. இருக்கும்வரை இரத்ததானம் இறந்தபின் கண்தானம் என்ற உயர்வான உயிர்கொடுக்கும் மருந்தாக மனிதன் வாழவேண்டும்.

ஒரு மனிதனுக்குச் சத்துரு அவன் வீட்டாரே என வேதம் போதிக்கிறது. மனிதனுக்கு சத்துருக்கள் வேறு எங்குமில்லை அவனுடைய குடும்பத்திலே இருக்கிறார்கள். இப்படியிருக்கிறபடியால் மனிதன் தன் நாவை அடக்காமல் கோபத்திலே தன் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிவிடுகிறான். ஆனால் அது எந்த அளவுக்கு மற்றவர்களைப் பாதிக்கும் என்று அறியாமல் பேசிவிடுகிறான். இன்றைக்கு ஒரு சிலருடைய திடீர் மரணம் எதனாலே என்று தியானித்துப்பார்க்கும்போது அவர்கள் டென்சனாகி கோபத்தோடு செயல்படும்போது Heart Attac வந்துவிடுகிறது. அதற்கு ஒரு மாற்று மருந்தை கர்த்தர் கொடுக்கிறார்.

மனிதனை உண்டாக்கிய பரமவைத்தியர் இலவசமாக கொடுக்கும் மருந்தை வாங்க மறுக்கும் ஒரு கூட்டம், மறுபுறம் மருத்துவ மனைகள் நிறைந்து வழியும் ஒரு கூட்டம், கர்த்தர் கொடுக்கும் மருந்து உங்களுக்கு ஒருவேளை கசப்பாக இருக்கலாம், பெற்று உட்கொண்டு பாருங்கள் அதனுடைய மகிமை வெளிப்படும். அம்மருந்து என்னவென்றால் "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" (ரோம.12:14). அப்போஸ்தலனாகிய பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு இதை எழுதுகிறார். என்னைத் துன்பப்படுத்துகிறவனை நான் ஆசீர்வதிப்பதா! ஒன்று அவன் இருக்கனும், இல்லையென்றால் நான் இருக்கனும், இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுகிறேன் என்பர். பிரியமானவர்களே, இக்கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாது. நீங்கள் வசனத்தை கைக்கொள்ளும்போதே மெய்யான கிறிஸ்தவர்களாக மாறுகிறீர்கள். இவ் வசனத்தைக் கைக்கொண்டு உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதித்துப்பாருங்கள்.

அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். டாக்டர் நோயாளியிடம் சொல்லிய மருந்தை சாப்பிடாமல் தன் சுயயோசனைப்படி நோயாளி செயல்பட்டால் எப்படி நோய் சுகமாகும்? அதைப்போல பரம வைத்தியராகிய கர்த்தர் சொல்லுகிறதான வார்த்தைகளைக் கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்து, அதன்படி நடக்கும்போது, ஆவிக்குரிய சுகத்தைப் பெற்று ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனாக அநேகரை ஆசீர்வதிக்கிற கிறிஸ்தவனாக மாறுவீர்கள்.

இயேசுவை நோக்கிப் பாருங்கள்: அவரைப் பரியாசம்பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி, அநேக தூஷணவார்த்தை களையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள் இதையெல்லாம் எவ்வளவு பொறுமையோடு சகித்திருப்பார் என்று பாருங்கள். அவர் நினைத்திருந்தால் அத்திமரத்தைச் சபித்ததுபோல அவர்களை ஒரே வார்த்தையினால் சபித்திருக்கலாம்.

ஆனால் அவர் அப்படிச் செய்யாமல், 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே' என்றார். இன்றைக்கு உங்களுடைய வாயிலிருந்து தூஷணமான வார்த்தை பிறக்கவேண்டாம். நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து ஒவ்வொருவரையும் ஆசீர்வதியுங்கள்.

### கேள்வி

**1. மனதில் ஒருவரை சபித்தால் அது பாவமாகுமா?**

கண்டிப்பாக அது பாவந்தான். "இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக்.6:45). ஆக ஒருவன் ஒருவனை சபிக்கும் முன்பே முதலாவது இருதயத்திலே திட்டமிடுகிறான், இருதயத்தில் இருக்கிறதையே வாய் வெளிப்படுத்துகிறது. இது குறித்து ஆண்டவர் இயேசு சொல்வதை பார்ப்போம்: "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன்



சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்கிறார் (மத்.5:22). மேலும் இச்சையைப் பற்றிய காரியத்தில் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று என்கிறார். ஆனபடியால் ஒரு மனிதனை சபிக்க நினைத்தாலே, அது சபாத்திற்கு சமமாகிவிடுகிறது.

**2. யார் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் போதிக்கிறது ?**

ஆதியிலே ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்த பிசாசை தேவன் சபித்தார். "நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத்தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி.3:14,15). கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக பிரசங்கிக்கிறவன் சபிக்கப்பட்டவன். "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறோரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா.1:8).

## 14. சிலுவையைப் பற்றிய உபதேசம்
## The preaching of the Cross

இன்றைய நாளிலே சிலுவையைப்பற்றிய உபதேசத்தைக் குறித்து தியானிப்போம். சிலுவை என்றாலே பாடுகள். இந்த சிலுவை முதல் நூற்றாண்டு காலங்களில் சாபச் சின்னமாக இருந்தது. குற்றவாளிகளை சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள். ஒரு குற்றமும் செய்யாத நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள். இந்த சிலுவையின் பாடுகள் யாருக்காக? நமக்காக. நம்முடைய பாவங்களைச்

சிலுவையிலே சுமந்துதீர்க்க தம்மைத்தாமே இப்படிப்பட்டபாடுகளுக்கு ஒப்புக்கொடுத்தார். “சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது” (1கொரி.1:18). இந்த உபதேசத்தைக் குறித்து மற்றவர்களோடு பேசும்போது அவர்களுக்கு இது பைத்தியமாக தோன்றும். ஏனென்றால் இரட்சிக்கப்படத்தக்கதாக தேவனுடைய வசனத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்.

இது என்ன புதிய உபதேசம் என்று சொல்லி ஆண்டவரையும், அவருடைய உபதேசத்தையும் புறம்பே தள்ளுகிறார்கள். ஆனால் தேவனால் முன்குறிக்கப்பட்டவர்களும், அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களும், இவைகளுக்கு செவிகொடுத்து அவைகளைக்குறித்து கருத்தாய் ஆராய்ந்து பார்க்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சிலுவையைப்பற்றிய உபதேசம் தேவ பெலனாக இருக்கிறது. இது குறித்து பவுல் இப்படியாக விளக்கமளிக்கிறார். எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி, உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.

யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். இன்றைக்கு அநேகர், அவர் கிறிஸ்துவானால் ஒரு அடையாளத்தை எங்களுக்கு காண்பியுங்கள் என்று வாதிடுகிறார்கள். இயேசு சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார், இதைக் காட்டிலும் வேறே என்ன அடையாளம் தேவை. இதை ஒரு மனிதன் விசுவாசியாமல் வேறே அடையாளத்தை தேடுவானேயானால் அவனுடைய விசுவாசம் வீணாயிருக்கும்.

ஆண்டவர் இயேசு சொல்வதைக் கவனியுங்கள்: “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து,



தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” என்றார் (மத்.16:24). இயேசுவை பின்பற்றுவதற்கு முதலாவது நமக்கு விருப்பம் தேவை. யாரையும் அவர் பலவந்தம் செய்யவில்லை. என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து (என் சிலுவையை அல்ல) தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். அதாவது அவனவன் தன்தன் பாடுகளை சுமந்துகொண்டு அவரைப் பின்பற்றவேண்டும். தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்று அவர் சொல்லுகிறதை அநேகர் தவறாக புரிந்துகொண்டு செயல்படுகின்றனர். உலகத்திலே பாடுகள் இல்லாத வாழ்க்கை யாருக்குமே இல்லை என்று சொல்லலாம்.

ஏனென்றால் ஆண்டி முதல் அரசன் வரை மனிதனாக பிறந்துவிட்டால் பாடுகளை அநுபவித்தே ஆகவேண்டும். இது ஆதியிலே மனிதனுக்கு நியமிக்கப்பட்ட நியதியாகயிருக்கிறது. சிலுவைப்பாடுகள் இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒன்று. அவர் உலகத்தின் பாவத்தைபோக்க சிலுவையிலே மரித்தார். நீங்களும் நானும் அவ்விதமான காரியத்தை நிறைவேற்ற இயலாது. நாம் பரிசுத்தவான்கள் அல்ல. ஆனால் அவரோடுகூட பாடுகளை அநுபவிக்கிறவர்களாக இருக்கிறோம். எப்படியென்றால், ஒருவன் தேவபக்தியாய் நடக்க மனதாயிருப்பானேயானால் அவன் துன்பப்படுகிறவனாய் இருப்பான். ஆண்டவர் நிமித்தம் இத்துன்பங்கள் நமக்கு வரக்கூடிய ஒன்றாகயிருக்கிறது. முதல் நூற்றாண்டில் இருந்த சீஷர்கள் மிகுந்த உபத்திரவத்தை அநுபவித்தார்கள்.

நம்மைத்தேற்றுகிற ஒருவசனம் எதுவென்றால், **"அவரோடேகூடப்பாடுகளைச் சகித்தோமானால் அவரோகூட ஆளுகையும் செய்வோம்."** இந்த நம்பிக்கையினாலே அவரோடேகூட சேர்ந்து இப்பூமியிலே பாடுகளை அநுபவிக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் தனித்து இப்பாடுகளை அநுபவிக்கவில்லை என்பதை இங்கு நினைவுகூருங்கள். நான் உங்களை விட்டு விலகுவதுமில்லை உங்களைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லிய, கர்த்தருடைய கரம் நம்மோடு எப்பொழுதும் இருக்கிறது.

பாருங்கள், “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச்

சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' என்று பிலி.2:6–8 வசனங்களில் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து மூலமாகவே இந்த வானமும் பூமியும் உண்டாக்கப்பட்டன. அவர் தேவனோடிருந்தார் தேவனுடைய ரூபமாயிருந்தார் அப்படி இருந்தபோதிலும் அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். மனுஷனை பாவத்திலிருந்து மீட்பதற்காக அவர் உயர்வான இடத்தைவிட்டு ஒரு அடிமையைப்போல மாறி இவ்வுலகத்திற்கு வந்தார் என்று பார்க்கிறோம்.

உயர்வான இடத்தில் உள்ள ஒரு அதிகாரியை மாறுதல் செய்து, மிகவும் கீழான இடத்தில் உள்ள ஒரு பதவியை, அந்த அதிகாரிக்கு கொடுத்தால் அவர் அதை ஏற்றுக்கொள்வாரா? ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளமாட்டார். இயேசுவோ அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய் முப்பத்திமூன்று வருடங்கள் உயிரோடிருந்து மரணபரியந்தமும் தம்மைத் தாழ்த்தினார். இன்றைக்கு வேஷம் போடுகிற அநேகரைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் நடிப்பதற்காக கொஞ்சநேரம் அந்த வேஷத்திலே இருப்பார்கள். பின்பு அந்த வேஷத்தை களைந்துவிட்டு தங்களுடைய சுயரூபத்திற்கு மாறிவிடுவார்கள். அப்படி இயேசு பிறக்கவும் இல்லை, இப்பூமியில் மூப்பது வருடம் மரணபரியந்தம் இருக்கவுமில்லை.

ஆகையால்தான் வசனம் இப்படியாகச் சொல்லுகிறது **"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்."** இன்றைக்கு மாறாத கிறிஸ்துவை பின்பற்றுகிற கிறிஸ்தவர்களில் அநேகர் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். சிலுவையைப்பற்றி உபதேசம் அதாவது சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; இச்சுவிசேஷத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி,



நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்'' என்று கலா.3:13–ல் வாசிக்கிறோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள். இந்த சாபத்திலிருந்து நம்மை மீட்டுக் கொண்டுள்ளார். நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்த வில்லை. மேலும் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலே நீதிமான்களாக்கப்படுகிறதில்லை.

அப்படியானால் நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் கட்டளையிடப்பட்டது. அந்த சந்ததி கிறிஸ்துவே. அப்படியே உலகத்திலே அநேக மார்க்க பிரிவினைகளை நாம் பார்க்க முடிகிறது இவையெல்லாம் எதைப் போதிக்கிறது. மனிதனைக் குறித்தும், அவனுடைய உபதேசங்களைக் குறித்தும், பாரம்பரியங்களையும், கட்டுக்கதைகளையும், வம்சவரலாறுகளையும் குறித்து போதிக்கிறது. இவையெல்லாம் உலகத்திலே உண்டானவைகள் உலகமும் அதின் இச்சையும் ஒருநாள் அழிந்துபோகும்.

கர்த்தருடைய வசனங்களோ ஒருநாளும் அழிந்துபோவதில்லை. இப்படி அழிந்துபோகக்கூடிய சாபத்திலிருந்து நம்மை மீட்டுள்ளது கர்த்தருடைய வசனம். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; தன் கிரியையினால் எந்த மனுஷனும் இரட்சிக்கப்பட முடியாது. எப்படி ஒரு நோயாளிக்கு வைத்தியர் அவசியமோ அதைப்போல பாவத்தைப்போக்க பரிசுத்த அவசியம்.

சிலுவையைப்பற்றி உபதேசத்தை புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். பாடுகளை அவர் நமக்காக சிலுவையிலே சகித்ததைப்போல நாமும் நமக்குவரக்கூடிய பாடுகளை சகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; இனி நான் அல், கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில்

பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்'' என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (கலா.2:20). நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவர் எனக்காக சிலுவையில் பாடுகளை அனுபவித்தார் என்று நம்புவீர்கள் என்றால். இனி நீங்கள் அல்ல கிறிஸ்துவே உங்களில் இருப்பார்.

நீங்கள் இனி பிழைத்திருப்பது கர்த்தருக்காக இருக்கட்டும். உலகம் உங்களை கைவிடலாம். உங்களில் அன்புகூர்ந்து, உங்களை நேசித்து, உங்களுக்காக சிலுவையிலே பாடுகளை சகித்த அவரையே நினைத்து அவருக்காக வாழுங்கள். பவுலைப்போல, நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன், இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்று சொல்லுங்கள். இச்சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படாத ஒரு கிறிஸ்தவனாக இருந்துகொண்டு வாழ முயற்சிசெய்யுங்கள். தேவன் உங்களைப் பெலப்படுத்துவார்.

**கேள்வி**

**1. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லையா ?**

நீங்கள் கேட்கிற கேள்வியைப் பார்த்தால், நீங்கள் கிறிஸ்துவுக்காக பரிதாபப்படுகிறதுபோல இருக்கிறது. அப்படி ஒன்று இருந்திருந்தால், இயேசு மரிக்கவேண்டியதில்லை என்று நினைக்கிறீர்கள். ''இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது'' என்ற எபி.9:22–ம்வசனத்தின்படி, பரிசுத்த இரத்தம் சிந்தப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. இரத்தம் என்பது உயிராயிருக்கிறது. மனிதர்களுடைய உயிரைக்காக்க பாவமற்ற உயிர் பலியிடப்படவேண்டும். ஆகையால் நம்மை இரட்சிக்க இயேசு தமது ஜீவனையே கொடுத்தார். ஆகவே இரத்தம் சிந்துதலில்லாமல் மனிதனுக்குப் பாவமன்னிப்பு இல்லை என்று நாம் பார்க்கிறோம்.

**2. சிலுவையைப் பற்றிய உபதேசத்தை அறியாதவர்களுடைய நிலை என்ன?**



இச்சுவிசேஷம் இரண்டாயிரம் வருடங்களாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. உலகமெங்கும் கர்த்தருடைய சபை அதன் வேலையைச் செய்துகொண்டுவருகிறது. ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (2தெச.1:7–10).

## 15. கர்த்தர் உன்னிடத்தில் என்னத்தைக் கேட்கிறார்?
## What doth the Lord require of thee?

**க**ர்த்தர் உன்னிடத்தில் என்னத்தைக் கேட்கிறார் என்ற தலைப்பின் கீழ் தியானிக்க உள்ளோம். இன்றைக்கு கர்த்தருக்காக ஏதாவது அரியபெரிய காரியங்களை செய்யவேண்டும். அவர்களுடைய எண்ணம் தவறு என்று சொல்லிவிடமுடியாது. கர்த்தர் மீதுள்ள அன்பினால் அவ்வாறு நினைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் முதலாவது கர்த்தர் அவைகளை ஏற்றுக்கொள்வாரா? என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

மீகா தீர்க்கன் இது குறித்துச் சொல்லும்போது: ''என்னத்தைக் கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க

என்முதற்பேறானவனையும், என் கர்ப்பக்கனியையுயம் கொடுக்க வேண்டுமா? "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6:6–8). கர்த்தர் நியாயத்தையும், இரக்கத்தையும், அவருக்குமுன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையுமே மனிதனிடம் எதிர்பார்க்கிறார். மற்றபடி உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது, காளைகள் ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப்பிரியமில்லை என்று நம்முடைய முற்பிதாக்களுக்கு ஏசாயா தீர்க்கன் மூலமாக சொல்லியிருக்கிறார். மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப்போல எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. ஆகவே, பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.

ஜனங்கள் மத்தியில் நியாயஞ்செய்யும்படி தேவன் எதிர்பார்க்கிறார். தாவீது ராஜாவின் மகன் சாலொமோனை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவன் தேவனால் ஞானவானாக உயர்த்தப்பட்டான். அவனுடைய ஞானத்தைக் கேள்விப்பட்ட ராஜாக்கள் அவனை பார்க்க வந்தார்கள். அவனுடைய ராஜ்யபாரத்தில் அவன் சமூகத்திற்கு வந்த இரண்டு வேசிகள் ஒரு பிள்ளைக்காக வாதிட்டடார்கள். என்னவென்றால்; "அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளைபெற்றேன் நான் பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளைபெற்றாள்; நாங்கள் படுத்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை. இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டுபடுத்ததினால் அது செத்துப்போயிற்று. அப்பொழுது உமது அடியாள் நித்திரைபண்ணுகையில் இவள் ஒரு



ஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து, தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள். என் பிள்ளைக்குப் பால்கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்தபோது, அது செத்துக்கிடந்தது; பொழுது விடிந்தபின் நான் அதை உற்றுப்பார்க்கும்போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள். அதற்கு மற்ற ஸ்திரீ அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள். அப்பொழுது ராஜா: உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள். அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி, ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்.

அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள். ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். அப்பொழுது உயரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம். அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள். மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்துபோடுங்கள் என்றாள். அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய் என்றான். ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்" (1இரா.3:16–28).

இப்படியே நாமும் தனக்கல்லாத பொருளை தன்னுடையது என்று சொல்லுகிறவனை அடையாளம் கண்டு நியாயமான தீர்ப்பு செய்ய வேண்டும். நியாயம் ஒருபோதும் புறம்பே தள்ளப்பட்டுப் போய்விடக்கூடாது. அதற்கு நீங்களும் நானும் உறுதுணையாயிருக்க வேண்டும்.

மேலும் இரக்கத்தை சிநேகிக்க வேண்டியவர் களாயிருக்கின்றோம். இதே சாலொமோனின் நீதிமொழிகள் புத்தகத்திலே "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்கிறார் (நீதி.19:17). அப்படி ஏழைக்கு இரக்கம் செய்யும்போது நாம் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறவர்களாய் இருப்போம். நாம் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார். எப்படியென்றால் பன்மடங்காக கொடுப்பார். இன்றைக்கு ஒரு சிலர் இவ்விதமாக பார்க்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து அதை கர்த்தருக்கே செய்தோம் என்று சொல்லி சந்தோஷப் படுகின்றனர்.

நான் ஒரு முறை பெங்களூர் சென்றிருந்தபோது அநேக வசதிபடைத்த பணக்காரர்கள் தங்களுடைய கார்கள் மூலம் வந்து அவர்கள் வாங்கிக்கொண்டுவந்த சாப்பாட்டு பொட்டலங்களை அவிழ்த்து அதை அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த அநேக ஏழை எளியவர்களுக்கு பரிமாறுகிறதை நான் பார்த்து கர்த்தரை நன்றியோடு துதித்தேன். அவர்கள் அந்த ஏழைகளின் சந்தோஷத்தைக் கண்டு சந்தோஷமடைகின்றனர். ஒவ்வொருவனும் தனக்கானதையல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக என்ற வசனத்தையும் அந்த இடத்தில் நினைவுகூர்ந்தேன்.

எனக்கு அன்பானவர்களே, உங்களுடைய இரக்கசிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? இரக்கம் செய்கிறவனுக்கு இரக்கம் செய்யப்படும் என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிறார். "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும் என்று யாக்கோபு கூறுகிறார். அன்பான சகோதரனே சகோதரியே நீ இரக்கத்தை சிநேகிக்கிறாயா? என்னை ஒருவரும் சிநேகியாதிருக்கும்போது நான் யாரை சிநேகிப்பது



என்கிறாயா? உன்னை ஒருவர் சிநேகிக்கிறார். அவர்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. உன்னை பலர் வெறுக்கலாம் ஆனால் ஒருநாளும் உன்னை வெறுக்காதவர் ஆண்டவர் இயேசு. அவர் உன்னை நேசிக்கிறார். உங்களால் கூடுமான அளவு இரக்கம் செய்ய கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் மீது இரக்கம் காட்டுவார்.

மேலும் மனத்தாழ்மையாய் இருக்கவேண்டும். மனிதனுக்கு முன்பாக மட்டுமல்ல கர்த்தருக்கு முன்பாகவும் மனத்தாழ்மையாக இருக்கவேண்டும். ஆளைக்கண்டால் ஒரு பேச்சு ஆள் இல்லாவிட்டால் ஒரு பேச்சு பேசுவார்கள். தேவன் எங்கும் வியாபித்திருக்கிறார். அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. "இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன் பரிசேயன் நின்று தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்.18:10–14). தாழ்மை என்பது தேவனுக்கு முன்பாகவும் வரவேண்டும். அப்படித்தாழ்த்துகிறவர்களை கர்த்தர் உயர்த்துகிறார்.

என் அன்பு சகோதரா, கர்த்தர் உன்னிடத்தில் பொன்னையோ, பொருளையோ, இரத்தபலிகளையோ கேட்கவில்லை. உன்னிடத்தில் அவர் நியாயத்தையும், இரக்கத்தையும், மனத்தாழ்மையையும் எதிர்பார்க்கிறார். நீ இப்படிச்செய்வாயானால் உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பார். நீ கர்த்தருக்குப் பிரியமானவனாய் இருந்து அநேகருக்கு

ஆசீர்வாதமான பாத்திரமாய் விளங்குவாய். “நீதியையும் தயையும் பின்பற்றுகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான்” என்ற சாலொமோனின் நீதிமொழிகளுக்கு ஏற்ப நீங்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

✪ **கர்த்தருக்காக நாம் ஒரு ஆலயத்தைக் கட்டலாமா ?**

இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே, நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? என்றான் சாலொமோன் ராஜா (1இரா.8:27). சாலொமோன் கட்டின ஆலயத்தைப்போல ஒருவரும் கட்டினதில்லை. அதை அவன் கட்டிமுடிக்க ஏழு வருஷம் ஆனது. அவனுடைய முற்பிதாக்கள் சேர்த்துவைத்த அநேக பொன் பொருட்களைக் கொண்டும், தன்னால் சேர்க்கப்பட்ட விலையேறப்பெற்ற பொருட்களாலும் தேவாலயத்தை கட்டி முடித்தான். அந்த ஆலயத்திலே தேவன் வாசம் பண்ணியிருப்பாரேயானால் அவர் அதை அழிக்க அனுமதித்திருக்கமாட்டார். அந்த ஆலயம் இன்று இல்லை. முதல் நூற்றாண்டிலே அது அழிக்கப்பட்டது.

“நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்” (1கொரி.3:16,17). இவ்வசனத்தின் படி நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். மேலும் “தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினாலே கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை” (அப்.17:24) என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

## 16. கர்த்தருக்குப் பயப்படு
## Fear of the Lord



**ச**ங்கீதக்காரனாகிய தாவீது சொல்வதைப்போல “பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்” Serve the Lord with fear, and rejoice with trembling (சங்.2:11). தேவனை ஆராதிக்கும்போது அவருக்குப் பயப்படும் பயம் நமக்குவேண்டும். ஏனென்றால் அவர் வல்லமையுள்ளவர், ஒருவராலும் காணக்கூடாதவர், அவருடைய நாமம் அதிசயமானது, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. நாம் மண்ணானவர்களாக இருக்கிறோம். நாம் தேவனுக்கு முன்பாக நிற்க எம்மாத்திரம்! ஆகையால் பயத்துடனே அவரை ஆராதிக்கவேண்டும்.

நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை நம் இஷ்டப்படி செய்யலாம். ஆனால் கர்த்தருடைய விஷயங்களில் அவர் கட்டளைபடி செய்யவேண்டியது அவசியமானது. ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியூவும் தன் தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். இச்செயல் நாதாப், அபியூவின் துனிச்சலைக் காட்டுகிறது. அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப்பட்சித்தது: அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்” (லேவி.10:1,2). கர்த்தருடைய கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு இது எச்சரிப்பை நினைப்பூட்டுகிறது.

இன்றைக்கு கர்த்தருக்கு பயப்படும் பயம் அநேகரிடத்தில் இல்லாமற்போய்விட்டது. இதற்கு என்ன காரணம் என்று நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒருவகையில் புதிய புதிய கண்டுபிடிப்புகள். இதனால் மனிதன் எதையும் சாதித்துவிடலாம் என்று நினைத்து கர்த்தரையும் அவருடைய கட்டளைகளையும் அலட்சியம் செய்துவிடுகிறான். அவருக்குப் பயப்படுகிற பயம் அவனுக்கு இல்லாமற்போகிறது.

**"என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்"**
**(சங். 63:4)**

குழந்தைகளைப் பாருங்கள் அவைகள் வளர்ச்சியடையும்வரை தன் தாய் தகப்பனையே சுற்றி சுற்றிவரும். சற்று மடியிலிருந்து இறக்கிவிட்டால் கூட இறங்க மறுக்கும் ஆனால் வளர்ந்து பெரிய ஆளாகி வந்தவுடன் சரிவர பெற்றோர்களை மதியாமற்போகிறது. அதைப்போல விஞ்ஞான வளர்ச்சியினால் கொஞ்சம் கொஞ்சமாக தேவனுக்குப் பயப்படுகிற பயம் மனிதனுக்கு இல்லாமற்போய்க் கொண்டிருக்கிறது. தேவனாகிய கர்த்தர் மோசே மூலமாக பத்துக் கட்டளைகளை கொடுக்கும்போது அதில் 'உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக' என்ற கட்டளையையும் இஸ்ரவேலருக்கு எழுதிக் கொடுத்தார், தகப்பனையும் தாயையும் கனம் பண்ணச்சொன்ன தேவன் தமக்குப் பயப்படும் பயத்தை எதிர்பாராதிருப்பாரா? எனவே கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என வாசிக்கிறோம்.

அநேகர் கர்த்தருக்கு பயப்படுகின்றனர் ஆனால் கட்டளைகளைக் கைக்கொள்ள தவறிவிடுகின்றனர். யூதேயாவிலே ஒரு தீர்க்கன் இருந்தான். அவனை கர்த்தர் பெத்தேல் மட்டும் அனுப்பினார். அவனை அனுப்பும்போது நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று சொல்லி அனுப்பினார். அந்தப்படியே அவன் பெத்தேல் சென்று கர்த்தருடைய வார்த்தைப்படியே "இந்தப் பலிபீடம் வெடித்து அதின் மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான்.

பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராக தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது, அவனைப் பிடியுங்கள் என்று தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று. தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து, சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று. அப்பொழுது ராஜா, தேவனுடைய மனுஷனுக்குப்



பிரதியுத்தரமாக: நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றான்; அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்தான், ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்பட்டது" **(1இரா.13:3–6).** இந்த அற்புதத்தை பெற்ற ராஜா அவனை வருந்தி அழைத்தான் தீர்க்கதரிசியோ போகவில்லை. தனக்குக் கர்த்தர் இட்ட கட்டளையை ராஜாவுக்கு அறிவித்தான். இப்படி சரியாக இருந்த தீர்க்கதரிசி ஒரு பொய்த் தீர்க்கதரிசியின் சொல்கேட்டு கர்த்தருடைய வார்த்தையை மீறினான். என்னவென்றால் அவன் அப்படியே செல்லும்போது பெத்தேலில் இருக்கிற ஒரு கிழவனான தீர்க்கதரிசி அவனைப் பின்தொடர்ந்துபோய் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் செய்தான்.

பின்பு, கிழவனான தீர்க்கதரிசி கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் செய்தபடியால் உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அந்தப்படியே அந்த தீர்க்கதரிசி போகும்போது ஒரு சிங்கம் அவனைக் கொன்றுபோட்டது. கர்த்தர் ஒரு காரியத்தை சொல்லியிருக்க பின்பு அதை மாற்றுகிறவரல்ல என்பதை நாம் நினைவுகூரவேண்டும்.

இன்றைக்கு அநேகர் தேவனுடைய வார்த்தைகளை புரட்டுவதில் சற்றும் பயப்படுவதில்லை. நாம் கர்த்தருக்குப் பயப்படும்போது தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார் என்று தாவீது சொல்கிறார். நீங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவராக இருந்தால் அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதீர்கள் ஒன்றையும் குறைக்காதீர்கள். "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றம் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச்செய்துவருகிறார்" **(பிர.3:14).**

கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு மனுஷனை புதிய ஏற்பாட்டில் நாம் படிக்கிறோம். இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். பட்டாளத்தில் பயபக்தியாய் இருப்பது என்பது கடினமான காரியம் ஆனால் இந்த மனுஷன் எப்படியிருந்திருக்கிறான் பாருங்கள். நூற்றுக்கு அதிபதி என்றால் அவனுக்கு வேலை அதிகமாயிருந்திருக்கும். அநேகர் ஜெபிக்கநேரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இவனைப்பாருங்கள் எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ எந்த நிலைமையில் இருந்தாலும் தேவசமுகத்தில் பயத்தோடு இருந்து கொண்டு, இந்த கொர்நேலியுவைப்போல நீ மட்டுமல்ல உன் குடும்பத்தோடு பயபக்தியுள்ளவர்களாக மாறமுடியும்.

"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான்" The fear of man bringeth a snare (நீதி.29:25). மனிதன் ஏன் மனிதனுக்கு பயப்படவேண்டும்? சில வேளைகளில் மனிதர் இதை சிந்திக்கிறதில்லை. சிலர் பயப்படுவார்கள் எதற்கென்றால் அவர்கள் ஏதாவது தகாத முறையில் நடந்திருப்பார்கள் அதைப்பார்த்தவர்கள் அதை நினைவுபடுத்திக்கொண்டு அவர்களை அச்சுருத்திக் கொண்டு வருவார்கள். ஏன் அந்தவிதமாக நடந்துகொள்ள வேண்டும்?

தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக குற்றமற்றவர்களாய் நடந்துகொள்ளும்போது யாருக்கும் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நம்முடைய கர்த்தர் சொல்லும்போது ஆத்துமாக்களைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தைமாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்கிறார். நம்மை உண்டாக்கினவருக்கே முழு அதிகாரம் உண்டு அவர்



ஒருவருக்கே நாம் பயப்படவேண்டும். வீணான பயம் நம்மை நிம்மதியாக இருக்கவொட்டாது. இப்படிப்பட்ட பயத்தை புறம்பே தள்ளிவிட்டு கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். 'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது: அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது' இது உண்மையான வார்த்தை. தீமை ஒருக்காலும் உங்களை அணுகாது. இன்றைய நாளில் ஒரு தீர்மாணம்செய்யுங்கள். கர்த்தருக்கு பயப்படும்பயம் உங்களில் எழும்பட்டும் இனிமேல் ஒருக்காலும் யாருக்கும் பயப்படேன், என் தேவன் என்னோடிருக்கிறார் மனுஷன் எனக்கு என்ன செய்வான்? கர்த்தர் என்னோடு இருக்கிறார் என்ற தைரியத்தோடும், முழு நிச்சயத்தோடும் இருங்கள்.

"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்.147:11). ஆண்டவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவர் கிருபை பொருந்தினவராயிருக்கிறார். ஈசாக்கு கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்னபடியே எகிப்துக்கு போகாமல் கேராரிலே குடியிருந்து விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரியவனாகி, வரவரவிருத்தியடைந்து, மகா பெரியவனானான். அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டு மந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன்பேரில் பொறாமைகொண்டார்கள். அநேகர் ஈசாக்கைக் கண்டு பொறாமை கொள்ளும் அளவிற்கு அவனை ஆசீர்வதித்தார். அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான் அதனால் ஆசீர்வதிக்கப்பட்டான். இன்றைக்கு நீங்கள் உங்களுடைய வசதிவாய்ப்புகளைப் பார்க்காமல் கர்த்தர் சொல்லுகிறபடி செய்வீர்கள் என்றால் ஈசாக்கைப் போல நீங்களும் எந்நாளும் ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.

**கேள்வி**

✪ **பயத்தைப் போக்க வழி உண்டா ?**

நிச்சயம் உண்டு. அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தை

புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவனல்ல என்று 1யோவா.4:18–ல் வாசிக்கிறோம். அன்பு நம்மில் நிலைத்திருக்கும்போது நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. எப்படி இருளுள்ள ஒரு ஸ்தலத்தில் செல்லுகிறவன் கையில் விளக்கு வைத்திருந்தால் பயமில்லாமல் செல்வானோ அதைப்போல, அன்பு என்ற ஒளியாகிய ஆண்டவர் நம்மோடு இருப்பாரானால், நமக்குள் அன்பு இருக்கும். தேவன் நமக்குள் வாசம் செய்கிறார் என்று அர்த்தம். அன்பு இருக்குமிடம் தேவன் இருக்குமிடம். ஆகையால் தான் தேவன் அன்பாகயிருக்கிறார் என்று யோவான் எழுதுகிறார்.

மேலும் வேதவசனம் இவ்விதமாக சொல்லுகிறது ''அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்'' (1கொரி.13:8–10). பயத்தைப்போக்க ஒரே வழி. அன்பின் சொரூபியான இரட்சகர் இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டு அவருக்குப்பயப்படும் பயத்தில் வளருங்கள்.

## 17. கர்த்தர் கொடுத்த தாலந்து
## The talent given by the Lord

**உ**ங்கள் யாவருக்கும் மீண்டும் இயேசுவின் நாமத்திலே வாழ்த்துக்கள். இந்நாளில், கர்த்தர் கொடுத்த தாலந்து என்ற தலைப்பின் கீழ் தியானிக்கவுள்ளோம்.

''அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப்போனான். ஐந்து தாலந்தை வாங்கினவன்போய், அவைகளைக்கொண்டு வியாபாரம்



பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான். வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து; ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழிக்காரனே; கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து, ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்துவைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.

அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக; பொல்லாதவனும் சோம்பலுமான ஊழிக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே, என்று

சொல்லி, அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள் உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்'' (மத்.25:14–30).

இத்தாலந்தைப்பற்றிய உவமையை நாம் தியானிக்கும்போது தேவன் நமக்கும் எவ்வளவோ தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அந்தத் தாலந்துகளை வைத்து நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ ஐந்து தாலந்தைப் பெற்று வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்த அந்த மனிதனைப்போல உனக்குக் கிடைத்த தாலந்துகளைப் பெருக்கி காட்டுவாயானால் நீ தேவனால் ஆசீர்வதிக்கப்படுவாய். தேவன் எனக்கு எந்தவிதமான தாலந்துகளையும் கொடுக்கவில்லை என்று சொல்லாதே! **ஜான்வெய்கிடாடா** என்ற ஒருவர் கழுத்துக்குக்கீழ் முழுவதும் செயல் இழந்தவர். இந்த நிலைமையில் இவர் இருந்துகொண்டு முப்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை தன் வாய்கொண்டு எழுதியிருக்கிறார். அன்பானவர்களே ஊனமோ, இயலாமையோ, அல்லது பிரச்சனைகளோ, கர்த்தர் கொடுத்த தாலந்துக்குத் தடையாக இருக்காது உனக்குள் நம்பிக்கை இருக்கும்மட்டும் முயற்சி செய். அதை தேவன் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஒரு தாலந்தைப் பெற்று அதைப் புதைத்துப்போட்ட மனிதனைப்போல் இருக்க விரும்பாதீர்கள். ஏனென்றால் அவன் புறம்பான இருளுக்குத் தள்ளப்பட்டான். தேவனுடைய கோபத்திற்கு தப்பித்துக்கொள்ள, கர்த்தர் கொடுத்த தாலந்தை பெருக்க முயற்சிசெய். அது ஒன்றாக இருக்கலாம் அல்லது முப்பதாக இருக்கலாம் ஏன் நூறாகக்கூட இருக்கலாம்.

நீ கொஞ்சத்திலே உண்மையாய் இருக்கும்போது உன்னை அநேகத்தின்மேலே கர்த்தர் அதிகாரியாகவைப்பார். நீ இதை



விசுவாசிக்கிறாயா? அப்படியென்றால் இன்றே செயல்பட ஆரம்பி. நாளை பார்க்கலாம், நாளை பார்க்கலாம் என்று நாட்களைத் தள்ளாதே! நீ நினையாத வேளையில் உன்னிடத்தில் கணக்குக்கேட்கும்படி கர்த்தர் சீக்கிரமாய் வருவார். நீ பெற்றுக்கொண்ட தாலந்துகளைப் பெருக்காத பட்சத்தில் உன்னிடத்திலுள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

''விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப்பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்'' (2கொரி.9:10). விதைக்கிறவனுக்கு விதை கொடுக்கப்படும். விதையாதவனுக்கோ விதை தேவையில்லை. ஈசாக்கு விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினாலே அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். அன்பானவர்களே, கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிட்டு நீங்கள் செய்யவேண்டியதைச் செய்யுங்கள் அப்பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

ஒரு விதையை விதைத்து விட்டு எப்படி ஆயிரத்திற்குமேலான விதைகளைப் பெறுகிறோமோ, அப்படியே ஒரு தாலந்து இருந்தால்போதும் நீங்கள் ஆயிரத்திற்குமேலான தாலந்துகளை சம்பாதிக்கமுடியும். யாக்கோபுபைப் பற்றியும் லாபானைப் பற்றியும் அறிவீர்கள். யாக்கோபு லாபானிடம் ஆடுமேய்த்துவந்தான். அவர்கள் இருவரும் சம்பளக்கணக்கிற்காக ஒரு திட்டமிட்டனர். என்னவென்றால் நான் இன்றைக்குப்போய், உம்முடைய மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவைகள் இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும் என்றான் அதற்கு லாபான் நீ சொன்னபடியே ஆகட்டும் என்றான்.

யாக்கோபு கர்த்தர் கொடுத்த தன்னுடைய ஞானத்தைப் பயன்படுத்தி ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும், தொட்டிகளிலும் பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி இடையிடையே வெண்மை தோன்றும்படி பட்டையை உரித்து போட்டுவைத்தான் ஆடுகள் தண்ணீர்

குடிக்க வரும்போது பொலிவதுண்டு ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால் அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது. இவ்விதமாக யாக்கோபு மிகவும் விருத்தியடைந்து திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரர்களும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான். இந்த யாக்கோபைப்போல கொடுக்கப்பட்ட வேலையை சிறப்பாக செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது ''அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்'' (1கொரி.7:24). கர்த்தர் உம்மைக்குறித்து என்ன திட்டமிட்டிருக்கிறாரோ அதை நீ முதலாவது அறிந்துகொண்டு நீ அழைக்கப்பட்ட நிலைமையில் இருந்துகொண்டு ஆவிக்குரிய வளர்ச்சியடைய முயற்சிசெய். இன்றைக்கு அநேகர் இருப்பதை விட்டு பறப்பதைப் பிடிக்க முயற்சி செய்கின்றனர். இதனால் காலங்களும், பிரயாசமும் வீணாகிறது.

பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையிலே ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள் என்றும் ஐந்துபேர் புத்தியில்லாதவர்கள் என்றும் படிக்கிறோம். ஏன் ஐந்துபேர் புத்தியில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை. ஆக அவர்கள் கொடுக்கப்பட்ட வேலையில் கவனமில்லாமல் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஒருவேளை நீங்களும் அழைக்கப்பட்ட அழைப்பிலே நிலைத்திராதிருந்தால் இந்த புத்தியில்லாத கன்னிகைகளைப்போல இருப்பீர்கள். கர்த்தர் வரும்போது உங்களை அறியேன் என்பார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லியதுபோல ''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி'' (2தீமோ.2:2). பெற்றுக்கொண்ட நன்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் இதுவே கிறிஸ்தவத்தின் அழகு. கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். ''இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி



அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது'' (வெளி.22:12).

கர்த்தர் உங்களுடைய தாலந்துகளுக்கு ஏற்ற பலனைக் கொடுக்கும்படியாக இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். நிச்சயமாக மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்படும் ஜீவபுஸ்தகம் என்னும் வேறோரு புஸ்தகமும் திறக்கப்படும், அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவை களின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள்.

ஒரு தாலந்தை புதைத்து வைத்தவனுக்கு எப்படிப்பட்ட தீர்ப்பு கிடைத்தது என்பதை அறிவீர்கள். அதேவேளையில் ஐந்து தாலந்தை பெருக்கிற காட்டியவனுக்கும், இரண்டு தாலந்தைப் பெருக்கிக் காட்டியவனுக்கும் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களையும் அறிவீர்கள். நீங்களும் உங்கள் தாலந்துகளை பெருக்க முயற்சியுங்கள். காத்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!.

### கேள்வி

**✪ மனிதன் தன்னுடைய முயற்சியினால் தாலந்துகளைப் பெருக்க முடியாதா?**

முடியும். அது அவனை அழிவில் கொண்டுபோய்விடும். கர்த்தர் கொடுக்கிற தாலந்து அவனுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். பிரசங்கி 1:18–ல் அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என வாசிக்கிறோம். இன்றைய நாட்களில் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று ஜனங்கள் படும் முயற்சிக்கு அளவே இல்லை. அநேக குடும்பங்களில் காலை எழுந்தவுடன் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து பெரிய ஆளாக ஆக்கவேண்டும் என்று நினைத்து ஒவ்வொரு குடும்பங்களும் போட்டி போட்டுக்கொண்டு பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள். அதற்காக அநேக பாடுகளையும் அநுபவிக்கிறார்கள். அறிவு பெருத்தால் நோவுதான் பெருகும். அதாவது வேதனை பெருகும். ''கர்த்தர் சொல்லுகிறார்: ஆலோசனையும் மெய்ஞ்ஞானமும்

என்னுடையவைகள்; நானே புத்தி, வல்லமை என்னுடையது ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும் என்னிடத்தில் உண்டு'' (நீதி.8:14,17). இவைகளைக் கர்த்தரிடத்தில் கேட்டுப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

மேலும் ''என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயப் பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்'' என்கிறார் (நீதி.8:20,21). ஆகையால் அன்பானவர்களே, மாயையைப் பின்பற்றி ஏமாற்றப்பட்டு போய்விடாதிருங்கள்.

## 18. வாருங்கள்! கேளுங்கள்! செயல்படுங்கள்!
## Come Hear and Do

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அவருடைய போதனைகளும் என்றுமே அழியாதவைகள். அவைகளை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும்போது அவன் உயிரடைந்து ஜீவவிருட்சத்தைப்போல் இருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். அவைகளைப்பெற்றுக் கொள்ளாமல் அவரை நோக்கி கூப்பிடுவதால் பலன் ஒன்றுமில்லை. கர்த்தர் இயேசு சொல்வதை கவனியுங்கள். ''என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? (லூக்.6:46).

இன்றைக்கு அவரை நோக்கி கூப்பிடுகிற ஒரு கூட்டத்தைப் பார்க்கிறோம். ஆனால் அவர் சொல்லுகிறபடி செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை இவர்களுடைய விருப்பத்தை கர்த்தர் நிறைவேற்ற வேண்டுமென்று பிரயாசப்படுகின்றனர். இப்படிப்பட்ட ஜனங்களை அறிந்த கர்த்தர்: பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றார்.

முதலாவது தான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டு இயேசுவினிடம் வரவேண்டும். இதையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். நாம் பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக



இருப்போம். சத்தியம் நமக்குள்ளிராது. சத்தியத்தை நாம் பெற்றுக்கொள்ள இயேசுவண்டை வரவேண்டும். லூக்கா6:47–ல் இயேசு தன்னிடத்தில் வரும்படி அழைப்பதைக் காணலாம். முதலாவது இயேசுவினிடம் வா, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடு, எல்லாவற்றிலும் முதலாவது இடத்தை உன்னைப் படைத்த தேவனுக்குக் கொடு. ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்கிறார். இயேசுவினிடம் செல்லும்போது நம்முடைய பாரங்கள் குறைந்து இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்கிறோம். மலைப்பகுதியில் விறகு வெட்டி தலைசுமையாய் விறகுகளை சுமந்துகொண்டு வருகிறவர்கள் சற்றே இளைப்பாறுவோம் என்று சொல்லி தங்கள் தலையில் உள்ள விறகு கட்டை ஒரு மரத்தின்மீது சாய்த்து வைத்து அந்த மரத்தினடியில் இளைப்பாறுவார்கள். அந்த மரம் அவர்களுடைய சுமையை ஏற்று அவர்களுக்குக் குளிர்ந்த காற்றை கொடுத்து இளைப்பாற செய்கிறது. அதைப்போல கர்த்தர் இளைப்பாறுதலை அவரிடம் வருகிறவர்களுக்குக் கொடுக்கிறார்.

சிலர் இளைப்பாறுதலுக்கு இடம் கொடுத்தாலும் அறியாமையினாலே அவர்களே தங்கள் சுமைகளை சுமக்கின்றனர். ஒருமுறை வேன் ட்ரைவர் ஒருவர் தன்னுடைய வாகனத்தில் சந்தைக்கு கொண்டு செல்லக்கூடிய மூட்டைகளை ஏற்றிக்கொண்டு மலைப்பகுதியிலிருந்து வாகனத்தை ஓட்டிக்கொண்டுவரும்போது சாலையோரமாக ஒரு வயதானவர் உருளைக்கிழங்கு மூட்டையை தன் தோளில் சுமந்துகொண்டு சந்தைக்குப்போகும்படியாக வேகமாக நடப்பதைக் கண்டு ஐயா நானும் சந்தைக்குத்தான் போகிறேன் நீங்கள் ஏன் கஷ்டப்பட்டு தோளில் சுமையை சுமந்துகொண்டு நடந்து வருகிறீர்கள் தயவு செய்து வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள் நான் உங்களை சந்தையில் இறக்கிவிடுகிறேன் என்றார்.

அந்த வயதானவரும் ஐயா நீங்கள் நல்லா இருக்கனும் என்று சொல்லி வண்டியில் ஏறி அப்படியே உட்கார்ந்து கொண்டார். ஆனால் தன்னுடைய தோளில் இருந்த மூட்டையை அவர் இறக்கவில்லை. இதைப் பார்த்த ட்ரைவர் ஐயா மூட்டையை வண்டியில் வைத்துவிட்டு

இளைப்பாறுங்கள் இனி ஏன் சுமக்கிறீர்கள் என்றார். அவரோ தம்பி எனக்கு நீங்கள் இடம்கொடுத்ததே பெரிய காரியம் ஏன் மூட்டையைவேறு வண்டி சுமக்க வேண்டும் அதை நானே சுமந்துகொள்கிறேன் என்றாராம். அன்பானவர்களே, இயேசுவிடம் வந்தும் பாரத்தை அவர்மீது வைக்காமல் தாங்களே சுமந்துகொண்டு இயேசுவைப் பின்தொடர்கிற ஒரு சிலரை நாம் பார்க்கமுடிகிறது. அதிலே நீங்களும் ஒருவராக இருக்கலாம் தயவுசெய்து உங்கள் பாரத்தை அன்போடு ஏற்றுக்கொள்ளும் இயேசுவிடம் ஒப்படைத்துவிட்டு நீங்கள் இளைப்பாறுங்கள் கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

இப்பொழுது இயேசுவிடம் வந்துவிட்டதாக வைத்துக் கொள்ளுங்கள் அடுத்து நீங்கள் செய்யவேண்டுவதென்ன, இயேசு 'என் வார்த்தைகளை கேளுங்கள்' என்கிறார். ஆம் ஆண்டவருடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டும். நாங்கள் ஒவ்வொரு நாளும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் பரம்பரை பரம்பரையாக கிறிஸ்தவர்கள். எங்களுக்கு தெரியதது ஒன்று மில்லை என்று ஒருவேளை சொல்வீர்கள். கானாவூரிலே இயேசு ஒரு திருமணவீட்டிற்கு சென்றிருந்தபோது திராட்சரசம் குறைவுபட்டது. அப்பொழுது இயேசுவின் தாய் மரியாளுக்கு அது தெரியவந்தது. அவள் இயேசுவை நோக்கி: திராட்சரம் இல்லை என்றாள்.

அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என்வேளை இன்னும்வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரனை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றாள். அன்பானவர்களே, புரிந்து கொண்டீர்களா! இயேசுவிடம் வந்துவிட்டால் நாம் அவரை நோக்கி ஆர்டர்போடகூடாது அவர் என்ன சொல்லுகிறாரோ அதின்படிதான் செய்யவேண்டும். இயேசுவை பெற்றெடுத்த தாயாக இருந்தாலும் சரி அவருடன் பிறந்த சகோதரர்களாக இருந்தாலும்சரி, அவர் மீது அதிகாரம் செலுத்த உரிமை இல்லை. இதை அறிந்த மரியாள் அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்று வேலைக்காரருக்குச் சொன்னாள்.

ஏன், சீஷர்களைப்பாருங்கள் ஒரு முறை பேதுரு "ஐயரே,



இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப்போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்" (லூக்.5:5,6). ஆண்டவருடைய வார்த்தைப்படி சீஷர்கள் கீழ்ப்படிந்து வலையைப்போட்டபோது அதிகமான மீன்களைப் பிடித்தார்கள். இச்செய்தியை கேட்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீ யாருடைய வார்த்தையின்படி வாழ்ந்துவருகிறாய். நீ இயேசுவினிடம் வந்து அவருடைய வார்த்தையின்படி வாழ்வாயானால் நீ ஆசீர்வதிக்கப்படுவாய். போனது போகட்டும் இருக்கின்ற நாட்களிலாவது ஆண்டவருடைய சத்தத்திற்கு செவிகொடு.

இப்பொழுது கர்த்தருக்கு செவி கொடுக்க முடிவெடுத்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அத்தோடு நின்று விடாதீர்கள். இயேசு சொல்கிறார்: "அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்" என்கிறார். வசனத்தைக்கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள். வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் முப்பது அறுபதும் நூறுமாக பலன் கொடுக்கவேண்டும். இதுவே வளர்ச்சிக்குரிய அறிகுறி. குழந்தை பிறந்து அது அப்படியே இருந்துவிட்டால் அதன் பெற்றோர்கள் கவலைகொள்வார்கள் அல்லவா? அதைப்போல கர்த்தரும் நம்மைக் குறித்து கரிசனையுள்ளவராக இருக்கிறார். வசனத்தைப் பெற்றுக்கொண்டவன் வளர்ச்சியடைய வேண்டும்.

வசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டவன் "ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்தவீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" (லூக்.6:48). இந்தக் கன்மலையாகிய கிறிஸ்து மீது நீங்கள் கட்டப்பட்டவர்களாக இருக்கிறீர்களா? "இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன்

வெட்கப்படுவதில்லை'' இந்த கன்மலையாகிய கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டீர்கள் என்றால் வெட்கப்பட்டுபோகமாட்டீர்கள். உங்களுடைய அஸ்திபாரம் கர்த்தருடைய ஆலோசனையின்படியாக இருக்கட்டும். அப்பொழுது வாழ்க்கையில் பிசாசு கொண்டுவரும் புயலையும், பெருவெள்ளத்தையும் தாங்கி நிற்கும். அவருடைய வார்த்தையின்படி செய்ய இன்றே உங்களை அற்பணியுங்கள்.

ஒருவேளை ஆண்டவருடைய வார்த்தையை நீங்கள் கேட்டும் உணராதவர்களாக இருப்பீர்கள் என்றால் உங்களுடைய நிலைமை என்னவாகும்? இயேசு சொல்கிறார்: ''என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது'' (லூக்.6:49). ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போது அழிவுதான் மீதமாகும். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே, வசனத்தைக் கேட்டும்; உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப் போகிறார்கள்.

நீங்கள் உலகக் கவலைகளுக்கு இடமளித்து, ஐசுவரியத்தின் மீது நம்பிக்கை கொண்டு கர்த்தருடைய வசனத்தைப் புறம்பாக்கும்போது உங்களுடைய வாழ்க்கையில் முட்செடிகளைப்போல களைகள் வளர்ந்து உங்களுடைய வாழ்க்கையை நெருக்கிப்போட்டு விடும். இவைகளை நீங்கள் ஜெயிக்க முதலாவது இயேசுவண்டை வந்து அவர் சொல்லுகிற யாவுக்கும் செவிகொடுங்கள். பின்பு அதின்படி செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது நிலையான ஆசீர்வாதங்களை கர்த்தர் மூலம் பெற்றுக்கொள்வீர்கள். எதிர்காலத்தில் இப்படியாக நடப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

✪ **இயேசுகிறிஸ்து இல்லாமல் இரட்சிப்பு உண்டா?**



இல்லை, ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப்.4:12). நாம் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி இயேசுதான். இயேசு சொல்கிறார்: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவா.14:6). நீங்கள் இரட்சிக்கப்படும்படியாக இயேசுவை விசுவாசித்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். ''குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது'' என்கிறார் ஆண்டவர் இயேசுகிறிஸ்து (யோவா.6:40).

நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமானால் அவரிடம் வந்து, அவருடைய வார்த்தைகளை கேட்டு, அதன்படி செயல்படுங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். அவரில்லாமல் இப்பூமியில் மனிதனுக்கு இரட்சிப்பில்லை. இதை நான் என் சொந்தக்கருத்தாலே சொல்லவில்லை. தேவன் மனிதனுக்காக கொடுத்த பரிசுத்த வேதாகமம் அதாவது திருமறை சொல்லுகிறது. இது உலகமெங்கும் அதிகமான அளவில் விற்பனையாகும் ஒரே புத்தகமாகும். இதை வாசிப்போரும் இவ்வசனங்களுக்கு கீழ்ப்படிவோரும் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். உங்களுடைய இல்லங்களிலே இருக்கவேண்டிய புத்தகம் பரிசுத்தவேதாகமம். இன்றே ஒரு கிறிஸ்தவ புத்தகநிலையத்திற்கு சென்று ஒரு வேதாகமத்தை வாங்கி படிக்க ஆரம்பியுங்கள். கர்த்தர் உங்களை வழிநடத்துவார்.

## 19. எழுந்து கட்டுவோம் வாருங்கள்
## Let us rise up and build

**நெ**கேமியா சொல்வதை கவனியுங்கள்: அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக்

கொடுத்தேன்; நான் முன் ஒருபோதும் அவர் சமூகத்தில் துக்கமாயிருந்ததில்லை. அப்பொழுது ராஜா என்னைப்பார்த்து நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது நான் மிகவும் பயந்து ராஜாவை நோக்கி; ராஜா என்றென்றைக்கும் வாழ்க என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியாய் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கும்போது நான் துக்கத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன்'' என்றான். (நெகே.2:1–3).

இன்றைக்கு கர்த்தருடைய சபையிலே ஊழியக்காரராகவும், விசுவாசிகளாகவும் இருக்கிற நாம் எதைக்குறித்துக் கவலைகொண்டவர்களாக இருக்கிறோம். சபையைக்குறித்தா? அல்லது நம்முடைய குடும்பங்களைக்குறித்தா? அநேகர் போன்மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் என்ன சொல்கிறார்கள் என்று தெரியுமா? ஐயா, நான் புதுவீடு கட்ட ஜெபியுங்கள், ஐயா, என் வயிற்று வலி நீங்கச் ஜெபியுங்கள், ஐயா, என் மகனுக்கு ஒரு நல்ல இடத்தில் வேலைக்கிடைக்கச் ஜெபியுங்கள், ஐயா, என் மகளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்க ஜெபியுங்கள், என்று சொல்லுகிறார்களே தவிர எங்கள் பகுதியில் கர்த்தருடைய சபை வளர ஜெபியுங்கள் என்று சொல்வதில்லை. அதைக் குறித்து அவர்களுக்கு கரிசனை இல்லை என்று சொல்லலாம்.

என் அன்பான சகோதரனே, சகோதரியே நெகேமியாவுக்கோ தன் குடும்பத்தைக் குறித்தோ, தன்னைக் குறித்தோ கவலையில்லை. மாறாக கர்த்தருடைய ஆலயத்தைக்குறித்தும், தேவனுடைய பரிசுத்த நகரமாக அந்நாட்களிலே விளங்கிய எருசலேமைக்குறித்தும் கவலை. அதைப்போல அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எல்லா சபைகளைக்குறித்தும் கவலை. ஆகையால் தான் கொரிந்து சபைக்கு எழுதும்போது இவை முதலானவைகளையல்லாமல், எல்லா சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது என்கிறான். உங்களுக்கும் இவ்விதமான கவலை எழும்ப வேண்டும்.



ராஜா, நெகேமியாவைப் பார்த்து: நீ கேட்கிற காரியம் என்ன? என்றார். அப்போது நெகேமியா முதலாவது பரலோக தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, பின்பு ராஜாவுக்கு தன் தேவைகளை தெரியப்படுத்தினான். நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டு அனுப்பும்படிக்கு அவர்களுக்கு கடிதங்கள் கொடுக்கும்படிக்கும், தேவாலயத்தின் கதவு வேலைக்கும், நகரத்தின் அலங்கத்தின் வேலைக்கும் மரங்களைக் கொடுக்கும்படி வனத்துக் காவலாளனாகிய ஆசாபுக்கு கடிதம் கொடுக்கும்படிக்கும் கேட்டான். ராஜா இவையெல்லாம் கொடுத்து இராணுவ சேர்வைக்காரரையும், குதிரை வீரரையும் அனுப்பி இருந்தார். பிரியமானவர்களே, இன்றைக்கு நம்முடைய ஜெபம் எப்படிப்பட்டதாகயிருக்கிறது. குடும்பத்திற்காகவா அல்லது சபைக்காகவா? பவுல், பிலேமோனுக்கு கடிதம் எழுதினான் ''நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால், என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக் கொள்ளும்'' என்று (பிலே .17). இது உண்மையான அன்பை வெளிப்படுத்துகிறது.

நான் ஒரு மூத்த சகோதரனை சந்தித்தேன் அவர் எனக்கு ஒரு ரெக்கமண்ட்டேசன் கடிதம் கொடுப்பதாக சொல்லி கடிதத்தை எழுதினார் அப்போது குறுக்கே கரடி புகுந்ததைப்போல் ஒரு நபர் நுழைந்தார். எனக்கு கடிதம் எழுதின மூத்த சகோதரர் இப்படி நாம் ரெக்கமண்டேசன் கடிதம் கொடுக்கலாமா என்று அவரிடம் கேட்க இது புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் இல்லை என்று அவர் சொல்லவே இவர் அந்தக் கடிதத்தைக் கிழித்து குப்பையில் போட, நான் வெளியே வந்து விட்டேன். இப்படி நெகேமியாவுக்கு ராஜா செய்திருப்பாரானால் என்ன நடந்திருக்கும். ஆலயம் புதுப்பிக்கப்பட்டிருக்காது. பவுல் பிலோமோனுக்காக பரிந்து பேசி எழுதாவிட்டால் ஒனேசிமு பழைய பாவியாகவே இருந்திருப்பான். ஏன் நம் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் தாங்குவதில்லை? எப்போதுதான் ஒரு நெகேமியாவாக அல்லது ஒரு பவுலாக மாறுவார்கள்? காலம் தான் பதில்சொல்லும்! காத்திருப்போம்!

நெகேமியாவின் அடுத்த முயற்சி, நகரத்தை சோதனை செய்தான். அன்பானவர்களே ஊழியத்தில் திட்டமிடுவது அவசியம். இரவு பகல் பாராது உழைக்க வேண்டும். நெகேமியா சொல்வதை

கவனியுங்கள் ‘‘நான் சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு ராத்திரியில் எழுந்து நகரசோதனை செய்தேன்; ஆனாலும் எருசலேமுக்காகச் செய்யும்படி என் தேவன் என் மனதிலே வைத்ததை நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை; நான் ஏறிப்போன மிருகமேயல்லாமல் வேறொரு மிருகமும் என்னோடு இருந்ததில்லை. நான் அன்று ராத்திரியில் பள்ளதாக்கின் வாசல்வழியாய் புறப்பட்டு, வலுசர்ப்பத் துரவைக் கடந்து, குப்பைமேட்டு வாசலுக்கு வந்து, எருசலேமில் இடிந்து போன அலங்கத்தையும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதன் வாசல்களையும் பார்வையிட்டேன்’’ என்கிறான் (நெகே.2:12,13). நகரத்தை சோதனை செய்த நெகேமியா சோர்ந்துபோகவில்லை.

கானானை வேவு பார்க்க கோத்திரப் பிதாக்களை அனுப்பும்போது அவர்கள் வேவு பார்த்து திரும்பிவருகையில், சிலர் நலமாகவும், சிலர் துர்ச்செய்தியையும் பரம்பச்செய்தார்கள். இதனால், சிலர் அவிசுவாசிகளாகி பெலவீனப்பட்டனர். நெகேமியாவோ, அவன் கண்டகாட்சிகளால் பயந்து ஒடவில்லை. அழிக்கப்பட்ட தேவாலயம் மற்றும் எருசலேமின் அலங்கங்கள் கட்டி முடிக்கும் வரை ஓயமாட்டேன் என்று கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டு முயற்சி எடுத்திருப்பான். அதை கர்த்தர் ஆசீர்வதித்தார். அன்பானவர்களே, எனக்கு அவ்வப்போது ஞாபகத்திற்கு வருகிற ஒரு வசனம் ‘‘பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்’’ (சக.4:6). நீங்களும் இந்த விதமான நம்பிக்கையோடே செயல்படுங்கள்.

நெகேமியாவின் அழைப்பைப் பாருங்கள் ‘‘என் தேவனுடைய கரம் என்மீது நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடு சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன். அப்பொழுது அவர்கள்; எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்’’ (நெகே.2:18). தனிமரம் தோப்பாகாது என்பதை நாம் அறிவோம். அநேகரை ஊழியத்திற்காக அழைக்க வேண்டும். நெகேமியாவின் அழைப்பைக் கேட்ட ஜனங்கள் ஒருமனப்பட்டவர்களாக அதை செய்து முடித்தார்கள். மேலும் அநேக சீர்திருத்தங்களையும் நெகேமியா செய்தான். ஓய்வு



நாட்களில் வியாபாரம் செய்கிறவர்களையும், பற்பல சுமைகளை கொண்டுவருகிறவகளையும் திடச்சாட்சியாய் கடிந்துகொண்டான். உங்கள் பிதாக்கள் இப்படிச்செய்ததினாலல்லவா, நமது தேவன் நம்மேலும், இந்த நகரத்தின்மீதும் இந்த தீங்கையெல்லாம் வரப்பண்ணினார். நீங்களோ ஓய்வு நாளை பரிசுத்த குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின் மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களை எச்சரித்தான்.

இன்றைக்கு நாம் கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்ற இந்தவிதமான தீரியர்களை திடசாட்சியாக கடிந்து கொள்கிறோமா? இல்லையே. அன்றைக்குத்தான் கோழி வியாபாரம், முட்டை வியாபாரம் எல்லாம் சபையில் நடக்கிறது. மார்க்கெட்டில் விற்கக்கூடிய சில பொருட்களை கொண்டுவந்து கர்த்தருக்காக கொடுக்கிறோம் என்று சொல்லி வியாபார வீடாக மாற்றுகிறார்கள். இந்த அவலை நிலை என்றுதான் மாறுமோ! ஆதிசபையார்கள் எப்படி செயல்பட்டார்கள் என்று அப்.6–ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் நாங்கள் பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல என்று சொல்லி விசுவாசமும் உண்மையும் உள்ள ஏழு பேரை தெரிந்து கர்த்தருடைய வளர்ச்சிக்காக பாடுபட்டார்கள். இன்றைக்கு சபை என்றால் அது ஊழியர்தான். அவர் என்ன சொல்கிறாரோ அதுதான் சபையில் நடைபெறவேண்டும். அவர் இருந்தால்தான் சபை அவர் இல்லையென்றால் சபை இல்லை என்ற முடிவில் சில சபைகள் இயங்கி வருகிறது. இது வேதாகம உபதேசத்திற்கு மாறுபட்ட ஒன்றாக இருக்கிறது. நெகேமியா ஒருவரால் தேவாலயம் புதுப்பிக்கப்பட்டதா? எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட்டதா? சற்று சிந்தித்து செயல்படுங்கள்.

கர்த்தருடைய சபையை கட்டும்போது எதிர்ப்புகள் வரத்தான் செய்கிறது. நெகேமியாவின் காலத்திலும் எதிர்ப்பு இருந்தது, தூஷனம் இருந்தது, அற்பமாக நினைத்தனர், அலங்கத்தை கட்டுகிற செய்தியைக்கேட்ட சன்பல்லாத்து, தொபியா போன்றோர் அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடம் கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரே நாளிலே

முடித்துப்போடுவார்களோ, சுட்டெரித்து போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர்கொடுப்பார்களோ, என்று தன் சகோதரருக்கும், சமாரியாவின் சேனைக்கும் முன்பாகச் சொன்னான். அப்போது தொபியா “அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏரிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்து போகும் என்றான்” (நெகே.4:3). அன்று கர்த்தருடைய சபைக்கு இருந்த எதிராளிகளைப் போல இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் அல்ல இவர்களில் குடிகொண்டிருக்கும் பிசாசானவன் இவர்களை தூண்டுகிறான். ஆகையால் இவர்கள் பேசுகிறார்கள்.

கர்த்தருடைய சபையை ஒருவராலும் அழித்துவிட முடியாது அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டுள்ளது. அதன்மேல் மோதுகிறவன் நொருங்கிப்போவான் அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும். எனக்கு அன்பானவர்களே சன்பல்லாத்து மண்மேடுகளான கற்களுக்கு உயிர்கொடுப்பார்களோ என்றான். இயேசுவானவர் கழுதை மீது ஏறிவரும்போது “அப்போது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதற்றும் என்றார்கள் அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (லூக்.19:39,40). கர்த்தர் சொன்னால் கல்லும்பேசும் ஆபிரகாமுக்கு கல்லுகளினாலே பிள்ளைகளை உண்டாக்க கர்த்தர் வல்லமை படைத்தவராக இருக்கிறார். எத்தனை சன்பல்லாத்து தொபியா போன்றோர் கர்த்தருடைய சபைக்கு விரோதமாக எழும்பினாலும் கர்த்தருடைய சபையை ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் கர்த்தருடைய சபையை கட்டுவதிலே நெகேமியாவைப் போல ஜனங்களுக்கு அழைப்புவிடுங்கள்.

**கேள்வி**

**✪ பலவிதமான வேலையின் மத்தியில் கர்த்தருடைய வேலையை எல்லோரும் செய்ய முடியுமா?**

நிச்சயமாக முடியும். ஒருசாண் வயிற்றிற்காக வாழ்நாளெல்லாம்



உழைக்கின்றோம். நமக்கு ஜீவனையும் சுவாசத்தையும் கொடுத்த தேவனுக்காக நாம் ஊழியம் செய்யவேண்டாமா? “நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள் அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்” (நீதி.6:6–8). மிகவும் அற்பமான சந்துவாக இருந்தும் அதனுடைய உற்சாகத்தை நாம் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. தேவசாயலில் உண்டாக்கப்பட்ட நாம் கர்த்தருடைய பணியைச் செய்ய உற்சாகமடைய வேண்டாமா? அது நம்மேல் விழுந்த கடமை. நெகேமியாவின் நாட்களில் நடந்தது போல ஒருமனப்பட்டவர்களாக சேர்ந்து கர்த்தருடைய வேலையைச் செய்ய நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

## 20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்
## Ye are bought with a price

**ந**ம்மை யார் விலைக்கு வாங்க முடியும்? என்று நினைக்கிறீர்கள். விலைக்கு வாங்குவதற்கு நான் என்ன ஆடா? மாடா? கோழியா? என்னையாரும் விலைக்கு வாங்க முடியாது. நான் யாருக்கும் அடிமைப்பட்டவன் அல்ல என்று சொல்வீர்கள். ஆனால் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறீர்களே அதைப்பற்றி என்றைக்காவது யோசித்தது உண்டா? அதிலிருந்து விடுதலையடைய வேண்டாமா? பாவத்தின் சம்பளம் மரணம் என வேதம் போதிக்கிறது. கொடுமையான வியாதி வந்துவிட்டால் எப்படி மரணம் சம்பவிக்கிறதோ அதைப்போல பாவம் உட்பிரவேசித்துவிட்டால் மரணம் நிச்சயம். அதிலிருந்து நம்மை மீட்கும்படியாக இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் அவதரித்தார். தம்முடைய சொந்த இரத்தத்தை நம்முடைய பாவத்திற்காக சிந்தி நம்மை சம்பாதித்தார். “தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தைமுழுவதையும் குறித்தும், எச்சரிகையாக இருங்கள்” (அப்.20:28). எந்த ஒரு பொருளும் தமக்கு சொந்தமாக வேண்டுமானால் அதற்காக ஒரு கிரயம் கொடுத்துத் தீர்க்கவேண்டும். தேவன் நம்மை அவருக்கு சொந்தமாக்கிக் கொள்ள

பாவத்திற்கு பரிகாரமாக தம்முடைய சொந்தக் குமாரனுடைய இரத்தத்தைக்கொடுத்து நம்மை கிரயத்துக்குக்கொண்டார். இதையே பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது "கிரயத்துக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" என்கிறார் (1 கொரி. 6:20). ஆக பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட நாம் இப்போது நீதிக்கு அடிமைகளானோம்.

ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினால் அவரை மகிமைப்படுத்துங்கள். நாம் நம்முடைய சரீரத்தினால் தேவனை எப்படி மகிமைப்படுத்த முடியும் என்று நீங்கள் கேட்கலாம். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனால் பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? "என்று பவுல் 1கொரிந்தியர் 6:19ல் எழுதுகிறார். கிரயத்துக்குக் கொள்ளப்பட்டபின் நாம் நம்முடையவர்கள் அல்ல. நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள். தேவனுடைய ஆவியானவர் நம்மில் வாசம் செய்கின்ற ஆலயமாக மாறுகின்றோம். இப்படி இருக்கின்றபடியால் நாம் நம்முடைய சரீரத்தை வேசியின் சரீரத்தைப்போல மாற்றலாகாது. எப்போதும் தேவனை மகிமைப்படுத்தும்படியாக அதாவது ஒரு தேவாலயம் கட்டப்பட்டு அங்கே கூடிவருகின்ற ஜனங்களுக்கு எப்படி அந்த தேவாலயம் பயன்படுகிறதோ அதேப்போல நாம் நடமாடும் தேவாலயங்களாக செயல்பட வேண்டும்.

தேவாலயத்திற்குள்ளாக எப்படி அசுத்தங்கள் இல்லாதிருக்குமோ அப்படியே நம்முடைய சரீரத்தையும் பராமரிக்க வேண்டியது அவசியம். சரீரமானது கர்த்தருக்கு சொந்தமானது. அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். "வயிற்றுக்கு போஜனமும், போஜனத்திற்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும், அதையும் அழியப்பண்ணுவார், சரீரமோ வேசித்தனத்திற்கு அல்ல கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" (1கொரி.6:13). ஆனபடியால் "நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?



ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17). நாம் தேவனுடைய ஆலயமாக இருந்தால் அநேகருக்கு ஆசீர்வாதமான பாத்திரங்களாக இருந்துகொண்டு செயல்பட வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா, போன்றோரை அறிவோம். அவர்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையிலே முன்மாதிரி கிறிஸ்தவர்களாக வாழ்ந்தவர்கள் இவர்களைக்குறித்து ரோமர் 16:3,4 வசனங்களில் பவுல் எழுதும்போது "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள் அவர்கள் என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரம் அல்ல புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்" என்று எழுதுகிறார். சரீரத்திலே தேவனை மகிமைப்படுத்துவது என்பது இப்படித்தான். கைதட்டிப் பாடுவதாலோ அல்லது சரீரத்தில் குதித்து நடனமாடிப் பாடுவதாலோ தேவனை மகிமைப்படுத்துவதாக அர்த்தமாகிவிடாது.

பவுலின் ஊழியத்தில் உடன் வேலையாட்களாக இருந்துகொண்டு தேவனுடைய நாமம் மகிமைக்காக தங்கள் கழுத்தைக்கொடுத்தவர்கள் இந்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போன்றவர்கள். இந்த இடத்தில் பவுல் ஏன் தங்கள் கழுத்தைக்கொடுத்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். நுகத்தடிகள் பூட்டப்பட்ட மாடுகள் எப்படி பாரமான வண்டிச் சுமைகளை இழுத்துக்கொண்டு செல்கிறதோ அதேப்போல ஊழியத்தின் பாரச்சுமைகளை தங்கள் மீது ஏற்று சுமந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். அவர்களுடைய வீட்டை சபை ஆராதனைக்காக கொடுத்தார்கள். இன்றைக்கு எத்தனைபேர் தங்களுடைய வீட்டை சபை ஆராதனைக்காக கொடுத்திருக்கிறார்கள்? கேட்டால் அப்படியெல்லாம் கொடுக்கமுடியாது ஏனென்றால் சபையார் வரும்போது வீட்டுசாமான்களெல்லாம் ஆங்காங்கே அப்படியே கிடக்கும். இதிலே எப்படி சபையாக கூடிவரமுடியும் என்று சாக்குபோக்கு சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். ஏன் அதை ஒதுக்கிவைக்கக்கூடாதா? தனி

அறை ஒன்றை ஆராதனைக்காக ஏற்படுத்தக்கூடாதா? முழுமனதிருந்தால் செய்வீர்கள். ஆவியினால் தேவனை மகிமைப்படுத்துவது என்பது நம்முடைய ஆவியினால் தேவனை நன்றியுள்ள இருதயத்திலிருந்து ஆராதிப்பதும் துதிப்பதுமாகும். ‘‘தேவன் ஆவியாய் இருக்கிறார் அவரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்’’ (யோவா. 4:24) என்ற வசனத்தின்படி தொழுதுகொள்ள வேண்டும்.

ஆவியோடும் என்ற கருத்தை அநேகர் தவறாக புரிந்துகொண்டு கத்தி கூச்சலிட்டு தேவனை ஆராதிக்கிறார்கள். ஆவி அமைதலுள்ளது. அசுத்த ஆவி பிடித்தவர்கள்தான் கத்தினார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். இயேசுவும் அவர்களுடைய சீஷர்களும் ஸ்தோத்திரப்பாடலைப் பாடியபின்பு ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் என்று படிக்கின்றோம். புதிய ஏற்பாட்டு தொழுகையில் எந்த ஒரு இடத்திலும் அவர்கள் தாவீதைப்போல நடனமாடி கைதாளங்களோடும் தம்புரோடும் தேவனை துதித்ததாக நாம் வாசிக்க முடியாது. சிலர் அவர்களுக்கு வாத்தியக்கருவி இல்லாதிருந்திருக்கலாம் என்கின்றனர்.

பிரியமானவர்களே, தாவீது காலத்தில் இருந்த வாத்தியக் கருவிகள் இயேசுவின் நாட்களில் இல்லாமல் போய்விட்டதா? ஆவிக்குரிய ஆராதனையில் அவைகள் எடுபட்டுப்போயின. சாலோமோன் கட்டின ஆலயம் அழிக்கப்பட்டு உங்கள் இருதயங்களே தேவனுடைய ஆலயங்களாக மாறிய பின்பு சாலோமோனுடைய ஆலயத்திலே இருந்த வாத்தியக்கருவிகளும் மற்ற சடங்காசாரங்களும், ஆவிக்குரிய தொழுகையில் எப்படி இடம்பெற முடியும்? எங்கும் பிதாவை தொழுது கொள்ளும் காலத்தில் நாம் இருக்கின்றோம். ‘‘இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்’’ என்று மத்.18:20–ல் இயேசு சொல்கிறார். ஆவிக்குரிய ஆராதனை மூலமாகவே நாம் தேவனை மகிமைப்படுத்த முடியும். ‘‘உண்மையாய் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மை தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி



பிதாவானவர் விரும்புகிறார்’’ (யோவா.6:23). ஆக, பிதாவின் விருப்பத்தை நாம் நிறைவேற்று கிறவர்களாக இருக்க வேண்டும். வீணான ஆராதனைகளை தேவன் ஏற்றுக்கொள்ளார்.

ஆதிசீஷர்கள் தேவனை ஆராதித்தார்கள். எப்படியென்றால் அவருடைய உபதேசத்தின்படியாக அவரை ஆராதித்தார்கள். மனுஷருடைய பாரம்பரிய கட்டுக்கதைகளுக்கு செவிகொடாமல் கிறிஸ்துவின் மாதிரியை பின்தொடர்ந்தார்கள். ‘‘அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்’’ என்று (அப்.2:42) வாசிக்கின்றோம். இவர்கள் நியாயப்பிரமாண தீர்க்கதரிசிகளுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்களா? ஏன் இல்லை. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாய் இருந்தது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றியது. ஆகையால் அவர்கள் இயேசு கிறிஸ்துவினால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு செவி கொடுத்தார்கள் இந்த அப்போஸ்தலருடைய உபதேசத்தை நாம் எங்கே காணலாம், பழைய ஏற்பாடு புத்தகங்களிலா அல்லவே புதிய ஏற்பாடு நிருபங்களிலே வாசிக்கின்றோம். இந்த நிருபங்களில் எழுதப்பட்ட உபதேசங்களில் நிலைத்திருந்தார்கள்.

அது மட்டுமல்ல அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தக்கூடிய நாம் அவரை அறியாத சமுதாயத்தின் மத்தியில் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவர் தம்மை நினைவு கூரும்படியாக விட்டுச்சென்ற அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் நாம் ஒவ்வொரு வாரமும் நினைவு கூரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் நம்நாட்டிற்காகவும் சகல ஜனங்களுடைய இரட்சிப்புக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்றைய நாட்களிலே அனேக சபைகளிலே இல்லாத ஒன்று ஆதிகிறிஸ்தவர்களிடம் இருந்தது அது என்னவென்றால் அந்நியோந்நியஐக்கியம். இந்த ஐக்கியத்தின் மூலமாகவே வெகு விரைவாக உலகமெங்கும் சபைகள் கட்டப்பட்டன.

இன்று ஒரு சபைக்குள்ளே பல பிரிவுகள் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள் என்பதை நினைகூர்ந்து சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தும்படியாக முயற்சி செய்யுங்கள். ஒருவேளை நீங்கள் ஆண்டவரால் கிரயத்துக்கொள்ளப்படாதவராக இருக்கலாம் அப்படியென்றால் இன்னும் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறீர்கள் நீங்கள் சேர்க்கப்படவேண்டிய மந்தையில் சேர்க்கப்பட வேண்டும். அப்போது மெய்யான மேய்ச்சலைக் கண்டடைவீர்கள் இன்றே கிரயத்துக்கொள்ளப்பட உங்களை கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்.

**கேள்வி**

✪ **ஆண்டவரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட நமக்கு என்ன பலன் கிடைக்கும்?**

"உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோம.7:19–22).

## 21. சகல அதிகாரம்
## All Authority

**அ**திகாரம் படைத்த அநேகரை இந்த உலகத்திலே நாம்



பார்க்கிறோம். அவர்கள் ஆட்களை ஏமாற்றுவதற்காக தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்துகிறார்கள். சிலர் அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்களை அடிமைப்படுத்துகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் படைத்த இயேசுவைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். இவர் முன்பாக எந்த அதிகாரமும் மேலானதல்ல. ஒருமுறை இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து அக்கறைக்கு போவோம் வாருங்கள் என்றார். "அப்பொழுது பலத்த சூழல்காற்று உண்டாகி படவு நிரம்பத்தக்கதாக, அவைகள் அதின்மேல் மோதிற்று கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார் அவர்கள் அவரை எழுப்பி; போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து; இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று என்றார். அவர்கள் மிகவும் பயந்து; இவர் யாரோ? காற்றும், கடலும் இவருக்குக் கீழ்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்" (மாற்கு 4:37–41).

இயேசு சகல அதிகாரமுடையவராயிருந்தபடியினாலே காற்றும் கடலும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து உடனே அமைதல் உண்டாயிற்று. இவ்வளவு வல்லமை படைத்த ஆண்டவர் நம்மோடு இருக்கும்போது நாம் ஏன் கலங்க வேண்டும். அவர் உங்களையும் என்னையும் நேசிக்கிறவராகயிருக்கிறார். தம்மிடத்தில் வருகிறவர்களை அவர் புறம்பே தள்ளுவதில்லை. சகல அதிகாரம் படைத்த ஆண்டவருக்கு நீங்கள் கீழ்படிவீர்கள் என்றால் நிலையான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வீர்கள்.

ஒருமுறை ஒரு திமிர்வாதக்காரனை படுக்கையோடு எடுத்துக்கொண்டு இயேசுவிடம் வந்தார்கள் அப்பொழுது திரளான ஜனங்கள் வீட்டில் இருந்தபடியால் அவர்களால் அவனை வீட்டிற்குள் கொண்டுசெல்லமுடியவில்லை. வீட்டின்மேல் ஏறி தட்டோடுகள் வழியாய்

ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனை படுக்கையோடே இறக்கினார்கள். "அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி; மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதுஷணம் சொல்லுகிற இவன்யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி; உங்கள் இருதயங்களில் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன்வீட்டிற்குப்போனான், அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள். அல்லாமலும் அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி அதிசயமான காரியங்களைக் இன்று கண்டோம் என்றார்கள்" (லூக்.5:20–26).

அன்பானவர்களே, இன்றைக்கு அநேகர் இயேசுவின் வல்லமைகளைக்குறித்து தியானிக்காமல் இயேசுவை ஒரு மதபோதகராகவே பார்க்கின்றனர். அவர் தேவனால் அனுப்பப்பட்டவரான மெய்யான தேவக்குமாரனாகிய இயேசு. அவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார். அவராலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. பாவிகளை இரட்சிக்கவே இயேசு கிறிஸ்து வந்தார். ஆகையால் "அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற்.1:22) நீங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அவருடைய வசனம் கிருபை பொருந்தினதாயும், வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது.



சகல அதிகாரமும் படைத்த ஆண்டவரை நம்பாதவர்கள் இன்று இருப்பதுபோல் அன்றும்இருந்தார்கள் அவர்கள் இயேசுவை நோக்கி: "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்கள். இந்த அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர்கள் யார்? என்று கேட்டார்கள்" (மத்.21:23). மனுஷர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில்சொல்ல வேண்டிய அவசியமில்லை. நம்மைப்பார்த்தும் கூட அநேகர் இப்படி கேள்வி கேட்கிறார்கள். என்னவென்றால்; உங்கள் ஆண்டவரை யார் பார்த்தது? அவர் எப்படியிருப்பார்? அவர் உங்கள் தேவனானால் நீங்கள் ஏன் இந்த குறைபாடோடு இருக்கிறீர்கள். இப்படி தாறுமாறான கேள்விகளைக்கேட்டு குழப்பநினைப்பார்கள் இந்த பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் கேட்டக்கேள்விகளுக்கு கர்த்தர் கொடுத்த பதில் "நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்கு சொல்வீர்களானால், நான் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லுவேன் யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார்.

அதற்கு அவர்கள்; தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னே ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மைக் கேட்பார். மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகிறோம். எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளேயே ஆலோசனை பண்ணி, இயேசுவுக்கு பிரதியுத்திரமாக எங்களுக்குத் தெரியாது என்றார்கள்" (மத்.21:23–27). ஆண்டவர் கேட்ட ஒரு காரியத்திற்கு அவர்கள் பதில் சொல்லாதிருக்கையில், அவரும் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல வில்லை.

விசுவாசம் என்பது கேள்விப்படுவதினாலே வரவேண்டும். இயேசு சகல அதிகாரம் படைத்தவர் என்பதை கேள்விப்படுகிறோம். அவர் அற்புதமாக அநேக நோயாளிகளை சுகப்படுத்தினார். அவர் தேவனால் அனுப்பப்படாதவராகயிருந்தால் இப்படிப்பட்ட அற்புதங்களை அவர் செய்யமுடியுமா? காற்றும், கடலும் அவருடைய வார்த்தைக்கு கீழ்படியுமா? சற்று யோசித்து பாருங்கள் கேள்வி கேட்பதினாலே நமக்கு

விசுவாசம் வந்துவிடாது கேள்விபடுவதினாலே விசுவாசம் வரும். "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோ.10:17) இயேசுவானவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவராகயிருக் கிறபடியால் அவர் சகல துரைத்தனங்களுக்கும் தலைவராகயிருக்கிறார் என்று கொலோ.2:10–ல் வாசிக்கின்றோம். இப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறபடியால் அவர் யாரையும் ஆட்டிப்படைக்கவில்லை. தமக்கு அதிகாரம் உண்டு என்று சொல்லி தம்பட்டம் அடிக்கவும் இல்லை. மாறாக சாதுவாக தேவ ஆட்டுக்குட்டியாக மனிதனுடைய பாவத்தை போக்கும் பலி ஆடாக வெளிப்பட்டார். "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ள வராகயிருக்கிறீர்கள்". பரிபூரணமான வாழ்வு கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறது. இதைப் நீங்கள் பெற்று அனுபவித்துக்கொண்டு வருகிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே அவருக்குள் வரத்தீர்மானியுங்கள்.

தானியேல் என்ற ஒரு தாசன் தேவனுக்கு முன்பாக குற்றமற்ற மனிதனாக வாழ்ந்தான். அரண்மனையில் வேலைசெய்கிற பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். ஆனாலும் அவன் மீது ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும், கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொருகுற்றமும் குறைவும் காணப்படவில்லை. அப்போது அந்த மனுஷர் நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டு பிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தை கண்டுபிடிக்கக் கூடாது என்று அறிந்து ராஜாவினிடத்தில் சென்று ராஜாவாகிய உம்மைத் தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக்குறித்தும் விண்ணப்பம்பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்போட, ராஜா கட்டளைப் பிறப்பித்து உறுதியான தாக்கீது செய்ய வேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப்பிரதானிகளும் தேசாதிபதிகளும், பிரப்புக்களும்,



மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனை பண்ணி இப்போதும் ராஜாவே மேதியருக்கும், பெர்சியருக்கும், இருக்கிற மாறாத பிரமானத்தின்படியே, அந்த தாக்கீது மாற்றப்படாத படி நீர் அதை கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டுமென்றுசொல்லி ராஜாவிடம் கையெழுத்து வாங்கினார்கள். தானியேலோ வென்றார். அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தும் தான் வழக்கமாக செய்துவருகிறபடி எருசலேமுக்கு நேராக தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான். இதனால் தானியேலை சிங்கங்களின் கெபியில் போட்டார்கள் தேவனோ தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தப்புவித்தார். குற்றம்சாட்டினவர்களோ சிங்கத்தால் அடித்து நொறுக்கப்பட்டார்கள். சலக அதிகாரமும் படைத்த தேவனுக்கு பயந்ததினால் தானியேல் காக்கப்பட்டடான். எனக்கு அன்பானவர்களே, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது என்று தம்முடைய சீஷர்களைப்பார்த்து இயேசு சொன்னார் (மத்தேயு 28:18). இந்த அதிகாரம் படைத்த கிறிஸ்து இயேசுவுக்கு கீழ்படிந்து அவர்மூலமாய் கிடைக்கின்ற ஆசீர்வாதங்களை பெற்று அனுபவியுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

**கேள்வி**

✪ **உலக அதிகாரங்களுக்கு நாம் எதிர்த்து நிற்கலாமா?**

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்" (ரோம.13:1,2). அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.

ஆண்டவரும் பேதுருவைப் நோக்கி: ''பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார் அதற்குப் பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லை. நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்'' (மத்.17:25–27). இவ்வசனங்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதை நமக்கு காட்டுகிறது. ஆகவே நாமும் தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு கீழ்ப்படிவோம்.

## 22. புதிய வஸ்திரம்
## New Garment

**பு**திய வஸ்திரம் அணிந்தவுடன் எல்லோருக்கும் ஒருவிதமான மகிழ்ச்சியுண்டாகும். புதிய வஸ்திரத்தை அணிந்துகொண்டு இங்கும் அங்கும் சென்று அதை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் காண்பித்து நல்லா இருக்கா என்று கேட்பார்கள். இப்படிப்பட்ட புதிய வஸ்திரத்துடன், ஒரு பழைய வஸ்திரத்தை இணைக்க யாராவது விரும்புவார்களா? நிச்சயமாக விரும்பமாட்டார்கள். ஏனென்றால் புதியது பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது. நம்முடைய ஆண்டவரும் இதைக்குறித்து ஒரு உவமையைச் சொன்னார். ''ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான் இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும். புதிய வஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது'' (லூக்.5:36).

யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் அநேகந்தரம் உபவாசித்து ஜெபித்து வருகிறார்கள். உம்முடைய சீஷர்களோ போஜனபானம்பண்ணுகிறார்களே அதெப்படியென்று வேதபாரகரும் பரிசேயரும் கேட்டதற்கு இவ்விதமான பதிலை கர்த்தர் அவர்களுக்குக்



கொடுத்தார். பிரியமானவர்களே, இந்த வேதபாரகரும் பரிசேயரும் பாரம்பரியங்களைக் கைக்கொண்டு சத்தியத்தை புறம்பே தள்ளுகிறவர்களாக இருந்தனர். நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள். புதிய வஸ்திரம் தரிக்கும்போது பழைய வஸ்திரத்தை களைந்துபோடுவதைப்போல, பழைய மனுஷனையும், அவனுடைய செய்கைகளையும் களைந்து போடவேண்டும் ''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாகிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின'' (2கொரி.5:17). ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது புது சிருஷ்டியாயிருக்கிறான். அவனுடைய பழைய பாவங்கள் எல்லாம் ஒழிந்துபோகிறது எப்படியென்றால் ஆண்டவருடைய வல்லமையுள்ள வசனம் அவனை மாற்றுகிறது. எப்படி சகேயுவை கர்த்தருடைய வசனம் மாற்றியபோது, நான் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாக திரும்ப கொடுக்கிறேன் என்றானோ, அதைப்போல ஒரு மனிதனை கர்த்தருடைய வசனம் பழைய பாவக்காரியங்களிலிருந்து விடுவித்து அவனை புதிய சிருஷ்டியாக மாற்றுகிறது. இது கிறிஸ்துவுக்குள் நடைபெறுகிற ஒரு நிகழ்வாக இருக்கிறது.

வேதாகமம் இரு ஏற்பாடுகளை கொண்டதாக இருக்கிறது. ஒன்று பழைய ஏற்பாடு, மற்றொன்று புதிய ஏற்பாடு. இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்டது பழைய ஏற்பாடு, கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது புதிய ஏற்பாடு. இந்த இரண்டு ஏற்பாடுகளும் சேர்ந்து பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படுகிறது. பழைய ஏற்பாடு அதாவது நியாயப்பிரமாணம் ''நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருக்கிறது. விசுவாசம்

வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே'' (கலா.3:24–26). பழைய ஏற்பாடு ஒரு குழந்தையை வழிநடத்தும் ஆயாவைப்போல் செயல்பட்டது. ஆசிரியரிடம் வந்த பின்பு ஆயாவுக்கு வேலை இல்லை. அதைப்போல விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கும் கீழானவர்களல்லவே, ''புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழைமையாக்கினார். பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது. உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது'' (எபி.8:13). புது உடன்படிக்கை அதாவது கிறிஸ்துவின் பிரமாணம் வந்தவுடன் நியாயப்பிரமாணம் பழமையாக்கப்பட்டது. எப்படி புது வஸ்திரம் வந்தவுடன் பழைய வஸ்திரத்தை தள்ளிப் போடுவோமோ அதைப்போல அது தள்ளப்பட்டது. ஏனென்றால் ''நியாயப்பிரமானமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது. அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். (எபி.7:19). ஆக, அதிக நம்பிக்கை ஏற்படுத்துகிற புதிய ஏற்பாடு இருக்கும்போது பழையவைகளைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்படி கைக்கொண்டால் கிறிஸ்து வந்தது வீணாய்போயிற்று. ''நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களில் பெலன் செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத் தக்கதாக நம்மைக் கட்டிருந்த நியாயப்பிரமானத்துக்கு நாம் மரித்தவர்களாகி அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'' (ரோம.7:5,6).

''ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை'' (ரோம.8:1) கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து மாம்ச ஜீவியத்திற்கு விலகி ஆவிக்குரிய ஜீவியம் செய்யும்போது நமக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நம்மை பாவம் மரணம் என்பவைகளின்



பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் புதிய பிரமாணமாகிய ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நம்மை பழைய பிரமாணங்களிலிருந்து விடுதலையாக்குகிறது என்று பார்க்கிறோம்.

விடுதலையாக்கப்பட்ட அநேகர் பாவப்பிரமாணங்களில் சிக்கி தவிக்கின்றனர். இதற்கு என்ன காரணம் என்று நாம் தியாணிக்கும்போது பேதுரு சொல்கிறார்: ''கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிறோம். அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது'' (2பேது.2:20–22) கர்த்தரை ருசி பார்த்துவிட்டு எப்படி பின் வாங்கிப்போகிறார்கள் என்று அநேகர் கேட்கின்றனர்.

இதற்கு தனிநபர் மட்டும் காரணமாக இருக்கமுடியாது. அவனுடைய குடும்பத்தார்கள் மற்றும் அவனுக்கு ஏற்படும் சூழ்நிலைகள் அவனை முற்றிலும் மாற்றிவிடுகிறது. கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளதிரும்பினது என்ற பழமொழியின்படியே கர்த்தர் தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி அவர்களைக் கழுவின பரிசுத்தத்தை நினையாமல் பன்றியைப்போல அநேகர் போய்விடுகின்றனர். இவர்களுடைய வாழ்க்கையின் பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாய் இருக்கும். ஆசீர்வாத குறைச்சலோடும், நிம்மதியில்லாமலும், சமாதானமில்லாமலும் வாழ்ந்து மரணத்தை தழுவிக்கொள்வார்கள்.

கர்த்தர் ஒரு மனிதனை புது உடன்படிக்கையின் இரத்தத்தினாலே பாவமர கழுவி பரிசுத்தப்படுத்துகிறார். இப்படி பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவன் கர்த்தரையும் அவருடைய புது உடன்படிக்கைக்கு மாதிரியாக உள்ள அப்பத்தையும் திராச்சைரசத்தையும் ஒவ்வொருவாரமும் நினைவு கூர்ந்து அவரில் நிலைத்திருக்க வேண்டும். புது உடன்படிக்கையின் இரத்தத்தையும் கிருபையின் ஆவியையும் நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் சர்தை சபைக்கு எழுதும்போது "...தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" (வெளி. 3:4,5).

வஸ்திரத்தை அதாவது தங்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிப்பதாகவும், அவர்களுடைய நாமங்களை கிறுக்கிப்போடாமல் பிதா முன்பாக அப்படிப்பட்டவர்களுடைய நாமத்தை அறிக்கையிடுவதாகவும் சொல்லுகிறார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ உன் வஸ்திரத்தை காத்துக்கொண்டிருக்கிறாயா? அப்படிக் காத்துக்கொண்டால் உனக்கும் வெண்வஸ்திரம் தரிக்கப்படும். கர்த்தர் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறது. இச்செய்தியின் மூலமாக இரண்டு ஏற்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து இருப்பீர்கள் என்று நம்புகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

### கேள்வி

✪ **பழைய ஏற்பாட்டிற்கும் புதிய எற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசங்களை வேதாகமத்தில் வேறு இடங்களில் நாம்**



**வாசிக்கின்றோமா?**

அநேக இடங்களில் நாம் இதைக்குறித்து படிக்கமுடியும். குறிப்பாக ரோமர், கலாத்தியர், மற்றும் எபிரெயர் புத்தகங்களில் அதிகமாக படிக்கலாம். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத்.5:38,39). இவ்வசனத்திலே கர்த்தர் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்ன வாசகத்தை சற்றுக் கவனித்துப்பாருங்கள். ஒருவேளை கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற நியாயப்பிரமாண கட்டளை புதிய ஏற்பாட்டுக்காலத்திற்கு போதுமானதாக இருக்குமானால் அவர் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனபடியால் ஒரு புதிய உபதேசத்தை அவர் சொல்லுகிறார். அந்த உபதேசம் ஆவிக்குரியதாக இருக்கிறது. எழுத்துக்கொள்ளும் ஆவியோ உயிர்ப்பிக்கிறது. அந்த ஆவிக்குரிய பிரமாணத்திற்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

"....நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.3:19). இன்று நாம் நியாயப்பிரமாண காலத்தின் கீழ் வாழவில்லை. கிருபையின் நாட்களில் வாழ்ந்து வருகிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் நம்மை ஆண்டுவருகிறார். நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை மீட்டு இரட்சித்து இருக்கிறார். ஆகையால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

## 23. விக்கிரகாராதனை
## Idol Worship

**வா**னத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவனாகிய கர்த்தர் தமக்கு ஒப்பாக யாதொரு விக்கிரகத்தையும் உண்டாக்கவேண்டாம் என்கிற கட்டளையை தமது ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு கொடுத்திருந்தார். அது என்னவென்றால், ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்'' (யாத்.2:3–4). மேலும் ''நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்'' என்றார் (யாத்.2:23). அவர்களோ அக்கட்டளையைத் தள்ளிவிட்டு விக்கிரகங்களை உருவாக்கவும் அவைகளை நமஸ்கரிக்கவும் செய்தார்கள்.

ஜீவனுள்ள தேவன் ஒருவர் உயிரோடிருக்கும்போது அவருக்கு ஒப்பாக ஒரு விக்கிரகத்தை உருவாக்குவது என்பது அறியாமை என்றே சொல்லவேண்டும். உயிரோடிருக்கிற ஒரு தலைவருக்கு சிலைவைப்பார்களா? ஒருவேளை அப்படிப்பட்ட நபர் மரித்துவிட்டால் சிலைவைப்பார்கள். வானத்தையும் பூமியையும் சர்வத்தையும் உண்டாக்கின பராபரன், தேவாதி தேவன் அவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை. அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் நித்தியமானவராக இருக்கிறார். இந்த ஜீவனுள்ள தேவனை ஆராதித்து வந்த இஸ்ரவேலர், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடி ''மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள்.

அதற்கு ஆரோன், உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி,



என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைத் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்கு கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில், எழுந்து குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்'' (யாத்.32:1–6). எகிப்திலிருந்து கரம்பிடித்து வழிநடத்திவந்த தேவனையும், மோசேயையும் தள்ளிவிட்டு தங்களுடைய பொன்னினால் செய்த ஒரு கன்றுக்குட்டியை நோக்கி இதுவே எங்களை எகிப்துதேசத்திலிருந்து வழிநடத்திய தெய்வம் என்று சொல்லி அதற்காக ஒரு விழா ஏற்பாடுசெய்து குடித்துக் கும்மாளமிட்டனர். அந்த ஜீவனுள்ள தேவனுக்குத்தான் எவ்வளவு எரிச்சல் உண்டாயிருக்கும்.

அன்பானவர்களே, சாலொமோன் ராஜா முதற்கொண்டு இவ்விஷயத்திலே தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தார்கள். சாலொமோனை ஞானியாக மாற்றியது தேவனாகிய கர்த்தர். அவனோ அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்து வீழ்ந்துபோனான். ''அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப்பண்ணினார்கள். சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை'' (1இரா.11:3,4). இன்றைக்கு இருக்கிறதான நமக்கு இது ஒரு படிப்பினையாக இருக்கிறது. அவ்வளவு பெரிய ஞானியையே விக்கிரகாராதனைக்கு அடிபணிய செய்த அந்நிய ஸ்திரீகள் இன்று பெலவீனமுள்ள சகோதரர்களை மாற்றுவது அதிக நிச்சயமல்லவா!

அன்பானவர்களே, “தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குக் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்” என்று 1யோவா. 4:12–ல் வாசிக்கிறோம். ஆகையினாலே அன்பின் ரூபமாக இயேசு இவ்வுலகத்தில் அவதரித்தார். தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த உபதேசத்திலே “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினாலே நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்றார் (யோவா.13:35). அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆதாம் முதல் இன்றுவரை ஒரு மனுஷனும் தேவனைக் கண்டதில்லை ஏனென்றால் “ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது” என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத்.33:20). மோசே அவரைப் பார்க்க விரும்பினான். ஆனாலும் தேவன் அவரை அவனுக்குக் காண்பிக்கவில்லை.

இதைக் குறித்து பவுல் தெளிவாக தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்; “ ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாத வருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக” (1தீமோ.6:16). அவர் காணக்கூடாதவர். அப்படிப்பட்ட தேவனுக்கு நாம் ஒரு விக்கிரகத்தை உருவாக்கமுடியாது. ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களில் பலர் இயேசுவுக்கு ஒப்பாகவும், மரியாளுக்கு ஒப்பாகவும், அவருடைய சீஷர்களுக்கு ஒப்பாகவும், சொரூபத்தையும், சாபச்சின்னமாகிய சிலுவைகளையும் வைத்து தொழுது கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட போதனைகள் வீணான ஆராதனையை ஜனங்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாக, விக்கிரகாராதனையும் இருக்கிறது. பவுல் கலாத்திய சபைக்கு சொல்லும்போது: “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள்,



சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்கிறார் (கலா.5:19–21). தேவன் நிலையான ஒரு ராஜ்யத்தை தமது குமாரன் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் இந்த ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. அப்படி அவர்கள் மீறி தாங்களாக தங்களுடைய மாம்ச செல்வாக்கை பயன்படுத்தி சபைக்குள்ளிருந்தாலும் அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இடம்பெறாது. அவர்கள் ராஜ்யத்தை சுதந்தரிக்க வேண்டுமானால் மேற்கண்ட 17வகையான பாவங்களையும் விட்டு தேவனிடத்திற்கும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திற்கும் மனந்திரும்பவேண்டும்.

“ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்” (1 கொரி.10:14). மேலும் “ நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கினபொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்” (அப்.17:29,30). அன்பானவர்களே, இப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிற அனைவரும் மனந்திரும்பவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

விக்கிரகமானது ஒரு பொருளேயல்ல என்று வேதாகமம் போதிக்கிறது. ஏனென்றால் அது மனுஷருடைய கைவேலையாயிருக்கிறது. “அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேளையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்கள்

யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள். இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு: அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்'' (சங்.115:4–9). அன்பானவர்களே, கர்த்தரை நம்புங்கள் அவர் நித்திய கன்மலை. ''உண்மையாய்த் தொழுதுகொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார் அவரை தொழுதுகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்'' (யோவா.4:23,24). இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் உங்களை உண்டாக்கின தேவனை எப்படித் தொழுதுகொள்ளுகிறீர்கள். வேதாகமம் போதிக்கிறபடியும், தேவனுடைய விருப்பத்தின்படியும் தேவனை தொழுதுகொள்ள முற்படுங்கள். அப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார், நீங்களும் தேவனுடையவைகளாக மாறுவீர்கள்.

### கேள்வி நேரம்

**✪ விக்கிரகாராதனை செய்கிறவர்களின் முடிவைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது?**

விக்கிரகாராதனை என்பது தேவனுக்கு விரோதமான செயல். நாம் பார்க்கிற அண்டசராசரங்களையும் உண்டாக்கியவர் தேவன். அப்படிப்பட்ட தேவனுக்கு ஒப்பாக ஒரு விக்கிரகத்தை இப்பூமியில் நாம் உண்டாக்குவது பாவச் செயல். வானத்திலும் பூமியிலும் இல்லாத ஒரு பொருளை நம்மால் உண்டாக்க முடியாதிருக்கும்போது, தேவன் உண்டாக்கின பூமியிலிருந்து எடுத்த ஒரு பொருளினால் ஒரு விக்கிரகத்தை செய்து, இது தான் தேவன் என்றால் அது எப்படி சாத்தியமாகும். மனிதர்களில் அநேகர் இப்படிச்செய்கிறபடியினாலே அவர்களுடைய முடிவைக்குறித்து வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது: ''....பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும்



இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்''(வெளி.2:7,8). உலகத்தின் முடிவிலே இது நடந்தேறும். தேவனுடைய கரத்திலிருக்கிற ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளுப்படுவான். தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவர்களின் முடிவு இப்படியே இருக்கும்.

இவைகளுக்கு தப்பிக்கொள்ள கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடுத்து, மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, உங்கள் பாவங்கள் போக கழுவப்படுங்கள். அப்பொழுது கர்த்தரால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். இக்கட்டளை பூமியில் உள்ள எல்லோருக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட கட்டளை.

## 24. ஜெயம்
## Victory

**வா**ழ்நாளெல்லாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழவேண்டும் என்று அனைத்து தரப்பினரும் விரும்புகின்றனர். இது நியாயமானதே. அதற்கு என்ன வழி. வாழ்க்கையில் தோல்வியை சந்தித்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்ள முற்படுகின்றனர். வெற்றி தோல்வி வாழ்க்கையில் சகஜம் என நினைத்து சிலர் அதை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. சிலருக்கு தோல்வியை தாங்கிக்கொள்ள மனபக்குவமில்லை. பரலோகத்தின் தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்ற இப்புவியில் மானிடனாக பிறந்த ஆண்டவர் இயேசு சிலுவையிலே வெற்றி சிறந்தார். இந்த வெற்றி நாயகர் உங்களோடு இருப்பாரானால், நீங்களும் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை இப்பூமியில் செய்ய இயலும்.

அதற்கு முதற்படியாக இருப்பது விசுவாசம். ''தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' (1யோவா.5:4). நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்கள் என்றால் உங்களுடைய விசுவாசத்தினால் உலகத்தை ஜெயிக்கலாம். உலகம் என்று சொல்லும்போது

உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்று நாம் அறிவோம். ஆகையால் "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா.2:15–17). ஆண்டவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற இப்பூமிக்கு வந்தார். அவரைப்போல ஒவ்வொருவரும் அவருக்குள் பிதாவின் திருசித்தத்தை நிறைவேற்ற பிரயாசப்படவேண்டும். அப்பொழுது பிசாசு கொண்டு வருகிறதான உலக ஆசை இச்சைகளை ஜெயிக்க முடியும்.

"பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிற தினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" என்று யோவான் எழுதுகிறார் (1யோவா.2:13,14). தேவ வசனம் நம்மோடு இருக்கும்போது பொல்லாங்கனை ஜெயிக்கமுடியும். ஆண்டவர் இயேசுவும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு சோதனைக்காரனாலே சோதிக்கப்பட்டபோது அவனை வசனத்தின் மூலமே ஜெயிக்கிறதை நாம் மத்தேயு 4–ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

பிசாசு, இயேசுவைநோக்கி: என்னைப் பணிந்துகொள் அப்பொழுது இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்றான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை



செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். கர்த்தர் உலக இச்சைக்கு அடிபணியாதவராக இருந்தார். ஆனால் யூதாசோ பிசாசுக்கு இடம் கொடுத்து முப்பது வெள்ளிக்காசை இச்சித்தான். அன்பானவர்களே, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8). அவன் இப்படி சுற்றிவரும்போது உலக இச்சைகளுக்கு எவன் அடிபணிகிறானோ அவனுக்குள் புகுந்து விடுவான். இப்படியே சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான். "அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" (லூக்.22:3). நாம் இடம் கொடுக்காமல் அவன் உள்ளே புகமாட்டான்.

ஆதி தாயாகிய ஏவாளும் சரி இன்று இருக்கிற நாமாக இருக்கட்டும் அவனுக்கு இடம் கொடுக்கும்போது, அதாவது செவி கொடுக்கும்போது, அவன் நமக்குள்ளே புகுந்து உலக ஆசை இச்சைகளை தூண்டுவான். இங்கே நாம் கர்த்தரை நினைத்து அவரைப்போல அப்பாலே போ சாத்தானே என்று வசனத்தின் மூலம் அவனை விரட்ட கற்றுக்கொள்ளவேண்டும். தேமா என்ற சீஷன் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து பிரிந்துபோனான் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

ஆக, பிசாசை ஜெயிக்க முதற்படியாக இருப்பது விசுவாசம். இந்த "விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் எழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது" என்று எபிரெய ஆசிரியர் எழுதுகிறார் (எபி.11:30). விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள் நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். இந்த விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். இதை கர்த்தர் செய்ய வல்லவர் என்று விசுவாசிக்க வேண்டும். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு

ஸ்தோத்திரம்'' (2கொரி.2:14). பவுலுக்கும் அவரைச் சார்ந்த மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அப்பொழுது இருந்த ஜனங்கள் மிகுந்த உபத்திரவத்தைக் கொடுத்தார்கள். அப்படியிருந்தபோதும் கர்த்தர் அவர்களோடு இருந்து கிரியை நடப்பித்து அவர்களைக்கொண்டு எல்லா இடங்களிலும் வெற்றி சிறக்கப்பண்ணினார். அன்பானவர்களே, நம்மோடு இருக்கும் கர்த்தர் பெரியவர் அவரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. இதை நாம் மறக்கலாகாது. இந்த நம்பிக்கையை இஸ்ரவேலர்கள் பற்றிக்கொண்டிருந்தனர். ஆகையால்தான் செல்லுமிடமெங்கும் வெற்றிவாகை சூடினர். இஸ்ரவேலர் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டுவருவதைக் கேள்விப்பட்ட போது புறஜாதியினர் பயந்து நடுநடுங்கினர். அன்று வெற்றி சிறக்கப்பண்ணின தேவன். இப்புதிய ஏற்பாட்டுக்காலத்திலே பவுல் போன்றோரையும் வெற்றி சிறக்கப்பண்ணினார்.

''கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே'' (2கொரி.1:20). கர்த்தர் நமக்காக பேசுகிறவராக இருக்கிறார். அவருக்குள் அப்படியே ஆகும். ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு'' என்று எழுதுகிறார் (பிலி.4:13). நம்மை பெலப்படுத்துகிறவர் கிறிஸ்து, நம்மை வெற்றிபெற செய்கிறவர் கிறிஸ்து. எப்படியென்றால் நாம் கிறிஸ்துவை சார்ந்திருக்கும்போது அவர் வெற்றிவீரராக இருக்கிறார். நம்மை ஒருபோதும் கைவிடார். ஆகையால், ''எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது'' என்று பவுல் குறிப்பிடுகிறார் (2கொரி.3:5).

இன்று எங்களால் ஆகும் என்று சொல்லுகிறவர்கள் வாழ்க்கையில் தோல்வியடைகிறார்கள். வாய் வீச்சு, வீராப்பு ஒன்றுக்கும் உதவாது. தாவீது கோலியாத்தை வீழ்த்தும்போது நான் கர்த்தருடைய நாமத்தில் வருகிறேன் என்று சொல்லி அந்தப் பெலிஸ்தனுக்கு எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து கவணில் வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட



எறிந்தான். அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்துபோனதினால், மாபெரும் வீரன் அப்படியே மடிந்தான். இன்றைக்கு நம்மால் ஒன்றுமில்லை ஆனால் நம்மில் இருக்கிறவர் பெரியவர்.

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அநேக வாக்குதத்தங்களை கர்த்தர் வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்கிறார். எபேசு சபைக்கு சொலும்போது: ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது என்கிறார். சிமிர்னா சபைக்கு சொல்லும்போது: ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது என்கிறார். பெர்கமு சபைக்கு எழுதும்போது: ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது என்கிறார்.

தியத்தீரா சபைக்கு எழுதும்போது: ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றெழுது என்கிறார். சர்தை சபைக்கு எழுதும்போது: ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றெழுது என்கிறார். பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது: ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன்

ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் என்கிறார். லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது: நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றெழுது என்கிறார். இவ்வாக்குதத்தங்களை பெற நீங்கள் உங்களுடைய விசுவாசத்தினாலே உலகத்தை ஜெயிக்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் அருளிய வாக்குதத்தமான ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள்.

**கேள்வி**

✪ **முடிவுபரியந்தமும் கிறிஸ்தவத்தில் நிலைத்திருந்து நான் ஜெயம் பெறுவேன் என்று ஒருவரால் சொல்லமுடியுமா?**

நிச்சயமாக முடியும். இது குறித்து பவுலினுடைய வசனத்தைக் கவனியுங்கள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (1தீமோ.4:7,8). பவுல் தனக்குள்ள அசையாத நம்பிக்கையை இங்கு வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்விதமான நம்பிக்கையுள்ளவனாக இருக்கவேண்டும். நம் தேவன் நம்பிக்கையின் தேவன் என்பதை நாம் ஒருக்காலும் மறந்து போகலாகாது.

## 25. பரலோக பாதை
## The Way of Heaven



**உ**லகத்திலே எத்தனையோ விதமான பாதைகளை நாம் காண்கிறோம். இவையெல்லாம் உலகத்தை சுற்றி சுற்றி வரும் பாதைகளாக இருக்கிறது. நாம் தியானிக்க இருக்கிற பரலோகப்பாதை தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று, இப்பாதை எங்கே துவங்குகிறது எங்கே முடிவடைகிறது என்றால் இயேசு சொல்கிறார்: நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். மேலும் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில்வரான்" என்றார் (யோவா.14:6).

இயேசு ஆண்டவர் பரலோகத்தின் வழியாக வாசலாக இருக்கிறார். அவர் மூலமாகவே நாம் பரலோகத்திற்கு அதாவது தேவன் இருக்கிற நித்தியமான வாசஸ்தலத்திற்கு செல்ல முடியும். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). உலகத்திலே இருக்கிற மனுஷர்களுக்குள்ளே ஒரே ஒரு நாமம் மட்டுமே மனிதனை இரட்சிக்கக்கூடியதாக இருக்கிறது. அது தேவனால் முன்குறிக்கப்பட்ட நாமம். தேவனால் தீர்க்கதரிசிகள் மூலமாக சொல்லப்பட்ட நாமம் அது இயேசுவின் நாமம். இவராலே இரட்சிப்பு. "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசா.35:10).

இன்று கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்த களிப்புடன் சந்தோஷத்துடன் அவரைப்போற்றி புகழ்ந்து பாடிக்கொண்டு வெற்றி நடைபோடுகிறார்கள். பிலிப்பு மந்திரி சம்பவத்திலே மந்திரி "இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார் மந்திரி அப்புறம் அவனைக் காணாமல்,

சந்தோஷத்தோடே தன் வழியே போனான்'' (அப்.8:38,39). கிறிஸ்துவுக்குள் ஒருவன் வந்தவுடன் ஆனந்த களிப்படைகிறான். அதாவது கர்த்தரால் மீட்கப்பட்டேன் என்ற சந்தோஷம். இந்த மந்திரி அந்த சந்தோஷத்தை அனுபவித்தான். இப்படி இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார். இது எப்படி நடைபெறுகிறது. அவனுடைய பாவத்தை கர்த்தர் மன்னிக்கிறார், அவன் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறான், அவனுக்கு நித்தியஜீவன் வாக்குதத்தமாக கொடுக்கப்படுகிறது. ஆகையால் பரலோக பாதையில் சந்தோஷத்தோடே வெற்றிநடைபோடுகிறான். உங்களுக்கு இப்படிப்பட்ட சந்தோஷம் இருக்கிறதா? அப்படியில்லை என்றால் இன்றே கிறிஸ்துவுக்குள் வர தீர்மானியுங்கள்.

பவுல் இது குறித்து பிலிப்பிய சபைக்கு எழுதும்போது: ''சகோதரரே, அதைப்பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்'' (பிலி.3:13–15). கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் இந்தவிதமான சிந்தையுடையவர்களாக இருக்கவேண்டும்.

பின்னானவைகளை மறக்கிறவர்களாக இருந்து கொண்டு முன்னானவைகளை நாடவேண்டும். எகிப்திலே அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர் கானான் தேசத்திற்கு அழைக்கப்பட்டபோது அணி அணியாக திரண்டனர். வனாந்திர பயணத்தின்போது சோர்ந்துபோய் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தனர். இதனால் அவர்களுடைய சவங்கள் வனாந்திரத்திலே மாண்டுபோனது. புறப்படும்போது இருந்தவர்களில் இரண்டுபேர் யோசுவா, காலேப் தவிர வேறொருவரும் கானானை சென்றடையவில்லை. இது நமக்கு ஒரு பெரும் பாடமாக அமைந்திருக்கிறது. பரம கானானை அடையும்படியாக அழைக்கப்பட்ட



நாம் இஸ்ரவேலரைப்போல பரலோகப்பாதையில் சோர்ந்து போவோமானால் நம்முடைய விசுவாசமும் குறைவுள்ளது.

இவ்வழி பரிசுத்த வழி, ''அது பரிசுத்த வழி என்னப்படும், தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப்போவதில்லை அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்'' (ஏசா.35:8,9). இவ்வசனத்தின் படியாக கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் மட்டுமே பரலோகபாதையில் நடப்பார்கள். பாவிகள் நீதிமான்களின் சபையில் நிலைநிற்பதில்லை என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். ஆண்டவரும் பரலோகராஜ்யம் தன் குமாரனுக்கு கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்ற உவமையிலே அந்த ராஜா கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனைக் கண்டு ''சிநேகிதனே, நீ கலியாணவஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜாபணிவிடைக்காரரை நோக்கி இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்'' (மத்.22:12,13).

கலியாண வஸ்திரம் தரித்திராத இந்த மனுஷன் புறம்பாக்கப்பட்டதுபோல, பரலோக பாதையில் பரிசுத்த வஸ்திரம் தரிக்காதவர்கள் அதாவது ஞானஸ்நானத்தினால் பாவங்கள் கழுவப்படாதவர்கள் புறம்பாக்கப்படுவார்கள். மீட்கப்பட்டவர்கள் மட்டுமே இப்பாதையில் நடக்கமுடியும். நீங்கள் கர்த்தரால் மீட்கப்பட்டவரா?

இயேசு சொல்லுகிறார்: ''ஒருவன் என்னைப்பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' (மத்.16:24). முதலாவது அவனை அவனே வெறுத்து தன்னுடைய பாடுகளோடு இயேசுவைப் பின்தொடரவேண்டும். சிலர் இவைகளை நினைத்தாலே பின்வாங்கிப்போய்விடுவார்கள் அல்லது சாக்குபோக்கு சொல்லி விலகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் முள்ளுள்ள இடத்தில் விதைக்கப்பட்டவர்கள். வேதாகமத்தில் 14 நிருபத்தை எழுதிய பவுல்

சொல்வதைக் கவனியுங்கள்: ''யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன் ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும் பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது'' (2கொரி.11:24–28). இத்தனை பாடுகளையும் நீங்கள் கர்த்தருக்காக அனுபவித்திருக்கிறீர்களா! சற்று எண்ணிப்பாருங்கள். இத்தனை பாடுகளையும் பவுல் கர்த்தருக்காக அநுபவித்தார். பரலோகபாதையில் இத்தனை பாடுகளும் இருக்கிறது. பாடுகள் இல்லையென்றால் அது கிறிஸ்தவம் அல்ல.

இத்தனை பாடுகளிலும் மற்றவர்களுக்கு உதவி செய்யும்படியாக அறிவுறுத்தப்படுகிறோம். ''மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினைஅடையவும், நீதிமான்களோ நித்தியஜீவனை அடையவும் போவார்கள் என்றார்'' (மத்.25:45,46). இச்சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள் என்றும் எதைச் செய்யாதிருக்கிறீர்களோ அதை எனக்கே செய்யாதிருக்கிறீர்கள் என்றுத் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நிமித்தமாக இப்பூமியிலே நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பாக்கியத்தைப் பெற்று இருக்கிறோம். கூடுமானால் விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக்கடவோம். சமாரியனைப்பற்றிய காரியத்தில் அவன் மனதுருகி குற்றுயிராக கிடந்த அந்த மனுஷனைத்



தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக்கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். அவனைப் பார்த்த ஆசாரியனும், லேவியனும் பக்கமாய் விலகிப்போனார்கள், பிரியமானவர்களே நீங்களும் அவ்விதமாக இருக்கிறீர்களா! அல்லது சமாரியனைப்போல உதவி செய்யும் மனப்பான்மையில் இருக்கிறீர்களா!

''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' (மத்.7:14). பரலோக பாதை ஜீவனுக்குப் போகிற வாசல் அது இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கும். கஷ்டப்பட்டுத்தான் அதில் பிரவேசிக்க முடியும். ஆகையால் ''இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்'' (மத்.7:13).

வெளிப்படுத்தினவிசேஷம் 7:14–ல் வாசிக்கிறோம் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் கூட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். இச் செய்தியை வாசிக்கிற நீங்கள் உங்களை இந்த ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்து இருக்கிறீர்களா! அப்படியில்லை என்றால் இன்றே முயற்சியுங்கள். பரலோகப்பாதையில் எபேசியர்4:4–6 வசனங்களில் சொல்லப்பட்டபடி ''.... ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். இந்த ஒற்றுமையை நீங்கள் கிறிஸ்துவின் சபையிலே பார்க்கலாம்.

## கேள்வி

**✪ இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்தான் பரலோக பாதையில் சென்று நித்தியத்தை அடைவார்களா?**

இல்லை. இது கிறிஸ்தவத்திலே ஒரு சாரார் தவராக போதிக்கப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. வெளிப்படுதின விசேஷத்தைப் பொருத்த மட்டில் நடந்தது, நடக்கிறது, நடக்கப்போவது

இந்த மூன்று காலகட்டங்களிலும் பேசப்படுகிறது. சில இடங்களில், போலவும், பாத்தபோது, கண்டேன், போலிருந்தது என்ற இந்தவிதமான வார்த்தைகளை நாம் இப்புத்தகத்திலே வாசிக்கிறோம். கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவுமிருக்கிறது. ''வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது'' (2பேது.1:20). ஆக, இன்றைய உலகத்தில் இருக்கிற 600 கோடி ஜனங்களில் எத்தனைபேர் இரட்சிக்கப்பட்டு நித்தியமான வாசஸ்தலமாகி பரலோகத்தில் இருப்பார்கள் அதை நாம் அறியோம். ஒவ்வொருவரையும் இரட்சிக்கும் கர்த்தர் அறிவார்.

## 26. பொய்நாவு
## Lying Tongue

''**பொ**ய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்'' என்று நீதி.21:6 வாசிக்கிறோம். இன்று ஜனங்கள் பொய் சொல்ல தயங்குவதில்லை. அதனால் என்ன? ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கலியாணம் செய்கிறார்களே. நான் ஒரே ஒரு பொய்தானே சொன்னேன் என்பார்கள். ஒரு பொய் சொன்னாலும் பொய்தான். அதையே பலமுறை சொன்னாலும் பொய் பொய்தான். பொய்சொல்லி பொருட்களைச் சம்பாதிப்பது சாகப்போகிறவர்கள் விடுகிற சுவாசத்தைப் போலிருக்கிறது. அதனால் என்ன பயன்? பயன் ஒன்றுமில்லை. முதல் நூற்றாண்டு காலத்தில் அனனியா, சப்பீராள் என்ற தம்பதியர் தங்களுடைய காணியாட்சியை விற்று தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

பேதுரு அவனை நோக்கி; அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதன் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையா? நீ உன்



இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான். இந்த வார்த்தைகளை கேட்டவுடனே அனனியா விழுந்து ஜீவனை விட்டான். ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு அவனுடைய மனைவி சப்பீராள் நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி; நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் என்று கேட்டதற்கு அவள்; ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள். கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் கொண்டுபோவார்கள் என்று சொல்ல அவளும் பேதுருவினுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

அன்பானவர்களே கர்த்தருடைய சபையில் இருக்கிற ஒவ்வொருவரும் தேவ சமூகத்திலே உள்ளதை உள்ளதென்று சொல்ல வேண்டும். அதைத் தவிர்த்து பொய் சொல்ல துணிந்தால், அனனியா சப்பீராளுக்கு ஏற்பட்ட கெதிதான். மேலும், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் இழக்க நேரிடும். இப்பொழுதெல்லாம் அப்படி ஒன்றும் நடக்காது என்று மெத்தனமாக இருந்துவிடாதீர்கள். ஜீவபுஸ்தகத்தில் உங்களுடைய நாமத்தை கர்த்தர் எடுத்துப்போடுவார்.

2 இரா.5:20–27 வசனங்களில் கேயாசியைப் பற்றி படிக்கிறோம். தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரனான கேயாசி என்பவன், அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்; நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு, நாகமானைப் பின் தொடர்ந்தான்; அவன் தன் பிறகே ஓடிவருகிறதை நாகமான் கண்டபோது, அவனுக்கு எதிர்கொண்டு போக இரதத்திலிருந்து குதித்து சுகசெய்தியா என்று கேட்டான். அதற்கு அவன் சுகசெய்திதான் தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு

மாற்றுவஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான். அதற்கு நாகமான்; தயவுசெய்து, இரண்டு தாலந்தை வாங்கிக் கொள் என்று சொல்லி, அவனை வருத்தி இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு கைகளில் இரண்டு மாற்று வஸ்திரங்களோடே கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்துபோக தன் வேலைக்காரரான இரண்டுபேர்மேல் வைத்தான்.

அவன் மேட்டண்டைக்கு வந்தபோது, அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து அந்த மனுஷரை அனுப்பிவிட்டான்; அவர்கள் போய்விட்டார்கள். பின்பு அவன் உள்ளேபோய்த் தன் ஏஜமானுக்கு முன்பாக நின்றான். கேயாசியே எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு அவன்; உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான்.

அப்பொழுது அவன் இவனைப்பார்த்து அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும் வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும், ஆடு, மாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி அவன் சமூகத்தை விட்டுப்புறப்பட்டுப் போனான்.

தேவன் ஒரு மனிதனுக்கு சுகம் கொடுத்து பின்பு அவனிடத்திலிருந்து கைக்கூலி வாங்குபவர் அல்ல என்பதை அறிந்த எலிசா நாகமானிடத்திலிருந்து எந்த ஒரு பொரும் வாங்காமல், அவன் கொடுத்தாலும் தட்டுதல் பண்ணிவிட்டான். இதையறியாது கேயாசி பொய்சொல்லி அவைகளை வாங்கி குஷ்டரோகியானான். இன்று அதிகாரிகள் வாங்க மறுத்தாலும் அவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் வாங்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

அதைப்போல உடன் ஊழியர்களும் சற்று சிந்தித்து செயல்பட வேண்டும். இழிவான ஆதாயத்தை இச்சித்து குஷ்டரோகியான, இந்த



கேயாசியின் நிலைமை உங்களுக்கும் வந்துவிடக்கூடாது.

பிரியமானவர்களே, “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள், அவையாவன; மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால் அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி சகோதரருக்குள்ளே விரோதத்தைஉண்டு பண்ணுதல் ஆகிய இவைகளே” (நீதி.6:16–19). கர்த்தர் வெறுக்கக்கூடிய இந்த ஏழுகாரியங்களில் பொய்நாவும் ஒன்று. அவர் வெறுக்கிற காரியத்தை நாம் செய்யலாமா? சற்று சிந்தித்துப்பாருங்கள். உங்களுக்கு என்ன குறை வைத்திருக்கிறார்? நீங்கள் ஏன் பொய்சொல்ல வேண்டும்? யாதொரு காரியமானலும் அதைத் தேவனுக்கு தெரியப்படுத்தலாமே! அவர் உங்கள் குறைகளை நிறைவாக்க வல்லவராயிருக்கிறாரே! தாவீது சொல்வதை கவனியுங்கள்: “பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்; உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்” (சங்.119:163).

நீங்கள் எதைப்பகைக்கிறீர்கள்? தாவீதைப்போல பொய்யைப் பகைத்து புறம்பாக்குங்கள், கர்த்தருடைய வேதத்தை நாடுங்கள். பவுல் இதுகுறித்து எபேசு சபைக்கு எழுதும்போது; “அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்” என்று எழுதுகிறார். (எபே.4:25) இன்று இவ்விதமான ஒரு ஐக்கியம் இருக்குமானால் பொய்க்கு இடமில்லாமற்போகும். அங்கே தேவன் வாசமாயிருப்பார். ஒருவரையொருவர் நம்பி பலகாரியங்களைச் செய்ய வழிகிடைக்கும். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உன் வாழ்வில் பொய்யை களைந்து மற்றவர்களோடு மெய்யைப் பேசுவாயா? அப்படி பேசுவாயானால் உன் தேவன் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் நீ கீழாகாமல் மேலாவாய்.

“சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும் பொய்நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும்” (நீதி12:19). தேவன் சத்தியபரர் அவர் என்றும் நிலைத்திருப்பார். பொய்யனும் அவனைசார்ந்த பொய்யர்களும் ஒருநாள் அழிக்கப்படுவார்கள். “...பொய்யர் அனைவரும் இரண்டாம்

மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிறகடலிலே பங்கடைவார்கள்'' (வெளி.21.8). குற்றவாளிகளுக்கு குற்றத்திற்கேற்ப நீதிபதி 6 மாதம் அல்லது 1 வருடம் சிறை தண்டனை என்று தீர்ப்பு சொல்லுகிறார். அதை ஏற்று அந்தக் குற்றவாளி தண்டனையை அனுபவிக்கிறான். அதைப்போல பொய்பேசுகிறவர்களை கர்த்தர் தண்டிக்க இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலை வைத்திருக்கிறார். பொய்யர் அனைவரும் அந்தக் கடலிலே தள்ளப்படுவார்கள்.

சாதாரண செங்கல் சூளைக்கு பக்கமே நாம் போகமுடிவதில்லை. ஏன்? வீட்டில் தண்ணீர் காயவைக்கும்போது அந்த அனல் பக்கம் நம்மால் பக்கமாக உட்கார முடியுமா? யோசித்துப்பாருங்கள். அப்படியென்றால் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் எப்படியிருக்குமென்று நினைத்தாலே இனிமேல் ஒரு பொய்யும் பேசக்கூடாது என்று முடிவெடுக்கிறோம். அன்பானவர்களே, பொய் பேசுகிறவர்களை தேவன் தண்டியாமல் விடார். சத்தியத்திலே நிலை நிற்காதவனை வேதம் பொய்யன் என்று சொல்லுகிறது. '' நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்'' (யோவா.8:44) பிசாசு ஆதிமுதலே சத்தியத்திற்கு எதிராளியாக செயல்பட்டுவருகிறான்.

தேவனை சார்ந்தவர்கள் அவனோடு போராடி வருகிறார்கள். தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவன் பொய்க்கும், பொய்க்குப்பிதாவாகிய பிசாசுக்கும் செவிகொடுத்து வழிவிலகிப்போய் அழிவை நோக்கி மாண்டுபோகிறான். இச்செய்தியை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே உன் வாழ்வில் பொய்யைகளைந்து மற்றவர்களோடு மெய்யைப்பேச கற்றுக்கொள் ''உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு



மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்'' (மத்.5:37) கர்த்தர் தாமே உங்களை பொய்யனிடமிருந்து காப்பாற்றுவாராக!

**கேள்வி**

✪ **யார் பொய்யன்?**

இக்கேள்விக்கு விடை சுலபமாக சொல்லி விடுவீர்கள். நாம் கேட்ட செய்தியின்படி பிசாசுதான். அவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் என்பீர்கள் சரியானதே. அதே வேளையில் ''தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?'' (1யோவா. 4:20). ஆக, கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராத எவனும் பொய்யன் என வேதம் சொல்லுகிறது. அப்படியென்றால் பிசாசும், சகோதரனை பகைக்கிற எவனும் பொய்யராக இருக்கிறார்கள்.

இந்த இடத்திலே தான் கண்ட சகோதரன், அவன் யார் என்று நாம் தியானிக்கும்போது, அறிந்த சகோதரன். அவனிடத்திலே அன்புகூராதிருக்கும்போது, காணாதிருக்கிற தேவனிடத்தில் அவன் எப்படி அன்புசெலுத்துவான். உதவிகேட்டு வந்த ஒரு சகோதரனுக்கு உதவி செய்யாத ஒருவன் நான் வெளியூரில் உள்ள உன் நண்பனுக்கு உதவி செய்கிறேன் என்றால் எப்படியிருக்கும் சற்று யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்டவர்கள் பொய்யர்களாகவும் அநேகரை வஞ்சிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வுலகத்திலே இப்படிப்பட்ட பொய்யர்களை நாம் அனுதினமும் பார்க்கிறோம். இப்பொய்யர்களுக்கு விலகி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

## 27. ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கை The Beginning Confidence

**இ**ன்றைய நாளிலே ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கை – The

Beginning Confidence என்ற தலைப்பின் கீழ் தியானிக்கவுள்ளோம். எல்லோருக்குமே ஆரம்ப நம்பிக்கை மிக சிறப்பானதாகவே இருக்கும். நாட்கள் செல்லச்செல்ல அந்த நம்பிக்கையிலிருந்து சற்று குறைய காணப்படுவார்கள். இதற்கு என்ன காரணம்? அவர்களுடைய தவறான புரிந்துகொள்ளுதல், மற்றவர்களால் ஏற்படக்கூடிய அவநம்பிக்கை, சோதனை இப்படிப்பட்டவைகளாலே ஆரம்ப நம்பிக்கை சிலருக்கு அற்றுப்போகும் அபாயம் ஏற்படுகிறது. ‘‘நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர் களாயிருப்போம்’’ (எபி.3:14).

ஆரம்ப நம்பிக்கை மிகவும் அற்புதமானது. இந்த நம்பிக்கையை நாம் வாழ்நாளின் முடிவு பரியந்தமும் பற்றிக்கொண்டவர்களாக இருக்கவேண்டும். கொடுத்தால் நல்லவர் கொடாவிட்டால் கெட்டவர் என்பதைப் போல ஆசீர்வாதத்தை கொடுத்தால் சபைக்கு சென்று சாட்சியுள்ள வாழ்க்கை, இல்லை என்றால் கர்த்தரை யார் பார்த்தது என்று சொல்லி ஆண்டவரை புறம்பாக்கி போடுவது. இப்படியிருந்தால் நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருக்கமுடியாது. மாறாக பிசாசோடும் அவனுடைய கூட்டாளிகளோடுந்தான் உங்களுக்குப் பங்கிருக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நம்பிக்கையிலே குறைந்துபோன கலாத்திய சபையாரைப் பார்த்து, இப்படியாக கேட்கிறார்; ‘‘அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்’’ (கலா.4:15). பவுலுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்ட இந்த சபையார் விசுவாச விஷயத்தில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தனர். முழு நம்பிக்கையைப் பெற்றவர்களாகவும், கர்த்தருக்காக எதையும் செய்யும் வைராக்கியமுள்ளவர்களாகவும் இருந்தனர் ஆகையால் பவுல் இவர்களைக் குறித்து நானே உங்களுடைய நம்பிக்கைக்கு சாட்சியாயிருக்கிறேன் என்று எழுதுகிறார். மேலும் கலாத்திய



சபையாரை நோக்கி; ‘‘நீங்கள் நன்றாய் ஓடினீர்களே சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்கு தடைசெய்தவன்யார்?’’ (கலா5:7). இன்றைய நாட்களிலும் இதே சூழ்நிலையை நாம் சபைகளிலே காணமுடிகிறது. நன்றாக ஒப்புக்கொடுத்து ஞானஸ்நானம் பெறுகிறார்கள். நாளடைவில் நம்பிக்கை அற்றுப்போய் சபைக்கு வராமல் நின்றுவிடுகின்றனர்.

யாரோ ஒருவன் அவர்களை தடைசெய்திருக்கிறான் என்பது நமக்கு தெரியவருகிறது. ஒப்புக்கொடுக்கப்பட்ட நபர் ஆரம்பவிசுவாசத்தை அதாவது அந்த நம்பிக்கையை விடாது பற்றிக்கொண்டு கர்த்தருக்குள் வளர பிரயாசப்படவேண்டும். உலக மக்களுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து விசுவாசத்தை விட்டும், ஆரம்ப நம்பிக்கையை விட்டும் பின்வாங்கிப்போவாரானால் அவருடைய வாழ்க்கை மிகவும் மோசமானதாக போய்விடும். இதை நான் பயமுறுத்துகிறதற்காகச் சொல்லவில்லை. தேவ கோபத்திற்கு ஆளாவீர்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள எபேசு சபைக்கு கர்த்தர் சொல்லும்போது ‘‘ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்’’ (வெளி.2:4,5). இங்கே எச்சரிப்பின் சத்தம் ஆதியிலே செய்த கிரியைகளைச் செய்வாயாக என்று தொனிக்கிறது. ஆரம்பத்திலே சீஷர்களில் சிலர் இயேசுவின் அற்புதத்தை கண்டு வலைகளையும், படவுகளையும், தங்களுடைய தகப்பனையும் விட்டு இயேசுவின் பின்னே சென்றனர்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு அவர்கள் மறுபடியும் தங்களுடைய பழைய வேலைக்கே திரும்பினர். அப்பொழுது ஆரம்ப நம்பிக்கை அவர்களில் குறைந்தது, கர்த்தர் அவர்களை சந்தித்து, என்

ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். ஒவ்வொருவரும் ஆரம்ப கிரியைகளுக்கு திரும்பவேண்டும். அப்படி மனந்திரும்பாதபட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் என்கிறார். சிலர் தங்களுடைய விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கையிடுவார்கள் அப்படி செய்வது நல்லது தான். ஆனால் அவைகளில் நிலைத்திருக்கவேண்டுமே! பேதுருவும் அப்படி அறிக்கையிட்டவர்களில் ஒருவன். "பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக; உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான். இயேசு அவனை நோக்கி; இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்" (மத் 26:33–35).

பேதுரு இந்த அறிக்கையில் நிலைத்திருந்தானா? இல்லையே. அந்த இரவிலே அவரை மூன்று முறையும் மறுதலித்தான். அவனோடு சேர்ந்து உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டோம் என்று சொன்ன மற்ற சீஷர்களும் இருக்கும் இடம் தெரியாது ஓடிவிட்டனர். இது ஆரம்பத்தில் கர்த்தர் மீது கொண்ட நம்பிக்கையா? அன்பானவர்களே, பாவத்திலிருந்து நம்மை மீட்ட கர்த்தரை கடைசிவரை வாழ்வோ, தாழ்வோ எது வந்தாலும் நம்மைபிரிக்காது காத்து, கர்த்தரை துதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலருடைய நம்பிக்கையே இப்படியென்றால் உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை சற்று சீர்தூக்கிப்பாருங்கள்.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று (அப்.2:42) வாசிக்கின்றோம். அவர்கள் மட்டுமே இவைகளில் நிலைத்திருக்க வேண்டும் என்று வேதம் போதிக்கவில்லை. நாமும் அவர்களைப்போல அந்த ஆரம்பநம்பிக்கையிலே நிலைத்திருந்து இவைகளை கைக்கொள்ள



வேண்டும் என்பதற்காக பரிசுத்த ஆவியானவர் இவ்வசனங்களை கொடுத்து நமக்கு நினைப்பூட்டி எழுப்பிவிடுகிறார். நாம் அப்பத்தையும், திராட்சரசத்தையும் வைத்து கர்த்தருடைய மரணத்தை நினைவு கூராதிருப்போமானால் இயேசு சொல்வதைக் கவனியுங்கள்; நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்கிறார். நீங்கள் அவரில் நிலைத்திருப்பதற்கு இதுவே அடையாளமாயிருக்கிறது. ஆதி கிறிஸ்தவர்கள் இவைகளில் நிலைத்திருந்தார்கள். ஆகையால் இவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இன்றைக்கு மாதத்திற்கு ஒரு முறையும் வருடத்திற்கு ஒரு முறையும் அப்பத்தையும் இரசத்தையும் நினைவுகூர்ந்துவிட்டு, நானும் அப்போஸ்தலருடைய உபதேசத்திலே உறுதியுடனிருக்கிறேன் என்றால் எப்படி சாத்தியமாகும்? அவர்கள் ஒவ்வொருவாரமும் சபையாக கூடிவந்து கர்த்தருடைய மரணத்தை நினைவுகூர்ந்தார்கள்.

மேலும், "அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிறபேர் வழங்கிற்று" (அப்.11:26). சீஷர்கள் என்றால் இயேசுவை பின்தொடருகிறவர்கள், அவர் விட்டுசென்ற உபதேசங்களை கைக்கொண்டு மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறவர்கள், இன்னும் சொல்லப்போனால் இயேசுவை தரித்தவர்கள். இவர்களே கிறிஸ்தவர்கள். இவர்களிலே கிறிஸ்து வாசமாயிருப்பார். கிறிஸ்துவின் வாசனை இப்படிப்பட்டவர்கள் மூலமாகவே வெளிப்படுகிறது. நீங்கள் இப்படிப்பட்ட கிறிஸ்தவரா? அப்படியில்லை என்றால் இன்றே அவர்களைப்போல மாற முற்படுங்கள்.

"கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள், உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்"

(1பேது.3:15). இன்றைக்கு ஒரு உலக மனிதனைப் பார்த்து 'ஐயா நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால்' ஏதோ இருக்கிறேன் என்பார். அதாவது பட்டும் படாமல் உறுதியில்லாத வார்த்தைகளை சொல்லுவார், காரணம் என்ன வென்றால் அவர்களுடைய வாழ்க்கை அப்படிப்பட்டதாக சரியான அஸ்திபாரமில்லாததாக இருப்பதே ஆகும். தாங்கள் எங்கே போகிறோம் என்பதை அறியாது, கோடான கோடி ஜனங்கள் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கர்த்தரை அறிந்தவர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லலாகாது. உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் நீங்கள் சாந்தத்தோடு பதில் சொல்லவேண்டும். அப்பொழுது அவர்களும் அந்த நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்களிடத்திலே சென்று ஐயோ நானே படாதபாடு படுகிறேன்! ஒவ்வொருநாளும் எனக்கு வரக்கூடிய சோதனைகள் வேறு யாருக்கும்வரக்கூடாது என்று சொல்லிக்கொண்டே போனால், நாம் அவர்களை நம்பிக்கையில் ஊன்றக்கட்டுகிறவர்களாக அல்ல, அவர்களுக்கு இருக்கிற கொஞ்ச நம்பிக்கையையும் இடித்துப்போடுகிறவர்களாக இருப்போம். உலகத்திலே யாருக்குத்தான் பாடுகள், பிரச்சனைகள் நோய்கள் இல்லை.

மனிதனாக பிறந்த ஒவ்வொருவனும் இவைகளை தன் வாழ்நாள் காலத்தில் அனுபவித்தேயாக வேண்டும். கர்த்தர்மேல் உன் நம்பிக்கையை வைப்பாயானால் அது இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. ஏனென்றால் அவரால் கூடாதது ஒன்றுமில்லை. அந்த தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் உங்களுடைய நம்பிக்கையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல தயங்காதிருங்கள். உங்களுடைய நம்பிக்கையிலே உறுதியுடனிருந்து முடிவுபரியத்தமும் காத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் "முடிவு பரியத்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்.24:13). He that shall endure unto the end the same shall be saved. கர்த்தர் தாமே முடிவு பரியந்தம் நிலைநிற்க உங்களுக்கு உதவி செய்வாராக!

**கேள்வி**

✪ **ஆரம்ப நம்பிக்கை, நமக்கு எதைக்குறித்துப் போதிக்கிறது?**



"நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்.2:12,13). இந்த நம்பிக்கையிலே நீங்கள் நிலைத்திருந்து, இவ்வுலகத்திலே பிசாசு கொண்டுவருகிறதான லௌகீக இச்சைகளை வெறுத்து, அவனுக்கு எதிர்த்து நின்று, தெளிவான எண்ணமுடையவர்களாக வாழ்ந்து, இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்.

ஆரம்பத்திலே நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் கொண்ட நம்பிக்கைக்கு திரும்புங்கள். பரிசுத்தம் நம்மை பரலோகம் சேர்க்கும். நம்பிக்கை நம்மை வாழ்நாளெல்லாம் வாழவைக்கும். அவநம்பிக்கை ஆளை ஏமாற்றும். மேலும், உங்களுடைய ஆயுள் சக்கரத்தையும் அழித்துவிடும். ஆகையால் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உன் நம்பிக்கையை வேதாகமம் போதிக்கும் வார்த்தைக்கு உன்னை உறுதிப்படுத்திக்கொள்.

## 28. புறப்படு
## Get Thee

"**க**ர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப் படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்" (ஆதி.12:1–4). கர்த்தர் உங்களைப் பார்த்து நீயும் இந்த ஆபிரகாமைப்போல தேசம், இனம், தகப்பனுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டு நான் காண்பிக்கும் தேசத்துக்குப்போ என்றால்

உடனே விட்டு விட்டு போய்விடுவீர்களா? சற்றுயோசிப்பீர்கள்! ஆபிரகாமோ அப்படியல்ல ஒரு அடி நிலங்கூட கையாட்சிக்குக் கொடாதிருக்கையில் அழைத்த கர்த்தரை முழுமையாக நம்பி தன்னுடைய தேசம், தன்னுடைய இனம் தன்னுடைய தகப்பனுடைய வீடு இவையாவையும் விட்டு புறப்பட்டுப்போனான். ஆகையால் விசுவாசத்தின் தகப்பன் என்ற பட்டத்தைப் பெற்றார்.

மேலும், எலியா தீர்க்கதரிசியை அறிவீர்கள். அவன் யேசபேலுக்கு பயந்து தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய் தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். பின்பு "அவன் வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாகவேண்டும் என்று கோரி; போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின் கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான். அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான். அவன் விழித்துப்பார்க்கிறபோது இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன் புசித்துக்குடித்துத் திரும்பப்படுத்துக்கொண்டான். கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி எழுந்திருந்து போஜனம்பண்ணு நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான் அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான். இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி அவர் எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்'' (1இரா.19:4–9).

சோர்ந்துபோன எலியாவை கர்த்தர் தட்டியெழுப்பி புசிக்க ஆகாரமும் குடிக்க தண்ணீரும் கொடுத்து நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீங்களும் கர்த்தருக்காக பண்ணவேண்டிய பிரயாணம்



வெகுதூரம். சோர்ந்து போகாதிருங்கள்; கர்த்தருடைய நாமத்தை அறிவிக்க புறப்படுங்கள் காலதாமதம் செய்யாதிருங்கள். மாம்சம் பெலவீனமுள்ளதாயிருக்கிறது ஆனால் ஆவியோ உற்சாகமுள்ள தாயிருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கிறபடியால் சிலவேளைகளில் நாம் சோர்ந்துபோகிறோம். ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும் பெலப்படுத்துகிறவர் தேவன். அவருடைய சமூகத்தில் உங்களை ஒப்புக்கொடுத்து. அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்ய ஒவ்வொருநாளும் ஆயத்தமாயிருங்கள். உங்களுடைய பயத்தையும், தேவையற்ற சிந்தையையும் எடுத்துப்போட்டு கர்த்தருடைய வேலையைச் செய்ய ஆயத்தப்படுங்கள். சோர்ந்துபோன எலியாவைப் பெலப்படுத்தின கர்த்தர் உங்களையும் பெலப்படுத்துவாராக!

மீதியானியரின் காலத்திலே இஸ்ரவேலர் மீதியானியருக்கு அடிமைகளாக இருந்தார்கள். அந்தக் காலத்திலே கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். கர்த்தருடைய தூதனானவர் அவனை சந்தித்து பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அதற்கு இதியோன் ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? என்றான் ''அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து; உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்'' (நியா.6:14).

எகிப்திலே 430 வருடங்களாக அடிமைகளாக இருந்த இஸ்ரவேலரை கர்த்தர் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் விடுவித்தார். இதையெல்லாம் நினைவுகூர்ந்த கிதியோன் அந்த அற்புதங்கள் எங்கே நாங்கள் இப்பொழுது மீதியானியருக்கு அடிமைகளாக இருக்கிறோம் என்று தேவதூதனை நோக்கி சொல்லுகிறான். கர்த்தருடைய கைகுறுகிப்போகவில்லை என்பதை

நிருபிக்க, உனக்கு இருக்கிற இந்தப் பெலத்தோடே போ என்றார். கிதியோனை புறப்படப்பண்ணி 300 பேராலே மீதியானியரை ஜெயித்தார்.

முற்பிதாக்களின் காலத்திலே மோசேயைக் கொண்டு நடப்பித்த பத்துவிதமான வாதைகளுக்குப்பின்பு அணியணியாய் எகிப்தைவிட்டு கர்த்தர் புறப்பட பண்ணினார். பார்வோன் ‘‘இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து; நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து என் ஜனங்களைவிட்டுப் புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டுபோங்கள் என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றான்’’ (யாத்.12:31,32). இஸ்ரவேலரை அடிமைப்படுத்திவைத்திருந்த பார்வோன் எகிப்திய தலையீற்றனைத்தும் சாவதைப்பார்த்த பார்வோன் இரவோடு இரவாக இஸ்ரவேலரைப் புறப்படப்பண்ணினான்.

‘‘கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள். இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்’’ (யாத்.12:36). கர்த்தரை ஆராதிப்பதற்கு தடையாக இருந்த பார்வோனின் வாயைக் கொண்டே பேசினார். நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள் என்று இஸ்ரவேலரை, எகிப்தை விட்டு அனுப்பிவிட்டான். இன்றைக்கு சிலருடைய சாக்குபோக்கு, அவர்களாலே நான் ஆராதனைக்கு வரமுடியவில்லை. எங்கள் அலுவலகத்தில் ஞாயிற்றுக் கிழமை வேலை நாளாக மாற்றிவிட்டார்கள் ஆகையால் என்னால் வரஇயலாது என்று சொல்வதற்கு வாய்பே இல்லை. இஸ்ரவேலை பார்வேனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த கர்த்தர் உங்களையும் புறப்படப்பண்ணுவார்.

இஸ்ரவேலை புறப்படப்பண்ணியபோது பஸ்காவை அனுசரிக்கும்படியாக கர்த்தர் கட்டளையிட்டார். இஸ்ரவேலர்கள் தங்களுடைய சந்ததிக்கு இவைகளை சொல்லி வருடந்தோறும் பஸ்கா பண்டிகையை ஏழுநாளும் அனுசரித்தார்கள். ‘‘அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளிப்புள்ள அப்பம்



உன்னிடத்திலே காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும்உன்னிடத்தில் காணப்படவேண்டாம்; அந்நாளில் நீ உன் புத்திரனை நோக்கி; நான் எகிப்திலிருந்து புறப்படுகையில் கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படி நடப்பிக்கப்படுகிறது என்று சொல்’’ (யாத்.13:7,8) என்றார். அடிமைத்தனத்திலிருந்து புறப்படப்பண்ணினதை இஸ்ரவேலர்கள் புது உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும் வரை அதைக் கைக்கொண்டுவந்தார்கள். உலகத்தின் பாவத்தைப் போக்க தேவன் தம்முடைய குமாரனையே ஒப்புக்கொடுக்க சித்தமானார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனின் பாவத்தைப்போக்க பலி ஆடாக இவ்வுலகத்திலே அவதரித்தார். அவர் தன்னுடைய முப்பதாம் வயதில் யோவானாலே திருமுழுக்கு பெற்று மூன்றரை வருடங்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து சிலுவையிலே அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்த்தார்.

ஆண்டவருடைய கடைசி கட்டளை இது. "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்’’ (மத்.28:18–20)

மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது. ஆகையால் தம்முடைய சீஷர்களை நோக்கி; நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றார். இக்கட்டளையை ஏற்றுக்கொண்ட சீஷர்கள் பிரசங்கிக்க தொடங்கினார். இதனால் பொறாமை கொண்ட பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தாரனைவரும் ‘‘அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள். கர்த்தருடைய தூதன்

இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவந்து; நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்'' (அப்.5:18,19). இந்த சுவிசேஷத்தை மனிதர்களால் தடுக்க முடியாதிருந்தது. அப்போஸ்தலர்களை சிறைச்சாலையில் வைத்து பூட்டியும், அவர்களை தேவதூதன் வெளியே கொண்டு வந்து ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் சொல்லும்படி செய்தான். இப்படியாக எழுந்த உபத்திரவத்தினால் அப்போஸ்தலர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். ''சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்'' (அப்.8:4)

இச்செய்தியை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் வெளியே புறப்படும் ஒவ்வொருநாளும் மற்றவர்களுக்கு சுவிசேஷம் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு புறப்படுகிறீர்களா? ''சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்''(எபே.6:15) என்ற வசனத்தின் படி சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைத் தொடுத்துக்கொள்ளுங்கள். எனக்கொரு பக்தியுள்ள தாயாரை ஞாபகத்திற்கு வருகிறது. வீட்டை விட்டு போகும்போது சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சைகளை போட்டு கொண்டு வெளியே புறப்படுவேன் என்பார்கள். நீங்கள் எப்படி புறப்படுகிறீர்கள்? கர்த்தருடைய அழைப்பை ஏற்று ஒவ்வொருநாளும் செயல்படுங்கள். கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக.

**கேள்வி**

✪ **எப்படிப்பட்ட நோக்கத்தோடு புறப்படவேண்டும்?**

நாம் ஒவ்வொரு நாளும் பலவிதமான காரியங்களுக்காக வீட்டை விட்டு புறப்படுகிறோம். வேலைக்கோ அல்லது பொது காரியங்களுக்கோ செல்கிறோம். ''...அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' (அப்.10:38). ஆண்டவர் நன்மை செய்கிறவராக இந்த



பூமியிலே சுற்றித் திரிந்ததைப்போல நாமும் நன்மை செய்யும்படியாக புறப்படுவோம். லோத்தின் மனைவி புறப்பட்டு போகும் போது பின்னிட்டு பார்த்து தேவகோபத்திற்கு ஆளானாள். உங்களுடைய புறப்படுதல் இப்படிப்பட்டதாக இருக்க வேண்டாம். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி சுவிசேக்ஷத்தை அறிவிக்க புறப்படுங்கள்.

## 29. அழைக்கப்பட்டவர்கள்
## The Called Ones

**நீ**ங்கள் பலவிதமான காரியங்களுக்கு அழைக்கப் பட்டிருப்பீர்கள். அவைகளிலே சில காரியங்களுக்குச் சென்று இருப்பீர்கள். ஒரு சில காரியங்களுக்கு செல்லாமல் இருந்திருப்பீர்கள். ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள்; "ஒரு மனுஷன் பெரியவிருந்தை ஆயத்தம் பண்ணி அநேகரை அழைப்பித்தான் விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி; நீ அழைக்கப்பட்டவர் களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள் என்று சொல்லென்று அவனை அனுப்பினான் அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள்.

ஒருவன் ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப்போய், அதைப் பார்க்கவேண்டும் என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்; ஐந்தேர்மாடு கொண்டேன் அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்; வேறொருவன் பெண்ணை விவாகம் பண்ணினேன். அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து தன் ஊழியக்காரனை நோக்கி; நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய் ஏழைகளையும் ஊனமுடைய சப்பாணிகளையும், குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான். ஊழியக்காரன் அப்படியே செய்து ஆண்டவரே நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி நீ பெருவழிகளிலும்

வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா; அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்'' (லூக்.14:16–24).

அழைக்கப்பட்டவர்கள் குறிப்பாக யூதர்கள் அசட்டை பண்ணினார்கள். இன்றும் அந்தப்படியே ராஜ்யத்தின் அழைப்பை அநேகர் அசட்டைசெய்வதால், தெருக்களிலும், வீதிகளிலும், இருக்கிற ஏழைகளுக்கும், அநேக ஜனங்களாலே புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும், இந்த அழைப்பு தேவனால் கொடுக்கப்படுகிறது. இச்சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதில் பிரவேசித்து, அநேகர் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். இன்று அநேகர் கேட்கக்கூடிய கேள்வி, உங்களுடைய சபையிலே ஏழைகளும், ஊனரும், சப்பாணிகளும், குருடரும்தான் இருக்கிறார்கள்.

ஆம், வசதிபடைத்தவர்கள் தங்களுடைய வேலையில் அதிக கவனம் செலுத்தி, நான் அந்த மில்லுக்குப்போக வேண்டும், அந்த பேக்டரிக்கு போகவேண்டும், எஸ்டேட் போய் நான்கு மாதமாகிவிட்டது என்று முழுகவனத்தையும் சதா வேலையில் செலுத்தி ராஜ்யத்தின் அழைப்பை அசட்டைசெய்கின்றனர். ஆகையால் ராஜ்யத்தின் சுவிசேஷ அழைப்பு சகல மனிதருக்கும் கொடுக்கப்படுகிறது ''கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறனெவனும் இரட்சிக்கப்படுவான்'' (ரோம. 10:13) என்று சொல்லப்பட்ட வசனத்தின்படியாக நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா என்கிறார். பிரியமானவர்களே, கர்த்தர் நம்முடைய இருதயத்தை பார்க்கிறார். ''எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்'' (அப்.10:35).

ஆண்டவர் நிறத்தையோ, தேசத்தையோ, மொழியையோ, ஜாதியையோ பார்க்கவில்லை. ஏனென்றால் அவர்களெல்லாரையும் ஒரே



ரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார். அவருக்குப் பயந்து அவருடைய அழைப்பை ஏற்று யார் பின்தொடருகிறார்களோ, அவர்கள் தேவனுக்கு ஏற்றவர்கள். இதை நீங்கள் நம்புகிறீர்களா? அப்படி நம்புவீர்கள் என்றால் தேவனுடைய மாபெரும் இந்த அழைப்பை ஏற்று சுவிசேஷத்தை விசுவாசித்து அவருடைய மந்தையில் இருக்க பிரயாசப்படுங்கள்.

நாம் பல விதமான சூழ்நிலையின் மத்தியில் நிலையான ராஜ்யத்திற்கு அழைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். ''அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்'' (1கொரி.7:20). கம்பெனியில் வேலை செய்யும்படியாக அநேகர் அழைக்கப்பட்டு அவரவருடைய தகுதிக்கு ஏற்ப வேலையானது கொடுக்கப்படுகிறது. அதில் சாதாரண வேலையில் உள்ள ஒருநபர் உயர்வான பதவி தனக்கு கிடைக்கவில்லையே என்று முறுமுறுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் பணிசெய்யும்போது, உயர்வான பதவியில் உள்ளவரைப் பார்த்து பொறாமைகொண்டு செயல்படுவாரானால் என்ன பயன்? அவர் அப்பணியில் இருக்கும்வரை சலிப்புடன்வேலை செய்து சலிப்புடன் ஓய்வு பெறுவார். எனக்கு அன்பானவர்களே நாம் எந்த நிலையில் அழைக்கப்பட்டிருக்கிறோமோ அந்த நிலையில் இருந்து கொண்டு திருப்தியுடன் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

''கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்'' (1 கொரி.7:22), ஆக, நாம் கர்த்தருக்குள் அழைக்கப்பட்டவர்களாக இருப்பதினால் அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது. மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் மண்ணுக்கே திரும்புவான். இதிலே உயர்வு என்ன? தாழ்வு என்ன? எல்லாம் உலகப்பிரகாரமான ஒன்று. வானமும் பூமியும் ஒரு நாள் அழியும். கர்த்தருடைய வசனங்களோ ஒருநாளும் ஒழிந்துபோவதில்லை அந்தப்படியே தேவசித்தம் செய்கிறவர்களும் என்றும் நிலைத்திருப்பார்கள்.

''ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின்

நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்'' (கலா.5:1). ஆண்டவர் நமக்கு சுயாதீனத்தை உண்டு பண்ணியிருக்கிறார். பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிற நீ ஏன் கலங்க வேண்டும். உலகம் கொடுக்கக் கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கர்த்தர் கொடுக்கிறார். ஒவ்வொரு நாளும் அவருடைய அன்பையும் ஆலோசனைகளையும் எண்ணிப் பார்க்கும்போது கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை நீ அறிந்துகொள்வாய். நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய், இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை கிறிஸ்துவானவர் நமக்கு ஏற்படுத்தி இருக்கும்போது பழைய பழக்க வழக்கங்களுக்கு மறுபடியும் அடிமைப்படும்படி விரும்பலாமா கூடாதே!

அன்பானவர்களே, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். உங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொண்டு கர்த்தருக்குள் நிலைத்திருங்கள் அப்பொழுது கர்த்தர் உங்கள் மூலம் மகிமைப்படுவார். நீங்களும் அவருக்கு பிள்ளைகளாக இருப்பீர்கள்.

''அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியு மிருக்கிறார்'' (ரோம.8:28–30).

நீங்கள் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரில் அன்பு கூருகிறீர்களா? அப்படி அன்பு கூருகிறீர்கள் என்றால்



சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறதென்று நம்புங்கள். பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன் என்கிறார். உண்மையான அன்பு நாம் கர்த்தரில் கொண்டிருப்போமானால் எதுவும் நம்மை பிரிக்காது, தேவன் செய்வது எதுவோ அது சரியாகத்தான் இருக்கும் என்று ஒத்துக்கொள்வோம். கர்த்தர் உங்களை அறிகிறவராக இருக்கிறார். அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை.

அவர் உங்களை கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாயும் மகிமைப்படுத்தியும் வைத்திருக்கிறார் என்பதை ஒவ்வொரு நாளும் நினைத்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். ''...நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்'' (எபே.4:1–3).

''எப்படியெனில், சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை பிரபுக்கள் அநேகரில்லை, ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்'' (1கொரி.1:26–29).

நீங்கள் கிறிஸ்துவுக்குள் வருமுன் எப்படிப்பட்டவர்களாக இருந்தீர்கள்? உங்களுக்கு நிச்சயமாக தெரியும் ஒன்றுக்கும் உதவாத

ஒரு நபராக இருந்திருப்பீர்கள். கர்த்தரோ உங்கள்மேல் இரக்கமுள்ளவராக இருந்து உங்களை இரட்சித்து, எல்லாவிதமான ஆசீர்வாதத்தினாலும் உங்களை ஆசீர்வதித்து வைத்திருக்கிறார். உண்மைதானே! அதையெல்லாம் ஒவ்வொருநாளும் நினைத்து தேவனை மகிமைப்படுத்துங்கள். இன்று ஏன் திருச்சபைகளில் உலக ஞானிகள் இல்லை. உலக வல்லவர்கள் இல்லை. இப்படிப்பட்டவர்களை வெட்கப்படுத்தும்படியாக அற்பமாக எண்ணப்பட்ட நம்மை தேவன் அழைத்து மேன்மையாக வைத்திருக்கிறார். இந்த அழைப்பை அசட்டை செய்யாது காத்து கர்த்தருக்குள் வளருங்கள். ''அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்'' (மத்.20:16) For many be called, but few chosen. கர்த்தர் உங்களுடைய அழைப்பை வசனத்தின் மூலம் உறுதிப் படுத்துவாராக!

**கேள்வி**

✪ **உங்களுடைய அழைப்பு எப்படிப்பட்டது?**

இப்படிக் கேள்வி கேட்டால் என்னுடைய தேவன் என்னை, ஊழியத்திற்கு அழைத்தார். அதுவும் அப்போஸ்தலராக அழைத்தார் அல்லது தீர்க்கதரிசியாக அழைத்தார் என்று அடுக்கிக்கொண்டே போவீர்கள். பிரியமானவர்களே! நம்மை பரிசுத்தவான்களாக அழைத்திருக்கிறார். ''நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' (1பேது.1:16). உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். பவுல் ரோம சபைக்கு எழுதும்போது பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது என்று எழுதுகிறார். உங்களுடைய அழைப்பைப் பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 30. கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் Ask, Seek and Knock

**ந**ம்மை உண்டாக்கின தேவனை அறிந்துகொண்டு, அவருடைய திருச்சித்தத்தை ஒவ்வொருநாளும் நிறைவேற்றி, அவருக்கு பிரியமான



வாழ்க்கை வாழ்வோமானால் அவர் நம்முடைய தேவைகளை சந்திப்பார். ஆண்டவர் இயேசு சொல்கிறார்: ''கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்'' என்கிறார் (லூக்.11:9,10). ஒரு தகப்பனிடத்திலே அவனுடைய பிள்ளை கேட்பதைப்போல நாம் தேவனிடத்திலே கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். இவ்விஷயத்திலே அநேகர் ஜெபத்திற்கு மற்றவர்களை நாடுகிறார்கள். இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு வியாபாரக் கடைகளைப்போல ஜெபமையங்களை அநேகர் துவக்கி விட்டனர். தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சம்பூரண ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறவராக இருக்கிறார். இதை அறியாத ஜனங்கள். ஜெபமையங்களை நாடுகின்றனர்.

**கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்று சொன்ன கர்த்தர்** தேவனை நோக்கி கேளுங்கள் என்றுதான் சொன்னாரே தவிர மனிதர்கள் மூலமாக என்னிடத்தில் வாருங்கள் என்றோ, மரியாள் மூலமாக வாருங்கள் என்றோ சொல்லவில்லை. நமக்கு பசிவந்தால் நாம்தான் சாப்பிடவேண்டும் மற்றவர்கள் நமக்காக சாப்பிட்டால் நம் பசி தீருமா? தீராது. அதைப்போல நம்முடைய தேவைகளுக்காக நம் பரமபிதாவை நோக்கி நாம் தான் வேண்டிக்கொள்ளவேண்டும். மற்றநபர்கள் நமக்காக வேண்டிக்கொள்வது தவறல்ல, எப்படி பாவமன்னிப்பு பெற ஒவ்வொருவரும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டுமோ அதைப்போல நம்முடைய தேவைகளுக்கு நாம்வேண்டிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால்தான் இயேசு கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றார். ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான். நீங்கள் இதுவரை கேளாதிருப்பீர்கள் என்றால் இன்றே இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

''பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக்

கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா'' என்கிறார் (லூக்.11:13). பொல்லாதவர்களே தங்களுடைய பிள்ளைக்கு நலமான காரியங்களை செய்யும்போது பரமபிதா செய்யாமலிருப்பாரா? ஆகையால் நம்பிக்கையுடன் ஜெபம்பண்ணுங்கள். அப்பொழுது பரலோகத்தின் தேவன் உங்கள் வேண்டுதலைக் கேட்டு உங்களுக்கு பலன் அளிப்பார். அப்போஸ்தலனாகிய யோவான், ''அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்''(1யோவா.5:14,15).

ஜெபிக்கும்போது நமக்குள் இருக்கவேண்டிய நம்பிக்கை நாம் கேட்டவைகளை பெற்றுக் கொண்டோம் என்று விசுவாசிக்க வேண்டும். இது எப்படி சாத்தியப்படும் என்று அவிசுவாசத்துடன் கேளாதிருங்கள். வேலைக்கு அப்ளிகேஷன் போடுகிறோம். நாம் போடும்போது இந்த வேலை நமக்கு கிடைக்காது என்று போடுகிறோமா? நிச்சயமாக எனக்கு கிடைக்கும் நான் அந்த கம்பெனியில் வேலைசெய்வேன் என்ற உறுதியுடனிருக்கிறோம். உலககாரியங்களில் இப்படிப்பட்ட உறுதியிருக்கும்போது நாம் ஜெபத்தில் தேவனிடத்தில் கேட்டவைகளை நாம் பெற்றுவிட்டோம், தெரியப்படுத்த வேண்டியவரிடத்தில் தெரியப்படுத்திவிட்டோம், அது நிச்சயம் நடக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கவேண்டும். நாம் ஜெபித்த உடனே அது அவருடைய திருச்சித்தத்தின்படி இருந்தால் அந்த நிமிடமே நமக்கு அதை தந்தருளுகிறார்.

ஒருவேளை நாம் பெற்றுக்கொள்வதற்கு காலதாமதமாகலாம் அதுவும் நம்முடைய விசுவாசத்தைப்பொறுத்தது. எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் 40 நாட்களில் கானானை சென்றடைந்திருக்கலாம். அவர்களுடைய அவிசுவாசத்தினால் அதை தேவன் 40 வருடங்களாக்கினார். இப்படித்தான் நாம் பெற வேண்டிய ஆசீர்வாதங்களை காலதாமதமாக பெற்றுக்கொள்கிறோம்.

**தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் என்கிறார்.** நீங்கள் எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் பணத்தையா?



பொருளையா? சொந்தபந்தங்களையா? அல்லது சமுதாய அந்தஸ்தையா? இவைகள் யாவும் ஒருநாள் அழிந்தேபோய்விடும். என்றுமே அழியாத அவருடைய ராஜ்யத்தையும் வல்லமையுள்ள வசனத்தையும் தேடுங்கள். ''நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி, ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி புதையங்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில் அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்'' (நீதி.2:2–5) புதையல்களைத் தேடுகிறது போல தேவனுடைய வசனங்களை தேடி ஆராய வேண்டும். புதையல் இருப்பதாக அறிந்துகொண்டால் எப்படி அதைக் குறித்து இரவு பகல் பாராது அதை எடுப்பதற்கு முயற்சி செய்கின்றோமோ அதைப்போல கர்த்தருடைய வசனங்களில் ஆவலாக இருக்கவேண்டும்.

மார்த்தாள் அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டாள். மரியாளோ தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் அப்படியென்றால் ஆண்டவரின் பாதத்தை விட்டெடுபடாமல் அவருடைய போதனைகளை கேட்டுக்கொண்டிருந்தாள். இன்றைக்கு தேவையானது ஒன்றே அது கர்த்தருடைய வசனமே. இவ்விதமாக தேவசமூகத்தில் உட்கார்ந்து கொண்டு கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கிறீர்களா? நாளெல்லாம் டி.வி பார்ப்பார்கள் ஒரு மணிநேரம் ஜெபிக்க யோசனை செய்வார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்? மரியாளைப்போல கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து, அந்த நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளுங்கள்.

''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத்.6:33). அவருடைய ராஜ்யத்தை முதலாவது தேடுங்கள். ராஜ்யம் என்பது அவருடைய சபை. அவருடைய சபை எங்கே இருக்கிறது. உலகத்திலே பல இடங்களிலே இருக்கிறது. எங்கும் பிதாவை தொழுது கொள்ளும்காலம் வந்திருக்கிறது. அவருடைய நாமத்தினாலே எங்கே இரண்டு மூன்றுபேர் கூடுகிறார்களோ அங்கே

அவர்கள் மத்தியிலே அவர் இருக்கிறார். இது அவருடைய ராஜ்யமாகவும், அவருடைய சபையாகவும் இருக்கிறது. அப்படியென்றால் அவரே அதன் தலைவராகவும் அதன் ஆளுநராகவும் இருக்கிறார். அவருடைய நாமத்தை அந்த சபையானது தரித்திருக்கிறது. **அதுவே கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் நாமத்தினாலே கூடுகிறவர்களை கிறிஸ்துவின் சபையார் என்று அழைக்கின்றோம்.** இச்சபையை தேடுங்கள் கண்டடைவீர்கள். வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஒரே சபை அவருடைய சபைமட்டும் தான். வேறொருநாமம் பூமியில் கட்டளையிடப்படவில்லை. வீணாக கட்டடங்களையும், ஜனங்களையும் பார்த்து ஏமாந்து போய்விடாதிருங்கள். தேவன் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசமாயிரார். எங்கே அவருடைய நாமத்தில் கூடுகிறார்களோ அங்கே கர்த்தர் இருக்கிறார். அவருடைய பிரசன்னம் இருக்குமிடத்தை நாடுங்கள்.

**தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும்.** அமைதலோடு இருந்தால் ஒரு நன்மையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஓயாமல் ஒரு காரியத்தைக் குறித்து முறையிடும்போது அதற்கு பதில் கிடைக்கிறது. ஆண்டவர் சொல்வதைக் கவனியுங்கள் உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலேபோய்; சிநேகிதனே என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன் முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்கு கடனாகத் தரவேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டான்.

வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக; என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள் நான் எழுந்திருந்து உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறனிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்.11:5–8). தன்னுடைய சிநேகிதனுக்காக பாதிராத்திரியிலேபோய் அப்பம்கேட்கும்படியாக சிநேகிதனுடைய



வீட்டுக் கதவைதட்டுகிறபோது அவன் முகம் சுளிக்கக்கூடும், என்னப்பா இந்த ராத்திரியிலே வந்து தொந்தரவு கொடுக்கிறாய் என்று கேட்கக்கூடும் இதையெல்லாம் அறிந்தும் கதவை தட்டுகிறான் அப்படி அவன் வருந்திக்கேட்கும்போது பெற்றுக்கொள்கிறான். நம் ஆண்டவரிடத்திலும் வருந்திக்கேட்கும்போது பெற்றுக்கொள்வோம். இவனுக்கு எப்படி அவன் எழுந்திருந்து கதவை திறந்து அவனுடைய தேவையை பூர்த்திசெய்தானோ, அதைப்போல கர்த்தர் நம்முடைய இருதய கதவை தட்டுகிறார். “இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவை திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்” (வெளி.3:20).

எதற்காக உங்களுடைய இருதய கதவை தட்டுகிறார்? உங்களை போஷிக்கும்படியாகவும், உங்களிலே வந்து உங்களோடு வாசம் பண்ணும்படியாகவும், உங்களுக்கு எப்பொழுதும் உதவி செய்யும்படியாகவும் உங்கள் இருதய கதவை தட்டுகிறார். அன்பான சகோதரனே சகோதரியே ஆண்டவர் இயேசுவுக்கு இடம் கொடுப்பீர்களா?

அன்பானவர்களே கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்ற செய்தியை கேட்டீர்கள் அந்தப்படியாக கேட்டுப்பெற்றுக்கொள்ளுங்கள், தேடிகண்டடையுங்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு வாசல் திறக்கப்படும். கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

### கேள்வி

**✪ ஒவ்வொரு நாளும் கேட்கவும், தேடவும், தட்டவும் செய்கிறீர்களா?**

ஓ செய்கிறோமே என்பீர்கள். படிக்கிற மாணவனைப் பார்த்து நேற்றைய பாடத்தை படித்தாயா என்றால் ஓ படிச்சேன் சார் என்பான். படித்திருந்தால் நிச்சயமாக பாஸ் பண்ணுவான். அதைப்போல நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனை நோக்கி ஜெபிக்கவும், வேத வாக்கியங்களை தேடி ஆராயவும், மற்றவர்களுக்காக தட்டுகிறவர்களாகவும் இருக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது உங்கள் இருதய கதவை தட்டும் கர்த்தர் உங்களோடு இருப்பார். “நானே வாசல்,

என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்'' (யோவா.10:9). இந்த ஆவிக்குரிய மெய்யான மேய்ச்சலைக் கண்டு கொள்ள என் பிரியமான சகோதரனே, சகோதரியே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருங்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாது. தேவனை நோக்கி ஜெபிக்கவும், வசனத்தை தேடவும், தட்டுகிறவருக்கு செவிகொடுக்கவும் ஆயத்தமாயிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 31. கன்மலையின் மேல் அஸ்திபாரம்
## The foundation on a rock

இயேசு சொல்கிறார்: ''என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்'' (லூக்.6:47). முதலாவது 'என்னிடத்தில் வந்து' என்கிறார். ஆகையால் நீங்கள் இயேசுவிடம் வரவேண்டும். அவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகவும், உலகத்தின் பாவத்தைப் போக்கும் பலியாகவுமிருக்கிறார். ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று அழைக்கிறார் (மத்.11:28).

இந்த உலகத்திலே வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற நீங்கள் அந்த வருத்தத்திலிருந்து விடுதலையாகும்படி இயேசுவிடம் வாருங்கள். ஒரு முறை ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றிவருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார். வேறொருவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய்,



தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார். பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.

அருமையானவர்களே, இயேசுவிடம் வந்த மூன்று நபர்களுடைய நோக்கங்கள் வெவ்வேறாக இருந்தன. ஆனால் இயேசு அவர்களுக்கு கொடுத்த பதில் ராஜ்யத்தைக் குறித்தது. அது நிலையானது. ஆம், பிரியமானவர்களே, ஆண்டவர் நிலையானதைப் பெற்றுக் கொள்ளும்படியாக தம்மிடம் அழைக்கிறார். நாமோ அழிந்துபோகும் பொருட்கள்மீது நமது கண்களைப் பறக்கவிட்டு, குடும்பம், சூழ்நிலை, அதைச் செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் என்று சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டு இயேசுவிடம் வர மறுக்கிறோம். இயேசுவிடம் வந்து நன்மைகளைப் பெற்றோர் கணக்கிலடங்காதோர். நீங்கள் யாரை நோக்கி போய்கொண்டிருக்கிறீர்கள். இயேசுவண்டை வாருங்கள். அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**இரண்டாவதாக** 'என் வார்த்தைகளை கேட்டு' என்கிறார்: இயேசுவிடம் வந்து அப்படியே நின்றுவிட்டால் பிரயோஜனமில்லை. அவருடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கவேண்டும். இயேசு சொல்கிறார்: ''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்கிறார் (மத்.11:29,30).

ஆண்டவருடைய வசனமாகிய நுகம் பாரமானதல்ல அவைகளை நம்மீது ஏற்றுக்கொள்ள வேண்டும். உலகத்தாருடைய பாவத்தை தம்மீது ஏற்றுக்கொண்டு அவைகளை சிலுவையிலே சுமந்துதீர்த்தார். ஆனால் அவருடைய வசனங்களோ பாரமான ஒன்றல்ல. அவைகளை ஏற்று கிறிஸ்துவினிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். நாம் ஆண்டவரிடம்

கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் அநேகமிருக்கிறது. அவைகள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் பேருதவியாயிருக்கும். நாம் ஆன்மீக இளைப்பாறுதலை பெறவேண்டுமானால் அவருடைய ஆவிக்குரிய வசனங்களுக்கு செவிகொடுக்கவேண்டும். இன்றைக்கு ஆன்மீக வளர்ச்சிக்காக மனிதன் போகாத இடமில்லை, சுற்றாத கோவில் இல்லை என்றே சொல்லலாம். மெய்யான ஆன்மீக இளைப்பாறுதல்பெற இன்றே இயேசுவிடம் வாருங்கள்.

என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்கிறார். அவைகளை ஏற்று ஆன்மீக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். "விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதுகிறார் 10:17–ம் வசனம். ஆண்டவருடைய வசனத்தை கேட்பதினாலே விசுவாசம் வருகிறது. ஒருவன் கேள்விப்படாவிட்டால் எப்படி தேவனைப் பற்றியும் அவரால் அனுப்பப்பட்ட தேவனுடைய குமாரனாகிய இயேசுவைப் பற்றியும் அறிந்து கொள்ளமுடியும்?

**மூன்றாவதாக** 'அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்' என்றார். அவன் "ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" (லூக்.6:48). இன்றைக்கு வீடுகட்டுகிற ஒவ்வொருவரும் ஆழமாய்த் தோண்டி அதாவது கெட்டியான பாறை வரும்வரை தோண்டி அதின்மீது அஸ்திபாரம் போட முயற்சிக்கிறார்கள் நல்லது அப்படித்தான் செய்யவேண்டும்.

அதைப்போல உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை சரியானபடி அஸ்திபாரம்போட என்றாவது யோசித்திருக்கிறீர்களா? இல்லையே. ஏதோ, பக்கத்தில் உள்ள ஒரு கோவிலுக்கு சென்றுவந்தால் போதும் நம்முடைய பாவ கருமங்கள் எல்லாம் போய்விடும் என்று சொல்லி ஏனோ தானோவென்று சாமிகும்பிட்டுவிட்டு கையால் ஆன காணிக்கையைச் செலுத்திவிட்டு, நாலு ஊனமுற்றவர்களுக்கு உதவி



செய்தால்போதும் என்ற மனநிறைவோடு வந்துவிடுகிறீர்கள் அது போதாது அன்பானவர்களே, சரியான அஸ்திபாரம் வீட்டைகாக்கும் அதைப்போல உங்களுடைய ஆவிக்குரிய அஸ்திபாரம் சரியானதாக இருக்கவேண்டும். இயேசு உங்களுக்குச் சொல்லுகிறபடி நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை பரிசுத்ததிற்கு மாற்றியமைக்கவேண்டும். ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த சகேயுவின் வார்த்தைகளை கவனியுங்கள்: "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" என்றார் (லூக்.19:8,9).

இவனுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றத்தைக் காண்கிறோம். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவனுடைய மாற்றத்தைக் கண்ட கர்த்தர் இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார். இந்த சகேயுவைப்போல உங்களை கர்த்தருடைய வசனத்தினால் மாற்றியமைத்துக்கொள்ளுங்கள். வசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர் களாயுமிருங்கள். அப்பொழுது கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவின் மீது அஸ்திபாரம் போடப்பட்டவர்களாயிருப்பீர்கள். மேலும் ஆபிரகாமுக்கு பிள்ளைகளாகவுமிருப்பீர்கள்.

கடைசியாக கர்த்தர் சொல்வதைக் கவனியுங்கள்: "என் வார்த்தைகளை கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதியவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (லூக்.6:49). கர்த்தருடைய வார்த்தையை புறம்பே தள்ளிவிட்டு, தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறவர்களின் முடிவும் இப்படித்தானிருக்கிறது. தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். ஆலோசனையில்லாத இடத்திலே ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்

என்ற வசனத்தின்படியாக ஜனங்கள் அழிந்துபோகிறார்கள். அன்பான சகோதரனே, சகோதரியே உன்னை உண்டாக்கின கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அந்த வார்த்தையின் மீது உன் அஸ்திபாரத்தைப்போட்டு உன் ஜீவியத்தை துவக்கு அப்பொழுது நீ ஆசீர்வதிக்கப்படுவாய். மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள மூதாதையருடைய வழியிலும், மண்ணின்மீதும், கல்லின்மீதும், மரத்தின்மீதும், தங்களுடைய நம்பிக்கையை வைத்து ஆரம்பிக்கிறவர்களுடைய முடிவு மண்ணோடு மண்ணாகப் போய்விடுகிறது. வானமும் பூமியும் அழிந்துபோனாலும் என்வார்த்தைகளோ, அழிந்துபோகாது என்று சொன்ன ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளின் மீது உங்களுடைய அஸ்திபாரத்தை துவக்குங்கள். பூகம்பமோ அல்லது ஒரு சுணாமியோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டாலும் அதை ஒன்றும் செய்யமுடியாது. ஏனென்றால் அது கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது அஸ்திபாரம் போடப்பட்டுள்ளது.

"இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக் கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால், தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" **(1பேது.2:6,7).** அந்த கல் இயேசுவே. அவர்மீது விசுவாசமாயிருப்பவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. அப்போஸ்தலனாகிய பவுலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன் என்று ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். நீங்கள் இந்த இயேசுகிறிஸ்துவின் மீது உங்களுடைய அஸ்திபாரத்தை துவக்குங்கள், அதற்கு வேண்டிய அனைத்தையும் கர்த்தர் உங்களுக்குத் தந்தருளுவார்.

**கேள்வி**

✪ **இயேசுவைக் குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் என்ன சொல்லுகிறது?**



"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" **(ஏசா.2:2,3).** கடைசி நாட்கள் என்பது நாம் வாழுகின்ற இந்த நாட்கள் தான். இந்த நாட்களிலே கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியிலே ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும் என்ற வார்த்தையின்படியே இயேசுகிறிஸ்து முதல் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எருசலேமில் அவருடைய மெய்யான திருச்சபையை ஸ்தாபித்தார்.

எப்பொழுது என்றால் அவர் உயிர்த்தெழுந்து அதன்பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று. சகல தேசத்தார்களும் அங்கே கூடியிருந்தார்கள். அங்கே பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். தீர்க்கதரிசன வசனத்தின்படியே சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் உலகமெங்கும் எடுத்துச்செல்லப்பட்டது. அதன்பின்பு உருவாகியதுதான் இத்தனை சபைகளும். இப்பொழுது சிந்தித்துப்பாருங்கள் நீங்கள் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான திருச்சபையின் மீது உங்கள் அஸ்திபாரத்தை போட்டிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால். இன்றே கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது அஸ்திபாரமிடுங்கள்.

## 32. கர்த்தருக்குள் மகிழ்ச்சி
## Rejoice in the Lord

**எ**ல்லோரும் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாயிருக்கவே விரும்புவார்கள். அந்த மகிழ்ச்சி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும். அந்த மகிழ்ச்சி எங்கிருந்து வரவேண்டும். சிலர் வாழ்க்கையில் வெற்றி அடைந்த மகிழ்ச்சியை கொண்டாடுகிறார்கள். சிலர் குடித்து

கும்மாளமிட்டு அதுவே மகிழ்ச்சி என நினைக்கின்றனர். நீங்கள் எப்படிப்பட்ட மகிழ்ச்சியை அநுபவித்து வருகிறீர்கள். ''உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப்பண்ணுகிறவன் யார்? என்று பிரசங்கி தன்னுடைய வாக்கியத்தில் குறிப்பிடுகிறான் (பிர.3:21,22).

மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன் என்கிறான். ஆம், இதுவே அவன் பங்கு. தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அனுக்கிரகம். ஆனாலும் வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லா வற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி என்கிறார் பிரசங்கி. நாம் அநுபவிக்கவே பிறந்திருக்கிறோம் ஆகையால் நன்றாக அநுபவிப்போம்.

நம் இஷ்டப்படி வாழ்வோம் என்று சொல்லி கடிவாளம் இல்லாத குதிரையைப்போல அநேகர் வாழ்ந்துவருகிறார்கள்.பிரியமானவர்களே, இவையெல்லாவற்றையும் குறித்து தேவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ''மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும் A merry heart makes a cheerful countenance" (நீதி.15:13). இருதயத்தில் உள்ள மகிழ்ச்சி முக மலர்ச்சியைக் கொண்டுவரும். இந்தவிதமான மகிழ்ச்சி மனிதனுக்கு மனநிறைவை கொடுக்கும். ''உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு'' (நீதி.5:18). இருதயத்திலே உடன்படிக்கை செய்து கரம்பிடிக்க வேண்டியவள் மனைவி. அவளோடே



மகிழ்ந்திருக்கவேண்டியவன் கனவன். குடும்பம் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பூந்தோட்டம். அதில் கனவனும் அவனுடைய மனைவியும் பூக்கள். தேவன் ஆதாமுக்கு ஏற்ற துணையையே ஏற்படுத்தினார். இந்தவிதமான பந்தம் வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது.

குடம்பத்தில் உள்ள மகிழ்ச்சியைக் காட்டிலும் கர்த்தருக்குள் இருக்கிற மகிழ்ச்சி மிக சிறப்பானது. எப்படியென்றால் குடும்பத்தில் எல்லா ஆசீர்வாதங்களும் இருந்தால் மகிழ்ச்சி, இல்லையென்றால் ஓயாச் சண்டை என்றாகிவிடுகிறது. ஆசீர்வாதக் குறைச்சல் இருந்தபோதிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? என்றால், முடியும் என்கிறார் ஆபகூக் தீர்க்கதரிசி.

''அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்'' (ஆபகூக் 3:17–19).

இவ்வளவு ஆசீர்வாதங்களை இழந்தபோதும் ஒரு மனுஷன் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க முடியும். சொல்லுக்கு வேண்டுமானால் சொல்லிவிடலாம் ஆனால் நடைமுறையில் உண்மையிலே இவ்வளவு ஆசீர்வாதங்களை இழந்த ஒருவன் மகிழ்ச்சியாயிருக்க முடியாது என்பீர்கள். பிரியமானவர்களே, கர்த்தருக்குள் என்ற சொல்லானது. கர்த்தருக்குள் இருப்பவர்களுக்கே பொருந்தும். யோபுவை அறிவீர்கள் அவனுடைய மனைவியைத் தவிர அவனுக்குள்ள எல்லாம் பறிபோனது. அப்படியிருந்தும் அவன் சொல்லுகிறான் ''இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்'' (யோபு19:26). அந்த தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல

அழைக்கிறவர். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். இதை நீங்கள் நம்புகிறீர்களா? "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்கிறார் இயேசு (யோவா.14:1–3).

நாம் என்றென்றும் அவரோடு நித்திய நித்தியமாக இருக்கப்போகும் பரலோகத்தை நினைக்கும்போது இந்தப் பூமியிலே கர்த்தருக்காக நாம் எதையும் இழக்க ஆயத்தமுள்ளவர்களாகயிருக்க வேண்டும். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடையவீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி.5:1). இவைகளையெல்லாம் நினைத்து கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறோம்.

இந்தவிதமான மகிழ்ச்சி யாருக்கு வரும்? ஒருவர் கர்த்தருக்குள் இருந்தால்தான் இந்தவிதமான மகிழ்ச்சி வரும். கர்த்தருக்குள் இருக்கிறேன் என்று சொல்லி உலகத்தில் இழந்துபோன ஒன்றைக்குறித்து நாட்கணக்காக, மாதக்கணக்காக ஒருவர் துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பாரானால் அவர் இன்னும் உலகத்தின் காரியங்களை வெறுக்கவில்லை என்றுதான் அர்த்தம். அப்படிப்பட்ட நபர் கர்த்தருக்குள் இல்லை. கர்த்தருக்கு வெளியே இருக்கிறார். அப்படிப்பட்டவர்களை பிசாசு ஆண்டுகொள்கிறான். அப்படிப்பட்ட நபர் நிச்சயமாக சந்தோஷமாக இருக்க முடியாது.

தாவீது சொல்வதை பேதுரு விளக்குகிறார்: "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்து, என் நாவு களிகூர்ந்தது, என்



மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்த அழிவைக் காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான்" (அப்.2:25–28). ஆம் அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் இப்படியாக உயிர்ப்பிக்கப்படுவார்கள். இந்த உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்களாக இருக்கிறீர்களா? அன்றைக்கு பேதுருவுடைய "வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" (அப்.2:41).

கர்த்தருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் அன்றும்சரி இன்றும்சரி ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுகிறார்கள். இது கர்த்தருக்குள் ஏற்படுகிற மகிழ்ச்சி. இதனால் இரட்சிக்கப்பட்டோம், பாவங்களை கர்த்தர் மன்னித்தார் என்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. "பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் (மந்திரிக்குப்) பிரசங்கித்தான் இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக்கொண்டுபோய்விட்டார் மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (அப்.8:35–39). இந்த மந்திரிக்கு எப்படி இந்தவிதமான சந்தோஷம் வந்தது? அவன் கர்த்தருக்குள் வந்ததினாலே ஏற்பட்ட

மகிழ்ச்சி. அந்த சந்தோஷத்தினாலே தன் வழியே போனான் என்று வாசிக்கிறோம்.

இச்செய்தியை வாசிக்கிறதான நீங்கள் ஒவ்வொருவரும் கர்த்தருக்குள் இருக்கிற இந்தவிதமான மகிழ்ச்சியைப் பெற்று அநுபவிக்க கர்த்தருக்குள் வர முயற்சியுங்கள். அவருக்குள் வர ஒரே வழி. கர்த்தரையும் அவருடைய வார்த்தைகளையும் விசுவாசியுங்கள். உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கைசெய்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப் படுவீர்கள். இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் தம்முடைய சபையிலே சேர்த்துவருகிறார்.

இவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படுகிறது. இவர்கள் கண்ணீர் யாவையும் கர்த்தர் துடைப்பார். ஒருவேளை நீங்கள் கர்த்தருக்குள் இருக்கிறவர்களாக இருந்தால் பிலிப்பியர்4:4–ன்படி "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என்று பவுல் சொல்வதைப்போல எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க நாடுங்கள். கர்த்தர் தாமே அதற்குவேண்டிய எல்லாவிதமான ஆவிக்குரிய பெலத்தையும் கட்டளையிடுவாராக!

### கேள்வி

**✪ கர்த்தர் கொடுக்கிற சந்தோஷம் உலகம் கொடுக்கிற சந்தோஷத்தைப் போன்றதா?**

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்கிறார் (யோவா.14:27). கர்த்தர் உலகப்பிரகாரமான ஒரு காரியத்தை கொடுக்கக்கூடியவர் அல்ல. பிசாசு இயேசுவைப் பார்த்து என்னைப் பணிந்துகொள் அப்பொழுது இவைகளையெல்லாம் உமக்கு தருவேன் என்றான். அதற்கு இயேசு அப்பாலே போ சாத்தானே என்றார். பிசாசுதான் உலகப்பிரகாரமான சம்பத்தைக் கொடுப்பதாக



ஆண்டவரிடம் பேசினான். ஆண்டவருடைய வசனங்கள் அழியாத நித்தியத்தைக் குறித்துப் பேசுகிறது. அவர் நித்திய ஜீவனை வாக்குபண்ணியிருக்கிறார். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவா.3:36). இந்த ஜீவனுக்கு சமமானது உலகத்தில் ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட நித்தியமான வாழ்வை கர்த்தர் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுக்கிறார். இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

## 33. கிறிஸ்துவின் உபதேசம்
## Doctrine of Christ

**ஒ**ரு கிறிஸ்தவன் முதலாவது அவருடைய உபதேசத்திலே நிலைத்திருக்கவேண்டும். அவனே கிறிஸ்தவன். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் என்பவர் 2 யோவா.9–ம் வசனத்தில் மிக தெளிவாக எழுதியிருக்கிறார். ஆதி சீஷர்கள் அதாவது இயேசுவைப்பின் தொடர்ந்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். மேலும் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு முதல் முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது. இந்த உபதேசத்திலே மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவன் அல்ல.

இயேசு சொல்கிறார்: "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" என்றார் (யோவா.7:16,17). பிதாவானவர் என்ன

சொன்னாரோ அதையே குமாரன் வெளிப்படுத்துகிறார். அவர் சுயமாய் ஒன்றும் செய்யவுமில்லை, போதிக்கவுமில்லை. இதை தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொள்வார்கள். முதல் நூற்றாண்டு காலத்திலே இயேசுவை தொடர்ந்து அநேக சுயபோதனைகளைக் கொண்ட பிரிவினை கூட்டத்தார் எழும்பினார்கள் அவர்கள் எல்லோரும் அப்படியே அழிந்துபோனார்கள். எடுத்துக்காட்டாக தெயுதாஸ் மற்றும் யூதாஸை பற்றி அப்.5:36,37 வசனங்களில் படிக்கிறோம். இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள் அவன் மடிந்துபோனான். அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அதன் பின்பு யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான் அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். கிறிஸ்துவினுடைய உபதேசம் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியினால், இந்த வானமும் பூமியும் இருக்குமட்டும் ஏன் நித்திய நித்தியமாகவும் நிலைத்திருக்கும்.

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிறார் (யோவா.5:24). இயேசுவின் உபதேசம் அவருடைய வசனமாயிருக்கிறது அதைக் கேட்டு பிதாவை விசுவாசித்தால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு என்று சொல்லுகிறார். அவருடைய உபதேசத்திற்குச் செவி கொடுப்பீர்களா?

ஆண்டவருடைய உபதேசம் பாரமான ஒன்றல்ல. பரிசேயர்களோ இயேசுவின் உபதேசத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள். "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து பரிசேயர் இந்த உபதேசத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா



என்றார்கள்" (மத்.15:11,12). பாரம்பரியங்களை கைக்கொண்டு வருகிறவர்களுக்கு கிறிஸ்துவின் உபதேசம் இடறலாகவே இருக்கிறது. எப்படியென்றால் பரிசேயர்கள் கைகழுவாமல் சாப்பிடமாட்டார்கள். அதைப்போல அநேக ஆச்சாரங்களையும் கைக்கொண்டுவந்தபடியால் அவருடைய உபதேசம் அவர்களுக்கு இடறலாயிருந்தது. குறிசொல்லுகிறவர்களை கர்த்தர் அருவருக்கிறார். குறிகேட்பதும் பாவம், குறிசொல்லுவதும் பாவம். இதைக் குறித்து நான் யோசித்துக்கொண்டிருக்கையில் தேவன் ஏன் கைவிரல்களில் ரேகையை கொடுத்தார். தேவன் செய்வது எதுவோ அது நன்மைக்காகவே இருக்கும் அதை இவர்கள் குறிபார்க்க பயன்படுத்துகிறார்களே என்று யோசித்தேன்.

தேவன் பல காரணங்களுக்காக கைரேகையை உண்டாக்கியிருக்கிறார். ஒன்று பொருட்களை தூக்குவதற்கு அது கிரிப்பாக இருக்கிறது அப்படியில்லாமல் ஒரு வழுக்கை டயரைப்போல் இருக்குமானால் அதற்கு கிரிப் கிடைக்குமா? ஆக, தேவன் செய்வது எதுவோ அது நல்லதாகவே இருக்கும் என்ற முடிவுக்கு வரவேண்டும் அதை மாற்றி அமைப்பதோ அல்லது திருத்தி அமைப்பதோ நம்முடைய பணியல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தை தள்ளுகிறவர்கள் பாரம்பரிய பஞ்சாங்கங்கள். இவர்களைக் குறித்து கர்த்தர் "என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும். அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழி காட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" என்றார் (மத்.15:13,14).

இந்தவிதமாக வழி நடத்தக்கூடியவர்கள் தற்போது பெருகிவருகிறார்கள். தாங்கள் சொல்லுவது இன்னதென்றும், தாங்கள் செய்கிறது இன்னதென்றும் அறியாது அநேகர் போதகர்களாக இருக்க விரும்புகிறார்கள். "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன்கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியை தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான்" என்றார்

(யோவா.3:20,21) கிறிஸ்துவின் உபதேசத்தை அநேகர் புறம்பே தள்ளுவதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது மேற்கண்ட வசனத்தில் கர்த்தர் சொல்லுகிறபடி, மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள். ஆகையினால் துன்மார்க்கன் செழித்துப்போகிறான். ஆனால் சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படி ஒளியினிடத்தில் அதாவது இயேசுவினிடத்தில் வருகிறான். பிரியமானவர்களே, நீங்கள் இருளினிடத்திலா அல்லது ஒளியினிடத்திலா? இன்றே தீர்மானம் செய்யுங்கள்.

"ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாயிருக்கிறான்" (2யோவா.10:11). இவ் வசனம் அநேகருக்கு சற்று கடினமாக தோன்றலாம். நாம் எப்படி இவ்வளவு நாட்களாக நமக்கு உபதேசம் செய்தவர்களை வீட்டில் ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை அப்படியே அனுப்புவது?

இந்த இடத்திலே நீங்கள் கர்த்தரையா அல்லது மனுஷரையா யாரைப் பிரியப்படுத்தப்போகிறீர்கள் என்பதை யோசித்து முடிவெடுங்கள். உபதேசத்தை கொண்டுவராதவர்களுக்கு வாழ்த்துதல் சொன்னால் அவனுடைய துர்கிரியைகளுக்கு நீங்களும் பங்குள்ளவர்களாக மாறுகிறீர்கள். ஒருவேளை நீங்கள் அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளாதிருக்கும் போது அவர்கள் சற்று யோசிக்க வாய்ப்பு உண்டு. நாம் வேதவசனத்தை தறவராக போதிக்கிறோமோ என்று சிந்திக்க வாய்ப்பு ஏற்படும். ஆண்டவர் ஊழியத்திற்கு சீஷர்களை அனுப்பும்போது "ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள் அந்த வீடு பாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம்



உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது" என்றார் (மத்.10:12,13). வாழ்த்துதல் சொல்லுவதிலே முந்திக்கொள்ளுங்கள் என்ற வசனத்தை நினைவுகூருங்கள். அந்தப்படியே வாழ்த்த கற்றுக்கொடுக்கிறார். பாத்திரம் அறிந்து பிச்சை போடு என்ற முதியோர்களின் பழமொழிக்கு ஏற்ப அந்த வீடு பாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அங்கே இருக்கும். இல்லையேல் உங்களிடத்திற்கே திரும்பும் என்று சொல்லி அனுப்புகிறார். அந்தப்படியாக பாருங்கள் சமாதானத்தின் சுவிசேஷத்தை சொல்லும்படியாக அநேக ஊழியக்காரர்கள் வீடுதேடி செல்கிறார்கள். மேலான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள பாத்திரமில்லாத வீடு அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளாமல் அனுப்புகிறது. அந்த ஆசீர்வாதம் அப்படியே திரும்புகிறபடியால் கொண்டுசென்றவர்களே அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் "எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும்போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப்பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.10:14,15). இன்றைக்கு ஆண்டவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமற்போகிறவர்களின் முடிவு சோதோம் கொமோரா பட்டணத்திற்கு ஏற்பட்ட முடிவைப் பார்க்கிலும் அதிகமாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உங்களிடத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொண்டுவரும் பரிசுத்தவான்களை ஏற்று அவ்வசனங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். ஒருவேளை அது அவருடைய வசனத்திற்கு புறம்பானதாக இருக்குமேயானால் அவைகளை ஏற்றுக்கொள்ளாது அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாது தப்பித்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கு நீங்களும் பங்குள்ளவர்களாவீர்கள்! பரிசேயர்களைப்போல கர்த்தருடைய வசனத்தில் இடறலடையா திருங்கள். "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன்

பாக்கியவான்'' என்கிறார் (மத்.11:6). கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படிந்து எல்லையில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

✪ **கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராதவர்கள் அவருக்கு சீஷர்களாக இருக்க முடியுமா?**

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கிச் சொல்லுகிறார்: ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவான்8:31,32). உபதேசத்தில் நிலைத்திராதிருக்கிற ஒரு மனிதன் அவருக்கு சீஷனாக இருக்க முடியாது என்பதை இவ்வசனத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார். என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தினைக் கொடுக்கமாட்டது என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். அதினதின் கனிகளினாலே அறிகிறோம். அப்படியே நாம் ஆண்டவருடைய சீஷர்களை அவர்களுடைய வார்த்தைகளினால் அறிந்துகொள்ளலாம்.

''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'' (யோவா.15:7,8). ஆண்டவருடைய வார்த்தை எந்த ஊழியக்காரரிடத்தில் நிலைத்திருக்கிறதோ அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களோடு உங்களுடைய ஐக்கியத்தை தொடருங்கள்.

## 34. கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

## Who shall separate us from the love of Christ?



**கி**றிஸ்துவின் அன்பிற்கு இணையான அன்பு உலகத்தில் இல்லை. அந்த அளவிற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்தார். இதை ருசித்த அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாக எழுதுகிறார். ''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரிங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' என்கிறார் (ரோம.8:36–39). ஒருவரை ஒருவர் புரிந்து திருமணம் செய்கிறவர்கள் நாளடைவில் பிரிந்துபோகிறார்கள், உயிருக்கு உயிராக நேகிக்கிறவர்கள் பிரிந்து போகிறார்கள், நெருக்கமான நண்பர்கள் பிரிந்துபோகிறார்கள்.

ஏன் பின்பு விரோதிகளாகவும்கூட மாறிவிடுகிறார்கள். இந்தவிதமான அன்பு உடைந்து விடுகிறது. ஆனால் கிறிஸ்துவில் கொண்ட அன்பு இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இந்த அன்பை விட்டுப் பிரிப்பவன் யார்? என்ற ஒரு கேள்வியை பவுல் எழுப்புகிறார். என்ன கஷ்டங்கள் துன்பங்கள் வந்தாலும் நம்மில் அன்புகூருகிற இயேசுவினாலே அவைகளை நாம் ஜெயிக்கிறவர்களாக இருக்கிறோம். பவுல் பட்ட கஷ்டங்களை பாருங்கள்: யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும் கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும்,

பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் என்கிறார். இவ்விதமான கஷ்டங்களை நீங்கள் அநுபவித்திருக்கிறீர்களா? இவ்விதமான கஷ்டங்களை கர்த்தர் நிமித்தம் அநுபவித்த பவுல் கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன் என்ற நம்பிக்கையோடு ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். இந்த நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா?

“அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்” (1பேது.5:7,8).

நமக்கு வரக்கூடிய பிரச்சனைகளில் நாம் நினைவுகூரவேண்டிய ஒன்று அவர் நம்மை விசாரிக்கிறவர். ஆகையால் நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஒரு நோயாளி தன்னைப் பரிசோதிக்கும் டாக்டரிடம் முழுவதுமாக ஒப்புக்கொடுக்கிறான். அதைப்போல நீங்கள் பரமவைத்தியராகிய இயேசுவிடம் முழுமையாக ஒப்புக்கொடுங்கள் அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவார். இந்த விஷயத்திலே நீங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஏனென்றால் பிசாசு எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் என்று பேதுரு விளக்குகிறார். “ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்” (1பேது.4:16).

பவுலையும் சீலாவையும் தொழுமரத்தில் மாட்டிவைத்தார்கள். அதற்காக அவர்கள் வருத்தம்கொள்ளவில்லை. நள்ளிரவிலே தேவனை துதித்துப்பாடினார்கள், கர்த்தர் அவர்களை விடுவித்தார். முதல் நூற்றாண்டிலே இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாக அநேக பாடுகளை சீஷர்கள் அநுபவித்தார்கள். அநேகரை துன்புறுத்தி வந்த பவுல் பின்பு மனமாற்றப்பட்டான் என அப்போஸ்தல நடபடிகை புஸ்தகத்திலே வாசிக்கிறோம்.



கடலின் ஆழத்தை அறிவோம், பூமியின் நிலப்பரப்பையும் அறிவோம், ஏன் மலைகளின் உயரத்தைக்கூட அறிவோம். ஆனால் அன்பின் ஆழத்தையும், உயரத்தையும், நீளத்தையும், அகலத்தையும் அறிவீர்களா? அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் இருங்கள். “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்றும் பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்” (2கொரி.5:14,15).

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் அது ஒருக்காலும் ஒழியாது அந்த அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்கிறார். ஆகையால் இருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்றிராமல் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவுக்காக வாழ வேண்டுமென்பதை உணர்த்துகிறார். இதை அறியாது நான் இருந்து என்ன பயன்? என்னை சிநேகித்தவர்கள் எல்லாம் போய்விட்டார்கள். என் சொந்தம் என்னை கைவிட்டது என் பிள்ளைகள் ஒருவருமில்லை, நானோ தனிமரமாகிவிட்டேன் என்று ஆத்துமாவில் நொந்து மரணத்தை தழுவிக்கொள்ளுகிறார்கள்.

எனக்கு அன்பான சகோதரனே, உனக்காக ஒருவர் மரித்திருக்கும்போது நீ ஏன் மரிக்கவேண்டும். உனக்காக மரித்து உயிர்த்தெழுந்த அவரில் நீ வாழவேண்டும். “இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்

அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்'' (2கொரி.5:7–9). நாம் இப்பொழுது முகமுகமாய் தேவனை தரிசிப்பதில்லை ஆனால் ஒருநாள் அவரை நாம் அவ்விதமாக தரிசிப்போம். இப்பொழுது விசுவாசித்து நடக்கிறோம், நம்மோடு இருக்கிறார் என்று உணர்கிறோம். ஆனாலும் அவரோடு குடியிருக்கவில்லை.

அப்படியிருந்தபோதிலும் தேவனுக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து; ''தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:26,27). நம்மீது அன்பு கூர்ந்து கறையற்ற பரிசுத்த மணவாட்டியாக நம்மை ஆயத்தம் செய்யும்படியாக தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். இப்படி ஒப்புக்கொடுத்த அந்த அன்பிலிருந்து நம்மை பிரிப்பவன் யார்? அன்பானவர்களே, ஒருவன் உங்களை அந்த அன்பிலிருந்து பிரிப்பானே என்றால் அவனுக்கு நீங்கள் செவிகொடுக்கலாமா?

''அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்'' (1கொரி.13:8–10). உலகத்திலே எல்லாமே ஒரு நாள் ஒழிந்துபோம் ஆனால் அன்புமட்டும் ஒழியாது ஏனென்றால் தேவன் அன்பாகவேயிருக்கிறார். அவருடைய தன்மை ஒழியாது அவர் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் மனிதன் மண்ணாயிருக்கிறான். அவனுடைய அறிவு குறைவுள்ளது. குறைவுள்ள இந்த அறிவிலே நிறைவானவைகளைப் பேசுகிறான். தேவனுக்கு முன்பாக நிற்க அவன் எம்மாத்திரம்? பிரியமானவர்களே, ''தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில்



நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்'' (1யோவா.4:16). உங்களிடத்தில் அன்பு நிலைத்திருந்தால் தேவன் உங்களோடிருக்கிறார் என்பதை அதினாலே அறிந்துகொள்ளலாம். ''அன்பிலே பயமில்லை பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவர்கள் அன்பில் பூரணப்பட்டவர்கள் அல்ல'' (1யோவா.4:18). இயேசுவின் மரணத்தின்போது எல்லா சீஷர்களும் யூதர்களுக்குப் பயந்ததினாலே ஓடிப்போனார்கள். அந்த வேளையிலே அன்பு நிறைந்த அந்தரங்க சீஷன் யோசேப்பு துணிந்துபோய் இயேசுவின் சரீரத்தை கேட்டு வாங்கி தன்னுடைய புதிய கல்லறையிலே வைத்தான். அவனில் இருந்த அன்பு பயத்தைப் புறம்பே தள்ளினது.

எனக்கு அன்பானவர்களே, ஆண்டவர் மீது நீங்கள் எப்படிப்பட்ட அன்பு வைத்துள்ளீர்கள்? உங்களுக்காகவும் எனக்காகவும் தமது ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுத்த அந்த ஆண்டவர் மீது உங்களுடைய அன்பு எத்தகையதாகயிருக்கிறது? கிறிஸ்துவின் மீது நிறைவான அன்பு உள்ளவர்களாக இருங்கள். அவர் உங்களைத் திக்கற்றவர்களாக விடார். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்கிறார்.

**கேள்வி**

✪ **தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதா?**

''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோம.8:28). ஆம் பிரியமானவர்களே, தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு உபத்திரவம் வந்தாலும் அதுவும் நன்மைக்கேதுவாகவே இருக்கிறது. அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும்

தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. இந்தவிதமான நம்பிக்கையிலே நாம் ஒவ்வொருநாளும் நமக்கு வரக்கூடிய உபத்திரவத்தை மேற்கொள்கிறோம். யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் தூக்கிவிற்றுப்போட்டார்கள் அவனோ தேவனிடத்தில் பயபக்தியுள்ளவனாக இருந்தவன். மீண்டுமாக அவனுடைய சகோதரர்களை அவன் சந்திக்கும்போது; "நீங்கள் எனக்குச் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான் (ஆதி.50:20). அந்தப்படியே தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்குகேதுவாக நடக்கிறது. இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? கர்த்தர் உங்களுடைய முயர்ச்சியை ஆசீர்வதிப்பாராக!

## 35. நீ எங்கே இருக்கிறாய்? Where are you?

"**தே**வனாகிய கர்த்தர் ஆதாமை கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்" (ஆதி.3:9). அவனோ தன்னை ஒளித்துக்கொண்டிருந்தான். பாவத்தின் விளைவாலே இந்த சம்பவம் நிகழ்ந்தது. அவனை உண்டாக்கிய தேவனாகிய கர்த்தர் பகலில் குளிர்ச்சியான வேளையில் அவனோடு பேசுகிறவராக இருந்தார். இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை பாவத்திற்குக் கீழ்ப்படிந்தபடியால் ஆதாமும் ஏவாளும் இழந்தார்கள். இன்றைக்கும் தேவன் தம்முடைய பரிசுத்த வேதத்தின் மூலம் பேசுகிறார்.

அதை வாசிக்கும்போதும், அதைக்குறித்து தியானிக்கும்போதும் அவைகளைக்குறித்து கேட்கும்போதும் அந்தவிதமான உணர்வை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடாமல் பிசாசு கொண்டுவருகிறதான நூதனமான காரியங்களுக்கு செவி கொடுக்கும்போது பாவப்பிடியில் சிக்கிவிடுகிறோம். ஆதாம் அந்தவிதமாக செவிகொடுத்தபோது தான் நிர்வாணி என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்தில் கேட்டு, தான் நிர்வானியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டான்.



பாம்பைப் பாருங்கள் சந்து பொந்து இவைகளைத்தேடி ஒளிந்தே வாழும். அதைப்போல சர்ப்பத்தின் வார்த்தைக்கு செவி கொடுத்து ஆதாமும் ஏவாளும் தங்களை ஒளித்துக்கொண்டார்கள். அந்தப்படியாக பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கக் கூடாமற்போய்விடுகிறார்கள். ஆதாமும் ஏவாளும் அப்படியே தங்களை ஒளித்துக்கொண்டார்கள். கர்த்தர் ஆதாமை நோக்கி: "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்" (ஆதி.3:11–13).

ஆதாமோ என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அந்த கனியைக் கொடுத்தாள் புசித்தேன் என்றான். ஏவாளோ சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன் என்றாள். இப்படி இருவரும் தேவனுக்கு பதிற்சொன்னார்கள். பாவம் செய்கிற எவரும் தாங்கள் செய்த பாவத்தை ஒத்துக்கொள்வதில்லை. அதற்கு சரியான ஒரு சாக்குப்போக்கு சொல்லி தப்ப முற்படுகின்றனர். அன்பானவர்களே பாவம் செய்கிற ஒவ்வொருவரும் தண்டனையை அனுபவித்தேயாகவேண்டும். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அதற்கேற்ற தண்டனையைக் கர்த்தர் அந்நாளில்தானே கொடுத்தார். பின்பு அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார்.

ஏதேன் தோட்டம் பாலும் தேனும் ஓடுகிற தோட்டம். பூமியிலே அது ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு இடம் என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் அதை **'A Happy Place'** என்கின்றனர். ஏனென்றால் "தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உண்டாக்கின மனுஷனை அதிலே வைத்தார்" என்று ஆதி.2:8–ல் வாசிக்கிறோம். அவனை எந்த அளவுக்கு நேசித்திருந்திருந்தால் அப்படிப்பட்ட ஒரு சிறப்பான இடத்திலே அவனை வைத்திருந்திருப்பார் என்பதை சிந்தித்துப்பாருங்கள். அப்படி சிறப்பாக உண்டாக்கப்பட்ட

மனிதனோ இன்று அநேக உபாயதந்திரங்களை தேடி அழிந்துபோய்க்கொண்டிருக்கிறான். 10 மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த தன் தாய்க்கு தெரியாதா பிள்ளைக்கு எதைக்கொடுக்கவேண்டுமென்று? அவனை உண்டாக்கின தேவன் மனிதனுக்கு இன்னது தேவை என்பதை அறிந்திருக்கிறார். தேவனை அறிந்து கர்த்தருடைய வார்த்தைகளை அப்படியே ஏற்று கீழ்ப்படிந்தவர்களில் ஆபிரகாமும் ஒருவர். "கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ, நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன்பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.12:1–4).

ஆபிராம் இந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாது போனான். அவனோடு லோத்தும் சென்றான். பின்பு ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அப்பொழுது ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும் என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர் இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறதல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடது புறம்போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்று சொல்லி அப்படியே பிரிந்துபோனார்கள்.

லோத்தோ "தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும் முன்னே, சோவாருக்குப்போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்து கொண்டான்"...(ஆதி.13:10,11).



சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். லோத்தினுடைய குடியிருப்பு அப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருந்தது. அவன் தன் மாம்ச கண்களால் பார்த்து அது நீர் வளம் பொருந்தினதாயும், கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் இருக்கக் கண்டு அதை தெரிந்து கொண்டான். பின்போ அப்பட்டணங்களை கர்த்தர் அழித்துப்போட்டார். லோத்தும் அவனுடைய பிள்ளைகளும் காக்கப்பட்டார்கள். அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். அவனுடைய வம்சம் அத்தோடு முடிந்துபோனது.

ஆபிராமோ, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தபடியால், "கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார் நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும் நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத்தருவேன் என்றார். அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சம பூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டினான்" (ஆதி.13:14–18).

பிரியமான சகோதரனே, சகோதரியே நீ எங்கே இருக்கிறாய்? ஆதாமைப்போல ஒளித்துக்கொண்டிருக்கிறாயா? அல்லது ஆபிராமைப்போல கீழ்ப்படிந்து கர்த்தர் சொன்ன இடத்திலே உன் வாழ்கையை துவக்குகிறாயா? நீ ஆபிராமைப்போல கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில் இருப்பாயானால் என்நாளும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். உன்னோடு சேர்ந்தவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன், என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே

போஜனம் பண்ணுவான்'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (வெளி.3:20). அநுதினமும் உங்கள் இருதயக் கதவை கர்த்தர் தட்டிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவருக்குச் செவிகொடுப்பீர்களா? நீங்கள் செவிகொடுத்தால் அவரோடு போஜனம் பண்ணுவீர்கள். பகலின் குளிர்ச்சியான வேளையில் தேவனாகிய கர்த்தர் ஆதாமோடு உறவாடுகிற தேவனாக இருந்தார். அவன் பாவத்துக்குக் கீழ்ப்படிந்து ஒளித்துக்கொண்டபோதிலும், 'ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்' என்று கூப்பிட்டார்.

எனக்கு அன்பானவர்களே, உங்களையும் அந்தவிதமாக அழைக்கிறார். தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்து பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லியதுபோல ''பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு'' (2தீமோ.2:22). நீ எப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதித்து வருகிறாய்? ஆபிராமோடு லோத்து இருக்குமட்டும் ஆசீர்வதிக்கப்பட்டான். அவன் தன் சுய இச்சையினாலே தெரிந்து கொண்ட இடத்துக்குப்போனபோது அங்கே அவனுடைய சந்ததியில்லாமற்போய் விட்டது. ஆபிராமோ தேவன் தெரிந்து கொண்ட இடத்திற்கு சென்று ஒரு பலி பீடத்தைக் கட்டி தொழுதுகொண்டான். அப்படிப்பட்ட உண்மையுள்ள மனுஷர்களோடு அதாவது சுத்த இருதயத்தோடே கர்த்தரை தொழுது கொள்ளுகிறவர்களுடனே இருந்தால், நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடைய முடியும். அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து தேவனை தொழுதுகொள்.

அன்பானவர்களே, ''இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்'' (எபி.3:15). இஸ்ரவேலர் தேவனை கோபப்படுத்தினார்கள். அவருக்கு விரோதமாக பொல்லாப்பானதை செய்து 40 வருஷம் அவருடைய கிரியைகளைக் கண்டார்கள். ஆதலால், கர்த்தர் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய



இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அன்பான சகோதரனே சகோதரியே இன்று அவருடைய சத்தத்தை வேதவசனங்கள் மூலம் கேட்கிறீர்கள். தேவன் மனிதனுக்காக ஏற்படுத்தின இந்த அழகான பூமியிலே இருந்து கொண்டு தேவனை நன்றியுள்ள இருதயத்தோடு அவரை ஆராதியுங்கள். நீ எங்கே இருக்கிறாய்? என்று தேவன் உங்களைப் பார்த்து கேட்கும் அளவிற்கு அவர் சமூகத்தை விட்டு பாவத்தின் விளைவால் உங்களை ஒளித்துக்கொள்ளாதிருங்கள்.

**கேள்வி**

✪ **ஆதாம் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்தானா?**

தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவிதவிருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார். மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். அவர்கள் பாவம் செய்த பின்பு ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டு ஜீவ விருட்சத்துக்குப்போம் வழியைக் காவல் செய்தார் என்று ஆதியாகமம் முதல் 3 அதிகாரங்களில் வாசிக்கின்றோம்.

பாவம் செய்வதற்கு முன்பு அவர்கள் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்திருக்கலாம். ஏனென்றால் நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று எச்சரிப்பு செய்திருந்தார். துரத்தப்பட்ட பின்பு அவர்கள் அந்தக் கனியைப் புசிக்கமுடியாமற்போய்விட்டது. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனி கிடைக்கும் என்று வெளி.2:7ல் வாசிக்கிறோம். இதைப் பெற்றுக்கொள்ள ஜெய கிறிஸ்தவர்களாக வாழுங்கள்.

# 36. ஒரு கலசம் தண்ணீர்
# A cup of water

“நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று ஆண்டவராகிய இயேசு சொல்கிறார் (மாற்.9:41). ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தருடைய நாமத்தினிமித்தமாக உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுத்தாலும் அதனுடைய பலனை அவர்கள் அடையாமற்போவதில்லை. கர்த்தர் அதற்குரிய பலனை கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராக இருக்கிறார். நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறதினிமித்தம் இந்தவிதமான ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாயிருக்கிறோம்.

அநேகர் கிறிஸ்தவத்தை தவறாக நினைத்து அதை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள். எங்கே நம்முடைய சொத்தெல்லாம் பறிபோய் விடுமோ அல்லது மிகவும் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோமோ! என்று பயந்து நடுங்குகிறார்கள். என்னுடைய பெரியம்மா நான் இயேசுவை ஏற்றுக்கொண்டவுடன் அவர்கள் என்னைப் பார்த்து சொன்னது: எங்கே கிறிஸ்தவத்தில் போய் சேர்ந்து கொண்டான் இவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? இவன் அநாதி பிணமாக சாகப்போகிறான் என்றார்கள். இன்றுவரை நான் எல்லையில்லா ஆசீர்வாதங்களை கர்த்தருக்குள் பெற்று அநுபவித்து வருகிறேன். செல்லுமிடமெங்கும் அநேக சகோதர, சகோதரிகள், தாய்மார்கள் என்னை அன்போடு ஏற்று கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சகல உபகாரங்களும் செய்து, என்னை வழி அனுப்புவதை நினைக்கும் போது ஒவ்வொரு நாளும் ஆனந்தக் கண்ணீர்வடிக்கிறேன். மேற்கண்ட வார்த்தையின் நிமித்தமாக ஆண்டவருடைய பிள்ளைகள், ஆண்டவருடைய பிள்ளைகளைப் போஷிக்கிறார்கள்.

“பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்;



காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்பார் (மத்.25:35–40). இந்த வசனத்தை ஏற்றுக்கொண்ட தேவ ஜனங்கள் ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு உதவி செய்ய தயங்குவதில்லை. ஏனென்றால் அதற்குரிய பலனை கர்த்தர் கொடுக்கக்கூடியவராக இருக்கிறார். தம்முடைய சீஷர்களை ஆண்டவர் தேர்வுசெய்து ஊழியத்திற்கு அனுப்பும்போது “வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடிவைக்கவேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்” என்றார் (மத்.10:10). பொதுவாக உலகப்பிரகாரமான வேலை செய்கிறவர்களுக்கே கூலி கொடுக்கப்படும்போது, வானத்தையும் பூமியையும் அண்ட சராசரங்களையும் படைத்த தேவனாகிய கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்குக் கர்த்தர் கூலி கொடாமல், அவர்களை போஷிக்காமல் விட்டுவிடுவாரா? அன்பானவர்களே, ஒருவன் ஆண்டவர் இயேசுவுக்கு ஊழியம் செய்தால் அவனை பிதாவாகிய தேவன் கனம்பண்ணுவார்.

ஒரு கிறிஸ்தவன் முதலாவது தான் எதற்காக கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவனாயிருக்கிறான் என்பதில் உறுதியுள்ளவனாக இருக்கவேண்டும். பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது: “நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து

இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்'' (எபே.2:10). கிறிஸ்துவானவர் எப்படி நன்மை செய்கிறவராக பூமியிலே சுற்றித்திரிந்தாரோ அதைப்போல கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளாகிய நாம் பூமியிலே நற்கிரியைகளை செய்யும்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டாக்கப்பட்டிருக்கிறோம்.

இதை நாம் கருத்தில் கொள்வோமானால் ஒவ்வொருநாளும் நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். ''ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்'' (யாக்.2:15–17).

நம்மைப்போல சரீரத்திலே சிருஷ்டிக்கப்பட்ட சகோதரனுக்காவது, சகோதரிக்காவது ஒரு தேவையிருக்கும்போது அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக நாம் நம்மை ஒளிக்கலாகாது. நம்மிடத்தில் பொருள் இருக்கையில் குறைச்சல் உள்ளவர்களுக்கு கொடுத்து உதவிட வேண்டும். வேதம் அதையே எதிர்பார்க்கிறது. வேதத்தில் சொல்லப்பட்டவைகளின்படி ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சகோதரிகளும் நடப்பார்களேயானால் உலக முழுவதும் தேவனுடைய பிள்ளைகளாக மாறிவிடுவார்கள் இதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. வேதாகமத்தை ஒதுக்கிவைத்துவிட்டு தங்களுடைய சுய எண்ணத்தின்படியும், விருப்பத்தின்படியும் வாழ்வதாலோ கர்த்தருடைய திரு சித்தத்தை நிறைவேற்ற முடியாமற்போய்விடுகிறது.

கிறிஸ்துவோ தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும் படியாக இப்பூமிக்கு வந்தார். அவர் தேவனுடைய ராஜ்யத்தின்



சுவிசேஷத்தை ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டு வந்தபோது மூன்று நாட்களாக தங்கி அவருடைய போதகத்தை ஜனங்கள் கேட்டு வந்தனர். ''இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து: ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்று நாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள், இவர்களைப்பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்'' (மத்.15:32). தம்மை பின்பற்றிவந்த ஜனங்களை கர்த்தர் பட்டினியாய் அனுப்பிவிட மனதில்லாமல் அங்கே சீஷர்களை அழைத்து ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

கர்த்தர் ஜனங்களை போஷிக்கிறவரும் நேகிக்கிறவருமாயிருக்கிறார். நீங்கள் அவருடைய சமூகத்திற்கு வரும்போது எதைக் குறித்தும் கவலைகொள்ள வேண்டியதில்லை அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். அவரைப் பின்பற்றின ஜனங்கள் மூன்று நாட்களாக உணவையே மறந்தவர்களாக அவரைப் பின்தொடர்ந்தனர். அவர்களை கர்த்தர் கைவிட்டாரா? கைவிடவில்லையே! சுகத்தை கொடுத்து, ஆவிக்குரிய போஜனத்தைக் கொடுத்து, மற்றும் சோர்ந்துபோவார்களென்று அறிந்து சரீரத்திற்கு வேண்டிய திருப்தியான போஜனத்தையும் மீனையும் கொடுத்து அனுப்பினார். அந்த கர்த்தராகிய இயேசு உங்களையும் போஷிக்க அறிந்திருக்கிறார்.

நாம் சில வேளைகளில் மனுஷர்களுக்கென்று சில காரியங்களை செய்து விடுகிறோம். வேதம் சொல்லுகிறது: ''நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்'' (கொலோ.3:23,24). நாம் உதவி செய்யத்துவங்கும்போது கிறிஸ்துவுக்காக அதைச் செய்கிறோம். 'என் நாமத்தினிமித்தம்' என்று

கர்த்தர் சொன்ன வார்த்தையை நாம் மறந்துபோகாமல் நினைவு கூர்ந்து மனப்பூர்வமாக செய்யவேண்டும். இதிலே பிரதிபலன் எதிர்பார்க்கக்கூடாது. பிரதிபலனை எதிர்பார்ப்பது கர்த்தருக்காகச் செய்யும் உதவியல்ல. அது கடன் என்று எண்ணப்படும். ஆண்டவருக்கு அநேகர் மனப்பூர்வமாகக் கொடுத்தார்கள். அதில் ஒரு சில நபர்களைக் குறித்து தியானிப்போம். "உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப்போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள், அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்" (மத்.21:2,3). அந்தப்படியாக அவிழ்த்துக்கொண்டு வந்தார்கள்.

கழுதையையும் அதன் குட்டியையும் கொடுத்த நபர் அது ஆண்டவருக்கு வேண்டும் என்று சொன்னவுடனே அதை அப்படியே அனுப்பினான். அதைப்போல "மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" (யோவா.12:3). மரியாள் விலையேறப்பெற்ற தைலத்தைக் கொண்டு தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; தன்னுடைய மகிமையான கூந்தலை இயேசுவின் பாதங்களைத் துடைக்க பயன்படுத்தினாள். கழுதையையையும் குட்டியையும் கொடுத்த நபரையும், மரியாளையும் நினைத்துப்பாருங்கள், மனப்பூர்வமாய் கர்த்தருக்கு தங்களுடைய உடமைகளைக் கொடுத்தார்கள். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தருடைய அன்பை நினைக்கும்போது நம்முடைய உடமைகள் எம்மாத்திரம்? அவைகள் கர்த்தருக்கே பயன்பட்டும். ஆண்டவரின் நாமத்தினிமித்தமாக ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுத்தாலும் அதனுடைய பலனை அடையாமற்போவதில்லை. "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற லூக்கா6:38– ன்படி கொடுப்போம்.



**கேள்வி**

✪ **கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமா?**

கண்டிப்பாகச் செய்ய வேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத்.5:46–48). இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.

## 37. செம்மறியாடுகள் – வெள்ளாடுகள்
## Sheep - Goats

"**அ**ன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்" (மத்.25:31–32). உலகத்தின் முடிவிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சியை நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு இவ்வசனத்தில் சொல்கிறார்.

நீங்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களாகவும், எந்த மொழியைப் பேசுகிறவர்களாகவும் இருக்கலாம், அந்நாளிலே ஆண்டவர் இயேசுவுக்கு முன்பாகச் சேர்க்கப்படுவீர்கள். அப்பொழுது அவர்

மேய்ப்பனானவன் ஆடுகளை பிரித்தறிகிறதுபோல உங்களை பிரித்து வலது புறத்திலும் இடது புறத்திலும் நிறுத்துவார். ஆடுகளிலே வித்தியாசம் உண்டு. இங்கே இரண்டு விதமான ஆடுகளை அடையாளப்படுத்துகிறார். **ஒன்று செம்மறியாடுகள் இது மேய்ப்பனின் சொல் கேட்கும் ஆடுகள்.** அவரின் பின்னே சென்று நல்ல மேய்ச்சலைக் கண்டடையும். **மற்றொன்று வெள்ளாடுகள் இது மேய்ப்பனின் சொல்கேளாத ஆடுகள்.** அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு மேயும் மிகவும் திருட்டுத்தனம் பண்ணும். நம் நாட்டு மக்கள் வெள்ளாடுகள் கோபுரத்திலும் ஏறும் என்பார்கள்.

ஆடுகளின் மேய்ப்பனாயிருந்து ராஜாவான தாவீது இவ்வாறு பாடுகிறான்: "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" என்று **(சங்.23:1–3).** ஆண்டவரே என் மேய்ப்பர் நான் தாழ்ச்சியடையேன் என்கிறார். இன்று நீங்களும் நானும் இந்த ஆண்டவரை நமது மேய்ப்பராக கொண்டிருப்போமானால் நாமும் தாழ்ச்சியைடையோம். ஏனென்றால் அவர் நம்மைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் கொண்டுபோய்விடுகிறார். அது மாத்திரமல்ல ஆத்துமாவைத் தேற்றி, நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

எவ்வளவு அருமையான மேய்ப்பர்! இப்படிப்பட்ட ஓர் மேய்ப்பர் இருக்கும்போது நீங்கள் ஏன் கலங்கவேண்டும்**?** அந்த மேய்ப்பருக்கு உங்களை முதலாவது ஒப்புக்கொடுங்கள். இயேசு சொல்கிறார்: "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனையே கொடுக்கிறான்" **(யோவா.10:11).** அந்தப்படியாக தமது ஜீவனையே நமக்காக சிலுவையிலே கொடுத்தார். நீங்கள் அவருடைய ஆடுகளாக இருக்கிறீர்களா**?** மேய்ப்பனானவன் "தன்னுடைய ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான் அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே



விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்கிறது" **(யோவா.10:3,4).** நீங்கள் இயேசுவுக்கு பின் செல்லுகிறீர்களா**?** அவருடைய சத்தம் கேட்கிறீர்களா**?**

அவர் தமது வலது புறத்தில் நிறுத்தப்பட்டுள்ள செம்மறியாடுகளைப்பார்த்து! "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பார் **(மத்.25:34).** இயேசுவின் சத்தம் கேட்டு கீழ்ப்படிந்து அவர் பின்னே செல்லும் செம்மறியாடுகளுக்கு கிடைக்கப்போகும் ஆசீர்வாதத்தை பார்த்தீர்களா**?** இப்பொழுது நீங்கள் தீர்மானியுங்கள் நீங்கள் எந்த ஆடாக இருக்கப்போகிறீர்கள்.

வெள்ளாடுகளை தமது இடது பக்கத்தில் நிறுத்துவார். வலது பக்கமாக இருந்தால் என்ன**?** இடது பக்கமாக இருந்தால் என்ன**?** என்று லேசாக முடிவுவெடுத்துவிடாதீர்கள். அதிலே ஒரு பெரிய உண்மை அடங்கியிருக்கிறது. இடது பக்கத்தில் நிறுத்தப்பட்டுள்ள வெள்ளாடுகள் இயேசுவின் சத்தம் கேட்காதவர்கள். அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டு விசுவாசிக்காதவர்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். "அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம், உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன் நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது. ஆனாலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்றார் **(யோவா.10:24–26).**

இவ்வளவு அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்டும் அவரை அவர்கள் விசுவாசியாமல் நீர் கிறிஸ்துவா எங்களுக்குச் சொல்லும் என்று கேட்கிறதை நாம் வாசிக்கிறோம். கண்டும்

காணாதவர்களாயும், கேட்டும் உணராதவர்களாயும் இருக்கும்படியாக அவர்களுடைய இருதயம் கொளுத்திருக்கிறது. அநேகர் இப்படியே அவரை விசுவாசியாமல் புறம்பாக்கப்படுகிறார்கள். அவர்களுடைய கீழ்ப்படியாமை, சந்தேகம், மேட்டிமை அவர்களை அவமாக்கிப்போடுகிறது. ஆண்டவர் ஒரே வார்த்தையில் நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் என்னை விசுவாசியா மலிருக்கிறீர்கள் என்றார். "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்கிறார் (யோவா.12:48).

ஆம், ஆண்டவர் சொன்ன வசனமே ஒருவனை நியாயந்தீர்க்கக் கூடியதாக இருக்கிறது. அவருடைய வசனத்திற்கு முன்பாக அவர்கள் எம்மாத்திரம். அது புடமிடப்பட்டது, இருபுறமும் கருக்குள்ளது. எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய வசனத்திற்கு விரோதமாக ஒருவரும் எழும்பிவிடமுடியாது. இங்கே ஒரே மேய்ச்சலை மேய்க்கக்கூடிய ஆடுகளை இரண்டாக பிரிப்பதன் காரணம் என்ன? மேய்ச்சல் ஒன்றாக இருந்தாலும் மேய்ப்பனானவனுக்கு வெள்ளாடுகள் செவி கொடுக்கவில்லை. ஆனடியால் அவைகளை தமது இடது புறத்திலே நிறுத்துவார். "இடது புறத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் (மத்.26:41).

இந்த நித்திய அக்கினி பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் நியமிக்கப்பட்ட ஒன்று. நோவா காலத்திலே உள்ள ஜனங்கள்; புசித்தும், குடித்தும், பெண்கொண்டும், பெண்கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். அதைப்போல உணராதிருக்கிறவர்கள் பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம்



பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே பங்கடைவார்கள். மேலும் கர்த்தர் வரப்போகிறார் என்ற உணர்வில்லாதிருந்து பாவத்தின் மேல் பாவத்தைக் கூட்டுகிற ஒவ்வொருவரும் அதில் பங்கடைவார்கள்.

"அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" (மத்.25:46). பிரியமானவர்களே, இது ஒரு கதையல்ல. உண்மையிலே நடைபெறப்போகும் சம்பவம். நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதைச் செய்வார். இன்று நீங்கள் அவருடைய ஆடுகளாக இருப்பீர்களென்றால் அவருக்குச் செவிகொடுங்கள். அவருக்குச் செவிகொடுக்கக்கூடிய நீங்கள் செம்மறியாடுகளைப்போல மேய்ப்பனின் பின் செல்லவேண்டும். உங்களை வழி நடத்துகிறவர் கர்த்தராக இருக்கட்டும். பிதாவாகிய தேவன் ஒரே ஒரு மேய்ப்பனையே நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். அந்த மேய்ப்பனாகிய இயேசு, ஆடுகளுக்காக தமது ஜீவனையே கொடுத்திருக்கிறார்.

அவர் உங்களைப் பாவத்திலிருந்து மீட்டு பரிசுத்த சந்ததியாக நிறுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல அவர் உங்களை பேர் சொல்லி அழைத்து சரியான பாதைகளில் நடத்துகிறார். அவர் சத்தம் கேட்டு அவருக்குச் செவி கொடுத்து அவருடைய மந்தையின் ஆடுகளாக இருக்கப் பிரயாசப்படுங்கள். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.

இந்தப் பூமியிலே உங்களுக்கு வரும் போராட்டங்களிலிருந்து ஜெயங்கொள்வீர்களென்றால்; "ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" என்று வெளி.2:11–ல் வாசிக்கிறோம். மேலும் "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி.21:7). ஆனால் "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும்,

விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி.21:8). இந்த விதமான சுபாவங்கள் உங்களில் இருக்குமானால் இன்றே, இப்பொழுதே அவைகளை களைந்துபோட்டு ஆண்டவரின் ஆடுகளாக மாறுங்கள். நீங்கள் ஒரு மெய்யான கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் என்பதை எதினாலே அடையாளம் கண்டுகொள்ளமுடியும். அவருடைய வசனத்தின்படி செயல்படுவதாலும், வசனத்தின்படி உங்களை மாற்றியமைத்துக்கொள்வதாலும் உங்களை அடையாளப்படுத்த முடியும். அவர்களுடைய கனிகளால் அறிவீர்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். நீங்கள் பிதாவுக்கு ஏற்ற கிரியைகளைச் செய்து கனி கொடுக்கும்படியாக பிரயாசப்படுங்கள். மேலும் வலது புறத்தில் உள்ள செம்மறியாடுகளாக இருக்க முயற்சியுங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளையும் உங்களுக்கு அருளுவாராக!

**கேள்வி**

✪ **மேய்ப்பர்களை புதிய ஏற்பாடு சபை எப்படி அழைக்கிறது, அவர்களுடைய தகுதி என்ன?**

கண்காணிகள், மூப்பர்கள் அல்லது மேய்ப்பர்கள் என்று அழைக்கிறது. ''உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்'' (அப்.20:28). இவர்கள் மந்தையைக் குறித்து மிகவும் எச்சரிப்புடன் இருக்க இவ்வசனம் அறிவுறுத்துகிறது.

ஏனென்றால் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆகையால் இவர்கள் மந்தைக்கு மாதிரிகளாக இருந்து செயல்படவேண்டியது அவசியம். இவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவர்களும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின்



கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களே மூப்பர்களாவதற்கு தகுதியுடையோர்.

## 38. கிறிஸ்துவின் சபை
## Church of Christ

**கி**றிஸ்துவின் சபை கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது. இச்சபையைக் குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். இன்றைக்கு அநேக மார்க்க பிரிவினை சபைகளை அதாவது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளை காணமுடிகிறது. கிறிஸ்துவானவர் ஒரே ஒரு சபையை ஏற்படுத்தினார். அந்த சபைக்கு அவரே தலையாகவுமிருக்கிறார். பேதுருவை நோக்கி சொல்லும்போது: ''மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' என்றார் (மத்.16:18). இவ்வசனத்திலே என் சபை என்று சொல்லுகிறார். அப்படியென்றால் அது யாருடைய சபையாக இருந்திருக்கும்? கர்த்தருடைய சபையாகத்தானிருக்கும். தாம் எற்படுத்தின சபைக்கு வேறொரு நாமத்தைக் கொடுப்பாரா? நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படாதிருக்கும் போது வேறொரு நாமத்தில் சபையானது அழைக்கப்படலாமா? கூடாதே. தீர்க்கதரிசனங்களில் உரைக்கப்பட்டபடியாக இச் சபையை கிறிஸ்துவானவர் ஸ்தாபித்தார்.

''கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும்போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப்போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து

கர்த்தரின் வசனமும் வெளிப்படும்'' (ஏசா.2:2,3). இவ்வசனத்தின்படியாக தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும், திட்டத்தின்படியும் எருசலேமிலே கர்த்தருடைய சபையானது ஸ்தாபிக்கப்பட்டு, சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது, சகல ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் என்ற தீர்க்கதரிசனத்தின்படியேயும் அநேகர் கர்த்தருடைய சபைக்குள் வந்து தாகம்தீர்க்கப்படுகிறார்கள். சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் என்ற வார்த்தையின்படியே எருசலேமிலே முதலாவது சபை ஆரம்பிக்கப்பட்டு, அங்கிருந்து சகல தேசத்திற்கும் ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாகவும், சீஷர்கள் மூலமாகவும் சுவிசேஷம் எடுத்துச்செல்லப்பட்டது. ''ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லா யிருக்கும் விசுவாசிக்கிறவன் பதறான்'' (ஏசா.28:16).

இயேசுவானவர் உலகத்தின் பாவத்தைப் போக்கும் பலியாக, மூலைக்கல்லாக, எருசலேமிலே பாடுபட்டு ஜீவனைக்கொடுத்தார். இந்தக் கல்லின் மீது விசுவாசம் வைக்கிறவன் வெட்கப்பட்டுப் போவதில்லை. மேலும் தானியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடியே; ''அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும், அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானே என்றென்றைக்கும் நிற்கும்'' (தானி.2:44). அந்த ராஜ்யம் கிறிஸ்துவின் சபையாகும். ஆகையால் தான் ஆண்டவர் முதல் நூற்றாண்டிலே சுவிசேஷத்தை ஜனங்களுக்கு போதித்துக் கொண்டிருக்கும்போது தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது அது பலத்தோடே வருமுன் இங்கே நிற்கிறவர்களில் சிலர் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்றார்.



இந்த ராஜ்யமாகிய சபை ஆரம்பமாவதற்கு முன் ''என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்'' (லூக்.24:47). அந்தப்படியே அப்போஸ்தலர்கள் உன்னதத்தின் பெலனாலே தரிப்பிக்கப்படும்வரை எருசலேமிலே காத்திருந்தார்கள். மேலும் ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்'' (அப்.1:8).

அந்தப்படியே ''பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்தகாற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்திருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்'' (அப்.2:1–4). இவர்களிலே பேதுரு முதலாவது எழுந்து பேசத்தொடங்கினார் ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞாஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்'' (அப்.2:41).

இவர்கள் கர்த்தரால் வாக்குத்தத்தத்தின்படியாக எருசலேமிலே ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையில் அங்கதினரானார்கள். பின்பு சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். சபையானது யூதேயா, சமாரியா மற்றும் பூமியின் கடைசிவரையும் பரவ ஆரம்பித்தது. இவர்கள் கர்த்தருடைய கட்டளைகளைப் பற்றிக் கொண்டு வளர்ச்சியடைந்தார்கள். சபையானது நாளுக்கு நாள் ஆவிக்குரிய வளர்ச்சியடைந்தது. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம்

பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து. வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்.

இந்த சபையை தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்தார் என வாசிக்கிறோம். “ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்” (அப்.20:28). ஆகையால் சபையானது எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். எப்படி மனைவிக்கு புருஷன் தலையாயிருக்கிறானோ அதைப்போல சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்.

முன்னே நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம், இப்பொழுதோ “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (குமாரனாகிய) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது” (கொலோ.1:13,14). இவ்வசனம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்ட நாம் குமாரனுடைய ராஜ்யமாகிய சபைக்குள் உட்படுத்தப்பட்டு இருக்கிறோம். ராஜ்யம் என்றால் ஆளுகைக்குட்பட்டது. இப்பொழுது கிறிஸ்து ராஜாதி ராஜாவாக வீற்றிருந்து நம்மை ஆளுகிறார். அவருடைய ஆளுகையின்



கீழாக நாம் இருக்கிறோம். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல என்று வாசிக்கிறோம். **கிறிஸ்துவுக்கு எத்தனை சரீரங்கள் உண்டு? ஒரே சரீரம்.** அதைக் குறித்து வேதத்திலே வாசிக்கும்போது, “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும் எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்” என்று வாசிக்கிறோம் (எபே.4:4–6). எல்லாமே ஒன்றாக இருக்கும்போது இங்கே பிரிவினைக்கு இடமில்லை. எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? கிறிஸ்து பிரிவினைக்குக் காரணரா? மனிதனே பிரிவினைக்குக் காரணமாயிருக்கிறான்.

“இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்” (எபே.5:32). பவுல் ஒரு இரகசியத்தை சொல்ல வருகிறார். அந்த இரகசியம் சபையைப் பற்றியதாக இருக்கிறது. அதுவும் கிறிஸ்துவின் சபையைப் பற்றியதாக இருக்கிறது. இந்த சபையை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ளுங்கள். ஏதோ ஒரு சபைக்கு போனால் போதும் என்று போகாதிருங்கள். எல்லா சபைகளும் கர்த்தருடைய சபையல்ல. அதேவேளையில் பெயரை மட்டும் தரித்துக் கொண்டு உலகத்திலே இருக்கிற எல்லா அசுத்தத்தையுமுடையதாக இருந்தால் அதுவும் அவருடைய சபையல்ல. கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. ஆகையால் எல்லா ஆவிகளையும் நம்பாமல், சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்வார். “ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்” (ரோமர்16:16).

**கேள்வி**

✪ **கிறிஸ்துவினுடைய நாமத்தை தரிக்காத ஒரு சபை அவருடைய சபையாகுமா?**

நல்ல கேள்வி. தகப்பனுடைய பெயர் சொல்லாத ஒரு பிள்ளை தகப்பனுக்குப் பிள்ளையாக முடியுமா? முடியாது. அதைப்போல கிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்கிற ஒரு சபை அவருடைய சபையாகாது. நாங்கள் வேறு நாமத்தில் சபையை அழைத்தாலும் அது கிறிஸ்துவுக்குச் சொந்தமானதுதான் என்று வாதிடுவார்கள். வானத்திலும் பூமியிலும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு அந்தந்த பெயரிலே அவைகளை சொன்னால்தான் மற்றவர்களுக்குப் புரியும். ஆண்டவருக்கு அருமையான பெயர் இருக்கும்போது, அது தீர்க்கதரிசனத்தின்படி சொல்லப்பட்டிருக்கும்போது ஏன் அந்த நாமத்தை மறுதலித்து, வேறொரு பெயரில் சபை அழைக்கப்பட வேண்டும்? இதற்கு மாற்று விளக்கங்களைக் கொடுப்பதோ அல்லது மாற்ற நினைப்பதோ மாபெரும் குற்றமாகும். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்.

இதுவரை இந்த உண்மை உங்களுக்கு தெரியாதிருந்தால் இன்று முதல் வேதாகமம் அழைக்கிற கிறிஸ்துவின் பெயரில் சபையை அழைத்து, அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

## 39. ஐசுவரியவான்
## A Rich Man

**உ**லகத்திலே அநேக ஐசுவரியவான்கள் அதாவது பணக்காரர்கள் இருக்கிறார்கள். அதிலே உலக பணக்காரராக பில்கேட் அவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். பணம் பத்தும் செய்யும் என்பார்கள். பணம் வந்துவிட்டால் மனிதனுடைய நிலையே மாறிவிடும். இயேசுவினிடத்தில் ஒரு ஐசுவரியவான் வந்து; “அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன்



தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அவன்: இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அதைக் கேட்டு இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால், இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான். அவன் அதிக துக்கமடைந்ததை இயேசு கண்டு, ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது. ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்” (லூக்.18:18–25). பணக்காரர்கள் தேவனுடைய கட்டளையை பூரணமாக பின்பற்ற முடியாமல் போய்விடுகிறார்கள். காரணம் என்ன? பணம் அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது, ஆகையால் பணத்தின்மீது தங்களுடைய முழு கவனத்தையும் வைத்திருக்கிறார்கள். ஆண்டவரிடத்தில் வந்த ஐசுவரியவான் அப்படிப்பட்ட ஒருவனாக இருந்தான். உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் என்ற வார்த்தைகளை கேட்டவுடனே துக்கமடைந்தவனாக போய்விட்டான்.

அன்பானவர்களே, எருசலேமின் நுழைவாயிலே ஒரு பெரிய கேட் இருக்குமாம் அதற்கு பக்கத்திலே ஒரு Sub Gate இருக்குமாம். பெரிய கேட் அடைத்திருக்கும்போது Sub Gate வழியாக போவார்களாம். அதிலே ஒட்டகங்கள் மிக கடினப்பட்டு உள்ளே போகுமாம். இதையே கர்த்தர் ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே அதாவது Sub Gate வழியாக நுழைவது எளிதாயிருக்கும் என்றார். இன்றைக்கு ஐசுவரியவான்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சபைக்குள் வர பணம் ஒரு தடையாக இருக்கிறது. இந்த ஐசுவரியவானுடைய கேள்வி மிக நன்றாக இருந்தது. நல்ல போதகரே

நித்தியஜீவனை சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டான். அதற்கு ஆண்டவர் நல்ல போதனையை கொடுத்தபோதிலும் அவனுடைய இருதயம் பணத்தின் மீது இருந்தபடியால் அவனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாமற்போய்விட்டது. உங்களுடைய நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கிறது? நித்தியஜீவனை பெறவேண்டுமானால் நீங்கள் கர்த்தருடைய கட்டளைக்கும், கற்பனைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் குறித்து 1இரா.19:19–21 வசனங்களில் நாம் வாசிக்கும்போது, எலியா அவனைக் கண்டு: பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்த அவன் மீது தன் சால்வையைப் போட்டான். "அப்பொழுது அவன் மாடுகளை விட்டு எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவுகொடும், அதற்குபின் உம்மைப் பின் தொடர்வேன் என்றான். அதற்கு அவன் போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள் என்றான். அப்பொழுது அவன் இவனை விட்டுப்போய், ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்.

அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு, அவன் எழுந்து எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ்செய்தான்" இந்த எலிசா எலியாவின் அழைப்பை ஏற்று கர்த்தருக்கு ஊழியம் செய்ய தன்னை உடனே அர்ப்பணித்து தன்னுடைய நிலத்தை பன்படுத்த பயண்டுத்திய, ஓர் ஏர்மாடுகளை பிடித்து அவைகளை கலப்பை கட்டைகளாலே சமைத்து, ஜனங்களுக்கு விருந்து செய்து, மகிழ்ச்சியடைந்து எலியாவின் பின் சென்று கர்த்தருக்கு ஊழியம் செய்தான். அவனை எலியா அழைக்கும்போது தன்னுடைய பணியை விட்டுவிட அவன் கடுகளவும் தயங்கவில்லை மேலும் இந்த நற்செய்தியை ஜனங்களுக்கு தெரியப்படுத்த தனக்குண்டானவைகளை செலவு செய்தான். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உன்னுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் சற்று கவனித்துப்பார், நீ எந்த அளவுக்கு உன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறாய்? இந்த எலிசாவைப் போல



உன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடு. கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார். உனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட வேலையைச் செய். கர்த்தர் அதற்குரிய பலனைக் கொடுப்பார்.

அன்பானவர்களே, இரண்டு காசு போட்ட ஏழை விதவையை கர்த்தர் நமக்கு சுட்டிக்காட்டுகிறார். "அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள் இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார்" (லூக்.21:1–4).

ஐசுவரியவான்களை எல்லாம் விட்டு விட்டு இந்த ஏழை விதவையை மட்டும் கர்த்தர் குறிப்பிடுவதற்கான காரணம் என்ன? அவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு இருந்த எல்லாவற்றையும் போட்டு விட்டாள். நாளைக்காக அவளிடத்தில் ஒன்றுமில்லை. அவளுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்! இன்று நடத்திய கர்த்தர் நாளையும் நம்மை நடத்துவார் என்ற அசையாத நம்பிக்கை அவளிடமிருந்தது. நாளைக்காக கவலைப்படாதிருங்கள் என்ற திருவசனத்தை கைக்கொள்ளுகிறவளாக இருந்தாள். நாம் இந்த ஏழை விதவையைப் போல நம்மை அர்ப்பணித்திருக்கிறோமா? பிரியமான நேயரே, முதல் நூற்றாண்டில் இயேசுவின் பின்னே திரளான ஜனங்கள் சென்றார்கள். அவருடைய அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்டு பிரமித்தார்கள். அதே வேளையில் அவரைப் பற்றிக்கொண்ட ஸ்திரீகளில் சிலர் "தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்" என்று லூக்.8:4–ல் வாசிக்கிறோம். தங்களுடைய சொந்த பணத்தை கர்த்தருடைய

ஊழியத்திற்காக செலவு செய்தனர். இன்று இருக்கிற ஐசுவரியவான்கள் அப்படிச் செய்கிறார்களா? எனக்கு ஒரு சில சகோதரர்களைத் தெரியும் அவர்கள் உயர்வான பதவிகளில் இருக்கிறார்கள் நல்ல சம்பளம் வாங்குகிறார்கள். தங்களுடைய சொந்த பணத்திலே ஒரு சிலருக்கு மாத உதவி செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவருக்குக் கூட உதவி செய்வதில்லை. அப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்ய பணம் பெறவே விரும்புகிறார்கள். பிரியமானவர்களே, முதல் நூற்றாண்டு சகோதரிகள் தங்கள் சொந்த பணத்தை செலவு செய்ததைப்போல, உங்களுடைய சொந்த பணத்தை செலவு செய்து பரலோகத்திலே பொக்கிஷத்தை சேர்த்துவையுங்கள்.

ஐசுவரியவானுடைய நிலைமையை குறித்து யாக்கோபு சொல்கிறார்: ''ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்'' (யாக்.5:1–5). உலகப் பொருள், ஒரு மனிதனுடைய ஜீவனை, மரணபிடியிலிருந்து விடுவிக்காது. எவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தாலும் ஒரு நாள் மரிப்பார்கள்.

அந்த வேளையில் அவர்கள் சவதரித்து வைத்த செல்வங்கள் அவர்களைத் தப்புவிப்பதில்லை. ஒரு மதிகேடனைக் குறித்து லூக்.12:16–21–ல் வாசிக்கிறோம். அந்த ஐசுவரியவானுடைய நிலம் நன்றாய் விளைந்தது, அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன் என் தானியங்களை சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே நான் ஒன்று



செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைப்பேன். பின்பு ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு பொருள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ, மதிகேடனே உன் ஆத்துமா இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். அன்புக்குரியவர்களே, நீங்கள் தேவனுடைய சமூகத்திலே அவருடைய வார்த்தைகளை கேட்டு கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருக்க பிரயாசப்படுங்கள். கர்த்தர் தாமே அவருடைய ஐசுவரியத்தின்படியே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**கேள்வி**

✪ **மனிதனுடைய ஜீவனை மீட்கக்கூடியது எது?**

இயேசுவின் இரத்தம். ''நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்'' என்றார் (யோவா.10:11). இவ்வசனத்தின்படி இயேசு நம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக தம்முடைய ஜீவனையே சிலுவையில் கொடுத்தார். இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல என்று சொல்லுகிறார்.

''மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?'' (லூக்.9:25). ஆகையால் நீங்கள் மீட்கப்படத்தக்கதாக உங்களை முதலாவது கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஞானத்தையும், பெலத்தையும் கர்த்தர் உங்களுக்குத் தந்தருள்வாராக!

## 40. எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

# Rejoice Evermore

**வா**ழ்க்கையில் சந்தோஷம் என்பது மிகப்பெரிய ஒரு ஆசீர்வாதம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் சந்தோஷமாகவே இருக்க விரும்புகின்றனர். ஆனால் எதிர்பாராத விதமாக அவர்களுக்கு அப்படிப்பட்ட சந்தோஷம் கிடைப்பதில்லை. ஆதி முதலாக பாவம் செய்கிற பிசாசு அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சந்தோஷத்திற்கு ஒரு வகையில் தடையாக இருக்கிறான். ஒரு மனிதன் தன்னுடைய வாழ் நாளெல்லாம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றே வேதம் போதிக்கிறது. மனிதன் சந்தோஷமாக இருக்கவும் கர்த்தருடைய கிரியைகளைக் கண்டு கர்த்தரை ஸ்தோத்தரிக்கவும் அவரை ஆராதிக்கவும் படைக்கப்பட்டான்.

இந்த மெய்யான சந்தோஷத்தை பெற்று அநுபவிக்க ஒரு வழி உண்டு அதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு குறிப்பிடும்போது: "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன், என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள் நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்றார் (யோவா.15:7–11).

சந்தோஷம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவாயிருக்க, கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு பூரணபிரமாணமாகிய அன்பிலே நிலைத்திருக்கவேண்டும். சந்தோஷம் வேண்டும் ஆனால் கற்பனைகளைக் கைக்கொள்ளமுடியாது என்றால் எப்படி



சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்? அன்பானவர்களே, அநேகருடைய வார்த்தைகள் இப்படியே இருக்கிறது. மனிதன் எதிர்பார்க்கிற சந்தோஷம் நிலையில்லாத ஒன்று. அதை கர்த்தர் தருவதாக வாக்குப்பண்ணவில்லை. அவர் கொடுக்கிறதான சந்தோஷம் நிலையான ஒரு சந்தோஷம். அதைப் பெற்றுக்கொண்ட ஒருவன் ஆகாயத்தில் பறக்கிற ஒரு பறவையைப்போல கவலையற்று சந்தோஷமாக இருப்பான். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்றார் (யோவா.14:27).

ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே சமாதான கர்த்தர் இருப்பாரானால் அவன் மெய்யான சமாதானத்தை பெற்று அநுபவிக்க முடியும். இன்றைக்கு வாழ்க்கையில் சமாதானமில்லாமல் தங்களை மாய்த்துக்கொள்கிறார்கள், வீட்டை விட்டே ஓடிப்போய்விடுகிறார்கள், அல்லது குடும்பத்திலே குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். வேதத்திற்கு செவி கொடுத்து ஆவியானவர் மூலமாக கொடுக்கப்பட்ட வசனத்திற்கு கீழ்ப்படிவார்களேயானால் சமாதான கர்த்தர் அவர்களோடிருந்து அவர்களை சரியான பாதையிலே நடத்துவார். அவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையக்கூடிய ஆடுகளைப்போல புஷ்டியாயிருப்பார்கள்.

எவர்கள் தான் சந்தோஷமாக இருப்பார்கள்? சங்கீதக்காரனாகிய தாவீது இதற்கு பதிலளிக்கிறார். "உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக" (சங்.5:11). ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் அவரை நம்புவீர்கள் என்றால் எல்லாநாளும் சந்தோஷமாயிருப்பீர்கள். நம்பிக்கை என்பது விசுவாசத்தினால் வரக்கூடிய ஒன்று உங்கள் விசுவாசத்தை கர்த்தர் மீதுவையுங்கள். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று

அவரில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். கர்த்தரை முழு இருதயத்தோடு ஏற்றுக்கொண்டவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக பிலிப்பு மந்திரி சம்பவத்திலே பிலிப்பு கர்த்தருடைய வார்த்தையை கொஞ்சம் மட்டுமே அறிந்த மந்திரிக்கு ரதத்திலே விவரித்து காண்பிக்கும்போது மந்திரி தாமதமில்லாமல் உடனே இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து, அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானத்தை பிலிப்பு மூலம் பெற்றுக்கொண்டபோது அவனுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி உண்டாகி “மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்” என்று அப்.8:39–ல் வாசிக்கிறோம்.

கர்த்தருக்குள் வந்த சந்தோஷத்தினால் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி என்னவென்றால், தன்னுடைய பாவத்தை கர்த்தர் மன்னித்தார், தான் கர்த்தருடைய சபையிலே ஒரு அங்கத்தினன், ஜீவபுஸ்தகத்திலே என்னுடைய பெயர் எழுப்பட்டிருக்கும், பரலோகமே அந்நாளிலே சந்தோஷப்பட்டிருக்கும் என்றெல்லாம் எண்ணி சந்தோஷத்தினால் அங்கிருந்து கடந்துபோனான். இப்படிப்பட்ட மகிழ்ச்சியை முதலாவது நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களை கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள். “மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றென்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” லூக்.15:7.

“ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக்கொளுத்தி, வீட்டைப்பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டு பிடித்த பின்பு தன் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச்



சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். அன்பானவர்களே, பாவத்தின் வஞ்சனையினால் பிடிபட்ட நம்முடைய முற்பிதாக்கள் பாவத்திற்கு அடிமையானார்கள். அந்தபாவத்திலிருந்து மனந்திரும்பி வருகின்ற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்திலே தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷம் உண்டாகிறது. பூமியிலே பாவத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொண்ட மனிதன் சந்தோஷமடைகிறான், அவனை சார்ந்த திருச்சபையும் சந்தோஷமடைகிறது. இந்த விதமான பாக்கியத்தை பெற்றுக் கொண்டவர்கள். நிலையான ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாக மாறுகிறார்கள்.

இந்த உலகத்திலே ஒரு கிறிஸ்தவன் எதை இழந்தாலும் சந்தோஷமாகவே இருப்பான். அதற்கு காரணம் என்னவென்றால், பேதுரு சொல்கிறார்: “கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்” (1பேது.1:5–7).

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பரலோகத்திலே சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறது. இதை நினைக்கும்போது நமக்குள்ளே ஒருவிதமான சந்தோஷமுண்டாகிறது. உதாரணமாக, பாருங்கள் லட்ச ரூபாயிலே 10 ரூபாய் இழப்பீடு வந்தால் யாரும் சோர்ந்து போகமாட்டார்கள் ஏனென்றால் மீதம் 10 ரூபாய் குறைய லட்ச ரூபாய் இருக்கிறதே என்ற தைரியம். அழிந்துபோகக்கூடிய பொன்னை, அக்கினியினாலே சோதிக்கிறார்கள். அதைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு பின்பு ஆண்டவர் வருகையிலே புகழ்ச்சியும் கனமும்

மகிமையுமுண்டாகக் காணப்படும். ஆகையினாலே இவ்வுலகத்திலே ஏற்படக்கூடிய சோதனைகளை; ஜெயித்து வாடாத கிரீடத்தை கர்த்தராலே பெறுவோம் என்ற நம்பிக்கையிலே சந்தோஷமாகயிருங்கள். பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது; ''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்'' என்று பிலி.4:4–ல் எழுதுகிறார். Rejoice in the LORD alway: and again I say, Rejoice. திரும்ப திரும்ப வலியுறுத்தி சொல்லுகிறார். ஏனென்றால் மனமகிழ்ச்சி முக மலர்ச்சியைத்தரும் – A merry heart makes a cheerful countenance ஆகையால் நாம் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இவைகளுக்கு விரோதமாக இருப்பது கவலை இவைகளை நாம் நம்முடைய வாழ்க்கையில் முதலாவது அப்புறப்படுத்த வேண்டும்.

ஏன் கவலை கொள்ளவேண்டும்? அப்படி என்ன நடந்தது? நாம் ஒன்றும் கொண்டுவந்ததில்லையே! நாம் ஒன்றும் கொண்டு போவதில்லையே பின்னே ஏன் கவலை? ''நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்'' (பிலி.3:20). நம்முடைய நிரந்தர வாழ்வு இங்கே இல்லை டெம்ப்ரரியாக இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருகிற நாம், நிலையான வாழ்வை நோக்கி இருக்கிறோம். இப்பூமியிலே இருக்கிற உலகப்பிரகாரமானவைகள் அங்கே இருக்காது, ஆவிக்குரியவர்கள் அங்கேயிருப்பார்கள்.

அங்கே கண்ணீர் இல்லை, கவலையில்லை, ஏமாற்றமில்லை, பொறாமையில்லை, மேட்டிமையில்லை, தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். ஆகையால் அந்த நிரந்தர வாழ்வை நினைத்து இப்பூமியிலே எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இப்படிப்பட்ட சந்தோஷத்தை கர்த்தர் ஒவ்வொருநாளும் கொடுக்கும்படியாக நாங்கள் உங்களுக்காக அநுதினமும் ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

✪ **ஒருவனுடைய சந்தோஷத்திற்கு நாம் உதவியாயிருக்க முடியுமா?**

நிச்சயமாக முடியும். எப்படியென்றால், ஒரு மனிதனுக்கு



கிடைக்கப்பெற்ற நற்செய்தியை அறிந்துகொண்டு, அதை அவனுக்கு சொல்லும்போது அவன் மிகவும் சந்தோஷமடைகிறான். பசியாயிருக்கிற ஒருவனுக்கு நிலைமையை அறிந்து அவன் பசியை ஆற்றும்போது அவன் எப்படிப்பசியாறுகிறானோ அதைப்போல கவலையில் இருக்கிற ஒருவனுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துச்சொல்லி இளைப்பாறுதலைக் கொடுக்கிற இயேசுகிறிஸ்துவிடம் வழி நடத்தும்போது, மெய்யான சந்தோஷத்தை விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்கிறான்.

ஆதலால் பவுல் ''உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம், விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே'' என்று எழுதுகிறார் (2கொரி.1:24). நாமும் மற்றவர்களுடைய சந்தோஷத்திற்கு சகாயராக இருந்து அவர்களை கர்த்தருக்கு நேராக வழி நடத்துவோம். மற்றவர்களுக்கு உபத்திரவமாக அல்ல உதவியாயிருக்க நாடுவோம். கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிப்பாராக!

## 41. அடைக்கலம்
## Defense

**ந**மக்கு யாராவது அடைக்கலம் கொடுப்பார்களா என்று அழைந்துதிரியும் அநேகரை நாம் காண்கிறோம். சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறார்: ''சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்'' (சங்.9:9). The LORD also will be a refuge for the oppressed in times of trouble. சிறுமைப்பட்டவன் என்றால் தள்ளுண்டவன், ஒடுக்கப்பட்டவன், இப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார். நீங்கள் பலரால் புறக்கணிக்கப்பட்டு இருக்கலாம் அல்லது நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின் காரணத்தினால் வேறு இடங்களுக்கு தஞ்சமாக சென்று இருக்கலாம். எது எப்படியிருந்தபோதிலும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற நாளிலே அவர் உனக்கு உதவி செய்வார். ''நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். கர்த்தர் அவர்களுக்கு உதவி

செய்து அவர்களை விடுவிப்பார்; அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்'' என்று சங்.37:39–ல் வாசிக்கிறோம். ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் கர்த்தரையே நம்பியிருப்பீர்கள் என்றால் உங்களை கர்த்தர் விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இந்த மூன்று தேவ மனிதர்களை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் ராஜாவின் கட்டளைக்கு பயப்படாமல் ராஜா நிறுத்தின சிலையை வணங்க மறுத்தார்கள். ஆதலால் கடுமையான அக்கினி சூளையில் போடப்பட்டார்கள். அவர்கள் கருகிப்போனார்களா? அவர்கள் ஆராதித்த நம்முடைய தேவனாகிய கர்த்தர் அந்த சூளையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினார். இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம் என்ற தாவீதின் வசனப்படி அவர்களை காத்தார். புதிய ஏற்பாட்டிலே பவுல், சீலா கர்த்தருடைய பணியை தீவிரமாக செய்து வந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை போதித்தபடியால் அவர்களை அடித்து பின்பு சிறைச்சாலையில் பத்திரமாகக் காக்கும்படி சிறைச்சாலைக் காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

மேலும் அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தார்கள். ''நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று'' என்று அப்.16:25,26 வசனங்களில் படிக்கின்றோம். கர்த்தர் இப்படியாக அவருடைய பிள்ளைகளை துன்மார்கர் கைக்கு விடுதலையாக்கினார். அந்த தேவன் உங்கள் நடுவிலிருக்கிறார். உங்களையும் அவ்விதமாக விடுவித்து காப்பார் என்ற முழு நிச்சயமுள்ளவர்களாயிருங்கள்.

மேலும் தாவீது சொல்கிறார்: ''என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என்



அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்'' (சங்.62:7,8). நாம் சில வேளைகளில் சோர்ந்துபோய் எங்கே என் ஜெபம் என் மடிக்கே திரும்ப வந்து விட்டது என் தேவன் என்னைக் கைவிட்டார் என்று சொல்லி அங்கலாய்க்கிறோம்.

அன்பானவர்களே, தேவன் ஒருபோதும் கைவிடுவதில்லை. அன்னாள் தன்னுடைய இருதயத்தில் உள்ளதையெல்லாம் தேவ சமூகத்தில் ஊற்றி ஜெபித்தாள். அவளுடைய கண்ணீரின் ஜெபத்தைக்கேட்ட கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்தை நிறைவேற்றினார். நீங்கள் தேவ சமூகத்தில் உங்கள் இருதயங்களை ஆராய்ந்து அறிகிற தேவனுக்கு முன்பாக ஊற்றி ஜெபியுங்கள். அடைக்கலமாகிய கர்த்தர் உங்கள் ஜெபத்தைக்கேட்டு உங்களுக்கு நன்மையானதைத் தருவார். இஸ்ரவேலருக்கு கர்த்தர் அடைக்கலமாகவேயிருந்தார்.

ஆகையால் அவர்களுக்கு அடைக்கலப்பட்டணங்களை ஏற்படுத்த சொன்னார். ''கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள். கொலைசெய்தவன் நியாயசபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல், பழிவாங்குகிறவன் கைக்குத் தப்பிப்போயிருக்கும்படி அவைகள் உங்களுக்கு அடைக்கலப் பட்டணங்களாய் இருக்கக் கடவது'' (எண்.35:11,12). இப்படியே ஆறு பட்டணங்களை இஸ்ரவேலிலே ஏற்படுத்தும்படி கட்டளையிட்டார். தேவன் எவ்வளவு நல்லவர் என்பதை இந்த வசனங்கள் மூலம் நாம் அறிகிறோம். எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் விறகு வெட்டும்போது அவனுடைய அரிவாள் கைதவறி கீழே நிற்கக்கூடிய ஒருவனுடைய தலையில் பட்டு அவன் இறந்துபோனால் அவனுடைய குடும்பத்தார்களோ, அல்லது உறவினர்களோ அதற்கு காரணமானவனைக் கொலைசெய்யும்படி கோபத்துடனே தேடுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய கைக்கு தப்பி போயிருக்கும்படியாக இந்த அடைக்கலப்பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டது. அந்த அடைக்கலப்

பட்டணத்திற்கு அவன் சென்ற பிறகு அவனை கொலை செய்யும்படியாக அங்கே போகக்கூடாது என்ற கட்டளையிருந்தது. நியாயம் விசாரிக்கப்படும்வரை அவன் அங்கே இருக்கவேண்டும். இதனடிப்படையில் இன்று கோர்ட் இருக்கிறது. முன் ஜாமின் வாங்கிக் கொள்கிறார்கள். கொஞ்சங்குறைய எல்லாம் வேதாகமத்தின்படியாக இயங்கிவருகிறது.

யாருக்கு அடைக்கலம் கிடைக்கும்? தேவன் இங்கே ஏசாயா தீர்க்கன் மூலமாக பேசுகிறார்: "நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப்பேசி, இடுக்கன் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்" (ஏசா.33:15,16).

இப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார். வாழ்க்கையில் நீதி, நேர்மைக்கு, கட்டுப்பட்டு ஜீவிக்க வேண்டும். இடுக்கண்செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுக்கவேண்டும். அன்றும் சரி இன்றும் சரி பரிதானங்களை வாங்கும் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது. தேவன் அதை உற்றுப் பார்க்கிறார். ஒருவரும் அதிலிருந்து தப்பமுடியாது. தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்திலே சொல்லிக் கொள்கிறான். ஆகையால் துணிந்து பாவத்தை செய்கிறார்கள். மனிதனை மனிதன் அடித்து வாழும் நாட்களிலே இருக்கிறோம். மிருகங்கள் கூட ஒன்றை ஒன்று அடித்து வாழ்வதில்லை, ஒன்று மற்றொரு இன விலங்கினை அடித்து வாழ்கிறது. மனிதர்களோ மிருகங்களிலும் கேடாக சென்று, இரத்தம் சிந்த தீவிரிக்கிறார்கள். எனக்கு அன்பான நேயரே, உன் ஜீவியம் எப்படிப்பட்டது? ஏசாயா தீர்க்கன் சொல்வதைப்போல பொல்லாப்புக்கு உன் கண்களை மூடுவாயானால் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணும்படியாக தேவன்



உன்னை உயர்த்துவார். அப்பமும் தண்ணீரும் நிச்சயமாகக் உங்களுக்குக் கொடுக்கப்படும். கர்த்தர் சபையை போஷிக்கிறவராகவும், காத்துநடத்துகிறவராகவும் இருக்கிறார். "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா" ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது, உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" என்றார் (மத்.10:29–33).

பிதாவின் சித்தமில்லாமல் ஒன்றும் இப்பூமியிலே நடைபெறாது. ஏனென்றால் நீங்கள் தேவனுடைய பலத்தகரத்திற்குள் அடைக்கலமாக இருக்கிறீர்கள். ஆதலால் பயப்படாதீர்கள். ஆகாயத்து பறவைகளான அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் என்று குறிப்பிடுகிறார். ஆகையால் உங்கள் அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருங்கள்.

ரூத் நகோமி சம்பவத்திலே "ரூத்: நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்" (ரூத்1:16,17). கர்த்தரை பின் பற்றி அவரை அறிக்கை செய்த நீங்கள், ரூத் நகோமியை பற்றிக்கொண்டதைப்போல கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டீர்களா? அவ்விதமாக பற்றிக்கொள்ளுங்கள். அப்படிப் பற்றிக்கொண்ட ரூத்தைப் பார்த்து

போவாஸ்: “உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக” என்றான் (ரூத்.2:12). தன்னுடைய இனம், ஜனம், நாடு தன்னுடைய தேவர்கள் எல்லாவற்றையும் விட்டு நகோமியின் தேவனை பற்றிக்கொண்டு அடைக்கலமானாள். இவளுடைய சந்ததியிலே கிறிஸ்துவானவர் பிறந்தார். எனக்கு அன்பானவர்களே, இந்த ரூத்தைப்போல இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை அடைக்கலமாக கொள்ளுங்கள். உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறார். கர்த்தரை அடைக்கலமாக கொள்ளுங்கள்.

### கேள்வி

✪ **இன்று அடைக்கலப் பட்டணங்கள் தேவையா?**

“வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இறைப்பாறுதல் தருவேன் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது” என்றார் (மத்.11:28–30). இன்று உலக முழுமைக்கும் ஒரே அடைக்கலமாக இயேசு இருக்கிறார். அவர் இருக்கும்போது அடைக்கலப்பட்டணங்கள் எதற்கு? அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். அவரே சபையின் தலைவர், அவரே இரட்சகர், அவரே பிரதான மேய்ப்பர், அவரே ஜீவ பலி, அவரே சமாதான கர்த்தர், அவரே வரப்போகும் நியாயாதிபதி. “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப்.4:12). சர்வத்திற்கும் அடைக்கலமாகிய இயேசுவிடம் திரும்புங்கள். அவர் உங்களை தம்முடைய ராஜ்யமாகிய சபையிலே சேர்த்துக்கொள்வார்.



## 42. புதிதும் ஜீவனுமான மார்க்கம் A New and Living Way

**நா**ம் வாழும் இவ்வுலகில் அநேக மார்க்க பிரிவினைகளைப் பார்க்கிறோம். இதிலே எது மெய்யான மார்க்கம் என்பதை கண்டுபிடிப்பதில் பலர் குழம்பிபோய்விடுகின்றனர். ஆனால் குழம்பவேண்டிய அவசியமேயில்லை. மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கம் கொஞ்சகாலம் தோன்றி பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறது. இயேசு சொல்கிறார்: “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார் (யோவா.14:6). I am the way, the truth, and the life: no man comes unto the father, but by me. இயேசு நம்முடைய வாழ்க்கையின் வழியாகவும், சத்தியம் நிறைந்த சத்தியபரராகவும், அவரே நமக்கு ஜீவனுமாயிருக்கிறார். அவரில்லாமல் நாம் தேவனை தரிசிக்கமுடியாது. அவர் பரிசுத்த மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி அதை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இரத்தம் சிந்துதலில்லாமல் மனிதனுக்கு பாவ மன்னிப்பு இல்லை. அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல அவரைப்பின்பற்றுகிற ஒவ்வொருவரும் பரிசுத்தராயிருக்க வேண்டும். “ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகியதிரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம்” (எபி.10:19–22). நாம் தேவன் இருக்கிற பரிசுத்த ஸ்தலமாகிய

பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு ஆண்டவராகி இயேசு கிறிஸ்து புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை ஏற்படுத்தினார். That is new and living way. இம் மார்க்கம் உயிருள்ள மார்க்கம் ஆகையால் தான் இன்றுவரை அது நிலைத்திருக்கிறது. அநேக மார்க்கங்கள் தோன்றி அழிந்துவிட்டன. அவைகள் இருந்த இடங்கூட தெரியாமற்போய்விட்டது. பரிசுத்த வேதாகமம், இம் மார்க்கத்தின் துவக்கத்தைப் பற்றி பேசுகிறது. இம்மார்க்கத்தை ஆதியிலே பிசாசு அழிக்க திட்டமிட்டான் ஆகையால் கர்த்தர் ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்'' என்றார் (ஆதி.3:15).

மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே பிசாசை ஜெயித்தார். ஆதலால் இந்த மார்க்கத்தின் வழியாகப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது. இந்த மெய்யான மார்க்கத்தை கண்டு கொண்ட ''திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்'' (அப்.5:14). இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் இம் மார்க்கத்திலே உங்களை இணைத்துக்கொள்ள இயேசுவை விசுவாசித்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள்.

இந்த மார்க்கத்திற்கு விரோதமாக சிலர் எழும்பி அப்போஸ்தலர்களை கொலை செய்யும்படி யோசனை பண்ணினார்கள். ''அப்பொழுது சகல ஜனங்களோடே கனம்பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர் கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச் சொல்லி, சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்;



அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவனுக்குப்பின்பு குடிமதிப்பின் நாட்களிலே கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள் இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்து போம்; தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழிந்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்'' என்றான் (அப்.5:34–39).

ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே இந்த மார்க்கத்தைக் குறித்து கமாலியேல் போன்றோர் எச்சரிக்கையுடையவர்களாக இருந்தனர். இது தேவனால் உண்டாயிருந்ததேயானால் இதை ஒழித்துவிட உங்களால் கூடாது என்றனர். கர்த்தர் உண்டுபண்ணின மார்க்கத்தை யாராலும் அழித்துவிட முடியாது. தெயுதாஸ், யூதாஸ் போன்றோர் இம் மார்க்கத்திற்கு விரோதமாக எழும்பி தன்னைப் பின்பற்றும்படி கொஞ்சபேரை ஏற்படுத்தியும் அவைகள் ஒன்றுமில்லாமற்போய்விட்டது. இன்றைக்கு அந்தவிதமான ஒழிந்து போகக்கூடிய மார்க்கங்களையே அதிமாக நாம் பார்க்கிறோம். அவைகள் செத்துப்போன மார்க்கங்களாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவர் ஏற்படுத்திய மார்க்கம் ஜீவனுள்ள மார்க்கம். அதற்காக இயேசு தமது ஜீவனையே கொடுத்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் சவுலாக இருந்த காலத்திலே இம்மார்க்கத்திற்கு விரோதமாக செயல்பட்டான். ''இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது, சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே

சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார் (அப்.9:2–5). தம்முடைய தரிசனத்தின் மூலம் கர்த்தர் சவுலை எச்சரித்தார். நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவனோ தாமதமில்லாமல் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று இம்மார்க்கத்தைக் குறித்து எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்தவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கிக்கிற ஒரு அப்போஸ்தலனாக மாற்றப்பட்டான். புதிய ஏற்பாட்டிலே 14 நிருபங்களையும் எழுதினான்.

“அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்து பெரிய கலகம் உண்டாயிற்று. எப்படியென்றால், தெமேத்திரி என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தான். இவர்களையும் இப்படிப்பட்ட தொழில் செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து; மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு, உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள் இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலேமாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள்.

இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது” என்றான் (அப்.19:23–27). தாங்கள் உண்டுபண்ணின மார்க்கத்திற்காக பவுலோடும் மற்ற சீஷர்களோடும் வாக்குவாதம் பண்ணினார்கள். நாமும் அநேக சூழ்நிலையில் இவ்விதமாக மற்ற மார்க்கத்தாரோடு போராட வேண்டியவர்களாக இருந்திருக்கிறோம். கிறிஸ்தவ மார்க்கம் தேவனால் திட்டமிடப்பட்ட



மார்க்கம். இம் மார்க்கம் புதிதும் ஜீவனுமான மார்க்கமாகவும் பூர்வ பாதையிலிருந்து வந்த மார்க்கமாகவும் இருக்கிறது. அநேகர் கிறிஸ்து வந்து இரண்டாயிரம் வருடங்கள் ஆகிறது அதற்கு முன் இம் மார்க்கம் இருந்ததா? என்று கேள்வி எழும்புகின்றனர். இதைக் குறித்து; எரேமியா தீர்க்கன் சொல்லியிருக்கிறார்: “வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம்” என்கிறார்கள் (எரே.6:16).

இந்த பூர்வ பாதையிலே ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்” என்று கர்த்தர் சொல்லுகிறார். கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் என்ற ஏசாயா தீர்க்கதரிசனத்தின்படி எருசலேமிலே கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்டு இன்று உலகமெங்கிலும் பரம்பி பலன்தருகிறது. அநேகர் அதன் மூலமாக தாகந்தீர்க்கப்பட்டு, மெய்யான மார்க்கத்தைக் கண்டுகொள்கிறார்கள்.

அங்கே இளைப்பாறுதல், சமாதானம், சந்தோஷம், நீடிய தயவு, நற்போதனைகளுமுண்டு. மேலும் ஏசாயா சொன்னதை பேதுரு நினைப்பூட்டுகிறார்: “இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை” (1பேது.2:6). நீங்களும் விசுவாசம் வைத்து வெட்கப்படாத அங்கமாகுங்கள்.

**கேள்வி**

✪ **கிறிஸ்தவம் ஒரு மதமா அல்லது அது ஒரு மார்க்கமா?**

ஒரு மார்க்கமே. வழி வழியாக மற்றவைகளைச் சொல்லுகிறதுபோல கிறிஸ்தவத்தையும் ஒரு மதமாக பார்த்துவிட்டார்கள். உண்மையிலே அது ஒரு மதமாகாது. மதம் என்று சொன்னால் வெறி அல்லது ஒரு கூட்டத்தாரைக் குறிக்கக்கூடிய ஒன்றாகிவிடும். கிறிஸ்தவம் எல்லோருக்கும் பொருந்தும். யாவரும் அதிலே சேர்க்கப்படலாம். பவுல் இது ஒரு மார்க்கம் என்பதை தெளிவாக பேசுவதை அப்போஸ்தலநடபடிகள் புஸ்தகத்திலே வாசிக்கிறோம். **“இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே”** அப். 24:14 என்று சொல்லுகிறார். ஆகையால் கிறிஸ்துவானவர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இம் மார்க்கம் தூய்மையானது, தூய்மையுள்ளவர்கள்தான் இம் மார்க்கத்தின் வழியாக செல்ல முடியும். உங்களை பரிசுத்தமாக்கிகொள்ள இம் மார்க்கத்திற்குள்ளாக இணைந்துகொள்ளுங்கள்.

## 43. கல்லறை
## Sepulchre

**உ**யிரோடு இருக்கிற நாம் ஏன் கல்லறையைக் குறித்து தியானிக்கவேண்டும் என்று நினைத்துவிடாதீர்கள். அது அவசியம். அநேகர் இயற்கை மரணத்தை விரும்பாமல், தங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியினாலும் ஏமாற்றத்தினாலும், இப்பூமியிலே வாழப்பிடிக்காமல் மரணத்தை நோக்கி போகிறார்கள். மரணம் ஒரு மனிதனுக்கு வரக்கூடிய ஒன்றுதான். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பார்கள். உண்மைதான் பிறப்பிலே அநேக குழந்தை இறந்துவிடுகிறது. சிலர் வயதாகி மரிக்கிறார்கள். ஆக மொத்தத்தில் சரீர மரணம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

மரணத்தைக் காணாதபடி சிலர் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என வேதம் நமக்குச் சொல்லுகிறது ஏனோக்கு, எலியா போன்றோர் மரணத்தை காணாதபடி அப்படியே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இயேசு சொல்கிறார்: “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும்



இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா” என்றார் (யோவா.11:25,26). இதை லாசருவின் சம்பவத்தின் போது மார்த்தாளிடத்தில் கர்த்தர் சொன்னார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ இந்த வசனங்களை நம்புகிறாயா? உயிரோடிருந்து அவரை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் மரிப்பதில்லை அவர்கள் மரித்தாலும் மீண்டும் பிழைப்பார்கள். அதற்கு அடையாளமாக இயேசு மரித்து நான்கு நாளான லாசருவை உயிரோடு எழுப்பினார்.

“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.55:8,9). நாம் இருக்கிற பூமி விஞ்ஞான வளர்ச்சி கண்டுள்ளது. கம்யூட்டர் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனிதன் செயற்கை மனிதர்களையும் மனுஷிகளையும் உண்டாக்கிக் கொண்டு இருக்கிறான். ஒன்றைப்போலவே ஒன்றை உருவாக்குகிறான். ஏன், சொல்லப்போனால் குளோனிங்முறையிலேகூட ஒரே மாதிரியான விலங்குகளையும், மனிதர்களையும் உண்டாக்குகிறான். ஆனால் அவனால் மரித்தோரை திரும்ப எழுப்பமுடியவில்லை, காலப்போக்கில் அதையும் செய்து விடுவான் என்ற பேச்சு அடிபடுகிறது.

பிரியமானவர்களே, அது ஒருக்காலும் நடைபெறாது. மரித்தோரை எழுப்புகிற கர்த்தராலே மட்டுமே அது ஆகும். எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடையவைகள். மனிதனுடைய எண்ணங்களும் நினைவுகளும் வேறு, கர்த்தருடைய எண்ணங்களும் நினைவுகளும் வேறு. நோவா காலத்திற்கு பின்பாக அப்போதிருந்த மனுஷர்கள் நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லி பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள். தேவன் அதை அனுமதிக்கவில்லை.

ஏனென்றால் மனிதன் பூமியிலே பழுகிப்பெருகி பூமியை நிரப்பவேண்டுமென்பது தேவனுடைய திருச்சித்தமாயிருந்தது. இவர்களுடைய யோசனை கர்த்தருக்கு விரோதமாக இருந்தபடியால் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி அங்கிருந்து பூமியின் மீதெங்கும் சிதறப்பண்ணினார். அவர்களுடைய எண்ணம் நிறைவேறாமற்போயிற்று.

அன்பானவர்களே, மனிதன் மண்ணாய் இருக்கிறான் மண்ணுக்கே திரும்புவான் இது தேவனுடைய நியதியாயிருக்கிறது. ‘‘நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்பும் மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்’’ என்றார் (ஆதி.3:19). கல்லறையை எல்லோரும் பார்த்துதான் ஆகவேண்டும். ஏனென்றால் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்கு திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு செல்லவேண்டும் என்று பிரசங்கி கூறுகிறான். மோசேயைப் பாருங்கள் இஸ்ரவேலை வனாந்தரத்தில் 40 வருடங்கள் வழிநடத்தி வந்தவன்.

அந்த மோசேயை, கர்த்தரே அடக்கம் செய்கிறார். அவனுடைய பிரேதகுழியை இன்று வரை அவனுடைய குடும்பத்தார்களோ, இஸ்ரவேலர்களோ அறியவில்லை. தலைமகன் தாய்க்கு கொல்லி போடுவான். இளையமகன் தகப்பனுக்கு கொல்லி போடுவான் என்பார்கள். இங்கே மோசேக்கு பிள்ளைகளிருந்தும் அவனுடைய அடக்க ஆராதனையில் அவர்கள் கலந்து கொள்ளமுடியவில்லை. இதுவும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

அன்பானவர்களே, நாம் பூமியிலே ஏதோ ஒரு இடத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அதற்காக இந்த இடத்திலே தான் அடக்கம் செய்யப்பட வேண்டும், என் உறவினர்கள் பக்கத்திலே தான் அடக்கம் செய்யப்படவேண்டும் அல்லது என்னுடைய தாய்திருச்சபையின் கல்லறையிலே தான் அடக்கம் செய்யப்படவேண்டுமென்றல்ல. சுனாமி வந்தது எத்தனை மக்கள் அநாதியாக அடக்கம் செய்யப்பட்டார்கள். இன்றும் அந்த காட்சிகள் நம் உள்ளத்தை உருக்குகிறது. பெரிய பெரிய பொக்லியன் வைத்து குழி தோண்டி புதைத்தனர். ஒரே இடத்தில்



நூற்றுக்கணக்கானோர் மூடப்பட்டனர் சிலரை சுனாமியே மூடிவிட்டது. நாம் என்ன சொல்வோம்? இவர்கள் எல்லோரும் பாவிகளா? இல்லையே. மனிதனுடைய நிலைமை அப்படியாக இருக்கிறது. பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு என்ற ஒன்று கட்டாயம் உண்டு. ஆனால் ஒரு மனிதன் ஆவியில் மரிப்பானேயானால் அவன் நிலைமை ஒரு மிருகத்தினுடைய மரணத்தைப்போலிருக்கிறது. அவன் பூமியிலே வாழ்ந்தும் பிரயோஜனமற்றவனாக போகிறான். அவனுக்கு கல்வி இருந்தது, சொத்துக்கள் இருந்தது, உறவு வீடு வாசல் இருந்தது என்ன பயன்? தன்னுடைய ஆத்துமாவை காக்காமற்போய்விட்டானே! மரித்தபின் ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு போகிறது. தேவன் அந்த ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்.

இப்பூமியிலே அது எப்படி இருந்தது என்பதை அறிகிறவராக இருக்கிறார். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடுகூடபோம். அவர்கள் தங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்திருப்பார்களேயானால் ஞானஸ்நானத்திலே அவரோடு அடக்கம்பண்ணப்பட்டு, எழுப்பப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். இயேசுவானவர் மரிக்கும்போது பிதாவே என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றார். மரித்த இயேசுவை தேவன் தம்முடைய வல்லமையினால் மூன்றாம் நாளிலே அவரை உயிரோடு எழுப்பினார்.

இயேசுவானவர் சிலுவையில் மரிக்கப்போவதை அறிந்தவராக இருந்தார். அவருக்கோ தலைசாய்க்க இடமில்லை. யோசேப்பு அவர்மீது வைத்த அன்பினால் ‘‘பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்’’ (மத்.27:58–60). அவன் இயேசுவுக்கு கொடுத்த கல்லறையிலே கர்த்தருடைய சரீரம் இருந்ததா? இல்லை. கல்லறையைப் பார்க்க மகதலேனா மரியாள், யோவன்னாள், யாக்கோபின் தாயாகிய மரியாள், மற்ற ஸ்திரீகளும் வந்தபோது இரண்டு தேவதூதர்கள் அவர்களை

நோக்கி: ‘‘உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார்’’ என்று சொன்னார்கள். இயேசுவை அடக்கம் பண்ணின கல்லறை இன்றும் திறந்தே இருக்கிறது. உலகத்திலே எல்லா கல்லறைகளும் அதாவது கல்விமான்கள், ஞானிகள், தானதர்மம் பண்ணின மகாத்துமாக்கள், ராஜாக்கள், ஆசாரியர்கள் போன்றோர்களின் கல்லறைகள் எல்லாம் மூடியே இருக்கிறது ஆனால் இயேசுவை வைத்த கல்லறை மட்டும் திறந்தே இருக்கிறது. அவர் உயிர்த்தெழுந்தார். He is risen. அவரை விசுவாசிப்பீர்களானால் நீங்களும் உயிர்த்தெழுவீர்கள்.

‘‘ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுண்டு’’ (1கொரி.15:44). ஜென்ம சரீரம் முந்தினது ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. பிரியமானவர்களே, நாம் கர்த்தருக்குள் இருந்தால் மரிப்பதில்லை. ‘‘ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்’’ (1தெச.4:16).

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்குள் என்றால் அவருடைய ராஜ்யத்திற்குள், அதாவது அவருடைய சபைக்குள் என்று அர்த்தம். ஒருவன் கிறிஸ்துவுக்குளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று 2கொரிந்தியர்5:17–ல் வாசிக்கிறோம். பெயரளவில் இருந்து கொண்டு காலத்தை வீணாக்காதீர்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லை. ‘‘சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது, அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறு ரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய்



எழுந்திருப்பார்கள். நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்’’ (1கொரி.15:50–54). இப்படியிருக்கிறபடியால் நாம் கல்லறைக்குச் சொந்தமானவர்கள் அல்ல. ஆகையால் கல்லறையை நாடாது உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருந்துகொண்டு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மரித்துக்கொண்டிருக்கும் இந்த மானிடவர்க்கத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

**கேள்வி**

✪ **கல்லறை ஏற்படுத்துவது தவறா?**

ஒரு மனிதனுக்கு கல்லறை வேண்டும். அதற்காக கல்லறையையே சதா பிடித்துக்கொண்டிருக்கக்கூடாது. மேலும் கல்லறைக்காக ஒரு கிறிஸ்தவனாக வாழக் கூடாது என்றே சொல்ல விரும்புகிறேன். ‘‘நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்’’ (யாக்.4:14,15). நம்முடைய மகிமை புல்லின் பூவைப் போன்றது புல் உலர்ந்து அதின் பூவும் உதிரும். மனிதன் எங்குவேண்டுமானாலும் அடக்கம் செய்யப்படலாம். அவன் கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்படுவானேயானால் இயேசு மீண்டும் வரும்போது உயிரோடு எழுப்பப்படுவான். பின்பு ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய நித்தியமாக தேவனோடிருப்பான். இப்படியிருக்கிறபடியால் ஒருவன் கல்லறைக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை.

## 44. கடினமான உபதேசம்
## This is an hard saying

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நமது

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

மனிதனுக்குக் கடினமாக தோன்றக்கூடிய அநேகமுண்டு. அவைகளை மனிதன் எடுத்துக்கொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். அதைப்போல உபதேசத்தை கேட்பதிலும் அதைக் கையாளுவதிலும் வல்லவர்களாக இருக்கவேண்டும். இயேசுவைப் பின்பற்றின திரளான சீஷர்களில் அநேகர் அவருடைய உபதேசங்களைக் கேட்டபொழுது, "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்" (யோவா.6:60). இன்றைக்கும் அநேக விசுவாசிகள் இவ்விதமாக சொல்லி பின்வாங்கிப்போகிறார்கள்.

இவர்களுக்கு ஆண்டவருடைய உபதேசம் கடினமாக தோன்றுகிறது, எனவே யார் இதைக் கேட்பார்கள் என்று மற்றவர்களைக் குறித்த கரிசனையோடு பேசுகிறார்கள். அன்பானவர்களே, சோம்பேறியானவன் தன்னால் செய்ய முடியாத காரியத்தை செய்யாதிருக்கையில் மற்றவர்களைப் பார்த்து இதை யாரும் செய்ய முடியாது என்பான். அந்தப்படியாக பெலவீனமுள்ள சீஷர்கள் சொன்னார்கள். அந்த சீஷர்களுடைய முறுமுறுப்பைக் கண்டு "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றார் (யோவா.6:63).

ஆவிக்குரியவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான். ஆனபடியினாலே ஆவிக்குரியவர்கள் இன்னாரென்றும் மாம்சத்திற்குரியவர்கள் இன்னாரென்றும் நாம் அறிகிறோம். மேலும் "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்" (யோவா.6:65–67). பிதாவினால்



முன் குறிக்கப்பட்டவர்கள் அனைவரும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும், அவர்மூலமாய் கிடைக்கிற உபதேசத்தையும் பற்றிக்கொண்டு நிலைத்திருப்பார்கள். மற்றவர்களோ யூதாசைப்போல பின்வாங்கிப்போவார்கள்.

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களைநோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:31,32). உபதேசம் மிக முக்கியமானது. ஆகையால் தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி, நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். உபதேசத்தைக்குறித்த விஷயத்தில் அநேகர் அலட்சியம் செய்கின்றனர். உபதேசத்தைப் பற்றி பேசும்போது அது இருக்கட்டும், அந்நியபாஷையைக்குறித்து, பரிசுத்த ஆவியைக்குறித்து, உபவாசத்தைக்குறித்து, அபிஷேகத்தைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்பார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தாங்கள் தேவனுடைய கற்பனைகளை சரியாக கைக்கொண்டுவருகிறோம் என்ற எண்ணமுடையவர்களாக இருந்து கொண்டு கைக்கொள்ளவேண்டிய உபதேசங்களைக் கைக்கொள்ளாமற்போய்விடுகிறார்கள். "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.5:24). இன்று நீங்கள் இயேசுவினுடைய உபதேசத்தைக்கேட்டு, பிதாவை விசுவாசிப்பீர்கள் என்றால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு. மரணத்திற்கு தப்புவிக்கப்படுவீர்கள்.

"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப்போகிறவாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக்

கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' என்றார் (மத்.7:13,14). பெரிய வழிகளைத் தான் அநேகர் தெரிந்து கொள்ளுகிறார்கள். ஏனென்றால் கஷ்டமில்லாமல் சொகுசான வாழ்க்கை வாழலாம், இப்பூமியில் இருக்கும்வரை எல்லாவற்றையும் ஆண்டு அநுபவிக்கலாம். நாம் ஏன் கஷ்டத்தை விலை கொடுத்து வாங்கவேண்டுமென நினைத்து கேட்டுக்குப்போகிற வாசலை தெரிந்து கொள்ளுகின்றனர். ஆனால் அதனுடைய வழி மரண வழி என்பதை மறந்துவிடுகின்றனர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமானது பாடுகள், பிரச்சனைகள், வருத்தங்கள், சஞ்சலங்கள் இருக்கத்தான் செய்யும், பேதுரு பவுல் போன்றோர் முதல்நூற்றாண்டிலே பாடுகளை அநுபவித்தார்கள். அவரோடுகூட பாடுபட்டோமென்றால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம். எல்லாவிதமான பாடுகளிலிருந்தும் பிரச்சனைகளிலிருந்தும் கர்த்தர் நம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். தன்னைப் பின் பற்றிவந்தால் பாடுகள் இல்லை என்று கர்த்தர் சொல்லவில்லை,

''ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்'' (லூக்.9:23,24). முதலாவது நம்மை நாமே வெறுத்து நமக்கு வரக்கூடிய பாடுகளை அநுதினமும் சகித்துக்கொண்டு அவர் பின்னே செல்லவேண்டும். பவுலுக்கும் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்தது.

அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன் அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். பிரியமானவர்களே புதிய ஏற்பாட்டிலே 14 நிருபங்களை எழுதிய பவுலுக்கும் பாடுகளிருந்தது. கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிப்பதில் அவன் சோர்ந்துபோகவில்லை. நீங்களும் அவருடைய உபதேசத்தைக்குறித்து சோர்ந்துபோகாது அவைகளைக் கருத்தாய்



கைக்கொள்ளுங்கள்.

ஒரு முறை இயேசுவானவர் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ''ஆண்டவரே நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றிவருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார். வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன் ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி என்றார். பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான்போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்'' (லூக்.9:57–62).

இந்த மூன்று நபரும் கர்த்தருடைய உபதேசத்தைக் கேட்டு அவரைப் பின்பற்றும்படியாக வாஞ்சையாக வந்தபோதிலும், ஆண்டவர் சொன்ன உபதேசத்திற்கு அவர்கள் செவிகொடுக்க அவர்களுடைய மனது கடினப்பட்டிருக்கக் கூடும். அநேகர் பலவிதமான நோக்கத்தைக் கொண்டவர்களாக இயேசுவைப் பின்பற்றுகின்றனர். ஆதலால் அவர்களுக்கு அவருடைய உபதேசம் மிக கடினமான தாகவே இருக்கிறது.

இந்த உபதேசத்தைக் கேட்டு விசுவாசிப்பதினால் ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள் என்று பேதுரு எழுதுகிறார். Receiving the end of your faith even the salvation of your soul. ''உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள் தங்களிலுள்ள

கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப்பின் வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது. இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்'' (1பேது.1:10,11). கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கக்கூடிய இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணியிருக்கிறார்கள் என்று வாசிக்கிறோம். கிருபையின் காலத்திலே அதாவது புதிய ஏற்பாட்டின் யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து அக்கரையில்லாமலும், அதற்குரிய கனத்தை செலுத்தாமலும் அதற்கு கீழ்ப்படியாமலும் இருந்து கொண்டு அது கடினம் என்று சொல்லலாமா?

``....பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்கள் அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்'' (1பேது.1:12). எப்படி தீர்க்கதரிசிகள் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்களோ அதைப்போல தேவதூதரும் இந்த இரட்சிப்பை உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள். ஆக, தீர்க்கதரிசிகள், தேவ தூதர்போன்றோர் ஆவலாய் உற்று நோக்கின இந்த உபதேசத்தையும் இரட்சிப்பையும் குறித்து நாம் கவலையற்று இருக்கலாமா? ``ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்.

ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாகிய நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான



இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்'' (எபி.2:1–4). ஆகையால் அவருடைய உபதேசத்தைக் குறித்து கவனமுள்ளவர்களாயிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

**✪ கிறிஸ்துவின் உபதேசம் கைக்கொள்ளமுடியாத மிக கடினமான ஒன்றா?**

இல்லை. இயேசு சொல்கிறார்: ``வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்றார் (மத்.11:28–30). அவருடைய உபதேசத்தை நாம் ஏற்றுக்கொள்வதாலே நமக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். நம்முடைய பாரத்தை அவர் ஏற்றுக்கொண்டு நமக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கிறார். ஆக, கர்த்தருடைய உபதேசத்தைக் கைக்கொள்வதாலே நமக்கு பாரம் குறைகிறதே ஒழிய அது கைக்கொள்ளுவதற்குக் கடினமான ஒன்றல்ல.

## 45. அக்கினி கடல்
## The Lake of Fire

**அ**க்கினி கடல் ஒன்று இருக்கிறதா? தேவன் மன்னிக்கக்கூடியவர் அல்லவா? பின்பு அக்கினி கடல் எதற்கு? என்ற கேள்வி அநேகருக்குள் இருந்துகொண்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் யோபுவின் புத்தகம் 33:14–ம் வசனத்தில் எலிகூ என்ற மனிதன் சொல்லுகிறான். ``தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே'' ஆக தேவன் அக்கினி கடலை பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஏற்படுத்தியுள்ளார். அவனோடுகூட

“பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்” (வெளி.21:8). இவ்வசனத்தின் மூலம் நாம் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்? அங்கே நீதிமான்கள் இருப்பதில்லை, பொய்யர், விக்கிரகாராதனை செய்யக்கூடியவர்கள், விபசாரக்காரர், அவிசுவாசிகள் இப்படிப்பட்ட அருவருப்பான காரியங்களை இப்பூமியில் செய்கிறவர்கள் தான் அக்கினிகடலிலே பங்கடைவார்கள்.

அன்பான தேவஜனமே நீங்கள் எப்படிப்பட்டவர் களாயிருக்கிறீர்கள்? தேவன் பரிசுத்தராயிருக்கிறார் அவரைப்போல பரிசுத்தமானவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள். பிசாசு உங்கள் அவயவங்களில் உண்டுபண்ணுகிற மாம்ச இச்சைகளை வெறுத்துத்தள்ளுங்கள். அது உங்களுக்கு நிலையான வாழ்வை ஏற்படுத்தாது தேவ கோபத்தை கொண்டுவரும். “லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப்புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழிதுத்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்” (லூக்.17:28–30).

அதைப்போலவே இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. மனிதன் வாழ்வதே குடிக்கவும், புசிக்கவும், பெண் கொடுக்கவும், பெண்கொள்ளவும் என்று நினைக்கிறார்கள். ஆசீர்வாதமான வாழ்வை சிந்திப்பார் இல்லை! பிரியமானவர்களே, லோத்தினுடைய நாட்கள் நமக்குத் திருஷ்டாந்தமாக இருக்கிறது. அவர்கள் உணர்வில்லாதவர்களாய் இருக்கும்போது தேவன் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்க செய்து அழித்துப்போட்டார். மனந்திரும்பாத பட்சத்திலே இப்படியாக நடந்தது. இதோ, ஆண்டவராகிய இயேசு சீக்கிரம் வரப்போகிறார், நீங்களும் மனந்திரும்பாத பட்சத்திலே அக்கினிகடலிலே பங்கடைவீர்கள்.



காலத்தை பிரயோஜனப்படுத்தி நீங்கள் இரட்சிக்கப்பட உங்களை பரிசுத்தத்திற்கு அற்பணியுங்கள். ஆண்டவருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுத்து பிசாசினுடைய வழிகளை விட்டு விலகி கர்த்தர் ஏற்படுத்தின மெய்யான வழியிலே நடக்க பிரயாசப்படுங்கள்.

அக்கினி கடலிலிருந்து தப்புவிக்க அநேக உபதேசங்களை நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். “உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு, நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே புழு சாவாமலும் அக்கினி அவியாமலு மிருக்கும்” (மாற்.9:43,44).

இந்த உபதேசம் ஒருவேளை கேட்பதற்கு மிக கடினமாக இருக்கலாம். சரீரத்திலே மிக நன்றாக வாழ்ந்து மரித்து நரகத்திற்கு அதாவது அக்கினி கடலுக்கு போவதால் என்ன பயன்? அங்கே புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். அப்படியென்றால், நிரந்தரமான வேதனை இருக்கும் அந்த இடத்திலே சென்று வேதனைப்படுவதைவிட இங்கே நமக்கு விரோதமாக எழும்பக்கூடிய கையையோ அல்லது காலையோ, கண்னையோ இழப்பது நன்று.

அன்பானவர்களே, உங்கள் தீர்மானம் எப்படி? நற்காரியங்களைச் செய்து சிறப்பானவர்களாக அதாவது பிதாவுக்கு ஏற்றவர்களாக ஜீவிப்பீர்களானால் அவர் உங்களை நேசித்து நீங்கள் அவருக்குள் வளர உதவிசெய்வார். “இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்” (மத்.3:10). இதோ, கடைசி நாட்களில் உலகத்தின் முடிவிலிருக்கிற ஒவ்வொருவருக்கும் எச்சரிப்பு உண்டாகும்படியாக இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன் இதை பிரசங்கித்தார். ஆம் கோடாரியானது மரங்களின் வேர்களருகே வைக்கப்பட்டு இருக்கிறது, எதற்காக? கனிகொடாத மரங்களை வெட்டி அக்கினியிலே போடத்தக்கதாக. தேவன் மனிதனை மிக நேர்த்தியாக

சிருஷ்டித்திருக்கிறார். அவனோ அநேக உபாயதந்திரங்களை தேடிக்கொண்டான். தேவன் சிருஷ்டித்த அனைத்தும் அதனதன் வேலையைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. மனிதன் மட்டுமே பிசாசுக்கு செவிகொடுத்து ஆகாதகொடிகளாய்போனான். இதோ நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல கனி கொடாத பட்சத்தில் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவான். பிரிய நேயரே, தேவ சத்தத்தைக் கேட்கிற நீ எங்கிருந்தாலும் சரி நீ தேவனுக்கு ஏற்ற கனிகொடுக்கப் பிரயாசப்படு உன் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி தேவனுக்கு ஒப்புக்கொடு உன்னை சிருஷ்டித்த தேவன் உன்னை அறிந்திருக்கிறார். அவர் உன்னை கைவிடவில்லை, நீர்தான் அவரைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டாய். மனந்திரும்பு இல்லாவிட்டால் வெட்டுண்டுபோவாய்.

மேலும் யோவன்ஸ்நானகன் சொல்லுகிறான்; “தூற்றுக்கூடை அவர் கையிலே இருக்கிறது; அவர் தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினாலே சுட்டெரிப்பார்” என்றான் (மத்.3:12). கர்த்தர் பதரை தம்முடைய களஞ்சியத்தில் சேர்க்கிறவரல்ல. அவர் கையில் தூற்றுக்கூடை இருக்கிறது தமது கோதுமையை தூற்றி பதரை பிரித்து, கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். இப்படியாக விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்க்கிறார். கீழ்ப்படியாதவர்களும், மறுதலித்துப்போனவர்களும் பதரைப்போல இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். நீங்கள் கோதுமையாக இருக்கிறீர்களா? அல்லது தூற்றினால் ஓடிப்போகும் பதராயிருக்கிறீர்களா? உங்களை நீங்களே நிதானித்து அறியுங்கள். எல்லோரும் கேதுமை மணிகளாகவே இருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

ஆதலால் பாவம் உலகத்தில் பிரவேசித்த நாள் துவங்கி இன்று வரையிலும் அவருடைய தாசர்கள் மூலமாக தம்முடைய வார்த்தைகளை கொடுத்துக்கொண்டுவருகிறார். இவைகளைப் பற்றிக் கொண்டவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். இரட்சிப்பு கர்த்தருடையது அது



இலவசமானது, அதைக் கேள்விப்படுகிற நீங்கள் அதைக்குறித்து சிந்தியுங்கள். கிருபையுள்ள அவ்வசனத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். பேதுரு தம்முடைய பிரசங்கத்திலே: “எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்” என்கிறான் (அப்.10:35). நீங்கள் அவருக்கு உகந்தவர்களாக மாறவேண்டுமானால் முதலாவது அவருக்கு பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நீதியைச் செய்ய பிரயாசப்படுங்கள்.

“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்: அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்” (வெளி.20:12). மரித்தோர் தங்கள், தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் என்று காண்கிறோம். நாம் மரித்தபின்பு நம்முடைய கிரியைகள் நம்மோடு எடுத்துக்கொள்ளப்படும். அந்த கிரியைகளுக்கு ஏற்ற பலனை கர்த்தராலே பெறுவோம். ஆகையால் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கதக்கதாக ஒவ்வொருநாளும் கர்த்தருடைய கிரியைகளிலே பெருகுங்கள். நாம் நன்மைசெய்து, நற்கிரியைகளைச் செய்து, கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் அறிந்து அவரை அறிக்கை செய்து அவருடைய வசனத்துக்கு கீழ்ப்படிந்து அவருடைய திரு சித்தத்தின்படி ஞானஸ்நானம் பெற்று, கர்த்தருடைய சபையில் இருக்கும்போது நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம்.

அப்படியில்லாமல், வேதத்திற்கு புறம்பானவர்களாக நடந்து சகலவித துண்மார்க்கத்திற்கும் செவி கொடுத்து ஜீவிப்பீர்களென்றால் நியாயத்தீர்ப்பிலே தள்ளுண்டு போவீர்கள். அவியாத அக்கினிக்கு இறையாவீர்கள். உங்கள் கிரியைகளை உங்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லும். மற்றவர்கள் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நித்தியத்திற்கு போவதும், அக்கினி கடலை தெரிந்து கொள்வதும்

இப்பொழுது உங்களிடம் இருக்கிறது. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார். அவரைப் பற்றிக் கொண்டு நிலையான வாழ்வை தேடுங்கள்.

ஐசுவரியவான் லாசரு சம்பவத்திலே அந்த ஐசுவரியவான் ''பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜீவாலையில் வேதனைப்படுகிறேன் என்று கூப்பிட்டான்'' (லூக்.16:23,24). பாதாளத்தில் ஐசுவரியவான் அக்கினிஜீவாலையில் வேதனைப்பட்டான் என்று காண்கிறோம். பூமியில் இருக்கும்போது அவனோ சுகபோகமாக வாழ்ந்தவன். இப்பொழுது வேதனையை அநுபவிக்கிறான், லாசருவோ தேற்றப்படுகிறான். இந்த ஐசுவரியவானைப் போல வாழ்ந்தால் அக்கினி கடலில் பங்கடைவோம். இவ்வுலக ஆஸ்தி ஒருவனையும் தப்புவிக்காது. அவருடைய வசனம் நம்மை மரணத்துக்கு தப்புவிக்கும். அந்த வல்லமையுள்ள வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

✪ **நித்திய அக்கினியாருக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது?**

''பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது'' என்று மத்.25:41–ல் இயேசு சொல்வதை வாசிக்கின்றோம். ஆம், மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார். இன்றைக்கு மனிதனை மனிதன் அழித்துக்கொண்டு இருக்கிறான். கர்த்தரோ, ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். அவருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று எண்ணுங்கள். தேவனை அறியாதவர்களும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச்



செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (2தெச.1:7–10).

## 46. நாம் எதற்கு கடனாளிகளாயிருக்கிறோம்? For What We Are Debters?

**நா**ம் பல வழிகளில் கடனாளிகளாக மாறுகிறோம். அளவுக்கு மிஞ்சி நினைக்கும்போது கடன்வாங்க உந்தப்படுகிறோம். வாங்கின கடனை அடைக்கமுடியாமல் திண்டாடுகிறோம். கடன் வாங்கக்கூடாது என்ற போதனைகளை அநேக முறைகேட்டபோதிலும் கடன் வாங்கவே முயற்சிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கடன்பட்டிருந்தார். நம்மைப்போல கடனல்ல, சுவிசேஷக் கடன். அது என்னவென்று கேட்கிறீர்களா? அவர் சொல்வதை வாசிப்போம்; ''சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பல முறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும் ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கு என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்'' (ரோம.1:13–15) என்றார்.

ஆண்டவர் கொடுத்த கட்டளையை நிறைவேற்றாதவரைக்கும் நாமும்கூட ஒருவகையில் சுவிசேஷ கடனாளிகளாகவே இருக்கிறோம். ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அப்படியிருக்க எல்லோரும் இரட்சிக்கப்பட இரட்சிப்பின் சுவிசேஷ வசனத்தை அறிவிக்க வேண்டியது எல்லோர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

அன்பின் நிமித்தமாக மற்றவர்களுடைய உலகபிரகாரமான கடன்களைக்கூட நாம் சுமக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல் ஒநேசிமுவை அதிகம் நேசித்தபடியால் பிலேமோனுக்கு எழுதும்போது 18,19 வசனங்களில் ''அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும். பவுலாகிய நான் இதை என் சொந்தக் கையாலே எழுதினேன், நான் அதைச் செலுத்தித்தீர்ப்பேன். நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்தவேண்டுமென்று நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே'' என்று எழுதுகிறான். இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் சகோதரர்களுடைய கடன் சுமைகளைக் குறைக்கிறவர்களாக இருக்கிறோம்? நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம். ஆகையால் அன்பானவர்களே '' இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்'' (தீத்.3:8).

தேவனிடத்தில் விசுவாசமானவர்கள்; அவர் எப்படி நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறாரோ அதைப்போல நற்கிரியைகளைச் செய்யவேண்டும். இயேசுவானவர் நன்மைசெய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார். அவர்களோ அவரை கொலை செய்யும்படி வகைதேடினார்கள். இறுதியிலே சிலுவையில் தம்முடைய ஜீவனை கொடுக்கும் முன்பு பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்.

மேலும் பவுல்: ''ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்'' (ரோம.13:8) மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்று எழுதுகிறார். கடன் அன்பை முறிக்கும் என்ற வாசகத்தை அநேக கடைகளில் வாசித்திருப்பீர்கள். உண்மைதான்



கடன் அன்பை முறித்துவிடும். இதை அறிந்து கடன் வாங்காதிருக்கவேண்டும். என்ன செய்வது திடீரென்று விருந்தாளிகள் வந்துவிட்டார்கள். மாதக் கடைசியாகிவிட்டது கையில் இருந்த பணமெல்லாம் 10–ந் தேதிக்குள் செலவாகிவிட்டது. இன்னும் வீட்டுவாடகை கொடுக்கவில்லை, பால்காரருக்கு பணம் கொடுக்கவில்லை, ஸ்கூல் பீஸ்வேறு கட்டவில்லை. வந்த விருந்தாளிகளை அப்படியே அனுப்பமுடியுமா? ஆகையால் தான் கடன் வாங்குகிறோம் என்று சொல்லி கடனுக்கு மேல் கடன் வாங்கி பின்பு தலைமறைவாகிவிடுவார்கள். அன்பானவர்களே, பவுலினுடைய வார்த்தைப்படி அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்.''அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்'' (1யோவா.3:16).

அன்பு, அன்பு, என்று வாயளவில் பேசி விட்டால் அன்பு உண்டாகாது. இன்றைய நாட்களில் பெரிய, பெரிய கூட்டங்களிலும், சபை கூட்டங்களிலும் அன்பைப் பற்றி அநுதினமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் அன்பின் கிரியைகள் இல்லை. ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

தீர்க்கதரிசிகளின் காலத்தில் ''தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்துபோனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்: கடன்கொடுத்தவன் இப்பொழுது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான் என்றாள். எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன

இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒருகுடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். அப்பொழுது அவன்: நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளேபோய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப்பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான். அவள் அப்படியே போய், தன் பிள்ளைகளுடன் கதவைப்பூட்டிக்கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள். அந்தப் பாத்திரங்கள் நிறைந்தபின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி: இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா என்றாள். அதற்கு அவன்: வேறே பாத்திரம் இல்லை என்றான்: அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று. அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன்: நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக்கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான்'' (2இரா.4:1–7).

கர்த்தருக்கு பயந்து நடந்து மரித்துப்போன தாசனுடைய குடும்பத்தை கர்த்தர் கைவிடவில்லை. தீர்க்கதரிசியை அனுப்பி அக்குடும்பத்தின் கடனை தீர்க்க ஆலோசனை கொடுத்தார். ஞானமுள்ள அப்பெண் ஒரு குடம் எண்ணெய் வைத்திருந்தபடியால் அதை வார்த்து கடனை தீர்த்து மீதமானதைக்கொண்டு ஜீவனம் பண்ணினாள். அன்பான வாசகரே, உன் குடும்பம் எப்படிப்பட்ட கடனில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கிறது. இக் குடும்பத்தின் கடனை அடைத்த கர்த்தர் உங்கள் குடும்பத்தின் கடனையும் அடைக்க வேண்டுமென்று விரும்புவீர்கள். நல்லதுதான் ஆனால் அக்குடும்பம் கர்த்தருக்கு பயந்த குடும்பமாக இருந்தது நீங்கள் அப்படிப்பட்ட குடும்பமாக இருக்கிறீர்களா? என்ன கடன் வாங்கினாலும் கர்த்தர் கடனை அடைக்க ஆலோசனை கொடுப்பார் என்று கடன் வாங்கிக்கொண்டே இருக்கிறீர்களா?

''கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற



பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (பிலி.2:15,16). கிறிஸ்தவர்களை இவ்வுலகம் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் காலத்தை ஞானமாய் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். கடன் வாங்கி, கடன்வாங்கி காணாமற்போவதைவிட உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம்.

''நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்'' (யாக்.4:14,15). நாளைக்கு நடப்பதை அறியாத நாம் நாளைய தினத்தைக் குறித்து கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லை. அநுதின ஜீவியம் மிக சிறப்பானதாக இருக்கிறது. காட்டு புஷ்பங்களையும், ஆகாயத்து பறவைகளையும் கவனித்துப்பாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியங்களில் சேர்த்துவைப்பதுமில்லை அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய நம்மை பிழைப்பூட்டமாட்டாரா?

ஆகூர் இப்படியாக சொல்லுகிறான்: ''இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்: நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும் மாயையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என்படியை எனக்கு அளந்து என்னைப்போஷித்தருளும்'' நீதி.30:7–9ல் கேட்கிறார். இது மிக நேர்த்தியான விண்ணப்பமாயிருக்கிறது. நீங்களும் அநுதினபடியை ஆண்டவரிடம் கேளுங்கள். அன்புகூருகிற கடனேயன்றி மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய உதவியை உங்களுக்கு செய்வாராக!

**கேள்வி**

✪ **வட்டிக்கு கொடுப்பது பாவமா?**

நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். நமக்கு இருக்கிற எல்லாமே கர்த்தருடையது. வானமும் பூமியும் அதிலுள்ளயாவும் கர்த்தருடையவைகள், நாமும் அவருக்கு சொந்தமானவர்கள். இப்படியிருக்கிறபடியால் ஒருவனும் இது எனக்குரியது என்று சொல்லமுடியாது. கர்த்தர் கொடுத்த பணத்தை வட்டிக்கு கொடுப்பது பாவமே. "உன் சகோதரன் தரித்திரப்பட்டு கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்க வேண்டும்; பரதேசியைப்போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக, நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரர் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக" (லேவி.25:36,37). கர்த்தர் இப்படிப்பட்ட ஒரு கட்டளையை இஸ்ரவேலருக்குக் கொடுத்த போதிலும் பணத்தை வட்டிக்கு கொடுக்கக்கூடிய கூட்டம் இருந்துகொண்டுதான் இருந்தது. அது இன்றும் நீடிக்கிறது. இப்பொழுது தன் பணத்தை வட்டிக்கு கொடுக்க நினைப்பது கூட பாவம்.

## 47. வாழ்த்து
## Salute

**நா**ம் எதற்கு முந்துகிறோமோ இல்லையோ! வாழ்த்துதல் சொல்ல முந்திக்கொள்ள வேண்டும். வேதமும் அப்படியே போதிக்கிறது. கண்டும் காணாதவர்களாக போகும் பழக்கத்தை நம்மில் அநேகர் கொண்டுள்ளோம். இது ஒரு நல்ல பழக்கமில்லை. மாம்சத்தில் இருக்கிற நாம் மாம்சத்திலிருக்கிற ஒருவனுக்கு நம்மை ஒளிக்கலாகாது. ஒருவரையொருவர் வாழ்த்தி நலம் விசாரிக்க கற்றுக்கொள்ளவேண்டும். ஒருவேளை துக்கத்தோடு போகக்கூடிய உங்களுடைய நண்பன் உங்களுடைய வாழ்த்துதலையும், விசாரிப்பையும் கேட்டு சற்று சரீரத்திலே உற்சாகமடைவான். இதைச் செய்யாது அவனை கடந்து



செல்லும்போது துக்கப்படுகிற அவன் இருதயத்தில் இப்படியாக நினைப்பான். என்னை கடந்து செல்கிறான் கண்டுகொள்ளாமல் போகிறான். எங்கே நம்முடைய துக்கம் அவனுக்கு வந்துவிடும் என்று பயப்படுகிறானோ என்னவோ என்று சொல்லிக்கொள்ளுவான். நாம் அதிமான வாழ்த்துக்களை திருமண வீடுகளில் கேட்கமுடிகிறது. பரிசுத்த வேதத்திலும் ரெபெக்காளை அவளுடைய சகோதரனும் குடும்பத்தாரும் ".......எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள்" (ஆதி.24:60). எல்லா குடும்பங்களிலும் இவ்விதமான வாழ்த்துதலை நம்மால் கேட்க முடிகிறது. இந்த வாழ்த்துதல் நாளடைவில் சண்டையில் முடிவடைகிறது. அந்த வாழ்த்து தொடர்வதில்லை. ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி ஒருவரையும் சபியாதிருங்கள் மற்றவர்கள் கெட்டுப்போவதினால் நமக்கு என்ன லாபம்? மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். நாம் நலமான காரியங்களைச் செய்வோம் என்றால் நலமானவைகளைப் பெற்றுக்கொள்வோம்.

மோவாப் தேசத்திலே கணவனையும், தன்னுடைய இரண்டு குமாரர்களையும் இழந்து தன்னுடைய மருமகள் ரூத்தோடு பெத்லெகேம் ஊருக்கு வந்த நகோமியை "அயல்வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்" (ரூத்.4:17). இந்த சந்ததியில் இயேசு பிறந்தார்.

அன்பானவர்களே, இவர்களுடைய வாழ்த்து தன் இரண்டு மகனை இழந்த வயதான நகோமிக்கு ஆறுதலாக இருந்திருக்கும். இழந்த என் சந்ததியை கர்த்தர் தழைக்கச் செய்தார் என்று சொல்லி தேவனை துதித்திருக்கக்கூடும். ஓபேத், ரூத் பெற்றெடுத்த பிள்ளையாக இருந்தபோதிலும் அதை வளர்க்கிற தாயானாள் நாகோமி. கர்த்தருக்குள்ளாக இவ்விதமான குடும்பங்கள் இருக்கும் வரை வாழ்த்துதல் ஓயாது. அங்கே ஆசீர்வாதம் தங்கும். இதை பெற்று அனுபவிக்க ஒரு நகோமியாக, ஒரு ரூத்தாக மாறுங்கள். மனந்திரும்பி தேசத்தின் நன்மையை அனுபவியுங்கள். வானமும் பூமியும்

கர்த்தருடையவைகள் மத்.28:9–ல் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் இயேவின் உயிர்த்தெழுந்த செய்தியை அறிவிக்கப்போகிறபோது: "இயேசு தாமே அவர்களுக்கு எதிர்பட்டு வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" ஆண்டவரும் தம்முடைய சீஷர்களை வாழ்த்தினார் என்று அறிகிறோம். வாழ்த்துதல் உலகப்பிரகாரமான ஒன்றாக போய்விடக்கூடாது. மம்மி என்று சொல்வதை மம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள் அதைப்போல ஒருவரையொருவர் சந்திக்கும்போது ஹாய் என்று சொல்லி டாடா காட்டி செல்கிறார்கள். நவநாகரீக உலகில் இது பெருகி வருகிறது இதையே நாம் ஆண்டவருடைய பிள்ளைகளிடமும் சொல்லக்கூடாது. பணிவான வாழ்த்துக்களுடன் வயது வித்தியாசம் அறிந்து அவர்களை வாழ்த்த கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு சொல்கிறார்: "உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்" (மத்.5:47,48). அநேக வேளைகளில் நம் சகோதரர்களை மட்டும் வாழ்த்தி விசாரித்து அத்தோடு நின்று விடுகிறோம். இது பாரபட்சமானது, நம்முடைய பிதா பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதை இங்கு நம்ஆண்டவர் நமக்கு சுட்டிக்காண்பிக்கிறார்.

ஆகையால் நம்முடைய பரமபிதாவாகிய தேவன் எப்படியிருக்கிறாரோ அவ்விதமாகவே நாமும் நடந்துகொள்ளவேண்டும். தாவீதைப் பாருங்கள்: அவன் சத்துருவாகிய நாபாலை வாழ்த்தும்படி "பத்து வாலிபரை அழைத்து: நீங்கள் கர்மேலுக்குப்போய், நாபாலிடத்தில் சென்று, என் பேரைச்சொல்லி, அவன் சுகசெய்தியை விசாரித்து, அவனைநோக்கி: நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும் உண்டாவதாக என்று அவனை வாழ்த்துங்கள்" (1சாமு.25:5,6) என்றான். அந்தப்படியாக அவர்கள் சென்று வாழ்த்தினார்கள். தாவீதுக்கு ராஜமேன்மை கிடைத்ததற்கு ஒரு காரணம் அவன் சவுலை கொலைசெய்யும்படியாக



எண்ணங்கொள்ளவில்லை. அவர் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று சவுலுக்கு விரோதமாக தன் கையை நீட்டவில்லை. நாபால் சத்துருவாக இருந்தபோதிலும் அவனை வாழ்த்துவதை மேலுள்ள வசனத்தின் மூலம் அறிகிறோம். அன்பானவர்களே, நாம் தேவனால் உயர்த்தப்பட கர்த்தருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் கைக்கொள்ளவேண்டும். நம்முடைய முற்பிதாக்கள் அவைகளை கைக்கொண்டபடியினாலே ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆகையால் தான் இயேசு உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்கிறார். நீங்கள் சிநேகிக்கிறீர்களா? "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" Bless them which persecute you: bless, and curse not (ரோம.12:14). துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்பது என்பது கூடாத காரியம் ஆனாலும் நாம் அவ்விதமாகவே செய்யவேண்டும். ஏனென்றால்; "தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" (1பேது.3:9).

தானியேலை குற்றம்பிடிக்கப் பார்த்து அவனை ஒருவிஷயத்திலும் குற்றம்பிடிக்கக்கூடாமல், தன் தேவனுக்கு நேராக விண்ணம்பண்ணும் விஷயத்தில் குற்றம்பிடித்து அதை ராஜாவுக்கு தெரியப்படுத்தி பின்பு சிங்கங்களின் கெபியிலே தானியேலை போட்டார்கள். இரவுபகலாக தன்னை நோக்கி கூப்பிடுகிற தானியேலை தப்புவிக்கும்படியாக கர்த்தர் சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார். ராஜாவோ மிகுந்த துக்கமாயிருந்து இரவெல்லாம் தூக்கமின்மையால் பொழுதுவிடியும் வரை காத்திருந்து பொழுது விடிந்தவுடன் கெபியினிடத்திற்கு வந்து; "துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு தானியேலே; ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான். அப்பொழுது தானியேல்: ராஜவே நீ என்றும் வாழ்க" என்று வாழ்த்தினான் (தானி.6:20,21). தன்னைக் கெபியிலே போட்டு

விட்டார்களே என்று தாவீது ராஜாவுக்கு விரோதமாக முறுமுறுக்காமல் ராஜாவே நீ என்றும் வாழ்க என்று சொல்லி வாழ்த்தினான்.

அதைப்போல நெகேமியாவைப் பார்த்து ராஜா "நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது நான் மிகவும் பயந்து ராஜாவை நோக்கி; ராஜா என்றைக்கும் வாழ்க" என்று சொன்னான் (நெகே.2:2,3). இந்த தீர்க்கதரிசிகள் ராஜாவை வாழ்த்தினதை இவ்வசனங்கள் மூலமாக நாம் அறிகிறோம். ஒரு நிர்வாகத்தின் கீழ் இருக்கிற நாம் அவர்களை வாழ்த்த கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதன் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது.

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்" (ரோம.13:1,2). அதிகாரத்தின் கீழாக இருக்கிற நாம் இந்த தீர்க்கதரிசிகளைப் போல வாழ்த்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் புதிய ஏற்பாட்டுக்கு திரும்புவோமேயானால் மரியாள் எலிசபெத்தை வாழ்த்தினாள் என்று லூக்.1:40ல் காண்கிறோம். தேவதூதன் மரியாளை வாழ்த்தினான் "கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்றான் (லூக்.1:28). ஏன் பவுல் நிருபங்கள்தோறும் வாழ்த்தி எழுதுவதை நாம் வாசிக்கிறோம். "பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம், இப்படியே எழுதுகிறேன்" என்கிறார் (2தெச.3:17). மேலும் யோவான் காயுவுக்கு எழுதும்போது "மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது; பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ



எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" என்று எழுதுகிறார் (3யோவா.1,2). முதல் நூற்றாண்டிலும் சரி முற்பிதாக்களின் காலத்திலும் சரி வாழ்த்துதல் சொல்லுகிறதிலே முந்திக் கொண்டார்கள், நாமும் வாழ்த்துகளுடன் கலந்த ஸ்தோத்திரத்தை சொல்லவேண்டும். ஒருவரையொருவர் பார்க்கும்போது ஸ்தோத்திரம் சொல்வது வாழ்த்துதல் சொல்வதற்கு சமமாக இருக்கிறது. கடிதங்கள் எழுதும்போதுகூட வாழ்த்துதல் சொல்லி எழுதலாம். அப்பொழுது அவர்களுக்கு அது சந்தோஷத்தைக் கொடுக்கும். ரோமர் 16–ம் அதிகாரம் வாழ்த்துதல் அதிகாரம் என்று சொல்லலாம்.

பவுல் ரோம சபையாருக்கு எழுதும்போது அக்கடிதத்தை முடிக்கும் தருவாயில் கூடிவருகிற அங்குள்ள சபை அங்கத்தினர்களுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறார். இறுதி கட்டத்திலே நாம் கவனிக்க வேண்டிய பகுதியிருக்கிறது: "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று எழுதுகிறார். அப்படியொரு சபையார்கள் இருந்தால்தானே அப்படி எழுதமுடியும். முதல் நூற்றாண்டு காலத்திலே அந்த சபைதான் இருந்தது அது இன்றும் இருக்கிறது அந்த திருச்சபையிலே உங்களை அங்கமாக்கிக் கொள்ளுங்கள். உங்களை இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துகிறோம்.

**கேள்வி**

✪ **கள்ளப்போதகர்களுக்கு வாழ்த்துதல் சொல்லலாமா?**

அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கு பங்குள்ளவனாகிறான் என்று 2யோவான் 11–ல் வாசிக்கிறோம். அப்படிப்பட்டவர்களோடு எவ்விதத்திலும் கலவாதிருக்க வேண்டும். ஏனெனில்; அவர்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள். கொஞ்சம் புளிப்புள்ள மா பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும் அவர்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் என்று நமது ஆண்டவர் கட்டளை யிட்டிருக்கிறார்.

ஆகையால் இரண்டொருதரம் புத்தி சொன்ன பின்பு அவனை விட்டு விலகு அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே

ஆக்கினைத்தீர்ப்புடையவனாய்ப் பாவஞ் செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே என்று பவுல் தீத்துவுக்கு எழுதுகிறார். சத்தியத்தை சொல்லுகிற தேவ ஜனங்களோடு சேர்ந்து கொண்டு சத்தியத்தை அறிவியுங்கள்.

## 48. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்
## Redeeming The Time

**ஒ**வ்வொருவரும் மூன்றுவிதமான காலங்களைக் குறித்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். **கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்.** இவைகளைக் குறித்து சிந்திப்பதால் என்ன பயன்? நடந்தது நன்மைக்கே, நடப்பதும் நன்மைக்கே, நடக்கப்போவதும் நன்மைக்கே என்ற கூற்று நல்லவைகளைப்போல தோன்றலாம், ஆனால் பரிசுத்தவேதாகமம் இவைகளைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதைப் பற்றி தியானிப்போம். “நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்” (எபே.5:16). போனால் திரும்பவராது பொழுதுவிழுந்தால் சிக்காது என்பார்கள். அதைப்போல காலங்களை ஒரு கதையைப்போல கழித்துப்போட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இந்நாட்களில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? கொடுக்கப்பட்டுள்ள காலங்களை பிரயோஜனப் படுத்திக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமாய் வாழ கற்றுக்கொள்ளுங்கள்.

**கடந்தகாலம்:** நம்முடைய கடந்த காலத்தைக் குறித்து வேதாகமம் இப்படியாக சொல்லுகிறது; “அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குதத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர் களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்” (எபே.2:12,13).

நாம் பிறக்கும்போதே கர்த்தரை அறிந்து கொண்டு



பிறப்பதில்லை நாளடைவில் கர்த்தரை அறிந்து கொள்கிறோம். அதற்கு முன்னே நாம் புறம்பானவர்களும், அந்நியர்களும், நம்பிக்கையில்லாதவர் களுமாயிருந்தோம். இது நம்முடைய கடந்த கால வாழ்வைக்குறிக்கிறது. “அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்” (எபே.4:22–24). கடந்த கால வாழ்க்கையை அநேகர் காலத்தால் அழியாத சுவடுகளில் பதிக்கிறார்கள். அந்த வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது? அந்த வாழ்க்கையில் நாம் என்ன செய்தோம்? என்பதைக் குறித்து சிந்திப்பார் இல்லை.

வசனம் முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட வேண்டுமென்றுபோதிக்கிறது. இதிலே பழைய ஜீவியத்தைக் குறித்து பெருமையாக பேசுவதற்கு ஒன்றுமில்லை. அந்த வாழ்க்கை மோசம் போக்கும் வாழ்க்கை, இச்சை நிறைந்த வாழ்க்கை. அந்த வாழ்க்கையையும், அந்த சரீரத்தையும் களைந்துபோடவேண்டும். ஏனென்றால் அத்தோடு கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கை வாழ முடியாது. “முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்” (எபே.5:8–11).

இருளிலிருந்து வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றப்பட்டுள்ளோம். ஆகையால் கனியற்ற அந்தகாரக்கிரியைகளுக்கு உட்படாமல் அவைகளை நம்முடைய ஜீவியத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை அவரைப்போல ஒவ்வொருவரும் மாற்றப்படவேண்டும்.

பழைய ஜீவியம் ஒருவனையும் இரட்சிக்காது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதிய சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்ற வசனத்தின்படி பரிசுத்தமாக்கப்படுகிறான். இந் நிலைக்கு நீங்கள் மாற்றப்படவேண்டும்.

**நிகழ்காலம்:** இக் காலத்திலே நாம் செய்யவேண்டிய பணிகள் அநேகமிருக்கிறது; ''நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் 1தீமோ.2:1–3–ல் எழுதுகிறார்.

காலை எழுந்தவுடன் அவரவருடைய வேலைகளைக் குறித்தே நாம் யோசிக்கிறோம், அதன்படி செய்கிறோம். இவ்வசனத்தின்படி எல்லாருக்காகவும் ஜெபித்தோமா? மேலும் நாட்டின் அதிகாரங்களுக்காக, அமைதலுள்ள வாழ்க்கைக்காக ஜெபித்தோமா? இன்றைக்கு நம்மைக் குறித்தே நாம் கவலைகொண்டிராதபடி நாட்டையும், நாட்டில் உள்ள அனைத்து ஜனங்களையும் நினைவுகூர வேண்டும். அப்படிச் செய்யும்போது அது தேவனுக்கு நலமானதாயிருக்கும். ''ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத்தரித்துக்கொள்ளுங்கள்'' (கொலோ.3:12–14). ஆக, நாம் கைக்கொள்ளவேண்டிய உபதேசம் எவ்வளவாய் இருக்கிறதென்று



பாருங்கள்: நம்முடைய பாவங்களை கிறிஸ்துவானவர் மன்னித்திருக்கும்போது நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு இந்த விதமான சிந்தை இருக்குமானால் புதிய புதிய கோர்ட்டுகள் கட்டப்பட வேண்டிய அவசியமில்லை. மன்னிக்கக்கூடிய மனப்பான்மை ஒருவனுக்குள் வருமானால் அவன் தெய்வீக தன்மையை அன்றைய நாளிலே பெற்றுக்கொள்கிறான். ''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். பிள்ளைகளே, இது கடைசிகாலமாயிருக்கிறது: அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்'' (1யோவா.2:17,18).

இப்பொழுது நிகழ்காலத்திலே நாம் வாழ்கிறவர்களாயிருந்தாலும் கடைசிக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எப்படியெனில் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருப்பதினாலே இது கடைசி காலமென்று அறிகிறோம். யார் அந்திக்கிறிஸ்து? கிறிஸ்துவையும் பிதாவையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. இன்று இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும், மற்றும் ஜீவனுள்ள தேவனையும் மறுதலிக்கிற ஒரு கூட்டம் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களே அந்திக் கிறிஸ்துவாக இருக்கிறார்கள். கடைசி காலத்தில் வாழ்கிறதான நமக்கு எச்சரிப்புண்டாகும்படியாக இவைகள் எழுதப்பட்டுள்ளன.

**எதிர்காலம்:** எதிர்காலத்தைக் குறித்த பயம் எல்லோருக்கும் இருக்கிறது. என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற அச்சம் மனிதனை அநுதினமும் வாட்டுகிறது. வேதவசனம் சொல்லுகிறது; ''மேலும், கடைசி நாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர் களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்; சுபாவ அன்பில்லாதவர்ககளாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப்

பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு'' (2தீமோ.3:1–5). இந்த விதமான ஜனங்களை நம்முடைய அநுதின ஜீவியத்திலே ஒவ்வொருநாளும் காண்கிறோம். அதினாலே இது கடைசி காலமென்று அறிகிறோம். லோத்துடைய நாட்களில் இப்படிப்பட்டவர்கள் பெருகினார்கள் ஆகையால் சோதோம், கோமோரா பட்டணங்களை தேவன் கவிழ்த்துப்போட்டார்.

மனுஷகுமாரன் வரக்கூடிய இக்கடைசி நாட்களிலும் இப்படிப்பட்டவர்கள் பெருகிக்கொண்டே போகிறார்கள். துணிந்து எதையும் செய்து தேவன் எங்கே இருக்கிறார்? அப்படிப்பட்ட ஒருவர் இருந்தால் என் முன் வரச்சொல் பார்க்கலாம் என்று சொல்லி இருமாப்பு உள்ளவர்களாக மார்தட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உன் தேவனை சந்திக்க இப்படிப்பட்ட கூட்டத்தை விட்டு விலகி உன்னைக் காத்துக்கொள். இவர்கள் அழிவின் பாதையைத் தெரிந்து கொண்டு சகல அசுத்தத்தையும் உடையவர்களாக ஜீவணம் பண்ணி தங்களை தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ''சத்தியத்துக்குக் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங் காலம் வரும்'' என்று 2 தீமோ.4:4–ன்படி கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடாமல் பாரம்பரியங்களுக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி சாய்த்து வீணாய் அழிந்துபோகிறார்கள். வேதம் சொல்லுகிறது, ''நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆகையால் ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும் (யாக்.4:14).

இன்றுவரை நாளைக்கு நடப்பதை ஒரு மனுஷனும் அறியாதவனாயிருக்கிறான். விஞ்ஞானம் பெறுகியிருக்கிறது. அப்படியிருந்தபோதும் ஒருவரும் நாளைய தினத்தை அறிய



முடியவில்லை. சில காரியங்களை கனிக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். உண்மைதான் உதயமாகிறபோது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது, அதினால் இன்றைக்குக் காற்றும் மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள் என்று கர்த்தரே சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தபோதும், நாளைய தினத்தை அறியாதவர்களாகவே இருக்கிறோம். தேவன் எனக்கு இதை வெளிப்படுத்தினார் என்று சொல்ல ஒருவராலும் கூடாதே. அப்படிச் சொல்வானேயானால் சுனாமியிலே இத்தனைபேர் மரிக்கவேண்டிய அவசியமில்லை. பிரியமானவர்களே சிந்தியுங்கள்.

நாளை என்பது நம்முடையது அல்ல, ஒரு நாள் பிறப்பதை அறியாயே என்று வசனம் சொல்லுகிறது. ஆகையால் நாங்களும் உயிரோடிந்தால் இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்வோம். இச்செய்தியின் மூலமாக கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலத்தை குறித்து தியானித்தோம் நிகழ்காலத்திலே இருக்கிற நாம் எதிர்காலத்தை நோக்கி இருக்கின்றோம். கர்த்தர் சீக்கிரம் வருகிறார் என்பதே எதிர்கால செய்தியாகும். நீங்கள் ஆயத்தப்படுங்கள் உங்களோடு சேர்ந்தவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள். கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

**கேள்வி**

✪ **காலங்களை மாற்ற மனிதனுக்கு அதிகாரமுண்டா?**

இல்லை. உலகத்தில் மனிதன் எதைஎதையோ மாற்றுகிறான். அப்படியாக காலங்களையும் மாற்றிவிடுவான் என்று நினைக்கிறீர்களா? அது ஒருக்காலும் முடியாது, ஏனென்றால் ''என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது'' என்று சங்.31:15–ல் வாசிக்கிறோம். ஆக மனிதனுடைய காலங்களோ, தேவனிடத்தில் இருக்கிறது. இவன் எப்படி காலங்களை மாற்றமுடியும். மேலும் ''தன் காலத்தை மனுஷன் அறியான்'' என்று பிர.9:12 லும் வாசிக்கிறோம். எனவே காலங்கள் தேவனிடத்தில் இருக்கிறது.

## 49. தேவ ஆட்டுக்குட்டி
## The Lamb of God

**தே**வன் உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கும் பலி ஆடாக இயேசு கிறிஸ்துவை தெரிந்துகொண்டார். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன் இவரைக் குறித்து 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்றான் (யோவா.1:29). மனிதனுடைய பாவத்தை நிரந்தரமாக தீர்க்கும்படியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆட்டுக்குட்டியாக தேவகுமாரன் இப்பூமியில் வெளிப்பட்டார்.

இவரைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இவருக்கு முன்னோடியாக வந்த யோவன்ஸ்நானகன் இவரைப் பற்றி அறியாதிருந்தான். அவன் சொல்வதை வாசிப்போம்; "நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான்" (யோவா.1:33,34).

நீங்களும் இவரை அறியாதிருந்தால் அறிந்து கொள்ளுங்கள். தேவன் தம்முடைய குமாரனையே உலகத்தின் பாவத்தைப் போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய இரத்தஞ்சிந்துதலினால் உலகத்துக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. இன்று அவரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுங்கள். "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" என்று யோவான் 3:18–ல் வாசிக்கிறோம்.

ஆக்கினைத்தீர்ப்பு என்று சொல்வது முடிவான நரக ஆக்கினைக்குள் தள்ளப்படுவார்கள் என்பதைக் குறிக்கிறது. இவற்றினின்று காக்கப்பட அவரை விசுவாசித்து அவர்மூலமாய் கிடைக்கிறதான நித்திய இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். அவருடைய உபதேசம் பாரமான ஒன்றல்ல அது இலகுவானது. இன்றைக்கு அநேகர் சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி



மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள் ஆனால் இயேசுகிறிஸ்துவானவர் அப்படிச் செய்யவில்லை "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என்நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்கிறார் (மத்.11:28–39). இலகுவான அவருடைய உபதேசத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டு உங்களுடைய பாரத்தை அவரிடம் விட்டு விடுங்கள். அப்பொழுது மெய்யான ஆத்தும இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்வீர்கள்.

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:10,11). திருடர்கள் திருடத்தான் வருவார்கள் அதே வேளையில் கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள். இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு அதற்குத்தான் வருகிறான். அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான்.

அவன் எப்படி வருவான்? பண ஆசையின் மூலமாகவும், மாம்ச இச்சையின் மூலமாகவும், இன்னும் விபசாரம், வேசித்தனம், விக்கிரகாராதனை மூலமாகவும் ஜனங்களை வஞ்சித்து அழித்துப் போடுவான். நமது ஆண்டவரோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், பரிபூரணமான ஆசீர்வாதங்களை பெற்றுத்தரவும் வந்தார். அவர் நல்மேய்ப்பனாக இருக்கிறபடியினாலே தம் ஜீவனையே நமக்காக ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அவர் ஏன் சிலுவையில் மரிக்கவேண்டும்? அவருடைய மரணமில்லாமல் மனிதனுக்கு மன்னிப்பு இல்லையா? என்ற கேள்வி அநேகருக்கு எழும்புகிறது. "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம்

இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' (எபி.9:22). ஆனபடியினாலே இயேசுவை தேவன் சிலுவையில் அரையும்படியாக ஒப்புக்கொடுத்தார். இப்படி அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டபடியினாலே வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

ஆகையால் நாம் மீண்டும் நம்முடைய பாவங்களுக்காக வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய போன்றவைகளை பலியிடவேண்டுவதில்லை. அவரே நித்திய பலியாக அதை ஒரே தரமாக செய்து முடித்து நம்மெல்லோருக்கும் நித்திய மீட்பை உண்டுபண்ணினார். ''தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் ஏனென்றால் தனக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்ற தாயிருந்தது.

எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப் படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப்பாடுவேன் என்றும், நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்று சொல்லியிருக்கிறார். ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவியகாலமெல்லாம்



மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைப் பண்ணும்படிக்கும் அப்படியானார்'' (எபி.2:9–15).

அன்பானவர்களே, தேவஆட்டுக்குட்டியாகிய இயேசுவை தேவன் முன்குறித்தார். முன்குறிக்கப்பட்ட இவரை நீங்கள் விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுங்கள். இவருடைய இரத்தத்தின் மூலமாகவே தேவனுடைய மெய்யான மார்க்கத்தின் வழியாக பிரவேசிப்பதற்கு நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது. ஆகையால் ''தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்'' (எபி.10:21,22).

மேலும் ''சத்தியத்தின்படி அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறோரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்'' (எபி.10:26,27). இனி வேறொரு பலி இல்லை என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார். ஒரே பலியினாலே தேவன் உலகத்தாருடைய பாவங்களை நிவர்த்திசெய்தார். இதை விசுவாசிக்கிறவர்களுக்கு அது பலிக்கும். இதை அறிந்தும் ஒருவன் பாவம் செய்வானேயானால் அவன் நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்படுவான் அங்கே கோபாக்கினையே இருக்கும்.

அன்பானவர்களே, நம்முடைய முற்பிதாக்களின் காலத்தில் வருஷந்தோறும் பிரதான ஆசாரியன் ஜனங்களுடைய பாவத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டாக பிரவேசித்ததுபோல இவர் பிரவேசிக்கவில்லை; அப்படியிருந்ததானால், உலமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் பாவத்தை

நீக்கும் பலியாக தேவ ஆட்டுக்குட்டியாக வெளிப்பட்டார். “அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச்சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்” (எபி.9:27,28).

நீங்கள் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்பதற்காகவே அவர் சிலுவையில் ஒரேதரம் பலியிடப்பட்டார். அவர் சிந்திய இரத்தத்தினாலே நீங்கள் பாவமற கழுவப்படுகிறீர்கள். இது எப்படி சாத்தியமாகும் என்று நினைக்கிறீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாயும் அவர் உயிர்த்தெழுதலின் சாயலில் அவரோடேகூட எழுப்பப்பட்டவர்களாயும் இருக்கிறீர்கள். இதை நீங்கள் செய்யும்போது கர்த்தரால் அவருடைய சபையிலே சேர்க்கப்படுகிறீர்கள்.

இப்படிச் சேர்க்கப்பட்டு காக்கப்பட்டு இருக்கிற தம்முடையவர்களை மீண்டும் பரமபிதாவிடம் சேர்க்கும்படியாக இயேசு வருகிறார். அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருங்கள். இயேசு சொல்கிறார்: “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார் (யோவா.14:6). நீங்கள் இயேசுவையல்லாமல் வேறு வழியில் சென்று இரட்சிக்கப்பட முடியாது. ஏனெனில் வேறு வழியில்லை.

அப்படி ஒரு வழியை நீங்கள் அறிவீர்கள் என்றால் அது பொய்யான வழியாகத்தானிருக்கும். அதனுடைய முடிவு மரணமே. அன்பானவர்களே, இச்செய்தியின் மூலமாக தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவைப் பற்றியும், அவருடைய இரத்தம் ஒரு மனிதனுடைய பாவத்தை கழுவி நித்திய மீட்பை கொடுக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டீர்கள். உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட அவரை விசுவாசித்து மனந்திரும்பி அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!



**கேள்வி**

**✪ இன்று பலியிடக்கூடிய காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யுமா?**

“காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினீர். சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர் அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்... இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்... அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே.” (எபி.10:1–18). ஆகையால் நாம் பலி செலுத்த வேண்டுவதில்லை என அறிகிறோம்.

## 50. தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள்
## Obey God`s Word

இரண்டு விதமான ஜனங்களை வேதத்திலும், நாம் வாழும் சமூதாயத்திலும் காணலாம். ஒன்று **கீழ்ப்படிதலுள்ள ஜனங்கள் மற்றொன்று கீழ்ப்படியாத ஜனங்கள்.** தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கீழ்ப்படியாதவர்கள் தேவகோபத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். தன் இளம்பிராயத்திலே, ஏலியினுடைய வார்த்தையின்படியே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த சாமுவேலைப்பற்றி படிக்கிறோம். சாமுவேல் கர்த்தரை அறியாதிருந்த நாட்களில் மூன்று முறை சாமுவேலை நோக்கி : கர்த்தர் கூப்பிட்டபோது அவன் ஏலியினிடத்தில் ஓடி என்னைக் கூப்பிட்டீரே என்றான். இதை அறிந்துகொண்ட ஏலி “சாமுவேலை நோக்கி: நீ போய்ப்படுத்துக்கொள்: உன்னைக் கூப்பிட்டால், அப்பொழுது

நீ, கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான்; சாமுவேல் போய், தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக்கொண்டான். அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே, சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான்'' (1சாமு.3:9,10).

அன்பானவர்களே, சாமுவேல் தன் இளம்பிராயத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதிலே மிகவும் பயபக்தியாயிருந்தான். ஆகையினாலே கர்த்தர் அவனை ஒரு வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக மாற்றினார். கர்த்தருடைய வார்த்தையை கேட்கிற நீங்கள் இந்த சாமுவேலைப்போல அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செவிகொடுப்பீர்களானால் உங்களையும் தேவன் ஆசீர்வதிப்பதற்கு வல்லவராயிருக்கிறார். நாங்கள் சத்தியத்திற்கு செவி கொடுத்து குடும்பமாக அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறோம், தசமபாகம் காணிக்கைகளை தவறாது கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டேபோகலாம். சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்'' (1சாமு.15:22).

பலி சடங்குகளைக் கர்த்தர் எதிர்பார்க்கவில்லை அவருக்கு கீழ்ப்படியவும், செவிகொடுக்கவும் விரும்புகிறார். பலி மற்ற சடங்குகளைக் கூட செய்திடுவோம் ஆனால் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவும், அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க சபைக்கு வரவுந்தான் முடியாமற்போகிறது. நீங்கள் கேட்பதை கொடுக்கிறோம் எங்களால் மற்றகாரியங்களை செய்ய முடியாது அதற்காக என்ன பரிகாரம் செய்யவேண்டுமாலும் செய்கிறோம் என்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கே ஆலோசனை சொல்ல விரும்புகிறவர்கள்.

சவுல் ராஜா, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் கொள்ளையின்மேல் பறந்து சபாத்தீடானதில் சிலவற்றை எடுத்து வைத்து, சாமுவேலை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு தப்பவைத்தார்கள் மற்றவைகளை முற்றிலும்



அழித்துப்போட்டோம் என்று சொன்னான். அப்பொழுது சாமுவேல் சவுலை நோக்கி: ''இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாரதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.

அப்பொழுது சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். இப்பொழுதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்து கொள்ளும்படிக்கு, என்னோடே கூடத் திரும்பிவாரும் என்றான். "சாமுவேல் சவுலைப் பார்த்து: நான் உம்மோடேகூடத் திரும்பிவருவதில்லை; கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர்; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றான். போகும்படி சாமுவேல் திரும்புகிறபோது, சவுல், அவன் சால்வையின் தொங்களைப் பிடித்துக்கொண்டான். அது கிழிந்துபோயிற்று. அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு, உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார். இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்'' (1சாமு.15:23–29).

அன்பானவர்களே, சவுல் கர்த்தருடைய வார்த்தையை மீறியபடியால் அவனை ராஜாவாயிராதபடிபுறம்பே தள்ளினார். ''தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர், அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார். நீ பொய்யனாவாய்'' (நீதி.30:5,6). ஆம், எனக்கு அன்பானவர்களே தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். அவருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட

வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. ஆகையால் அவைகளோடு நாம் ஒன்றும் கூட்டக்கூடாது அவைகளிலிருந்து ஒன்றையும் எடுத்துப்போடவும் நமக்கு அதிகாரமில்லை, அவைகளை அப்படியே கைக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்வசனத்தை கூட்டின அல்லது எடுத்துப்போட்ட முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் அழிக்கப்பட்டார்கள். நாமும் அவ்விதமாக அழிந்துபோகாதிருக்க கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவைகளை பிரஸ்தாபப்படுத்த வேண்டும்.

''அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின் படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை'' என்று ஏசாயா தீர்க்கன் மூலம் கர்த்தர் எச்சரிக்கிறார் (ஏசா.8:19,20). அநேகர் அஞ்சனம் பார்க்கிறவர்களாயும், குறிசொல்லுகிறவர்களையும் நாடி தங்களை தாங்களே தேற்றிக் கொள்ளுகிறார்கள். இது உயிருள்ளவன் மரித்தவர்களிடத்தில் விசாரிப்பதைப்போல இருக்கிறது. மரித்தவர்கள் பேசுவார்களா? அன்பானவர்களே, பேசாத மரத்தினிடத்திலும், கல்லினிடத்திலும் சென்று எங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லு என்றால் அது எப்படி சொல்லும்? எப்படி பேசும்? வேதத்தையும் சாட்சி ஆகமங்களையும் கவனிக்கவேண்டும். இன்றும் அநேகர் ஊழியர்களிடத்தில் செல்லுகிறார்கள். எதற்காகவென்றால்; நாங்கள் எங்கள் பிள்ளைக்கு திருமணம் ஏற்பாடுசெய்திருக்கிறோம் அந்த திருமணம் நல்லபடியாக நடக்கவேண்டும் எந்த பிரச்சனைகளும் வராமல் ஜெபியுங்கள்.

அதற்கு முன் அந்த திருமண தம்பதிகள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவர்களா? சபைக்கு ஒழுங்காக செல்லக் கூடியவர்களா? தவறாது வேதவகுப்பில் கலந்துகொள்ளுகிறார்களா? வேதத்தை தினமும் வாசிக்கிறார்களா? என்பதைக் குறித்த கவலையில்லை, எப்படியோ அவர்களுடைய திருமணம் நல்லபடியாக



நடைபெறவேண்டும். இதற்கு ஊழியக்காரர்கள் ஜெபிக்க வேண்டுமென்று சொல்லி பல இடங்களுக்கு போன் செய்தும், கடிதங்கள் எழுதியும் போடுவார்கள். இவர்களுக்காக ஜெபிக்கிறேன் என்று சொல்லுகிற ஊழியர்களும் அவர்கள் கொடுக்கிற காணிக்கைக்காக ஜெபிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு முதலாவது கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துச்சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. மேலும் ''சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்'' என்று சொல்லுகிறார் (ஏசா.66:2). அவருடைய வசனத்துக்கு பயந்து நடுங்குகிறீர்களா? மனுஷனுக்கு பயப்படும்பயம் கன்னியை வருவிக்கும். கர்த்தருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனத்துக்கும் பயந்து நடுங்குங்கள். அப்பொழுது தேவன் உங்களை நோக்கிப்பார்ப்பார்.

புதிய ஏற்பாட்டிலே வசனத்துக்கு கீழ்ப்படிந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று நாம் தியானிக்கும்போது. ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:41,42). வசனத்துக்கு கீழ்ப்படிந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் முதலாவது திருமுழுக்கு அதாவது ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

ஒருவன் இரட்சிக்கப்பட அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவங்கள் போக ஞானஸ்நானம் பெறவேண்டும். இதை அவர்கள் உடனே தாமதமில்லாமல் பெற்றுக்கொண்டார்கள். அன்றைதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மேலும் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், வாரந்தோறும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாக தரித்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலும் உறுதியும் இன்றைய சபையாருக்குத் தேவை. மேலும்

சிதறிப்போனவர்கள் எங்கும்திரிந்து சுவிசேஷவசனத்தை பிரசங்கித்துக் கொண்டு வரும்வேளையில் "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவர்களால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்" (அப்.8:12,13). அந்நாட்களிலே கர்த்தருடைய வார்த்தையை சொல்ல தடையுண்டாயிற்று அப்போஸ்தலரைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

தேவதூதன் அவர்களை விடுவித்து நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்கு சொல்லுங்கள் என்றான். பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட வில்லையா? அப்படியிருந்தும் இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பினீர்கள் என்றான். அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சொன்னார்கள். பிரியமானவர்களே, நீங்ளும் உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி**

✪ **கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனை உண்டா?**

"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய



தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7–10). இந்த தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள இன்றே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவங்கள் போக கழுவப்படுங்கள்.

## 51. கிறிஸ்தவ ஜீவியம்

## Christian Living

**கி**றிஸ்தவ ஜீவியம் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து ஜீவிக்கும் ஒரு ஜீவியமாகும். இது ஒரு விசுவாச ஜீவியம், ஆவிக்குரிய ஜீவியம், முன்மாதிரி ஜீவியம் போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில்; "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாக அறிந்திருக்கிறேன்" என்று குறிப்பிடுகிறார் (அப்.10:35). கிறிஸ்தவ ஜீவியத்திற்குள்ளாக வருவதற்கு எந்தவிதமான மார்க்கங்களோ, ஜாதிகளோ, நாடுகளோ தடையாக இருக்கமுடியாது. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த ஆண்டவருக்கு பயந்து வாழ்நாளெல்லாம் நீதியைச் செய்கிறவன் எவனோ அப்படிப்பட்டவனே கர்த்தருக்கு உகந்தவன். இப்படிப்பட்டவனை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். கர்த்தரும் இப்படிப்பட்டவர்கள்மேல் பிரியமாயிருக்கிறார்.

**கிறிஸ்தவ ஜீவியம் விசுவாச ஜீவியம்:** விசுவாசமில்லால் கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருக்க முடியாது. "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி.11:6). இந்த விசுவாசத்தை உடையவர்களாக இருப்பீர்களேயானால் தேவனால் உண்டாயிருக்கிற சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள். தேவன் இல்லையென்று மதிகேடன் தன் இருதயத்திலே சொல்லிக்கொள்கிறான். ஆனால்

தேவன் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி.11:1). காணாததை நம்புவதே விசுவாசம். தேவன் ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிக்கிறோம் அதுவே விசுவாசம். ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? அது விசுவாசமில்லையே. காணாததை விசுவாசிப்பதே விசுவாசம் என அறிகிறோம். தேவன் நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அதை முடிவு பரியந்தமும் கிறிஸ்தவ ஜீவியத்திலே நிலைத்திருப்பவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என நம்புகிறோம் "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" (கலா.3:6,7).

ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று வேதம் அவனைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறது. கிறிஸ்தவ மார்க்கத்திலிருக்கிறவர்கள் இவ்விதமான விசுவாச மார்க்கத்தில் இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆபிரகாம் காணாததை விசுவாசித்தான். ஒரு அடி நிலம்கூட தனக்கு சொந்தமாக இல்லாதபோது கர்த்தர் அவனை அழைத்து சென்ற தேசத்திற்கு விசுவாசத்தோடு எல்லாவற்றையும் விட்டு கடந்து சென்றான். நம்மில் அநேகர் பத்து வருடங்களுக்கு அல்லது தலைமுறை தலைமுறைக்கு திட்டமிட்டு சொத்துக்களை சேகரிக்கிறார்கள். இது அவிசுவாசத்தின் விளைவால் ஏற்படக்கூடியது.

நாளைய தினத்தை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற அசையாத நம்பிக்கை ஆபிரகாமுக்கு இருந்தது. இந்த விதமான விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருங்கள். அநேகர் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து பின்வாங்கிப்போனார்கள் அதிலே தேமா என்று சொல்லக்கூடிய ஒருவரும் அடங்குவர். விசுவாசவீரர்களின் பட்டியலை எபிரெய ஆசான் நமக்கு பட்டியலிட்டுக் காண்பிக்கிறார். எதற்காக? நாமும் அந்தவிதமான விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தருக்குள்



நிலைத்திருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள. நீங்கள் பெற்றுக்கொள்ள பிரயாசம் எடுக்கிறீர்களா?

**கிறிஸ்தவ ஜீவியம் ஆவிக்குரிய ஜீவியம்:** மாம்சபிரகாரமான அநேக மார்க்கங்களை இப்பூமியில் காண்கிறோம். ஆனால் கிறிஸ்தவ மார்க்கம் ஒரு ஆவிக்குரிய மார்க்கமாக இருக்கிறது. எழுத்துகொள்ளும் ஆவியே உயிர்ப்பிக்கிறது. "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" (1கொரி.2:14,15). பொதுவாக ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்து பேசும்போது மாம்சபிரகாரமாக இருக்கிறவர்களுக்கு அது பைத்தியமாக தோன்றும். இப்படிப்பட்ட பைத்தியமான பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.

ஆவிக்குரிய வசனங்கள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கவேண்டும். வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. ஆகையால் தான் ஆண்டவர் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே என்றார். நாம் வேதாகமத்தை ஆராயும்போது ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக்கொள்கிறோம். மேலும், அவைகளைக் கொண்டு சரீரத்தின் தவறான செயல்பாடுகளை களைய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இது குறித்து பவுல் ரோம சபைக்கு எழுதும் போது: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ஆகையால் சகோதரரே

மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல, மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்'' (ரோ.8:11–13). ஒவ்வொருநாளும் மாம்சத்தின் செய்கைகளை அழிக்க முற்படவேண்டும். சரீரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களை நாம் காண்கிறோம் சரீரத்தில் நல்லா இருந்தால்தானே நாம் இன்னும் அநேக வேலைகளை செய்யமுடியும் என்பார்கள். உண்மைதான் சரீரத்திற்கு ஓய்வு அவசியம்தான், அதேவேளையில் சரீரத்தை மாம்ச இச்சைக்கு பாவம் செய்ய இடம் கொடுப்போமென்றால் அது அழிவில் கொண்டுபோய்விட்டுவிடும் ஆகையால் மாம்சஇச்சைகளுக்கு இடம் கொடுக்காமல் அவைகளை ஆவியினாலே அழிக்கவேண்டும். ''கிறிஸ்துவினுடையவர் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுயில் அறைந்திருக்கிறார்கள்'' (கலா.5:24).

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படியானால் உங்கள் மாம்ச இச்சைகளை சிலுவையில் அறைந்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் அறைந்திருப்பீர்கள் என்றால் ஆவிக்கேற்றபடியாக நடந்து கொள்ளுங்கள். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கேபாமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருந்து கர்த்தர் நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடே ஓடுங்கள்.

**கிறிஸ்த ஜீவியம் முன்மாதிரி ஜீவியம்:** இன்றை உலகுக்குத்தேவை கிறிஸ்தவர்கள் ஒரு முன்மாதிரி கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவேண்டும். வேதமும் அதையே வலியுருத்துகிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களை நாம் மாதிரியாக நோக்குவோமேயானால் ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:42). அதே உலகத்தில் இருக்கிறோம், அவர்களைப்போல மாம்சத்திலே இருக்கிறோம் ஆனால் நம்மால் அப்பம்பிட்குதலில் நிலைத்திருக்க முடியவில்லை, உபதேசத்திலே நிலைத்திருக்க முடியவில்லை, அந்நியோந்நியத்திலே நிலைத்திருக்க



முடியவில்லை என்று அநேக சாக்குபோக்குகளைச் சொல்லுகிற கிறிஸ்தவர்களாகவே இருக்கிறோம். இதற்கு என்ன காரணம்? அவர்களிடம் இருந்த அன்பு இல்லை, பக்தி வைராக்கியம் இல்லை, ஏனோ தானோ என்ற கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டு சதா உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சாட்சியுள்ள ஜீவியத்தில் குறையக் காணப்படுகிறோம். ஒரே நபர் பத்துக்கும் மேற்பட்ட சங்கங்களில் அங்கமாக இருப்பார் அவரை கேட்கும்போது Now I am very busy என்பார்.

உலக பதவிகளுக்கும் ஆசைகளுக்கும் அடிபணிந்து அவைகளில் பணியாற்ற ஆர்வம் கொள்ளுகின்றனர். அதேவேளையில் கர்த்தருடைய பணியில் அந்தவிதமாக ஆர்வம் காட்டுகிறதில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இவ்விஷயத்தில் ஒருமனப்பட்டவர்களாக சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்திருக்கிறார்கள். இது இன்றைய திருச்சபைகளுக்கு மாதிரியாகவே இருக்கிறது. நான் பாண்டிச்சேரியில் உள்ள கிறிஸ்துவின் சபைக்கு சென்றபோது அவர்கள் சனிக்கிழமையே சபை ஆராதனை இடத்தை சுத்தம் செய்து, ஆயத்தமாக இருந்து ஜெபிப்பதைக் கண்ட நான் காலதாமதமில்லாமல் வத்தலக்குண்டு சபையார் மத்தியில் இதைக் குறித்து பேசி முதல் நாளே ஆயத்தப்பட ஆரம்பித்தோம். இப்படி மாதிரியான சபைகளை நாம் மாதிரியாக எடுத்துக்கொண்டு கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர வேண்டும். பவுல் சொல்வதைக் கவனியுங்கள்; ''இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்'' (கலா.6:17).

பவுல் கமாலியேலின் பாதத்தண்டை கற்றுக்கொண்டவராக இருந்தபோதும் அவரை காப்பி அடிக்கவில்லை மாறாக கிறிஸ்துவையே அச்சடையாளமாக தரித்துக்கொண்டார். ஒவ்வொரு கிறிஸ்துவனும் இயேசுவையே தரித்துக்கொள்ளவேண்டும். ஆனால் நம்முடைய சமூதாயம் மூதாதையர்களைப்போலவே இருக்கிறான் என்று சொல்லி பெருமை பாராட்டுகிறார்களே ஒழிய ஆண்டவரைப்போல மாறுகிறான் என்று சொல்வதில்லை. ''கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு,

நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்தப்போனார்" என்று 1பேது.2:21–ல் பேதுரு இயேசுவின் மாதிரியை நமக்குக் காட்டுகிறார். நீங்கள் எதைச் செய்தாலும் கிறிஸ்துவை முன் வைத்து அதை செய்ய முற்சியுங்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதர சகோதரியும், இயேசுவின் மாதிரியை பற்றிக்கொண்டு பரலோகபாதையில் ஒவ்வொருநாளும் தன் பாடுகளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படி வருகிறவர்களுக்கு கர்த்தர் வாடாத ஜீவகிரிடத்தைத் கொடுப்பார். அதைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக முயற்சியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

✪ **யார் கிறிஸ்தவர்கள்?**

கிறிஸ்துவை பின் தொடருகிறவன் கிறிஸ்தவன், இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவன் கிறிஸ்தவன், பாவங்கள் மன்னிக்கப்பட இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கைசெய்து ஞானஸ்நானம் பெற்றவன் கிறிஸ்தவன். வாரந்தோறும் தவறாமல் சபைக்கு செல்கிறவன் கிறிஸ்தவன். விசுவாசத்திலும், ஆவிக்குரிய ஜீவியத்திலும், முன்மாதிரியாக நிலைத்திருப்பவன் கிறிஸ்தவன். இப்படிப்பட்ட காரியங்களில் ஒரு வருஷகாலமாய் சபையோடே கூடியிருந்த சீஷர்களுக்கு **கிறிஸ்தவர்கள்** என்கிற பெயர் வழங்கப்பட்டதாக அப்.11:26–ல் அறிகிறோம். நீங்களும் இப்படிப்பட்ட கிறிஸ்தவராக நிலைத்திருக்க பிரயாசப்படுங்கள். அதற்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளையும் கர்த்தர் உங்களுக்கு தந்தருளுவாராக! ஆமென்.